ஸ்ரீ



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

அகப்பொருளும் அருளிச்செயலும்.

இஃது

பிரபந்த வித்வான், திருப்புறம்பயம்

ஸ்ரீமாந்

T. D. இராமஸ்வாமி நாயடு அவர்களால்

இயற்றப்பட்டு

ஸ்ரீரங்கம்

ஸ்ரீ விலாஸம் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1938

 [விலை ரூ. [illegible]—[illegible]—0

ஸ்ரீ:

அறிவிப்பு.

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்புக் கமிட்டி ப்ரசுரங்கள்:—

	ரூ.	அ.	ப.
ஸ்ரீ பாஷ்யம் தமிழ் மொழி பெயர்ப்பு (ச்ருதப்ரகாசிகா ஸஹிதம்) முதல் வால்யூம் ...	7	8	0
ஷை இரண்டாவது வால்யூம் ...	3	8	0

குறிப்பு:— ஷை இரண்டு வால்யூம்களும் ஏக காலத்தில் வாங்குமவர்களுக்கு ரூ. 9-0-0க்குக் கொடுக்கப்படும்.

	ரூ.	அ.	ப.
திருவாய்மொழி ஈட்டின் ப்ரமாணத்திரட்டு (பிரமாணங்களுக்கு ஆகாமும் பதவுரையும்) ரப் காபி ...	1	8	0
ஷை கிளேஸ் காபி ...	2	0	0
ஸ்ரீவசனபூஷண ப்ரமாணத்திரட்டும் அரும்பத விளக்கமும் (இரண்டாவது பதிப்பு) ...	1	0	0
திருமந்த்ரார்த்த ப்ரமாணத் திரட்டும் அரும்பத விளக்கமும் (இரண்டாவது பதிப்பு)	அச்சில்		
தத்வத்ரய ப்ரமாணத் திரட்டு ...	0	8	0
அர்த்த பஞ்சக வியாக்யானம் ...	0	6	0
ஆழ்வாராசாரியாள் அபிதான விளக்கம் ...	0	4	0
ஸ்ரீ ஆராவமுதன் பெருமை ...	0	2	0
கோயில் திருவத்யயநோத்சவச் சிறப்பு ...	0	0	9

☞ ஷை க்ரந்தங்கள் கிடைக்குமிடங்கள் :—

(i) R. A. பங்காருஸ்வாமி நாயடு, தெற்கு ராயகோபுரம் எக்ஸ்டென்ஷன், ஸ்ரீரங்கம்.

(ii) S. இராமஸ்வாமி நாயடு, 52, பிள்ளையார் கோவில் தெரு, திருவல்லிக்கேணி P. O. (மதராஸ்).

(iii) T. D. இராமஸ்வாமி நாயடு, திருப்புறம்பயம் P. O. (கும்பகோணம்).

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

முகவுரை.

உறுபெருஞ் செல்வமும் தந்தையும் தாயும், உயர்குருவும்
வெறிதரு பூமகள் நாதனும், மாறன் விளங்கியசீர்
நெறிதரும் செந்தமிழாரணமேயென்றிந் நீள்நிலத்தோர்
அறிதரநின்ற, இராமாநுசனெனக்காரமுதே. என்று

உயர் ஜ்ஞானத்தையும் பரம புருஷார்த்தத்தையும் இனிது பெறச் செய்யும் வன்கருவி, தென் மொழி வேதத்திற்கு அவ்வருகான ஜ்ஞானக் கலைகள் வேறு இல்லை எனத் திருவரங்கத்தமுதனார் அறுதியிட்டனர். அநாதியாயும், நிர்தோஷமாயும், முக்தி நெறியைக் காட்டுவதாயும், உலகில் உலவி மேன்மை பெற்று வருவதாயுமுள்ள வடமொழி வேதத்தில் காணுதற்கரிய, சில நலன்களைத் தென்மொழி வேதம் தன்னகத்தே கொண்டு சிறப்புற்று வருவது யாவரும் அறிந்ததே. அந்நலங்கள் பலவற்றுள்ளும் அகப்பொருள் இயல் ஒன்றாகும். இலக்கிய நூல்கள் அந்தந்தப் பாஷையின் இலக்கண மரியாதையைத் தழுவிச் சீர்மை பெறுவது மரபு. இம்முறையில் திருவாய்மொழி என்ற தமிழ் இலக்கியமும், தொல்காப்பியம் என்ற தமிழ் இலக்கணத்தில் விதித்துள்ள

[illegible], சொல், பொருள், யாப்பு, அணி முதலிய இலக்கண உருப்புக்களைப் பின்பற்றியுள்ளது. இம்முறைமையில் அகப்பொருள் கிளவியையும் உட்கொண்டிருக்கின்றதென்பது சிலர் கொள்கை. இந்தக் கொள்கை ஆழ்வார் பெருந் தகைமைக்குச் சேராது.

"வேதம் தமிழ் செய்த மாறன்" என்பது வெளிப்படையாயிருக்க, அவ்வேதத்தில் வெளியிடாத அகப்பொருள் கிளவியை ஆழ்வார் தாம் பாடிய தமிழ் ஆரணத்தில் செப்பியதற்குக் காரணம் யாது? என்னும் ஐயந்தோன்றலாம். அக்காரணத்தை அறிவிக்கவே அடியேன் இந்நூலை வரையப் புகுந்தது.

இது நிற்க, ஒருக்கால் அகப்பொருள் இயல் 'எத்தகைத்து'? என்பதை அறிய அடியேன் மனம் விழைந்தமையின், 'நாற்கவிராஜர் அகப்பொருள், இறையனார் அகப்பொருள்' முதலிய அகப்பொருள் நூல்களைத் திருப்பாதிரிப்புலியூர் மடாதிபதி ஞானியார் அவர்களிடத்தும், ஸ்ரீரங்கம், உயர்தரக் கல்லூரித் தமிழ்த் தலைமைப் பண்டிதர், ப்ரஹ்மஸ்ரீ குருசுப்ரமணிய அய்யர் அவர்களிடத்தும் பாடங்கேட்டு ஒருவாறு அவ்வகப்பொருள் இயலை அறிந்தனன். அஃது பெரும்பான்மையும் உலக வழக்கத்தையும் உலக இன்பத்தையும் இயம்பிடினும், அதிற் காணப்படும் மற்றும் சில நலங்கள் பேரின்பத்தைப் பற்றியதாயிருந்தன. அவற்றை ஊன்றி நோக்குங்கால் திருவாய்மொழியின் அகப்பொருள் பதிகங்களோடு மிகுதியும் ஒத்திருந்தன. அவை ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தத்தின் உயர் நிலைகளாகிய நிருகேதுககிருபை,

ஆசாரியன் பெருமை, அர்ச்சாவதாரத்தின் மேன்மை முதலிய அரிய பொருள்களை நிறம்பெறச் செய்து உலகை வாழ்விப்பதற்குற்ற ஊன்று கோல் எனக்கூறல் மிகையாகாது. இத் தத்துவங்கள் இலை மறை கனி போன்று வடமொழி வேதத்திலும் துன்னப்பெற்றுள்ளன. ஆனால் அவற்றை வெள்ளிடை மலைபோல் வெளியிட்டுப் பிரகாசிக்கச்செய்தது தென்மொழி வேதமாகிய திருவாய்மொழியேயாகும். இஃதே ஆன்மாவுக்குற்ற அறநெறியையும், முக்தி நெறியையும் காட்டிப் பேரின்பத்தைப் பெறச் செய்வதில் தலை சிறந்தது.

பின்னும், தமிழ் ஆரணத்தின் அகப்பொருள் பதிகங்கள் அஷ்டாக்ஷரத்தையும், ப்ரணவத்தையும் உட்கொண்டிருப்பதால் வடமொழி வேதத்தையே உருக்கொண்டெழுந்ததாகும். இம்முறையில் வேதம் தமிழ் செய்த மாறன் என்ற பெரியார் கூற்றும் மெய்யே. தென்மொழியிலும், வைணவ சமய நூல்களிலும் வல்லுநர்க்கே இந்நூலில் உள்ள குற்றங்கள் காணப்படுவனவாகும். அவற்றை வெளியிடும் பெரியார்களே அடியேனுக்குப் பரம உபகாரர்கள். அறிவிற் சிறந்த பெரியோர், இயற்றற்குரிய இச்செயலை அறிவும், சொலும் சிறிதுமற்ற அடியேன் இயற்றப்புகுந்தது பலருடைய நகைப்புக்கு இடமாகும்.

"ஏர்விலா என்னைத் தன்னாக்கி என்னால் தன்னை
சீர் பெற இன் கவி சொன்ன திறத்துக்கே."

என்று ஆழ்வார் அருளிச்செய்தவண்ணம் அடியேன்

உ... த்தின்கண், ஆசாரியன் வீற்றிருந்து இதை வெளியிட்டானித்தனை என்பதுவே உண்மை. இங்கு அன்னாருடைய பெருமையைச் சிறிது வெளியிட்டு அடியேன் புன் சொற்களை முடித்துக்கொள்வன்.

அடியேன் ஆங்கிலம் கற்று, ஒத்தைத் திருமண் இட்டு, நாஸ்திகம் பேசித் திரிந்த நாளில் நம்பிள்ளை அபராவதாரம் என்று சொல்லும்படியான கபிஸ்தலம் திருமலை அனந்தாண் பிள்ளை ஸ்ரீமத். உ. வே. அனந்தாசாரிய சுவாமிகள் விசேஷ கடாக்ஷம் செய்யும்படியான ஒரு நன்னாளைப் பெற்றேன். ஆழ்வார்கள் யாவர்? என்றும், ஆசாரியர்கள் யாவர்? என்றும் அறியாதவனாயும், 'ஸ்ரீ சைலேச' என்ற தனியனையும் சொல்லத் தெரியாதவனாயும் இருந்த அந்நிலையில் அவர் அருள் வெள்ளம், சிஷ்யனைப் பரீக்ஷை செய்து கைக்கொள்ளவேணும், என்ற வரம்பைக் கடந்து, அப்போது நடந்துவந்த காலக்ஷேப கோஷ்டியில் அடியேன் புகுதற்கும், ஸ்ரீ வசனபூஷணம் என்னும் தலை சிறந்த இரகசியத்தை முதன் முதலாக ஏற்பதற்கும், அருளிச் செயலின் வியாக்கியானங்களை முறையாகக் கேட்பதற்கும் இடந் தந்தது.

இரும்பைப் பொன்னாக்கும் வன்மை ஆசாரியர்களுக்கே உண்டு என்ற கூற்றுக்கு அடியேன் ஒருவனே எடுத்துக்காட்டியாவேன். இத்துணைக் குணபூர்த்தியுள்ள ஆசார்யன் பெருமையை அளவிட்டு வரைவதற்கஞ்சி இத்துடன் விடுத்தேன்.

சரண்ணியனே யாகிலும், சரணாகதனுக்குக் குண பூர்த்தியுள்ள அர்ச்சாவதாரம் பயன் அளிப்பது போன்று, ஆசாரியனேயாகிலும், ஸம்ஸாரிகளுக்கு அருள் நிரம்பியவாரியன் திருவடிகளே அரணளிக்கும் என்பதைத் தெளிந்தோம்.

தாழ்மையுள்ள,

T. D. இராமஸ்வாமி இராமாநுஜ தாஸன்.

8–8–38. திருப்புறம்பயம்.

குறிப்பு.— இப்புத்தகத்தை அச்சேற்றும் காரியத்தை அன்புடன் ஏற்றுக்கொண்ட, ஸ்ரீரங்கம் ஆனரரி மாஜிஸ்டிரேட், ஸ்ரீமான் R. A. பங்காருஸ்வாமி நாயடு அவர்கள் பேருதவியைப் பெரிதும் பாராட்டக் கடவன்.

T. D. R.

ஸ்ரீ:

மதிப்புரைகள்.

வேத வேதாந்த வைஜயந்தீ வித்யாலயத் தலைவரும்,
திவ்யார்த்த தீபிகை. அம்ருதலஹரீ பத்ரிகைகளின்
ஆசிரியருமான மஹா வித்வான் ஸ்ரீ. உ. வே. ஸ்ரீகாஞ்சீ
ப்ரதிவாதி பயங்கரம்

P. B. அண்ணங்கராசார்யஸ்வாமிகள்.

தமிழ் நூற்களில் ஆழ்ந்த அறிவு பெற்ற பெரும் புலவர்கள் அகப்பொருள் துறைகளிலே அதிகமாக ஆழ்ந்து நிற்பர் அகப்பொருள் என்பது சிருங்காரரஸ புஞ்சம் என்றறியத் தக்கது. சிற்றின்பங்களைத் தவிர்ந்து பேரின்பத்திலே ஈடுபட்டவர்கள் பக்திரஸத்திலே தலைச்சிறந்து நிற்க வேணுமேயன்றி, சிருங்கார ரஸத்தில் உள்ளம் செலுத்தலாகாதென்று சிலர் கருதுவர். நம் ஆழ்வார்களுக்கு பக்திரஸம் சிருங்கார ரஸவடிவு பூண்டு கிடப்பதாகப் பூருவாசாரியர்கள் கண்டறிந்து அருளியுள்ளார்கள். திருவிருத்த வியாக்கியானம் முதலியவற்றில் இது காணத்தக்கது. ஸ்ரீமத் வேதாந்த தேசிகரும் "பக்தி: ச்ருங்கார வ்ருத்த்யா பரிணமதி முநே:" என்றருளிச் செய்தார். கடுத்தின்னாதாரைக் கட்டி பூசித் தின்பிப்பாரைப் போலே சிருங்காரரஸப் பூச்சாலே பக்தி ரஸத்தை ஊட்டுகின்றார்கள் ஆழ்வார்கள்.

சைவசமய குரவர்களிற் சிலர் எழுதிய திருக்கோவையார், தஞ்சைவாணன்கோவை முதலிய சில நூல்கள் அகப்பொருள் துறைகளிலேயே அமைந்துள்ளன. ஆழ்வாரு

...ரியல்கள் அவ்வகையாக அமைந்திலவாயினும், திரு விருத்தமும் திருவாய்மொழியில் பல பதிகங்களும் அவ்வகையான் அவதரித்துள்ளன வென்பது பிரசித்தம். ஆங்காங்கு நாம் நுட்பமாக அறியத்தக்க விழுமிய வேதாந்தப் பொருள் களைப் பூருவாசாரியர்களின் அரிய பெரிய வியாக்கியானங்க ளிலிருந்து அறியலாமாயினும், அதற்குப் பல பல உபகரணங்கள் இன்றியமையாதன.

நெடுநாள் குருகுலவாஸம் செய்து அருளிச்செயலாழ் பொருள்களை அடைவே அறியப்பெற்ற அறிஞர் தலைவராய் விளங்காநின்ற ஸ்ரீமாந் பிரபந்த வித்வான் திருப்புறம்பயம் T. D. இராமஸ்வாமி நாயுடு அவர்கள், அவ்வாழ்பொருள்கள் அனைவர்க்கும் எளிதிற் புலப்படும் வண்ணம் மிகப் பரிச்ரமப்பட்டு எழுதி அச்சிடுவித்துள்ள "அகப் பொருளும் அருளிச் செயலும்" என்னும் சிறந்த நூலை முழுவதும் பல முறை படித்துப் பார்த்ததில் உண்மையில் மிக மகிழ்ந்தேன்.

பலர் தந்தமக்குள்ள இலக்கண இலக்கியப் புலமையைக் காட்டுதற்கென்றே மிகக்கடினமான சொற்களைப் பெய்து பொருளையும் மறைய வைத்து எழுதிப் போருவர். இப்பெரியார் அங்ஙனன்றி, தமது அறிவும் ஆற்றலும் அனைவர்க்கும் ஒருங்கே பயன்பட வேணுமென்ற விசாலநோக்கங்கொண்டு, சீரிய பொருள்களைச் சிற்றறிவினரும் எளிதில் அறிந்து அகமகிழும் வண்ணம் மிக இனியநடையில் இந்நூலை அமைத்திருக்கும் பெற்றி மிகவும் போற்றற்குரியது.

இன் சுவையே வடிவெடுத்த இந்நூலைத் தமிழ் மக்கள் அனைவரும் ஆழ்ந்து நோக்கி அகப்பொருள் வகைகளை அழகாக வுணர்ந்து அகங்குழைதல் நலம்.

P. B. அண்ணங்கராசாரியர்.

ஸ்ரீ:

திருச்சிறுப்பள்ளி அட்வகேட் ஸ்ரீ. உ. வே. மதந்த்ராய ஸாராஸ்வாதி, மீமாம்ஸா ரத்னம்

A. V. கோபாலாசார்யஸ்வாமிகள், M.A., B.L.

இந்நூலை முழுதும் படித்தோம். இது ஓர் அரிய பெரிய நூல். அருளிச்செயல்களையநுபவிக்க தமிழிலக்கண நூல்களின்படி அப்பொருளின் ஞானமின்றியமையாதது. அருளிச்செயல்களுக்கு உரைகளருளிய பூர்வாசிரியரெல்லோரும் தமிழ் ஸம்ஸ்க்ருத மிரண்டிலும் இலக்கண நூல்களை முற்றும் கற்றவர். ஆங்காங்கு அவ்விலக்கணங்களை யெடுத்துக்காட்டியுளர். ஆயினும் அருளிச்செயல்களை யநுபவிக்க ஸஹகரிக்கும்படி அபேக்ஷிதமான இலக்கணம் முழுவதும் ஓர் நூலாக இம்முறையில் எல்லோர்க்கும் தெரிவாக இதுவரையிலமைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. அந்த அபேக்ஷையை இந்நூல் தீர்க்கும். இந்நூலாசிரியர் எப்படி ஸத்வகுணம் நிறைந்தவரோ, அப்படியே இந்நூலும் ஸத்வகுணம் நிரம்பித்ததும்புவது. ஸ்ரீவைஷ்ணவஸ்வரூபத்தில் நிஷ்டைக்குத்தக்கபடி சேஷத்வரஸமும், சாந்திரஸமும், சுத்திரஸமும் ஒவ்வோரக்ஷரத்திலும் வழிந்து ஓடுகிறது. 'சாந்தி சுத்தாந்தஸீமா' என்று திருவாய்மொழியைப்பற்றி தாத்பர்ய ரத்நாவளி தொடக்கத்தில் பாடியது, திருவாய்மொழி விஷயமான இந்நூலுக்கும் பொருந்தும். தமிழ்நடை செந்தமிழாயினும், எம்போன்றவருக்கும் தெளியதாயுள்ளது. 'பொய்யில் பாடல்களுக் கேற்ற பொய்யில் நூல்.' சில விஷயங்களை யெடுத்துக் காட்டுவோம்.

பக்கம் 163ல் ஆழ்வார் 'பகவதம்சமும் விஷ்வக்ஸே

நாச்சதுமான சேசநனென்றொரு 3000 குருபரம்பரையி
லுள்ள தென்பர்' என்றுள்ளது. இது 'ஷெஸநாவதே:
வயி வ கா்ஸிஹ்யஹெzவதீணூம்' என்னும்
ச்லோகத்தைக் குறிப்பது. வ்யாஸர் நாராயணாம்ச மென்பர்
சிலர்; நாராயணனே யென்பர் சிலர். 'அதிமஹிமை யுள்
ளன வெல்லாம் எனது தேஜோம்சஸம்பவம் என்று அறி
வாயாக' என்ற கீதை அம்ச பக்ஷத்தை யநுக்ரஹிக்கும்—

206-ல் 'வடமொழி வேதத்திற்கு ப்ரஹ்மஸூத்ரம்
போல் திருவாய்மொழி யெனும் தென்மொழி வேதத்திற்கு
ஸ்ரீலோகாசார்யருடைய ஸ்ரீவசந பூஷணம் ஸூத்திர
நூலாகும்' என்றது மிகப் பொருந்தும். வடமொழி வேத
ஸூத்ரகாரரான வ்யாஸரை 'வேதாசார்யர்' என்பர். உலக
மொழியான தமிழ் வேதஸூத்ரகாரர் 'உலகாசாரியர்' என்
பது பொருத்தமுடையதே. 'தென்மொழி வேதம்' என்பதில்
'தென்' என்பது 'தேன்' என்று நீண்டு தேன்மொழி வேத
மாகிறது. 'சுத்தநீரும் சுத்தநீரும் கலந்ததுபோல' என்று
ஜீவபரமாத்ம ஸம்ச்லேஷத்தை வடமொழிவேதம் வர்ணித்
தது. 'நதிகள் (உப்பு) ஸமுத்ரத்தில் நுழைந்து கலந்து ஒன்
றுவதுபோல' என்றும் அவ்வாத்மக்கலவியைப் பேசிற்று.
ஸமுத்திரம் நதிகளுக்கு பதி. அங்கும் நாயகிபாவத்தைக் கொ
ள்ளலாம். 'வானுளார்பெருமான் மதுசூத னென்னம்மான்
சீரும், யானுமெல்லாந் தன்னுள்ளே கலந்தொழிந்தோம்
தேனும் பாலும் நெய்யும் கன்னலு மமுதுமொத்தே' என்
றார் ஆழ்வார். 'தேனும் தேனும் போலும்' 'பாலும் பாலும்
போலும்' என்று அதற்கு நம்மாசிரியர்களுரை. ஆன்மக்கலவி
தானே பேரின்பம். அதைத் 'தேனும் தேனும் போல' என்று
பேசும் வேதம் தேன்மொழி வேதம்' என்று அறுதியிட
என்னதடை? 'யதக்ஷயஸ் த்ரயீகண்டே யாந்தி யுக்தா ஸூ
த்ரதாம்' என்ற ஸ்ரீரங்கராஜஸ்தவத் தொடக்க ச்லோகத்தில்

ஸ்ரீபட்டர் ஸூசித்துக்காட்டியபடி 'ச்ருதிதேவி' என்னும் திருவைப் பதியோடு கூட்டி வைத்துப் பிணைக்கும் மங்கள ஸூத்ரமெனும் தாலிச்சரடுகள் ப்ரஹ்ம ஸூத்ரங்கள். ஆண்பிள்ளைகளுக்கு உபநயந ஸம்ஸ்காரம்போல, மாங்கல்யஸூத்ரம் கட்டும் விவாஹம் பெண் மக்களுக்கு ஸம்ஸ்காரம். சப்த ப்ரஹ்மமென்னும் த்ரயீதேவியை பரப்ரஹ்மமெனும் புருஷோத்தமனோடு தாலிச் சரடுகள்போல் பிணைத்து வைப்பது ப்ரஹ்ம ஸூத்திரம். வேதாசாரியர் ஸூத்ர நூல் போல லோகாசார்யர் நூலும் 'ஸ்ரீவசநம்' என்னும் 'திருவாய்மொழி ச்ருதி தேவிக்கு' மங்கள ஸூத்ரமெனும் திருமங்கல்ய பூஷணமாவதையிட்டு, ஸ்ரீவசநபூஷணமென்ற திருநாமமமைந்ததென்று அழகாகக் காட்டியுள்ளது ஸம்ஸ்க்ருத ச்லோக ரூபமான த்ரமிடோபநிஷத்தாத்பர்ய ரத்நாவளியில் ஒவ்வோர் ச்லோகமும் ரத்நம் போன்ற ஒவ்வோர் பதத்தால் ஓரோர் பாசுரமாக யதாக்ரமமாக ஸங்க்ரஹித்து ஓரோர் திருவாய்மொழியை (தசகத்தை) ஸூத்திரம் போல ஓரோர் ச்லோகத்திற்குள் கோத்துளது. அந்நூல் ஓர் ரத்நாவளி ஸூத்ரம். தென் மொழி வேதத்திற்கு வேதாந்தாசார்யரருளிய பழமொழி ஸூத்ர நூல். 'ஞானத்தமிழ்க் கடல்' எனும் 'த்ராவிட வேதஸாகர'த்தைக்கடைந்து அமுதம் திரட்ட உபகரிக்கும் ஸூத்ரங்கள் (கயிறுகள்). 'ஸமுத்ரமிவ ரத்நாட்யம்' என்றது போல பகவத்குண ரத்நாகரமான த்ராவிடவேத ரத்நாகரத்திலிருந்து பகவத்குண ரத்நங்களை கயிறுகட்டி இழுத்தெடுக்கும் ஸூத்ரங்கள். எடுத்த ரத்நங்களைக் கோத்து ஹ்ருதயத்தில் ஸர்வகாலமும் ரத்நஹாரமாக தரிக்க உதவும் ஸூத்ரங்கள்.

இப்படி த்ராவிட வேதாந்தத்திற்கு, ஸம்ஸ்கிருத ஸூத்ரங்களியற்றிய வேதாந்தாசார்யரை, ஸத்வோத்தரரும் ஸ்ரீவைஷ்ணவப்பழமுமான இந்நூலாசிரியர் "வேதாந்த மஹாதேசிகர்" என்று 159-ல் கூறினார். 'வேதாந்த

தேசிகர்' 'வேதாந்தாசாரியர்' 'நிகமாந்த மஹாதேசிகர்' என்பர். 'வேதாந்த மஹாதேசிகர்' என்று இப்பெரியார் பக்தியால் சாற்றும் அழகிய புதுத் திருநாமம்.

அவ்வாசிரியர் ஆழ்வாருடைய பிரபாவங்களை வடமொழிப் பாடல்களாயிரமாக அரங்கமாநகரில் ஓரிரவில் பாடிய பாதுகா ஸஹஸ்ரத்தை, 159-ல் "மதிளரங்கர் வண்புகழ் மேல் ஆன்ற தமிழ்மறைகளாயிரமும்—ஈன்ற முதல் தாய் சடகோபன்" எனப் பெரியபெருமாள் பெருமைக்குத் தக்கவாறு ஆயிரம்பாக்கள் ஆழ்வார் பாடியதைப்போன்று, தானும் அப்பெருமாள் பாதுகைகளான 'ஆழ்வார் ஏற்றத்திற்குத் தகுதியாக ஆயிரம் க்ரந்தங்களாக்கிய ஓர் ஸ்தோத்திர நூலாகும்' என்று இந்நூலில் வர்ணித்துளது. 'தம் புகழ் மேல் ஆன்ற தமிழ் மறைகளாயிர மீன்ற சடகோபனுக்கு' மதிளரங்கர், தாம் நாமகரணம்செய்த தூப்புல்பிள்ளையைக் கொண்டு சடகோபர் புகழ் மேல் பாடுவித்த பாசுரங்களாயிரம். தம் முன்னிலையிலே திருவயோத்தியில் வடமொழி ராமாயணமரங்கேற்றியது போல கோவிலில் தென்மொழி ராமாயணத்தை யரங்கேற்றிய கவிச்சக்ரவர்த்தியைக் கொண்டும், விசதவாக்சிகாமணியான ஸ்ரீ வீரவர முனியைக் கொண்டும் அந்தாதிகளாக இரண்டு நூறுகள் பாடுவித்தார்.

'அந்தாதி' என்பதற்கு 'உபநிஷத்து' என்று பொருள் கிடைக்கும் படி 'ஆதி' என்னும் 'பகவானை'. அந்தத்தில் (ஸமீபத்தில்) கொணர்வது என்று ஓர் வ்யுத்பத்தி 194ல் இந்நூலில் காட்டியுளது. திருவாய்மொழி முழுவதும் பகவத்விஷயமான ஓர் அவிச்சின்னமான (ஓவாத) யோகாநுபவம். அதை ஓர் தீர்க்க சரணாகதி யென்றும் கூறுவர். தைலதாரை போலே அவிச்சின்ன யோகாநுபவமுமாகும். "சாந்தோதிதௌ துல்யப்ரத்யயௌ சித்தஸ்ய ஏகாக்ரதாபரிணாம:" என்று யோக ஸூத்ரம். யோகத்தில் பகவத்விஷயமான நினைவுகள் சங்கிலித்தொடராக ஓவாது தொடர்

ந்து வந்து கொண்டேயிருக்கும். முன் நினைவு சாந்தமாகையிலேயே அதேவிதமான நினைவு தத்க்ஷணமே உதிக்கும். ப்ரதிக்ஷணமும் அதிவேகமாகத் தொடர்ந்து வரும் தீபஜ்வாலைகள் ஒன்றாகவே காண்பதுபோல இந்த சாந்தோதிதமான ஏகாக்ரதாநுபவத்திற்கு சப்தத்திலும் முன்பாசுர முடிவே அடுத்து வரும் பாசுரத்தின் அடியாகத் தொடருவது அழகு. ஓவாது தொடர்ந்த யோகத்திற்கு அது ஏற்றது. விட்டதே தொட்டதாயிருக்கும். சாந்தமே உதிதம் போலாகும். ஆநந்தமயமான ப்ரஹ்மத்தில் ஆழ்ந்திருக்கும்போது துளி இடைவெளி வந்தாலும் அது பயத்திற்கும் துக்கத்திற்கும் காரணமாகுமென்றது ஆநந்தவல்லி. திணையேனும் விச்சேதம் வந்தால், கள்ளர் கொள்ளைகொண்டு போகும் பொழுது போல கூக்குரலிட்டு அழுவது யுக்தம், என்றனர் ருஷிகள். ‘ஓவாதுரையாயிரமாமறை’ யென்று சங்கப் புலவர்கள் சாற்றில் ‘ஓவாதுரை’ என்றது யோகாநுபவத்தில் விச்சேதமில்லாமலிருக்க உதவுவது அந்தாதியமைப்பு என்னும் கருத்தையும் உட்கொள்ளும். அச்சாற்றில் ‘ஈயாடுவதோ கருடற்கெதிரே’ என்னுமிடத்தில் வேதாத்ம மயமான கருடனுக்கு ஒப்பிடுவது, திருவாய்மொழியும் வேதம் என்னும் பெருமையைக் காட்டும். அப்படியே ‘இரவிக்கெதிர் மின்மினியாடுவதோ’ என்னுமிடத்திலும், ‘ஜ்வலிக்கும் ஸூர்யன் த்ரயீயென்னும் வேதமே’ யென்று வேதம் கூறுகிறபடி வேதச்சுடரே ஸூர்யச்சுடரானதால், திருவாய்மொழி வேதமென்பதை ஸூசிக்கும் அந்தாதியாயிருப்பது ‘முழுமையும் விடாமல் (தப்பாமல்) அநுஸந்திப்பதற்கு ஒரு தக்க கருவியாயுமிருக்கிறது’ என்று 176-ல் கூறியது யுக்தமே. முக்காலமும் கண்முன்னே ப்ரத்யக்ஷமாகவுள்ள யோகிஸார்வபௌமரான ஆழ்வார், தம் திருவாய்மொழி ஆயிரக்கணக்கான தம்மடியாரால் வேதம்போல ஆசான் முகமாக அத்யயனம் செய்யப்பட்டு, கோஷ்டி கோஷ்டியாகப் பாராயணம்

செய்யப்போவதை யறிந்து, பாசுர க்ரமம் தப்பாதிருக்க முன் பாசுரத்தின் அந்தத்தை அடுத்த பாசுரத்தின் ஆதியாக வமைத்தருளினர். ராமாயணமும் வெகுகாலம் அத்யயனம் செய்யப்பட்டு வந்தது. அதிலும் முன் ஸர்க்கத்தின் முடிவு, பின்ஸர்க்கத்தின் தொடக்கத்தில் சப்தத்தாலும் அர்த்தத்தாலும் பெரும்பான்மையாக அனுவதிக்கப்படுகிறது. 'இத்தால் திருவாய்மொழி ஸதா அநுஸந்தேயம் என்பதையும் அறிவித்ததாம்' என்று 176-ல் கூறியது யோகாநுபவத்தின் விச்சேதமின்மையையும், ஸாதாநத்வத்தையும் உட்கொள்ளும். யோகமென்பது யமநியமாஸந ப்ரத்யாஹாராதிகளால் உடலைவிட்டு ஆத்மாவைத்தனியே பிரித்து (உடலை மறந்து,மெய்மறந்து) பரமாத்மாவினிடம் லயிக்கச்செய்வது என்பது ப்ரஸித்தம். ஆழ்வாரிலும் மிக்க யோகியில்லை. பச்யர் யோகீ பரம் தத்பதகமலநதௌ அந்வஸாத் ஆத்மஸித்தம்' என்று முதல் திருவாய்மொழியின் ஸங்க்ரஹமான ரத்நாவளிச்லோகத்தில், யோகியென்றே ஆழ்வாரைக் கூறப்பட்டது. அகப்பொருளிலக்கணங்களுடன் பாசுரங்களமைத்திருப்பதும் எல்லையற்ற ப்ரீதியோகமான பக்தியை வளர்க்கவே. லக்ஷணை முறையாக ஆத்மாக்களின் சம்ச்லேஷத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம். ஸம்ப்ரஹ்ருஷ்டா வைதேஹீ ஹ்ருதயேந பரிஷஸ்வஜே । என்னுமிடத்தில் தேஹத்தை மதியாமல், தன்னுத்மாவால் நாயகனுடைய ஆத்மாவை யணைந்தாளென்பதை வைதேஹீ என்பதால் ருஷி வ்யஞ்ஜனம் செய்தார். 'எல்லையிலந்நலம் புல்குபற்றற்றே' என்ற வுபதேசம் ஆத்மாக்களின் ஸம்ச்லேஷத்தைக் குறிப்பதும் தேகப்பற்றைத் தவிர்ப்பதும் திண்ணம். 'ஏதம் ஆநந்தமயம் ஆத்மாநமுபஸங்க்ராமதி' என் உபநிஷத்தின் கருத்தை ஆழ்வார் தெளியச்செய்தார். 'ஆத்மரதி:' 'ஆத்மமிதுந:' 'ஆத்மாராம:' என்று பல்கால் வேதமோதுவதும் இதற்குப் பொருந்தும். 225-ல்

‘யோகத்திற்கு உபகரணமான பக்தியை ஸ்தநங்களாகவும், இடையை வைராக்யமாகவும், கண்ணை ஞானமாகவும், அளக பாரத்தை ஞாநவிகாஸமாகவும் வ்யவஹரிக்கையும், மகள் ப்ராப்யத்வரையாகவும், தோழி ஸம்பந்தமான ஞானமாகவும், தாய் உபாயாத்யவஸாயமாகவும் கொள்ளப்படும்’ என்று இந்நூல் இக்கருத்தை அழகாக உபபாதித்தது. ‘யோஷா ஜாரமிவ ப்ரியம்’ என்று பகவானிடமிருக்கவேண்டிய உள்ளன்பை வேதம் களவியலுக்கு உவமையிட்டது. உவமையில் முழு ஸாம்யமில்லை. வேண்டியஅந்த மட்டு சொல்லவேணும் நிர்ப்பந்தமென்பதேயில்லாமல், ஸ்வபாவமாகத் தன்னடைவே நெஞ்சில் ஊறு மன்பின் மிகுதியை லக்ஷணமுறையாக ஸூசிப்பதில் நோக்கு. ‘ப்ரியையான பார்யையால் அணையப்பட்டு எப்படி உள்ளும் புறமும் மறந்து இன்ப பரவசராவரோ அப்படி’ என்ற இவ்வாறு மக்கலவியை உபநிஷத்து மிக வழகாகக் காட்டியது தான், ஆத்மாக்களுக்குள் நாயகநாயகீ பாவமாக காவ்யரீதியில் அநுபவிக்கும் பேச்சு.

பத்துப் பாக்கள் கொண்ட பத்துப் பகுதிகளால் நூறு நூறு பதிகங்களும், பத்து நூறாக ஓராயிரமாக பிணைத் அக்குப் பல ஔசித்யங்களழகாகக் காட்டப்பட்டுள்ளன. 10 என்பது பெருமாளவதாரங்களின் ஸங்க்யை. ‘இத்யநங்க தசா: தச’ என்றபடி நாயகியின் காமாவஸ்தைகள் 10. நூறு நூறாக ஆநந்தத்தைப் பெருக்கிற்று ஆநந்த வல்லி. சாம சாகை ஆயிரத்தின் அவதாரமான இந்த இன்பவெள்ளத்தை, பத்துப்பத்தாகப் பெருக்கி ஆயிரம் பாக்களைக் கைப்பற்றியது. உபநிஷத்தில் சதகுணிதோத்தரம்—இங்கே தசகுணிதோத்தரம். ‘பத்து’ என்பது பெருமாளவதாரங்களுக்கும் மந்மதாவஸ்தைகளுக்கும் கணக்கு. பத்துப்பத்தாய் இன்பத்தைப்பெருக்குவது பகவத்விஷயமான இன்பக்கலவி நூலுக்கேற்கும். ‘அவிபாகேந த்ருஷ்டத்வாத்’ என்று மோக்ஷ

பாதப்ரஹ்ம ஸூத்ரத்திற்கூறிய ஜீவாத்ம பரமாத்மாக்க ளின் பிரியாக்கலவி யின்பத்தை நம்மையு மனுபவிக்கச் செய்து 'இன்பம் பயக்க' அவதரித்த நூல், உலகத்தையும் தம் நெஞ்சையும் மகிழச்செய்யும். பழக வினிய மகிழ்மாலை ஆழ்வார் நெஞ்சையலங்கரித்தது உசிதமே. புலனைந்திற்கும் புலப்படா உணர்வின் மூர்த்தியான மிக்கவேதியர் வேதத் தின் உட்பொருளை புறப்பொருளைப்போல புலன்களாலநுப விக்கலாம்படி ப்ரத்யக்ஷமாகக் காட்டிதரும் வலிமையுடைய அநுபவநூல்—'ப்ரத்யச்சை பராக்குப்போல ப்ரத்யக்ஷமாக வநுபவிக்கக்காட்டும் ஸாரஸ்வத ஸாரம்' 'கண்களுக்கு விஷயமல்லாத பகவானைக் காணுமாறு ப்ரத்யக்ஷ விஷய மாம்படி செய்யும் வலிமையுடையது' என்று ரத்நாவளி முதல் ச்லோகம் காட்டிற்று. 'ப்ரத்யக் ப்ரத்யக்ஷயோ: ப்ரதிநியதா மாஸந்நிதாநம் நிதாநம்' என்ற அந்த ச்லோகத்தின் நான்கா மடி. புலன்களுக்கு அதீதமான, அவிஷயமான அகப்பொருள் புறப்பொருள் போல தர்சன விஷயமாவதின்காரணம், திரு வின் ஸந்நிதானத்தை அகலகில்லாமல் அகண்டரும்பொருக் தப்பெற்ற 'திருவாய்மொழியாக' விருப்பதேயாமென்பதை அங்கே வேதாந்தவாரியரழகாக ஸூசித்ததை இந்நூல் 182-188 பக்கங்களால் விரிவாக விளக்குகிறது. திருவாய்மொழி யெங்கும் திருவின் வியாப்தியுளதே. 'திருக்கண்டேன்' என்று மாத்ருவாத்ஸல்யத்தால், திருவைக்காண சக்தி லபிக்கவே 'பொன்மேனி கண்டேன்' என்று 'ஆப்ரணகாத் ஸர்வ ஏவஸு வர்ண:' என்ற திருமேனியும் தத்க்ஷணமே காணுமாறு அருள் கிடைக்கிறது.

'சேதநனும் பரமசேதனனும் நீரில் நீர் கலந்தது போன்று, இரண்டறக் கலந்து பாடிய ப்ரபந்தம் பகவத்விஷயம் எனக்கொள்ளுவதில் பிணக்கு யாதுமிலது' என்று 200-ல் இந்நூல் ஆழ்வாருடைய ஸ்வாநுபவத்தைக்கொண்டு கூறும் பகவத்விஷயகாம நிர்வாஹம். 'எல்லையில் அன்னலம் புல்கு

பற்றற்றே' என்று நமக்கு உபதேசிக்கும் நூலுமாதலாலும்தம்
முடைய இன்ப உணர்ச்சியை நமக்கும் ஸங்க்ரமிக்கச்செய்து
நமக்கும் அதீந்த்ரியமான விஷயியென்னும் அவிஷயப்பொரு
ளை இன்பானுபவ விஷயமாக்குவதைக் கொண்டும் அந்நாமநிர்
வாஹத்தை ரத்நாவலி முதல்சுலோகத்தின் நான்காம்பாதம்
காட்டிற்று. 'ஐம்புலன்கள் நுகருமின்பத்தையே விஷயாந்தர
மென உலகம் வழங்குகின்றது. இவ்விஷயாந்தரத்தை வேர்
முதல் மாய்த்து, பகவத்விஷய(மெனும்பேரின்ப)த்தில் மூட்
டும் ப்ரபந்தமிதுவாதலால் இது பகவத் விஷயமெனப் பெய
ருற்றதாம்' என்று 202ல் இந்நூலின் கூற்றிற்கு இது கருத்தா
கும். 'அன்றிக்கே பேரின்பமாகிய பகவத் விஷயத்தை சிற்றின்
பம் போல் அகப்பொருள் வாயிலாக அநாயாஸமாக அநுபவிக்
கச்செய்யும் தன்மையுடையது யாதோ அதுவே பகவத்விஷ
யம் என்னலாம் பெயர் பெறுதற்கு உரித்தாகுமன்றோ' என்று
இந்நூலிற் கூறியது ப்ராயேண ரத்நாவலி கூறியதேயாகும்.

'ஸம்ஸார போகங்களிலாழும் மற்ற சேதனரைப் போ
லன்றி (ப்ரஹ்லாத சிசுவைப்போல் கர்பத்திலிருந்தே) பக
வத் பக்தியிலாழ்ந்து நின்ற இவ்வாழ்வார் ஸம்ஸாரஸாகரத்
தில் ஆழ்ந்த நிமக்நரை உயர்த்தவே, அக்கரைப்படுத்தவே
அவதரித்தனர். ஆதலினிவர்க்கு ஆழ்வார் என்ற திரு
நாமம் அமைந்தது போலும்' என்று 130-131 ல் இந்நூலிற்
கூறியதும் ரத்நாவலி முதல் ச்லோகத்தில் "பாதம்
பாரம்பரீதோ பவஜலதிபயங்மஜ்ஜநாநாம் ஜநாநாம்"
என்ற மூன்றுமடியால் காட்டப்பட்டதேயாகும். ஸம்ஸாரி
களானநாமும் ஓர்விதத்தில் ஆழ்வார்களே. ஆழும் விஷய
மட்டும் வேறு. நாம் விஷ(விஷய) ஸமுத்ரத்திலாழ்வார்கள்;
அவர் ப்ரஹ்மாம்ருதஸமுத்திரத்திலாழ்வார். ஆழ்வார்களுக்கு
ஆழ்வார் தனே யென்று ரஸம். தாம் ஆழ்ந்த இன்ப வெள்ளத்
தை தம்முடைய இன்பவெள்ளநூலால் நம்மையும் ஆழ்ந்து
குளிர நீராடச்செய்வதாலும் அவர் ஆழ்வார். தம்மைப்போல

ஆழ்வாராக்குவதாலும் ஆழ்வார். 'ஆத்மஸாம்யாவஹந்வாத்' என்னுமாபோல் தமக்கு ஸமராக்குவது ஆசிரியருக்கும் ப்ரஹ்மத்திற்கும் ஸ்வபாவம். 'இன்பத்திலிறைஞ்சுதலில் இசையும் பேற்றில்' என்று மதுரகவியின் தேன்மொழிப்பதிகத்தை வேதாந்தவாரியர் பாடிய பாசுரத்தில், 'இன்பத்திலிறைஞ்சுதலில்' என்று 'கண்ணிநுண்சிறுத் தாம்பினால் கட்டுண்ட என்னப்பன்' என்ற முதற் பாசுரம் ஸங்க்ரஹிக்கப்பட்டது. 'எத்திறம்' என்று ஆனந்த மூர்ச்சிதராய் ஆறு மாஸம் யோக ஸமாதியான வின்பவெள்ளத்தி லிறைஞ்சுவதை நேரிலநுபவிக்க பாக்யம் பெற்ற சிஷ்யர் தம்மாசிரியரின்ப வெள்ளத்திலாழ்ந்த துறையையே நமக்கு முதல் பாசுரத்தில் காட்டி, ஆழ்வாரைப்போல இன்பத்திலிறைஞ்சும் துறையைக் காட்டி நம்மையும் ஆழ்வாராகச்செய்ய மநோரதிக்கிறாரென்பதை வேதாந்தவார்யர் ஸூசித்தார். ப்ரஹ்மத்திற்குள் ஆழும் ஆழ்வாருள்ளும் அவர் திருவாய்மொழிகளுள்ளும் ஆழ்வது, கைமுத்யத்தால் ப்ரஹ்மாம்ருத ஸாகரத்திலாழ்வதேயாகும். 'பாவைத் திருவாய்மொழிப் பழத்தை பசுங்கற்பகத்தின் பூவை பொருகடற் போத வமுதை' என்று 133ல் வரைந்துள்ள கம்பர் பாசுரம். 'நிகமகல்பதரோர்களிதம்பலம் சுகமுகாதம்ருதத்ரவஸம்யுதம்-பிபத பாகவதம் ரஸம் ஆலயம் முஹுரஹோ ரஸிகா புவி பாவுகா:' என்று பகவத்விஷயமான பாகவதத் தொடக்கத்தில் பாகவதத்தினின்ப ரஸத்தை கிளிமொழியான சுகர் வர்ணித்ததின்ப்ரதித்வநியாகும். பகவத்விஷயமென்பதும் ஓர் பாகவதமே யென்பதை கவிச்சக்ரவர்த்தி அப்பாசுரத்தால் வ்யஞ்ஜநம் செய்தார். திருவாய்மொழி இன்பக் கடலாயிருப்பது போல் அந்த ப்ரபந்த விஷயமான இந்நூலும் ஓரின்பக்கடலாயிருப்பதால், இதிலெல்லோரும் குளிர்ந்து நீராடுவது நலமென்று அறுதியிட்டு இச்சாற்றை நிறுத்துவோம்.

அ. வே. கோபாலாசார்யர்.

ஸ்ரீ:

மதராஸ், லேடி வில்லிங்டன் ட்ரேயினிங்
காலேஜ், சீனியர் தமிழ் பண்டிட்,

ஸ்ரீமதி பண்டிட்

S. கிருஷ்ணவேணி அம்மாள் அவர்கள்.

அகப்பொருளும், அருளிச்செயலும் என்னும் இச்சீரிய நூலை யாத்தவர் அடியாளின் ஆசாரியர்— பிரபந்த வித்வான் T. D. இராமஸ்வாமி நாயடு ஆவர். இவர் பெருமையைப் பொதுவாகத் தமிழ் உலகும், சிறப்பாக வைணவ உலகும் நன்குணர்ந்துள்ளன.

இச்சீரியார் மந்த்ரார்த்தங்களுக்குத் திறவு கோலன்ன ப்ரமாணத் திரட்டுகள் சில இயற்றியுள்ளார். அவை வைணவப் பெரியார் பலருக்கும், காலக்ஷேப பாருக்கும் ஊன்று கோலன்ன உதவி புரிந்து வருகின்றன.

அன்றியும் இவர் வைணவ உலகிற்குப் புரிந்த பேருதவி வேறொன்றுண்டு. அஃது எம்பெருமானார் புரிந்த உதவிக்கு ஒப்பு எனக் கூறல் மிகையாகாது. நம் வைணவத் தாயார் இதுகாறும் எத்தனையோ புலவரை, எத்தனையோ செல்வரை ஈன்றெடுத்துள்ளார்; ஆயினும், இராமாநுஜர் இயற்றிய வடமொழி ஸ்ரீபாஷ்யம் தமிழில் உருக்கொண்டெழுதற்குத் தக்க முயற்சியை மேற்கொள்ளும் பேரியல் புதல்வர் ஒருவரை ஈன்றிலர். அஃது அவருக்குப் பெருங் குறையாகவே இருந்திருக்கும். அக்குறையை நீக்க அந்நூலைத் தமிழில் மொழி பெயர்த்து உலகிற்கு உதவினவர் இந்நூலாசிரியரேயாவர். ஈதினும் பேருதவி யாது? இதைக் கண்ட வைணவத் தாயார் உவகையினால் உளமகிழ்கின்றார்!

"செயற்கரிய செய்வர் பெரியர்"

இப்பெரியார் இத்துணை ஆராய்ச்சி நூல்கள் எழுதும் வன்மையை மட்டும் பெற்றவரல்லர். அரிய தத்துவங்களை

யும் எளிய முறையில் பிறர் மனத்தில் ஊன்ற வைக்கும்
போதனா சக்தியும் இவருக்கு இயற்கையாகவே வாய்ந்துள்
ளது. இது யாவருக்கும அமைதல் எளிதன்று.

இத்தூயோரிடம் ஒரு முறை காலக்ஷேபங் கேட்டாரும்
பிறருக்குச் சொல்லும் வன்மை பெறுகிறார் என்னில், இவர்
போதனா சக்திக்கு வேறு உதாரணமும் வேண்டுமோ!
ஆரவாரமற்ற எளிய நடையும், தன்னலங் கருதாத் தகைமை
யும், வைஷ்ண உண்மைத் தத்துவங்களை உணரும் ஞானப்
பெருக்கும், இன்சொலின் இன்னலமும், கைம்மாறு வேண்
டாக் கண்ணியமும் இச்சீரியாருக்கே உரிமை உடையன.

இத்துணை நலங்கள் பலவாய்ந்த இம்மேலோரின் உய
ரிய ஞானமே அகப்பொருளும், அருளிச்செயலும் என்ற
இவ்வரிய நூலை அழகுபடுத்தியுள்ளது. தமிழ்மொழிக்கே
உரித்தானதும், உலகோர் சிற்றின்ப நூல் எனக் கருதுவது
மான அகப்பொருளை இந்நூலாசிரியர் பேரின்ப நூலாகிய
அருளிச் செயலுடன் பொருத்தி யிருத்தலே ஒரு சீரிய
பொருளை வெளிப்படுத்துவதாகும்.

அகப்பொருள் துறைகள் ஒன்றும் குறையாது கதைப்
போக்காக அமைந்ததற்கு இதுவே முதல் நூலா யிருக்கு
மென நினைக்கிறேன். ஆழ்வார்கள் அகத்திலிருந்து எழுந்த
அருட் பாடல்களை அருளிச்செயல் எனக் கூறல் மரபு. நம்
மாழ்வார் திருவாக்கிலிருந்து வெளிப்போந்த அமுத வாக்
கின் உண்மை நிலையையும், ஆழ்ந்த பொருளையும், அவர்
திரு உள்ளத்தையும் உணர்தற்கு இஃதொரு திறவு கோலா
கும்.

இந்நூலில் அரிய ஆராய்ச்சிப் பொருள்கள் பல உள.
அவற்றுள் சிலவற்றை யேனும் இயம்பாமற் செல்ல அடி
யாள் மனம் இசைந்திலது. திருவாய்மொழி என்ற தலைப்

லைப் பிரித்துப் பிரித்துப் பொருள் கூறியுள்ள அருமையை அளந்து கூறல் யாங்ஙனம்?

ஆழ்வார் திருநாமங்களுக்கமைந்த பொருள்களையும், ஈச்வரனைக் காட்டிலும் அவருக்கமைந்துள்ள சிறப்பையும் இத்துணை ஊன்றுதலுடன் இயம்ப சாமானியர் முன் வருவரோ! திருவாய்மொழியிலுள்ள தோழி, தாய், தலைவி கூற்றுகளைத் திருமந்த்ரத்திற்கு ஒப்பிட்டிருக்கும் பண்பு போற்றத்தக்கதாகும்.

பக்தி நிலையில் தோய்ந்த பெரியார் பெண்ணியல்பைப் பெற்றாலன்றி இறைவன் திருவடி நிழலில் தங்கவியலாது என்னும் உண்மையை இந்நூல் உறுதிப் படுத்துகிறது. அகப்பொருள் துறைகள் சிலவற்றை ஆழ்வார் அருளிச் செயல்களுடன் பொருத்திக் காட்டியிருக்கும் சீர்மை கற்றோர்க்குப் பெருவிருந்தளிப்பதாகும் இவ்வரிய ஆராய்ச்சியை மேற்கொண்ட இவ்வாசிரியரின் மன வன்மையும், கல்வியறிவும், ஆராய்ச்சித் திறனும், ஆழ்வார் மாட்டுள்ள அன்பும் சான்றோர் உள்ளத்தைக் களிக்கச் செய்வன. ஆழ்வார் அருளே இவ்வாசிரியருக்கு ஆதரவளித்தது எனப் பகர்வதுதான் பொருத்தமுடையது. ஆசிரியர் நீடூழி வாழ்க.

S. கிருஷ்ணவேணி.

ஸ்ரீ :

மதராஸ், ஸ்ரீமான் வித்வான்

T. மீனாக்ஷிசுந்தரம் அவர்கள், M. A., B. L., M. O. L.

திரு T.D. இராமஸ்வாமி நாயடு அவர்களிடத்தே பகவத் விஷயத்தில் சில பகுதிகளை முறையே கற்கும் பேற்றை எனது நண்பர் சென்னை நகராண்மைக் கழகத் தலைவர் திரு. K. வேங்கடஸ்வாமி நாயுடு அவர்கள் B. A., B L., M L. C. உதவியால் சில நாள் பெற்றேன். வைணவத்தில் இலை மறை காய் போன்று நுட்பமான உண்மைகளை உறுதி நிறைந்த திட்பத்தோடும் அமைதி நிறைந்த முகத்தோடும் அன்பு நிறைந்த மனத்தோடும் அறிவு நிறைந்த அமுத மொழிகளால் தெள்ளத் தெளியக் கேட்போர் உள்ளங்கொள்ள எடுத்துரைக்கும் ஒன்றிரண்டு பெரியோர்களில் இவர் ஒருவர். மணிப்ரவாள நடையில் உள்ள நூல்களைக் கண்டு நாம் அஞ்சாது அன்புடன் ஓதி இன்புறமாறு குறிப்புரைகளும் எழுதி உதவி வைணவத்திற்கோர் ஊன்று கோலாய் விளங்குகின்றார். அகப்பொருள் தமிழுக்கு உயிர் நிலையாகும்; இறையனார் அகப்பொருள் உரையே அதன் உண்மையை அறிவது ஆண்டவனுக்கன்றி மற்றையோர்க்கு அரிது எனப் புலம்புகின்றது. வைணவப் பெரியோர்கள் அவ்வகப்பொருள் உண்மையே வைணவத்தின் சிறப்பு எனக் காட்டியுள்ளனர். இதன் நுட்பமும் அறிவது அரிதே. நமது நாயுடு அவர்கள் அகப்பொருள் உண்மையையும் ஆழ்வார்கள் அருளிச் செயல்கள் அவ்வுண்மையை விளக்கி வைத்த இனிமையையும் ஆழ்வாரது பெருமையையும் இந்நூலில் மிக நன்றாக விளக்கித் தமிழுக்கும் வைணவத்திற்கும் பெருஞ் சிறப்புத் தேடிக் கொடுத்துத் தம் ஆசிரியர் உவகைக் களிப்புக்காளாகி உள்ளனர்.

தெ. மீனாக்ஷிசுந்தரன்.

ஸ்ரீ:

மதராஸ் யூனிவர்சிட்டி தமிழாராய்ச்சியாளரும்,
தமிழ் லெக்ச்சரருமான ஸ்ரீமாந் வித்வான்

வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள்.

ப்ரபந்த வித்வான் திருப்புறம்பயம் ஸ்ரீமாந் T.D. இராமஸ்வாமி நாயுடு அவர்களை ஸ்ரீவைஷ்ணவ உலகம் நெடுங்காலமாக நன்கு அறிந்துளது. ஸ்வாமிகள் செய்தருளியுள்ள ஈட்டின் ப்ரமாணத்திரட்டின் பதவுரை, ஸ்ரீவசனபூஷண ப்ரமாணத் திரட்டின் விளக்கம், திருமந்த்ரார்த்த ப்ரமாணத் திரட்டின் விளக்கம், தத்வத்ரயப்ரமாணத்திரட்டு, ஆழ்வாராசார்யர்கள் அபிதானவிளக்கம் முதலிய நூல்களை அறியாதவர் இரார் என்னலாம். இந்த ஸ்வாமிகளைக் குறித்து ஸ்ரீ வைஷ்ணவ ப்ரபஞ்சத்திற்கு அடியேன் கூறுவது 'அனந்தங்கண்ணுளார்க்குக் குருடனார் வழி காட்டல்' ஒக்கும்.

வைஷ்ணவ சமயத்தைச் சார்ந்தவர்களுட் பலர் வடமொழியறிவு இல்லாதவராயிருத்தல் போன்று சிலர் தென்மொழியிலக்கண அறிவு இல்லாதவராயிருக்கின்றனர். வடமொழியறிவு இல்லாதவருக்கு உபயோகமாதற்பொருட்டு ஈடு முதலியவற்றின் பிரமாணங்களுக்கு நம் ஸ்வாமிகள் பதவுரை எழுதி வெளியிட்டது போன்று, தென்மொழி யிலக்கண அறிவு இல்லாதவருக்கு உபயோகமாதற் பொருட்டு 'அகப்பொருளும் அருளிச்செயலும்' என்னும் நூலினை எழுதி இப்போது வெளியிட்டுதவி யிருக்கின்றார்கள்.

இந்நூலில் முதற்கண், அகத்திணையின் இலக்கணமும், களவு கற்பு என்னும் இருவகைக் கைக்கோளும் அவற்றின் உட்பிரிவுகளும் விளக்கமாக எழுதப்பட்டுள்ளன. பிற்பகுதியில், அருளிச்செயலின் சிறப்பு வக்த்ரு வைலக்ஷண்யம் ப்ரபந்த வைலக்ஷண்யம் ப்ரதிபாத்ய வைபவம் முதலியவை தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. அகப்பொருளிலக்கணத்

தில் களவியற்பகுதி, பெரும்பாலும் தஞ்சைவாணன்கோவையுரையாசிரியர் கொள்கையைப் பின்பற்றி எழுதப்பட்டிருக்கின்றது. அருளிச்செயலைப் பற்றிய பிற்பகுதி ஸம்ப்ரதாயத்தையொட்டி ஆராய்ச்சி முறையில் எழுதப்பட்டுளது. இந்நூல் அகப்பொருள் அருளிச்செயல் இவ்விரண்டனையும் விளக்கவுரைத்தலின், இது வைஷ்ணவரனைவருக்கும் இன்றியமையாததொன்றாகும். இத்தகைய சிறந்த நூலை எழுதி உபகரித்த ஸ்வாமிகட்கு ஸ்ரீவைஷ்ணவவுலகம் நன்றி செலுத்தக் கடப்பாடுடையது. இவ்வாறே நம் ஸ்வாமிகள் இன்னும் பல நூல்களை எழுதி யுபகரிக்கும்பொருட்டுத் தீர்க்காயுளும் திருமேனிப்பாங்கும் ஸர்வேஸ்வரன் அருள்புரிவானாக.

இந்நூலிற் காணப்படும் அச்சுப்பிழை முதலிய பிழைகள் அடுத்த பதிப்பில் நீக்கப்படும் என்று நம்புகின்றேன்.

வே. வேங்கடராஜுலு.

ஸ்ரீ:

கும்பகோணம், தமிழ் மஹாபாரதம் பதிப்பாசிரியர்
ஸ்ரீமத் உ. வே. பாஷா பாரத துரந்தர,
மஹாமஹோபாத்யாய
M. V. இராமானுஜாசார்யஸ்வாமிகள்.

இந்தச் சிறந்த வசனநூல், திருப்புறம்பயம் ப்ரபன்ன வித்வான், ஸ்ரீமான், T.D. இராமஸ்வாமிநாயடு அவர்களால் இயற்றப்பெற்றது. இவர்கள், ஆசாரியபக்தியிலும், ஆழ்வார்கள் திருவாய் மலர்ந்தருளிய அருளிச்செயல்களில் பெரிதும் ஈடுபட்டு அனுபவிப்பதிலும் தலைசிறந்தவர்கள்.

இந்நூல், ஆன்றோர் கருத்துக்கு முரண்படாது அகப்பொருட் சிறப்பைத் தொகுத்து விளக்கும் பகுதியும், அருளிச்செயல்களில் ஸாமவேத ஸாரமாக நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய திருவாய்மொழியில் அமைந்திருக்கும் அகப்பொருள் சிறப்பை விளக்கும் பகுதியும் ஆகிய இரண்டு பெரும் பகுதிகளையுடையது. அவற்றுள், முன்னது, தமிழ் மொழிக்கே சிறப்பாகவுள்ள அகப்பொருட் கூறுபாடுகளை எளிதில் உணர்ந்துகொள்ளும்படி விளக்கமாகவும் சுருக்கமாகவும் உரைப்பது. அப்பகுதியை ஊன்றிப்படிப்பவர்கள் அகப்பொருளைப்பற்றி ஆன்றோர் கூறிய இலக்கிய இலக்கணங்களை வரலாற்று முறை பிறழாது இனிது அறிந்து கொள்ளக்கூடும். அன்றியும், அப்பகுதி, அகப்பொருளைப் பற்றித் தவறாகக்கூறும் இக்காலத்துச் சிலருடைய கண்களைத் திறந்துவிடக்கூடிய முறையிலும் அமைந்திருக்கிறது. இந்நூலின் சிறப்பான இரண்டாவது பகுதியில், ஆன்றோர் வாக்குக்களை ஆதாரமாகக்கொண்டு பல உண்மைப்பொருள்கள் இனிது விளக்கப்பெற்றுள்ளன. நூலாசிரியர், ஆழ்வார்க்கு ஒப்புக்கூறு முறையில் எடுத்துக்காட்டும் செய்திகள் (143--156) படிப்போர்க்கு மகிழ்ச்சியை அளிப்பன. ஆழ்வார் யார் என்று கூறும் பிரிவு படித்து இன்புறத்தக்கது.

இந்நூலுக்கு விஷயமான திருவாய்மொழியைப் பற்றிய விரிந்த ஓர் ஆராய்ச்சிப் பிரிவும் இதனுள் விளங்குகிறது. அப்பிரிவு (183—203) இலக்கிய இலக்கண ஆராய்ச்சியுடையாரைப் பெரிதும் மகிழ்விப்பது. ஆழ்வார் பெண்ணிலைமை அடைந்த தன்மையைக் கூறும் பிரிவு பக்திச் சிறப்பையும் பக்தி செய்யும் முறையையும் நன்கு விளக்குவதாகும். இப்பகுதியின் இறுதிப்பாகம், நூல் தொடங்கிய நோக்கத்தை விளக்கும் முறையில் திருவாய்மொழியில் அமைந்துள்ள நாயகி நாயக ஸம்பந்தமான துறைகளையும் பிறவற்றையும் பாசுரங்களைக்கொண்டு பொருத்திக்காட்டுகிறது. (235-238) அகப்பொருள் துறைகளுள் பெண்பால் மடலூர்தல் இல்லாதிருந்தும், ஆழ்வார் அதற்கு இடம் அமைத்தமைக்குத் தக்கபடி பொருத்தம் காட்டியிருப்பது (238—240) அன்பர்களுக்குப் பெரிதும் இன்பம் ஊட்டுவதாகும். இந்த விஷயத்தில், ஆழ்வார்களுடைய கொள்கைக்கு,

“மடன்மாப் பெண்டி ரேறு ரேறுவர்
கடவுளர் தலைவ ராய்வருங் காலே.”
“கடவுளர் மேற்றே காரிகை மடலே”

என்னும் பன்னிரு பாட்டியல் 245, 246 ஆவது சூத்ரங்கள் ஆதரவளிக்கின்றன என்பது உணரத்தக்கது.

திவ்ய பிரபந்தங்களைச் சேவிக்கும் பாகவதர்கள் படித்து மகிழும் முறையில் சேர்த்திருக்கும் அருளிச்செயலின் அரும்பொருள் சுருக்கம் (243—269) திருவாய்மொழி ஆயிரத்தின் ஸாரமாய்த் தத்வத்தை விளக்குவதாய் இந்நூலுக்குச் சிரோபூஷணமாய் அமைந்திருக்கிறது.

தெரிந்ததைக் காட்டித் தெரியாததை கற்பிக்கும் சிறந்த போதனைமுறையைப் பின்பற்றி உலகினர் உய்யும் பொருட்டு ஆழ்வார் அருளிச்செய்த தமிழ் வேதம், பூர்வாசாரியர்களுடைய நிர்வாகத்திற்கு முரண்படாமல் உண்மை நெறியில் உலகினரால் ஸேவிக்கப்பட வேண்டுமென்னும் பெரு நோக்

கத்துடன் அரிதின் முயன்று இயற்றப்பட்ட இந்நூல் பலரும் விரும்பி படிக்கக்கூடிய விஷயப்பெருமையை உடையது என்று கூறுவது மிகை ஆகாது.

திருவாய்மொழி காலக்ஷேபம் செய்யும் பாகவதர்களுக்கு இது பெரிதும் பயன்படுவது. இதனைப் படிக்கும் பொழுது, இம்மாதிரியான நூல் முன்னமே வெளிவரவில்லையே என்ற உணர்ச்சியுடன் இதனைப்படித்து முடித்தேன். பல இடங்களிலிருந்து பல அரிய விஷயங்களை மிக முயன்று சேர்த்துத் தொகுத்த இந்த அரிய நூலில் சில எழுத்துப் பிழையும் சொற்பிழையும் காணப்படலாம். ஆனாலும், விஷயப்பெருமையைப் பார்க்கும்பொழுது, அவை சிறிதும் பாராட்டத்தக்கனவல்ல. ஆனாலும், அவை அடுத்த பதிப்பில் திருத்திப் பதிப்பிக்கப்படும் என்பது நிச்சயம்.

ஸ்ரீமான், நாயடு அவர்களின் முன்னோர்கள் கண் வைத்தியத்தில் மிகச்சிறந்த திறமை வாய்ந்தவர்களாக இருந்தார்களென்று கேட்டிருக்கிறேன். அப்படியே, நம் நாயடு அவர்களும் கண் வைத்தியத்தில் மிக்க தேர்ச்சியுடையவர்கள். என் குடும்பத்தில் சிலருக்கிருந்த கண்ணோயை நாயடு அவர்கள் அஞ்சனம் தைலம் முதலியவற்றைக் கொண்டு குணப்படுத்தியது உண்டு. இன்றைக்கும், நாயடு அவர்கள் குடும்பத்தில் சிரமத்தைப் பாராமலும் கைமாறு கருதாமலும் மாத்திரை அஞ்சனம் முதலிய மருந்துகளை உயர்ந்த முறையில் செய்து ஏழை ஜனங்களுக்குக் கொடுத்து அவர்களுடைய கண்ணோயைத் தீர்த்து வருதலை கண்கூடாகக் காணலாம். மக்களது புறக்கண்ணிலுள்ள குறையை நீக்கிப் புற இருளைப் போக்கிக் கண் ஒளியைத் தந்து வெளியே தோன்றும் பொருள்களைப் பார்க்கும்படி செய்வது போல, இந்நூலை இயற்றி உதவி அக இருளை நீக்கி அறிவு ஒளியைத் தந்து உண்மைப் பொருளைப் பார்க்கும்படி செய்துள்ளார்கள் என்று கூறுவதில் சிறிதும் தட்டில்லை. இம்

முறையில் இந்நூலுக்கு, "அகப்பொருளும் அருளிச்செயலும்" என்று பெயர் அமைத்திருப்பது மிகப் பொருத்தமானதே.

[நான் நாயடு அவர்களோடு 45 வருஷங்களாக நெருங்கிப் பழகுகிறவனாதலால், அவர்களுக்கு மற்றொரு சிறந்த கலையிலுள்ள பயிற்சியையும் திறமையையும் பற்றிக் கூற என் மனம் விரும்புகிறது. அவர்கள் சித்திரம் எழுதுவதில் சிறந்த திறமை வாய்ந்தவர்கள். அவர்கள் ஒருவரை நேரில் பார்த்தால் அவர்களின் உருவம் போலவே எழுதி விடுவார்கள். அப்படி அவர்கள் எழுதிய oil-painting படங்கள் பல உண்டு. ஸ்ரீ. ராவ்பகதூர் T. கோபால்ராவ் அவர்கள், ஸ்ரீ. ப்ரொபஸர், K. சுந்தரராம ஐயரவர்கள், ஸ்ரீ. ராவ்பகதூர் N. கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள், டவுன் ஹைஸ்கூல் மாஜி ஹெட்மாஸ்டர், ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள், தஞ்சை கலியாணசுந்தரம் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர், ஸ்ரீ. கோபாலசாமி ஐயங்கார் அவர்கள் முதலான பல தக்கவர்களுடைய படம் இங்கே சிறந்து விளங்குவதை இன்றும் காணலாம். இந்த விஷயத்தில் நான் இங்கே தெரிவிக்க வந்தது நாயடு அவர்களைப் பற்றி விளம்பரம் செய்வதற்கு அன்று. புத்திமான்கள் எந்த வித்தையைக் கற்கத் தொடங்கினாலும், கடை போக முயன்று, அதில் தேர்ச்சி பெற்று விளங்குவார்களென்பதைத் தெரிவிக்கும் முகத்தால் சிறுவர்களுக்கு ஓர் ஊக்கத்தை உண்டாக்குதற் பொருட்டே.]

ஸ்ரீ. நாயடு அவர்கள் ஞானம் அனுஷ்டானம் சீலம் முதலிய நற்குணங்களுக்கு இருப்பிடமாக உள்ளவர்கள். அவர்களால் எழுதப்பட்ட நூல், படிப்பவர்களுக்கு நற்பயனை அளிக்குமென்பதில் சிறிதும் ஸந்தேகமில்லை.

பிரபந்த காலக்ஷேபம் செய்பவர்கள் இந்நூலைப் புது விருந்தாகக்கொண்டு ஏற்றுப் பயன்படுத்திக்கொள்வார்களென்பது எனது உறுதியான கருத்து.

M. V. இராமானுஜாசார்யர்.

ஸ்ரீ:

தும்பகோணம், ஸ்ரீமத் உ. வே. அபிநவ பட்டபாண,
சப்த தர்க்காலங்கார, வித்யா பூஷண, பண்டிதராஜ,
மஹாமஹோபாத்யாய

R. V. கிருஷ்ணமாசார்யஸ்வாமிகள்.

ஸ்ரீமான் திருப்புறம்பயம் T. D. இராமஸ்வாமி நாயுடு அவர்களால் இயற்றப்பட்ட "அகப்பொருளும் அருளிச் செயலும்" என்கிற புஸ்தகத்தை அடிமுதல் நுனிவரை இரு தடவைப் படித்துப் பார்த்தேன்.

பலக் கிரந்தங்களில் சிதறிக் கிடக்கும் பல விஷயங்களையும் ஒழுங்காக ஒருங்கு சேர்த்துத் தெளிந்த வாக்கியங்களில் அழகுற அமைத்து வெளியிட்டிருக்கும் இந்த ஆசிரியரிடம், பெரிய தமிழ்ப் பண்டிதர்களுக்கும் மதிப்பும் நன்றியறிவும் உண்டாகுமென்றே நம்புகிறேன்.

என் போன்ற வடமொழிப் பண்டிதர்களுக்கு இக்கிரந்தம் பல விதத்திலும் பயன்படுமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

விஷயங்களைத் தொகுப்பதிலும், அந்தந்தக் கருத்துக்களை விவரித்து வெளியிடுவதிலும் இவ்வாசிரியர் கையாண்ட முறை மதிப்புக்குரியது.

அகப்பொருளைப் பற்றித் தமிழர் கையாளும் துறைகளின் அமைப்பும் அழகும் எத்துணைச் சிறப்புற்றன என்பதை நினைக்குந்தோறும் எனக்குப் பெருமகிழ்ச்சி உண்டாகின்றது.

அருளிச் செயல் விஷயமாகப் பல வைலக்ஷண்யங்கள் காட்டப்பட்டிருப்பதில் "ப்ரதிபாத்ய வைபவமும்" முடிவில் வெளியிட்டிருக்கும் "அருளிச்செயலில் அரும்பொருள் சுருக்கமும்" என் மனத்தைக் கவர்கின்றன.

அருளிச் செயல்களில் ஈடு படுபவர்களும், மற்றைப் பண்டிதர்களும் இந்தக் கிரந்தத்தை ஆதரித்து மேன்மேலும் இவ்வாசிரியருக்கு இத்தகைய கிரந்தங்களை எழுதி வெளியிடுவதில் விசேஷமான ஊக்கம் அளிப்பார்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.

R. V. கிருஷ்ணமாசார்யர்.

ஸ்ரீ:

"வகுளமாலை" பத்திராசிரியர், மதராஸ் அட்வகேட்,

ஸ்ரீ. உ. வே. R. கேசவ ஐய்யங்கார் ஸ்வாமிகள்.

இந்நூல், ப்ரபந்த வித்வான் திருப்புறம்பயம் T. D. இராமஸ்வாமி நாயடு அவர்களால் இயற்றப்பெற்றது. அருளிச்செயல். அரிய தத்துவார்த்தங்களை அகப்பொருள் வாயிலாகக் கொண்டிருத்தலை எளிதில் உணர்த்தும் காரணமாய் இஃதாக்கப்பெற்று, 'அகப்பொருள்' என்றது ஓர் பாகமாயும், 'அருளிச்செயல்' என்றது ஓர் பாகமாயும், அமைக்கப்பெற்றுள்ளது. அகப்பொருள் விளக்கம், களவியல், வரைவியல், கற்பியல், அருளிச்செயல் முதலிய விஷயங்களை இந்நூல் உட்கொண்டுள்ளது. பொருளிலக்கண நுட்பம் அரிதுணர்பான்மைத்தாதலின், அஃதை உள்ளவாறு கற்று, கற்றவாறுணர்த்தும் செந்தமிழ் வல்லார் ஒரு சிலரே. அதனுள்ளும், பண்ணும் தமிழும் தவம் செய்து பெற்ற நம்மகிழ்மாறன் செய்யுளெண்ணித் திகழும் தகைமைக்குரிய மெய்யோக மதிநலம் அருளப்பெறுதல் அரிதினுமரிதேயாகும். சித்தர்க்கும் வேதச்சிரம் தெரிந்தோர்கட்குமே குருகூரெம்பிரான் விழுத்தமிழின் இனிமையும் சீர்மையும் புலனாகும். இவ்விழுத்தமிழே பனுவற்கெல்லாம் தாய் என்பர் கம்பநாடர்; மறைகட்கெல்லாம் படிச்சந்தம் என்பர் தூப்புல் வள்ளலார். என்றுமுள சந்தமிகு செந்தமிழந்தாதி ஆயிரம் பூத்த செந்நாப்பெருமானார் நம்மாழ்வார் ஒருவரே என்றது தமிழ் நல்லார்க்குக் கண்கூடு. தரும வரும்பயனாய திருமகளார் தனிக்கேள்வனது திருவடிக்கீழ் அறங்காத்துத் தம்மை அறவே துறந்து "கூட்டரிய திருவடிக்கட் கூட்டினை நான் கண்டேனே" என்று மறை முனிவர்க்கெல்லாம் தனித் தலைவராய், நாடு நகரமும் நன்கறியச் சிங்கமுழக்கம் செய்து,

"அப்பொழுதைக்கப்பொழுதென்னாராவமுதமே" என்று உலகுய்யக் கனிந்தொழுகும் புதுப்புதிய வன்பினால் மேன்மேலும் பெருகாநிற்கும் தமது ஆராத பெருங்காதலே இன்தமிழாய்க் குழையா நின்றது. அவ்வத்துறைகள் (சமாதிகள்) தோறும் பரந்துள்ள அக்குழைவின் பாங்கே அகப்பொருளிலக்கணமாய்த் திகழா நின்றது. பக்தியே காதல். ஆழ்வாரது காதலின் தூய்மையை ஆராயவல்லவன் அத்தலைக் "காதலுக் கோரிலக்கென்றருமறையுச்சியுளா தரித்தோதும்" கண்ணனே என்றது ஆழ்வார் தாமே வகுத்ததோரிலக்கணமாகும். "ஆரென்னையாராய்வார்........நங்கண்ணனும் வாரானால்" என்ற திருவாய்மொழியின் ஆழ்பொருள் கண்ணன் ஆராயும் சீர்மைத்தே என்னத்தட்டில்லை. "அறப்பொருளை யறிந்தோராரிவை யென்ன உலகியற்கை" ஆதலாலும், "அன்னையரும் தோழியரும் நீரென்னே என்னாதே நீளிரவும் துஞ்சுவர்" ஆதலாலும், கண்ணன் தானே ஆராய்ந்து களிக்க வல்லதாய் திகழும் ஆராத பெருங்காதலே ஆழ்வாரது திருவளர் காதலாகும். ஆழ்வாரும் கண்ணனும் அன்பார்ந்து உள்கலந்த கலவியின் பேறாகவே இன்று காறும் உலகம் நல்லன்பினால் திகழ்ந்து வருகின்றது என்றது எமது துணிபு. "என்னுள் கலந்தவன்.........தன்னுள் கலவாதவெப்பொருளும் தானில்லையே" என்றதே மகிழ்மாறன் கலவியின் தனித்தூய்மையும் தனிமாண்புமாம். இந்நிகழ்வு நிறைந்த திருவுள்ளமே ஆராதவருளமுதம் பொதிந்த திருக்கோயிலாகும். ஈதே இனியதோரரும் பொருளிலக்கணம். இதன் திட்ப நுட்பங்களை முடிமேற்கொண்டுள்ளதே உபநிடதம். "தோன்றுவுபநிடதப் பொருடோன்றலுற்றார் தமக்கும் சான்றுமிவை" என்ற கவிச்சக்ரவர்த்தியின் வாக்கு இங்கு நோக்கத்தக்கது ஆராதவருளமுதமே திருமால். அவன் பொன்னடிப்பால். ஆராத பெருங்காதலே ஆழ்வார். ஆழ்வாரது அன்பெனும்

பெருங்காதலின்ற அருங்குழவியே ஆராதவருளமுதமாகும்
திருமால். "த்ரிவேதீம் அவந்த்யயர்த:" என்றும், "பக்தி:
ச்ருங்காரவ்ருத்த்யா பரிணமதி முநே: பாவபந்தப்ரதிம்நா"
என்றும் சந்தமிகுதமிழ்மறையர் குழைந்துள்ளார்.

இத்தகைத் தூய்மையும் இனிமையும் சாலச்சிறந்து
செழிக்கும் அருளிச் செயலின் பெருமையை அகப்பொரு
ளிலக்கணவாயிலாக விளக்கப் புகுவார், ஆழ்வார் தமக்
கும், தமிழுக்கும், ஒக்கவே அருந்தொண்டாற்றுபவராவர்.
தொண்டர்க்கமுதுண்ணத் திருவாய்மொழி யுமிழ்ந்த வள்ள
லாரே சடகோபர். அஃதுண்டுமிழற்றும் தொண்டர்
தொடுப்பெல்லாம் நன்றிவை யென்றே நம்மாலே வரவேற்
கும் விரதம் பூண்டுள்ளது. "அகத்திணையிலக்கணமனைத்தில
இலக்குச், சுகத்தெழுமறைத்திரு சிகைச் செழுவிழுப்பம்,
சகத்துறவகத் தமிழ் வகுத்த மகிழ்மாறன், முகத் திருவகப்
புறம் அறத்திருவிரித்தோம்" என்று இக்கருத்தை இம்மாலை
யில் (தொகுதி 2, பக்கம் 74) குறித்துள்ளோம். ஆதலின்,
நம் ப்ரபந்த வித்வான் அவர்கள் தமது கல்விக்கும், ஆராய்ச்
சிக்கும், பக்திக்கும், பொருந்த, இவ்வாறு ஆழ்வார் பணியில்
அமர்ந்துள்ளது, ஆழ்வார் தாமே இவரை ஏவிப்பணி
கொண்டபடி என்றே கொள்ளற்பாலது. "மயிபக்தி:
தவாஸ்த்யேவ பூயோப்யேவம் பவிஷ்யதி" என்று ப்ரஹ்லா
தாழ்வானுக்கு சிங்கப்பிரான் அருளியதுபோல், ஆழ்வார்
திருவுள்ளம் உவக்கப் பல்லாண்டும் இத்தகைத் தொண்
டாற்றி வருமாறு, நம் ப்ரபந்த வித்வானவர்கட்கு அன்னவர்
பின்னுமின்னருள்புரிவாராக. மாறன் மறை வாழ்க.

R. கேசவ அய்யங்கார்.

ஸ்ரீ:

மதராஸ், மஹாமஹோபாத்யாய, தாக்ஷிணாத்ய கலாநிதி,
ஸ்ரீமாந், டாக்டர், V. சாமிநாதையர் அவர்கள்.

பிரபந்த வித்வான், திருப்புறம்பயம் ஸ்ரீமான் T. D. இராமஸ்வாமி நாயடு அவர்கள் எழுதி வெளியிட்டுள்ள 'அகப்பொருளும் அருளிச்செயலும்' என்னும் புத்தகத்தில் அங்கங்கே சில பகுதிகளைப் படித்துப்பார்த்தேன்.

இப்புத்தகத்தின் முதற் பகுதியில் அகப்பொருளிலக்கணங்களை விளக்கித் தொடர்புபடுத்தி எழுதியிருக்கிறார்கள். இலக்கண நூல்களிலிருந்து அங்கங்கே உரிய மேற்கோட் சூத்திரங்கள் காட்டப் பெற்றுள்ளன. பிற்பகுதியில் நம்மாழ்வாருடைய சிறப்புக்களையும் திருவாய்மொழியின் வரலாற்றையும் பெருமையையும் விரிவாகக் கூறியும், பின்பு நம்மாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய அகத்துறைச் செய்யுட்களுக்கு வைஷ்ணவ பரமாக உள்ளுறை பொருளை யுணர்த்தியும், அகத்துறை யிலக்கண அமைதியைப் புலப்படுத்தியும் இருக்கிறார்கள்.

தமிழ் இலக்கணச் செய்தியையும் வைஷ்ணவ சித்தாந்தக் கொள்கையையும் இவ்வாறு பொருத்திக்காட்டி விரிவாக எழுதப்பெற்ற இப் புத்தகத்தைப்போன்ற வெளியீடுகள் மிகச் சிலவே உள்ளன.

நம்மாழ்வார் அருளிச்செயலைத் தமிழினிமை காண்பாரும் சமய உணர்ச்சி வேண்டுவாரும் இன்னவாறு அறிந்து அனுபவிக்க வேண்டுமென்பதைக் காட்டுவதற்கு இந்நூல் ஒரு சிறந்த கருவியாகுமென்பது என் கருத்து. இதனை வெளியிட்ட ஸ்ரீமான் நாயடு அவர்களுடைய ஆராய்ச்சி பின்னும் விரிவுற்று இத்தகைய பல வெளியீடுகளை வெளியிடுவதற்குக் காரணமாகுமென்று நம்புகிறேன்.

வே. சாமிநாதையர்.

ஸ்ரீ :

விஷய சூசனை

விஷய சூசனை—(தொடர்ச்சி) பக்கம்.

விஷய ஸூசனை–(தொடர்ச்சி) பக்கம்

விஷய ஸூசனை—(முடிவு) பக்கம்.

ஸ்ரீ:

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
ii	5	தகமை	தகைமை
	14	கவிராஜர்	கவிராஜ நம்பி
iii	18,19	சொல்வதாகும்	சொல்வன வாகும்
iv	3	காப்யம்	காப்பியம்
	21	மாய் தலை சிறந்த	மாய்த்தலை சிறந்த
v	2	அன்பினராய்கூடும்	அன்பினராய்க்கூடும்
	10	எனப்படும்,	எனப்படும்.
viii	19	என்பனவற்றையும்	என்பனவும்
	20	பட்டந	பட்டன.
மதிப்புரை viii	28	என்	என்ற
8	10	திணை	தினை
11	2	பட்டன	பட்டன.
11	12	நினை	தம் நினை
12	7	துறத்த	தாத்த
14	7	அவத்தை	அவஸ்தை
14	20	அவனு	அவளு
15	9	கொன்	கொண்
15	19	குறியதாய்	குரியதாய்
16	11	உளதாகும்	உளவாகும்
19	6	நோய்க்கொண்டால்	நோய் கொண்டால்
23	11	துறத்தி	தாத்தி
24	4	பூசித்தான்	ஊசித்தான்
26	1	நிற்றற்கு காரணம்	நிற்றற்குக் காரணம்
37	19	அறிய தோழி	அறியத் தோழி
40	13	கன்றுத்தான்	கன்றுதான்
41	12	பாங்கிக்கூட்டு	பாங்கி கூட்டு

பிழை திருத்தம்—(தொடர்ச்சி)

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
53	22	கையுரை	கையுறை
54	9	முறைத்தல்	முரைத்தல்
	15	கையுரை	கையுறை
	25	கிளைத்தல்	களைத்தல்
55	15	கையுரை	கையுறை
59	7	பாஙகித்	பாங்கி
65	14	குறைத்தல்	குரைத்தல்
	21	குறிவிட	குறிப்பிட
70	7	வனுக்கு கீழ்	வனுக்குக் கீழ்
70	9	யெனகூம்	யெனக்கூம்
	10	அறிய தோழி	அறியத் தோழி
	24	தலைவிகன்	தலைவிதன்
72	2	இறங்கி	இரங்கி
	10	பேய்த்தீண்டி	பேய் தீண்டி
	15	இறைஞ்சினாள்	இறைஞ்சினான்.
74	10	பொய்யுரைப் புக	பொய்யுரை புக
76	5	ளைக் கழள	ளை கழல
78	6	ஒருக்கால்	ஒருகால்
79	8	வருத்து	வருத்தத்து
80	14	வார்த்தைத்	வார்த்தை
81	3	ருந்தியது	வருந்தியது
	4	ன்ற	என்ற
	8	மழை கால	மழைக் கால
87	19	ருமைத்தலை	ருமை தலை
90	6	துறத்தி	துரத்தி
	16	இவைச் செவி	இவை செவி
94	11	அயர்ப்பு	அயிர்ப்பு

பிழை திருத்தம்—(தொடர்ச்சி)

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
94	16	செல்லதலை	செல்லத் தலை
97	5	மிக்கு சுட்டன	மிக்குச்சுட்டன
109	1,10	பெரும்	பெரு
	11	அன்பு திற	அன்புத் திற
110	23	சேரி பரத்தை	சேரிப் பரத்தை
111	13	இரங்கினர்	இரங்கினர்.
112	24	எதிர்க் கொள்	எதிர் கொள்
117	25	பரதையர்ச் சே	பரத்தையர் சே
122	8	வித்தைக் கற்	வித்தை கற்
124	15	பெற்று தேவ	பெற்றுத் தேவ
131	5	மற்ற	மறறப்
	15	கர்பத்தில்	கர்ப்பத்தில்
132	2	நாய் இகழ்	நாய்த் இகழ்
	11	பாஷ்ய	பாஹ்ய
133	8	கட்குக்	கட்குர்
136	13	போற்ற பெயர்	போற்றப் பெயர்
137	6	வெறுட்டி	வெருட்டி
140	19	முறைக்காட்டி	முறை காட்டி
142	24	அமுனூரும்	அமுனுறும்
144	2	யெடுத்த	எடுத்த
162	23	மற்றபடி	மற்றப்படி
166	10	உருபக	உருவக
	11	ஓசையோடுப்	ஓசை யோடு
	12	தியக்கின்றி தொழு	தியக்கின்றித் தொழு
	15	என சொற்	எனச் சொற்
172	8	வீழ்த்தி தன்	வீழ்த்தித் தன்
177	9	மொழி பாக்கள்	மொழிப் பாக்கள்
185	9	வுற்று துய	வுற்றுத் துய
185	17	அறை	அரை

பிழை திருத்தம்-(தொடர்ச்சி)

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
185	20	மடலேரு	மடலேறு
191	12	செல்வி	சொல்வி
196	16	வடமொழி சொல்	வடமொழிச் சொல்
200	18	விட கொடிய	விடக் கொடிய
208	5	சேர சிறிது	சேரச் சிறிது
218	10	வுண்டு	உண்டு
224	11	ஆண்ம	ஆன்ம
226	3	றுடையன	றுடையன சில.
230	13	வந்தப் பிர	வந்த பிர
234	23	புதிக்க	புரிக்க
235	11	தாக கீழ்	தாகக் கீழ்
	20	தலைவிச்	தலைவி
	21,22	தாயச் தோழிச்	தாய் தோழி
237	17	பிரிவுழி கல	புரிவுழிக் கல
	18	மனங் கலங்கி	மனங் கலங்கிக்
245	7	தண்ணீர் பந்த	தண்ணீர்ப் பந்த
249	5	கரை பிரண்டு	கரை புரண்டு
	15	பெருகை	பெறுகை
250	6	பாதித்து பரோ	பாதித்துப் பரோ
	,,	இவ்வாருக கீழ்	இவ்வாருகக் கீழ்
251	6	ஸவ	ஸ்வ
256	16	அழிந்து	அழிந்து
258	16	தானத் தென்	ஞான சென்
	24	றென்றில	றென்னில
259	1	என்றும்	என்னும்
261	6	விடத்தேப்	விடத்தே
267	6	இப்படி தரித்த	இப்படித் தரித்த
	10	யோடேத்தலை	யோடேதலை
269	5	ராய் காட்டு	ராய்க்காட்டு

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

அகப்பொருளும் அருளிச்செயலும்.

காப்பு.

கட்டளைக் கலித்துறை.

(ஸ்ரீ ஆராவமுதாழ்வான்)

திருக்குரு கூர்நீள் நகர்நா ரணனடி சிந்தைதனில்
திருக்கறு காதல் சடகோபர் செய்திரு வாய்மொழிக்குத்
திருத்த மகப்பொருள் செப்ப வனந்தனில் சேர்துயில்கொள்
திருக்குட மூக்கம ராரா வமுதனைத் தேறுவனே.

வெண்பா.

(நம்மாழ்வார்)

அருளிச் செயல்சேர் அகப்பொரு ளார்ந்த
பொருள்சொலத் தீயார்ப் புவியில்—கருசேர்ச்
சடமென்னுங் காற்றைத் தடித்த குருகூர்ச்
சடகோபன் தாளே! சரண்.

(திருமலை அனந்தாண் பிள்ளை—அனந்தாசார்யஸ்வாமி)
அறிவிலாச் செய்கை யடியேனை யிம்மை
வெறிதே வருள்செய்த மெய்ம்மை—யறிவார்
அனந்த குலத்தின் னவதரித் தன்பார்
அனந்தகுரு தாளே! அரண்

அவதாரிகை.

திருவாய்மொழி ப்ரபந்தம், மயர்வற மதிநலமரு ளப்பெற்ற நம்மாழ்வாருக்கு, ஸ்ரீய:பதியினிடம் உண்டான பரபக்தி, பரஜ்ஞானம், பரமபக்திகளால் உள்ளங்கனிந்து வழிந்த சொற்களே யாகும். இதுவே திராவிட வேதமாயிற்று. இத்திருவாய்மொழி வடமொழி வாய்மொழியில் பொருந்தியிராத அகப்பொருள் துன்னப்பெற்றுச், செவிக்கினிய செஞ்சொற்களால் நிறைந்துள்ளது. வடமொழி மறையில் இலை மறை கனிகள் போன்று மறைந்துள்ள தத்வங்கள் தமிழ் மறையாம் திருவாய்மொழியில் நன்கு விளங்கி, நன்முனிகளுக்கு மயர்வறத் தோற்றச்செய்ததால், இது "பொய்யில் பாடல்களாய்" அத்தால் ஓர் அரிய தத்வநூலாயிற்று. ஆழ்வார்க்கு, "உண்ணுஞ்சோறும் பருகுநீரும்" "எல்லாம் கண்ணனது" போல், பக்தர்களுக்கு இவ்வாயிர இன்கவிகளும் தாரக, போஷக, போக்யங்களாயின. சரணாகதரான ப்ரபந்நர்களுக்கோ! விஷய நியமமான அர்ச்சாவதாரங்களே சரண்ணியனாகவும், அவைகளைக் "கோயில்கொள் தெய்வங்களாக" நிறுத்தியும், வசிஷ்ட சண்டாள விபாகமற யாவரும் அவகாகிக்கும் தாய் நீர் தீர்த்தங்கள் ஆயிரங்களாகவும், இத்திருவாய்

மொழி வெள்ளமிட்டன. இத்தீர்த்தங்களான அமுத வாரியில் ஆழ்ந்து முழுகுநர்களே, மீட்சியில்லா "மாக வைகுந்தம்" அணுகி அமரராவார்கள்.

இன்ன சிறப்புகள் பலவாய்ந்த இப்பிரபந்தம், அரிய பெரிய தத்வார்த்தங்களை அகப்பொருள் வாயிலாக வெளியிட்டிருக்கின்றமையால், அவ்வகப்பொருள் இயலைச் சிறிது உணரவே இந்நூலை வெளியிடக் கருதியதாகும்.

அகப்பொருள் என்றால் என்னை? அஃது எதைக் குறித்து இயம்புவது? அஃது எந்த நூலை முதல் நூலாகக் கொண்டுள்ளது? அம்முதல் நூல் எத்தகைத்து? என்பவற்றை ஆராய்ந்தபின்னரே, திருவாய் மொழியும், அகப்பொருளும் அழகுபட சேர்ந்து அமைந்திருக்கும் இயலை, அகல வரைந்து விளக்கிக்காட்டல் நலம்.

"அகப்பொருள்" என்ற இலக்கணம், தொல்காப்பியத்தின் மூன்றாவதான பொருள் அதிகாரப் பகுதியைச் சேர்ந்தது. தொல்காப்பியத்தின் முதல் இரண்டு பகுதிகள் எழுத்து, சொல் இலக்ஷணங்களைச் சொல்வதாகும்.

இத் தொல்காப்பியம், அகஸ்தியர் முதல் மாணாக்கராகிய தொல்காப்பியரால் இயற்றப்பட்டு இடைச் சங்கத்தில் அரங்கேற்றிய ஓர் அரிய பெரிய இலக்கணநூல். இலக்கணம் என்பது, எழுத்து, சொல், சொற்றொடர் முதலியவற்றில் நேரக்கூடிய குறைகளைப் போக்குவதற்

குரிய ஒரு கருவியாகும். இம்முறையில் வெளிப்பட்டுள்ள இலக்கண நூல்களைப் போன்றதன்று இத்தொல்காப்பியம். ஆனால் இது மக்களுடைய பழைய ஒழுக்கங்கள் பலவற்றையும் பேசி, அவ்வழியால் உலகத்திற்குப் பேருதவியாயிருக்கின்றது. இன்ன பெருமை வாய்ந்த தொல்காப்பியத்தை அரங்கேற்ற முயன்ற தொல்காப்பியர் ஸ்ரீ ராமாயணம் அரங்கேற்றிய காலத்தில் கம்பர் பட்ட இடையீடுகளுக்கவ்வருகான அல்லலைத் தன் ஆசிரிய அகத்தியராலும், தன்னோடு கல்விபயின்ற அதங்கோட்டராலும் உற்றார். ஆகிலும், தமிழ் மக்கள் செய்த நற்பயனால், ஜயமாகீர்த்தி என்ற பாண்டியன் அந்நாவிற் பொதிந்துள்ள அகப்பொருள் நுட்பங்களை ஆராய்ந்து, தொல்காப்பியரின் அறிவின் பெருக்கை மதித்து விரைவில் இடைச்சங்கத்தில் அதை அரங்கேற்றி வைத்தான்.

ஆகையால் இந்நூல் "அகத்தியம்" என்னும் இலக்கணத்திலும் மிகச் சிறந்து, கற்றோர் யாவரும் பெரிதும் கொண்டாடத்தக்கதாய் விளங்குகின்றது. இது தோன்றிய நாள்முதல் இதுவரை செந்தமிழ் உலகத்தில் முதல் நூலாய்த் தற்போதுள்ள நூல்களைக்காட்டிலும் பேரிலக்கணமாய்த் தலைசிறந்து விளங்குதலினாலேயே இதன் பெருமை நன்கு அறியக்கிடக்கின்றது.

அகப்பொருள் என்பது யாதோ எனின், அகத்தில் உண்டாகும் உணர்ச்சி என்பதாம். ஆயின் 'அகம்'

என்பது யாதோ எனின், ஒருவனும் ஒருத்தியும் தம்முள் ஒத்த அன்பினராய் கூடும் கூட்டத்தின்கண் பிறந்த 'இன்பம்' எனப்படும். அக்கூட்டத்தின் பின்னர், ஆண்டு அனுபவித்த இன்பம் எவ்வாறிருந்ததென்று, அவ்விருவரே உணரலாகாது ஆதலால், உள்ளத்து உணர்வே நுகர்வதாய் அகத்தே நிகழ்தலின் அகம் எனப் பெயராயிற்று.

'பொருள்' என்பது யாதோ எனின், அகத்திற்கும் புறத்திற்கும் பொது என்பது. அகத்தைச் சார்ந்துவரும் பொருளெல்லாம் அகப்பொருள் எனப்படும், புறத்தைச் சார்ந்துவரும் பொருளெல்லாம் புறப்பொருள் எனப்படும். இச்சுவை வீரம், அச்சம், இழிவு, வியப்பு, காமம், அவலம், உருத்திரம் (பெருஞ்சினம்), நகை, சாந்தம் என ஒன்பதாகும். அவற்றுள் இச்சுவை காமம் என்று சொல்லப்படுவது. காமம் எனினும், இன்பம் எனினும், சிங்காரம் எனினும் ஒக்கும்.

இத்தால் "அகம்" என்பது 'இன்பம்' எனலாம். ஆனால், 'அகம்' என்ற சொல்லிற்கு, நேர் பொருள் "இன்பம்" என இல்லையாயினும், இலக்ஷணையாய் 'இன்பம்' எனப் பொருள் தரும். எங்ஙனே யென்னில் 'அகம்' என்ற சொல் ஆன்மாவைக்குறிக்கின்றது. இந்த ஆன்மா ஓங்காரமாகிய ப்ரணவத்தில் இருபத்தைந்தாவது அக்ஷரமாகிய 'ம' என்ற எழுத்தைக் காட்டுகிறது. இந்த 'ம' என்ற எழுத்தோ! "மன

ஜ்ஞானே" "மன அவபோதநே" என, இரண்டு தாது க்களைக்கொண்டு வந்தமையால், ஜீவாத்மா ஞானமயம் என்றும், அறிவுடையதென்றும் பொருள்படும். இத் தால் மகாரவாச்யனான ஆன்மா ஞானவானாகிறான். ஜ்ஞானத்தின் முதிர்ச்சியே "ஆனந்தம்" என்பது. ஆக, 'அகம்' என்ற சொல் ஜீவாத்மாவைக்காட்டி; அந்த ஜீவாத்மா மகாரவாச்யன் என்று கூறி, இந்த மகா ரம் ஞானஸ்வரூபம் என்று வெளியிட்டு, அந்த ஞானத் தின் முதிர்ந்த தசையே ஆனந்தம் என்று அறுதி யிட்டு, இவ்வாறாக "அகம்" என்ற சொல் 'இன்பம்' என இலக்கணையாய்ப் பொருள் பெற்றது.

ஆகையால், இன்பத்தைத் தரக்கூடிய "அகப் பொருள்" பகுதி, ஏனைய எழுத்து, சொல் என்னும் இலக்கணப்பகுதிகளைக் காட்டிலும், மிகக் கொண்டா டத்தக்கதொன்றாகும். இதை ஓர் ஐதிகத்தால் காண லாம்.

தமிழ் மொழி பயிலும் நாடுகளுள் மிகச் சிறந்தது, பாண்டிய நாடு என்பது பலரும் அறிவர். ஏனெனில், தமிழ்மாது தலை, இடை, கடை என்னும் முச்சங்கங்களி லும் மிக்க கம்பீரத்துடன் வீற்றிருந்து, பெருமை பெற இடந்தந்தது இந்நாடேயாகும். இந்நாடு ஒருகால் பன் னீரியாண்டு க்ஷாமத்தால் பீடிக்கப்பட்டு, ப்ரஜைகள் பசியால் துன்புற்றார்கள். அப்போது அரசன் புலவர் களைக் கூவி, 'என் தேசம் உணவின்றிப் பெரிதும் வருந் துகின்றது, இப்போது யான் உங்களைக்காக்க வன்மை

யற்றுள்ளேன். ஆதலின் நீவிர் விரும்பிய நாடுசென்று, பஞ்சம் கழிந்தவுடன் இந்நாடு வந்து சேருமின்,'' என்ருன். பிறகு வறுமை நீங்கியபின் அவ்வரசன் "நூல் வல்லார்களைக் கொணர்க'' என்று எல்லாப் பக்கங்களி லும் ஆளிட்டான். அவ்வண்ணமே புலவர்கள் வந்து கூடினர்கள். அவர்களில் பொருளதிகாரம் வல்லாரைக் காணுமையால், அரசன் "என்னே! எழுத்தும், சொல்லும் ஆராய்வது, பொருளதிகாரத்தின் பொருட்டன்றே, பொருளதிகாரம் பெறேமெனின், இவை பெற்றும் பெற்றிலேம்'' என, மனம் வருந்தித் தான் வழிபடும் சிவபிரானைச் சிந்தித்தான். அவன் ஆர்வத்தைக்கண்டு இரங்கிய அழல் நிறக்கடவுள், அகப்பொருளை அறுபது சூத்திரங்களாற் செய்து, அவைகளை மூன்று செப்பு இதழ்களில் எழுதித் தன் பீடத்தின்கீழ் வைத்தனன்.

இட்ட பிற்றை ஞான்று, கோயில் ஆராதனம் செய்யுமவர் என்று மில்லாமல் அன்று நீர்தெளித்துப் பூவிட்டுப் பீடத்தின்கீழ் அலகிட்டார். அவ்வலகினேடு மூன்று செப்பிதழ்களும் போந்தன. அவை பொருளதிகாரமாய்க் காட்டின. விரைவில் அரசன் மாட்டுப் புக்கு, அவற்றைக்காட்ட அரசன் இடுக்கண் தீர்ந்தான்.

இவ்வாருகப் பெற்ற இந்நூலுக்குச் சங்கப்புலவர் பலரும் உரையிட்டிருப்பினும் நக்கீரர் செய்த உரையே

சிறந்ததெனக் கொள்ளப்பட்டது. இஃதே "இறைய ஞர் அகப்பொருள்" எனப் பேர்பெற்று விளங்கும் ஒரு சிறந்த நூலாகும். இது தொல்காப்பியத்தின் வழி நூலே யாயினும், இறைவனுல் அருளப்பட்டபடி யால் முதல் நூல் என்னும் ஏற்றத்தைப்பெற்றுள்ளது. இன்னும் அகப்பொருளைப்பற்றி நாற்கவிராஜர் இயற்றிய வழிநூலுக்கு "நம்பி அகப்பொருள்" எனப் பெயர் அமைந்துள்ளது. இவைகள் வழிநூல்களே யாயினும் தொல்காப்பியத்தைத்தழுவி வந்தமையால், ப்ரமாணங் களாகக் குறையில்லை.

ஆக, அகப்பொருளும், அருளிச்செயலும் என இந்நூ லுக்கு ஒரு பெயரிட்டு அகப்பொருள், அருளிச் செயல் இவைகளின் அருமை பெருமைகளை முதலில் விளக்கி அவ்வருளிச்செயல், அரிய தத்வார்த்தங்களை அகப்பொ ருள் வாயிலாகக் கொண்டிருப்பதையும், இவ்வகப்பொ ருள் எத்தகைத்து? எவ்வியலைச்சார்ந்தது? இது வெளிவந்த க்ரமம் யாங்ஙனம்? வெளியிட்டார்களின் உயர்ச்சியாது? இது வேதம்போல் முதல் நூலாக வீறு பெற்றதற்குக் காரணம் என்ன? என்பனவற்றையும் ஒருவாறுகக் கூறப்பட்டது.

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

அகப்பொருள் விளக்கம்.

சீரிய பகுத்தறிவிற் பண்பட்ட மக்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினையும் கடைப் பிடித்தொழுகலே இம்மை மறுமை பயன்களை அடைதற்குத் தக்க வழி என்பது பண்டைத் தமிழர் வழக்கு. அவற்றுள் "இன்பம்" அகப்பொருள் என்றும், மற்ற மூன்றும் புறப்பொருள் என்றும் அழைக்கப்படும். இவ்விரு பொருட் பகுதிகளுக்கும் முறையே அகத்திணை நூல், புறத்திணைநூல் எனப் பேரமைந்துள்ளன.

இவற்றைப் பற்றி நம் தமிழ் நாட்டில், புலவர் பலரால் பாடப்பெற்றுத் தொகுக்கப்பட்ட தொகை நூல்கள், பத்துப்பாட்டு, குறுந்தொகை, கலித்தொகை, ஐந்திணை ஐம்பது முதலியன. இவைகள், அகப்பொருள் இலக்கண முறையின் படி தொடர்பாகத் துறைகள் அமையப்பெறாமல் பலவகைத் துறைகள் கலந்து தொடர்பின்றி அமைந்துள்ளன. ஆயினும், அகப்பொருள் இயல்பை ஒரு கோவைப்படுத்திக் காட்டும் தமிழ் நூல்

களும் பல உள:—தஞ்சைவாணன்கோவை, அம்பிகா பதி கோவை, திருச்சிற்றம்பலக் கோவை, மாறன் கோவை முதலியன.

இவ்வகப்பொருளுக்கு இலக்கணங்கள் :—தொல் காப்பியம், இறையனாரகப்பொருள், நாற்கவிராஜ நம்பி யகப்பொருள், மாறன் அகப்பொருள் முதலியனவும் இன்னும் சில சிறு நூல்களுமாகும்.

அகப்பொருள்.

இஃது அகத்திணையியல், களவியல், வரையியல், கற்பியல் என நான்கு பாகுபாடுகளாக நம்பி அகப்பொருளில் வகுக்கப்பட்டுள்ளது. அவற்றின் வரலாற்றை முன் ஆராய்வாம்:

அகத்திணையியல் :— இன்பமாகிய ஒழுக்கத்தின் இலக்கணத்தை உணர்த்தலால், இஃது அகத்திணையியல் என்னும் பேர்பெற்றது. அகம்—இன்பம். திணை—ஒழுக்கம். இயல்—இலக்கணம். ஒத்த அன்பினரா கிய ஒரு தலைவனும் தலைவியும் சந்தித்தபோது, அவ்விருவர் அகத்தும் நிகழ்ந்து அவராலே அநுபவிக்கப்படும் இன்பத்தை இந்த இயல் கூறுகிறது. இவ்வகத்திணைப் பெரும் பகுதியில், களவு, கற்பு முதலிய ஒழுக்கத்திற் குரிய, காலம், இடம், நிமித்தம் முதலியன தொகுத்துக் காட்டப்பட்டுள்ளன. இந்த இயலை அறியவே மற்ற களவு, வரைவு, கற்பு முதலியவற்றை ஒரு வாறு அறிந்ததாகும்.

இவ்வியல் கைக்கிளை, ஐந்திணை, பெருந்
திணை என மூன்றுவகைப்படும்:

கைக்கிளை:— ஒருதலைக்காமம் எனப்படும். அஃதாவது, ஆண் பெண் என்னும் இருவருள் யாரேனும் ஒருவருக்கு மற்றொருவர்பால் நிகழும் கேண்மை என்க. (கை—பக்கம், பங்கு, சிறுமை. கிளை—கேண்மை, உறவு). இஃது, ஆண்பால் கைக்கிளை, பெண்பால் கைக்கிளை என இருவகைப்படும். ஆண்பால் கைக்கிளை தலைவியைக் கண்ட தலைவனுக்குத் தோன்றுவது. பெண்பாற் கைக்கிளை தலைவனைக்கண்ட தலைவிக்குத் தோன்றுவது. இன்னும் காமக்குறிப்பில்லாப் பேதையரிடம் நிகழும் கைக்கிளையும், எண்வகை மணத்தினுள் கோல்ஏறுதழுவுதல் (கொடிய விடை தழுவி மணத்தல்) வில்லேற்றுதல் (வில்லின் நாண் ஏற்றுதல்) முதலிய வீரச் செயல்களுமான ஆசுரமும்; தலைமகள் பெற்றோராலும் சுற்றத்தாராலும் கொடுக்கப்பெறாது வலிதிற் கொள்ளும் இராக்கதமும், மூத்தோர், களித்தோருடன் சேர்தலாகிய பைசாசமும் ஆகிய இவை மூன்றும் ஒருதலைக் காமத்தைச் சார்ந்தனவே. இவற்றுள் ஒத்த அன்பினிடமாக ஏற்படும் இயற்கைப் புணர்ச்சிக்கு முன் நிகழும் கைக்கிளையே சிறப்புடையதென்பது பனுவற்றுணிவு.

பெருந்திணை :— பொருந்தாக்காமம். தலைவன் தலைவியர்க்குள் ஏற்படும் அளவுகடந்த இழிச் செயல்களுக்கு ஏதுவாகிய காதல்: (பெருந்திணை—பெரிய ஒழுக்

கம்). ஒருவன் ஒருத்தியிடம் காதல் கொண்டு அவளை அடையப் பெறுமையின், மடலேறுதல், வரைபாய்தல் முதலியவற்றால் தன்னை மாய்த்துக்கொள்ள முயலலும்; தனக்கு ஒப்பும் மூப்புமுடைய பருவத்தாளைக் கூடலும்; காம மிகுதியாலே ஒருத்தியை எதிர்ப்பட்டு அவளை வலிதில் புணர்தலும்; வயது முதிர்ந்த கணவனும் மனைவியும் துறவாது சிற்றின்பம் நுகர்தலுமாகும் இன்னும் இஃது, ஐந்திணையாகிய ஒத்த காமத்தின் சில காரணங்களால் மிக்கும் குறைந்தும் வருதலாலும், எண் வகை மணத்தினும் பிரமம், பிராசாபத்தியம், ஆரிடம் தெய்வம் என்பன இதன்பாற் படுதலாலும்; இந்நான்கு மணமும் மேன்மக்களிடம் காண்பதாலும்; இவை உலகின்கண் பெருவழக்கம் போல் நிகழ்தலாலும் பெருந்திணை எனப்பட்டது.

மணம் எட்டாவன:—

(i) பிரமம்—*தக்கவனும் பிரம்மசாரியுமாயுள்ள ஒருவனுக்குக் கன்னிகையை அணிகளால் அலங்கரித்து அக்கினி முன்னிலையில் கொடுப்பது.*

(ii) பிராசாபத்தியம்—*தலைமகன் பெற்றோர் வேண்டத் தலைமகள் பெற்றோர் அவளை அணிசெய்து அக்கினி முன்னிலையிற் கொடுப்பது.*

(iii) ஆரிடம் — *ஆவும் ஆனேறும் பொற்கோட்டுப் பொற்குளம் பினவாகச்செய்து அவற்றிடைக் கன்னிகையை நீரிற் கொடுப்பது.*

(iv) தெய்வம்—*வேள்வியாசாரியனுக்கு வேள்வித்தீ*

முன்னாகக் கன்னிகையைத் தட்சிணையாகக் கொடுப்பது.

(v) காந்தருவமணம்—கொடுப்பாரும் கேட்பாருமின்றித் தலைமகனும் தலைமகளும் தாமே தனியிடத்தில் எதிர்ப்பட்டுக் கூடுவது.

(vi) ஆசுரம் — கொல் ஏறு தழுவல், வில்லேற்றுதல் முதலிய வீரச்செயல் செய்தவனுக்கும், குறிப்பித்த பொருளைக் கொடுத்தவனுக்கும் கன்னிகையைக் கொடுப்பது.

(vii) இராக்கதம் — தலைமகன் தலைமகளை வலிந்து கூடுவது.

(viii) பைசாசம் — நித்திரைசெய்தாள், கள்ளுண்டு களித்தாள் முதலியோரைச் சார்வது.

ஐந்திணை :— அன்புடைக்காமம். இஃது ஐந்து கூறுபாடாகிய ஒழுக்கமாகும். அன்பாவது:—தலைவன் தலைவி என்னும் இருவர் மாட்டும் சமமாக நிகழும் மனப்பற்று. (காமம்—இன்பம், திணை—ஒழுக்கம் அல்லது நிலம் எனப்படும்)

இது முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் ஆகிய ஐந்து நிலங்களில் நடைபெறும் ஒழுக்கத்தைப்பற்றிச் சொல்லப்படும். ஆங்காங்கு நடைபெறும் ஒழுக்கத்தைப்பற்றியே அவ்வவ் நிலத்திற்குப் பேரமைந்ததெனச் சிலரும், மரங்களைக்கொண்டு பேரமைந்ததெனப் பலரும் கூறக் கேட்கின்றோம். இஃது ஒத்த அன்பினர் இருவரும் ஒருங்குகூடி ஒழுகும் இன்ப ஒழுக்கமாதலின் இதைப் புலவர் புனைந்துரைகளால் மிகுத்து அலங்கரித்தனர். இவற்றிற்குத் தனித்தனியே முதற்பொருள்.

கருப்பொருள், உரிப்பொருள்கள் உள்ளன.

I. முதற்பொருள்:— அவ்வொழுக்கத்திற்கு இன்றியமையாதவாகிய நிலமும், பொழுதுமாகும்.

(i) முல்லை:— நிலம்:—காடும், காடுசார்ந்த இடமும்,
பொழுது:—பெரும்பொழுது கார். சிறுபொழுது மாலை.

(ii) குறிஞ்சி:— நிலம்:—மலையும், மலைசார்ந்த இடமும்.
பொழுது:— பெரும்பொழுது கூதிர், முன் பனி. சிறுபொழுது யாமம்.

(iii) பாலை:— இதற்குத் தனிப்பட்ட நிலமில்லை. குறிஞ்சியும் முல்லையும் அடுத்த நிலமே காலம் பற்றிப் பாலையாகும்.
பொழுது—பெரும்பொழுது—வேனில், பின்பனி; சிறுபொழுது-நண்பகல்.

(iv) மருதம்:— நிலம்:— பழனமும், பழனஞ்சார்ந்த இடமும்.
பொழுது:—சிறுபொழுது:—வைகறை, காலை.

(v) நெய்தல்:- நிலம்:— கடலும், கடல்சார்ந்த இடமும்.
பொழுது:—சிறுபொழுது: - எற்பாடு காலை, பிற்பகல். எல் - சூரியன், படு - படுகின்றகாலம்

குறிப்பு:— (i) பாலைக்குத் தனி நிலமின்மையினாற்றான் நானிலம் எனப்பட்டது (உ-ம்) "நானிலம் வாய்க்கோலீடு" [திருவிருத்தம்.]

(ii) மருதத்திற்கும், செய்தற்கும் பெரும்பொழுது சொல்லிற்றின்மையின், அறுவகை யிருதுவும் (பெரும் பொழுதும்) உரியவெனக்கொள்க.

பெரும்பொழுது:—	கார் -	ஆவணி, புரட்டாசி.
	கூதிர் -	ஐப்பசி, கார்த்திகை.
	முன்பனி -	மார்கழி, தை.
	பின்பனி -	மாசி, பங்குனி.
	இளவேனில் -	சித்திரை, வைகாசி.
	முதுவேனில் -	ஆனி, ஆடி.

சிறுபொழுது:—	மாலை:	6	மணி முதல்	10	முடிய
	யாமம்:	10	,,	2	,,
	வைகறை:	2	,,	6	,,
	காலை:	6	,,	10	,,
	நண்பகல்:	10	,,	2	,,
	எற்பாடு	2	,,	6	,,

முதற் பொருளால் நிலத்தையும் அந்நிலத்திற்கேற்ற காலத்தையும் குறிப்பிட்டதால் கிடைத்த உண்மை: தலைவன், தலைவியின் மாட்டு எழும் காமக்குறிப்பை அவ்வோ நிலத்திலும் காலத்திலும் சிறப்பித்தலைப் பற்றியதாகும்.

கருப்பொருள்.

II. கருப்பொருள்:—கரு என்ற சொல்லிற்குக் கருப்பம் எனப் பொருள். இஃது அந்தந்த நிலத்தில் உண்டாகும் பதினன்கு வகைப் பொருள்களைக் குறிக்கும்.

அவையாவன:—

		குறிஞ்சி	பாலை	முல்லை	மருதம்	நெய்தல்
1	தெய்வம்	முருகக்கடவுள்	துர்க்கை	நெடுமால்	இந்திரன்	வருணன்
2	உயர்ந்தோர்	வெற்பன்	விடலி	தோன்றல்	ஊரன்	சேர்ப்பன்
3	தாழ்ந்தோர்	குறவர்	மறவர்	இடையர்	உழவர்	நுளையர்
4	புள்	கிளி, மயில்	புறு, கழுகு	காட்டுக்கோழி	நாரை	கடற்காகம்
5	விலங்கு	புலி, கரடி	செந்நாய்	மான், முயல்	எருமை	சுறுமீன்
6	ஊர்	சிறுகுடி	குறும்பு	பாடி	மூதூர்	பாக்கம், பட்டினம்
7	நீர்	சுனைநீர்	நீரில்லாக் கிணறு	கான்யாற்று நீர்	குளத்துநீர்	உவர்நீர்
8	பூ	வேங்கைப்பூ	மராஅம்பூ	குல்லைப்பூ	தாமரைப்பூ	தாழம்பூ, முண்டகப்பூ
9	மரம்	சந்தனம்	பாலை	கொன்றை	வஞ்சி	புன்னை, ஞாழல்
10	உணவு	தினை	வழிபறித்தபொருள்	வரகு, சாமை	செந்நெலரிசி	மீனும் உப்பும் விற்றுப் பெற்றபொருள்
11	பறை	தொண்டகப் பறை	துடி	ஏறுகோட் பறை	மணமுழவு	மீன்கோட்பறை
12	யாழ்	குறிஞ்சியாழ்	பாலையாழ்	முல்லையாழ்	மருதயாழ்	விளரியாழ்
13	பண்	குறிஞ்சிப்பண்	பஞ்சுரம்	சாதாரி	மருதப்பண்	செவ்வழிப்பண்
14	தொழில்	வெறியாடல்	போர்செய்தல்	சாமை விதைத்தல்	விழாச்செய்தல்	மீன்பிடித்தல், கடலாடல்

(விரிவிற் கஞ்சி மிகுதியாயுள்ள கருப் பொருள்கள் விடப்பட்டன.)

உரிப்பொருள்

III. ஐந்திணைக்கு உரித்தான பொருள் யாதோ? அஃது உரிப்பொருள் எனப்படும். அவை:—புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என ஐந்தும், அவைகளின் நிமித்தங்கள் ஐந்தும் ஆக பத்து வகை.

உலகின் கண்ணுள்ள பொருள்கள் கண்ணால் காணப் படுவனவும், காணப்படாதனவும் என இருவகைப்படும். இம்முறையில், ஐந்திணைக்கும் கூறப்பட்ட பொருள்களுக்குள்ளே; உருவம் காணப்படுவன சிலவும், உருவமின்றி உள்ளதெனப்படுவன சிலவுமாய் இருக்கின்றன. இவைகளில், கருப்பொருள் தோன்றற்கும், உரிப்பொருள் நிகழ்தற்கும் காரணமாய்; முன்னிற்கும் பொருளை, முதற் பொருள் என்றும், அம்முதற் பொருளாகிய கருவில் நின்றும் தோன்றுவதைக் கருப்பொருள் என்றும், இவை யிரண்டினும் சிறந்து திணைக்கு உரியதாய் நிற்கும் பொருளை உரிப்பொருள் என்றும் கொள்க. இவற்றுள், முதற் பொருளினும் கருப்பொருளும், கருப்பொருளினும் உரிப் பொருளும் சிறப்புடையதாகும்.

தமிழ் இலக்கியங்களில், அகப்பொருள் சுவை தன்னப்பெற்ற நூல்களே அநேகமாகவும், பெரிதும் கொண்டாடத் தக்கனவாகவுமிருப்பதைக் காணலாம். வேதாந்த நூல்களிலும் அப்படியே அகப்பொருள் பாசுரங்கள் பெரிதும் காணப்படும். ஆழ்வார்கள்

2

அருளிச்செயல்களில் காணும் தலைவி, தோழி, தாய்க் கூற்றுகளெல்லாம் அகப் பொருளே. அவற்றுள்ளும் முதற் பொருள் கருப்பொருள்களை விசேஷித்துக் கூறாமல் உரிப்பொருளான புணர்ச்சி, பிரிவு, ஊடல் முதலிய நிகழ்ச்சிகளையே பெரிதும் புகழ்ந்திருப்பதாலும், இதற்கு வியாக்கியானமிட்ட பூர்வாசாரியர்களும், அவ்விரண்டின் இயல்களைக் குறிப்பிடாமல் "கூடுமிடம் குருஞ்சிப் பிரியுமிடம் பாலை" என உரிப்பொருளின் இலக்கணத்தையே கூறியிருப்பதாலும் ஐந்திணையில் உரிப்பொருளே தலை சிறந்ததெனக் கொள்ளவேண்டும்.

இவ்வைந்து உரிப்பொருள்கள் நிற்கும் முறை:—

ஐந்திணையில் தலைவனும் தலைவியும் கூடும் 'கூட்டத்தை' (புணர்ச்சியை) முதலும், அக்கூட்டத்தின்பின் 'பிரிவு' வருதலால் அப்பிரிவை இரண்டாவதும், பிரிவுக்கு அனந்தரம் தலைவி ஆற்றியிருத்தல் முறையாகலின் 'இருத்தலை', மூன்றாவதும், பிரிந்த தலைவன் நீட்டித்தவிடத்து அதை ஆற்றியிராது தலைமகள் இரங்குமாதலின் 'இரங்கலை' நான்காவதும், பிரிந்த தலைவன் கூடியபின் இருவர்க்குமுள்ள காமக்குறிப்பைக் காட்டும் செய்கையாகிய "ஊடலை" ஐந்தாவதும் வைக்கப்பட்டுள்ளது. ஆக இவ்வைந்தும் ஐந்து திணைகளான குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் முதலியவற்றிற்கு உரிப்பொருள்கள் எனவும், இவையே "அன்பு

டைக்காமம்" அல்லது "ஐந்திணை" எனவும் சிறப்பிக்கப்பட்டன இது நிற்க.

கைக்கோள்.

ஐந்திணை யான்து அளவில்லாத இன்பத்தினை யுடையதேயாயினும், இதில் 'களவு' என்றும், 'கற்பு' என்றும் இரண்டுவகை 'கைக்கோள்' நடக்கும். கைக்கோள் என்பது "ஒழுக்கம் கொள்ளல்", என்னப்படும். (கை--ஒழுக்கம். அதாவது நல்லொழுக்கம். கோள்—கொள்ளல்)

இங்கு களவு கற்பு என்பன யாவை என ஆராய்வாம். களவு என்பது—தலைமகனும் தலைமகளும் நினைவின்றிக்கே யெதிர்ப் பட்டுப் புணர்தலைச் சொல்லும். இது, தரும் நெறிகளில் சேர்ந்ததன்று. அங்ஙனமிருக்க ஆன்றோர் இவ்வொழுக்கத்தை எங்ஙனே கொள்ளக்கூடும்? என்னில், எந்தக் களவு தீங்கு தருவதாய், நரகத்துக்கேதுவாய், உலக நிந்தையாய் உள்ளதோ அதுவே களவெனப்படும், உலகின்கண் அறஞ்செய்ய மறமாகவும், மறஞ்செய்ய அறமாகவும் வருதலைக் காண்கின்றோமல்லவா! இஃதும் அங்ஙனமேயாம்.

உதாரணம்: ஒருவன் அயலான் மனைவியைக் கைதொட்டான், அப்போது அவள் ஒருவனைச் சாட்சிவைத்து, இச்செய்கையை அரசனிடம் முறையிட்

டாள். சாட்சியாகவந்தவனே அரசன் நடந்த காரி யத்தை விசாரிக்க அவன் அரசன் முன்னே "அவன் கைதொட்டதில்லை" என்று கூறினான். சாட்சி கூறவே "போ" என்று அரசன் குற்றவாளியை விடுத்தனன். இங்குப் பொய்யுரைத்தது அறமாயிற்று. இவன் கை தொட்டானெனின் அவன் தலையோடு முடியும்.

இன்னமும், காட்டில் புலியினால் துறத்தப்பட் டுச் சரணமடைந்த ஒருவன் பொருட்டுப் பொய்கூறி அவன் உயிரைக் காப்பாற்றியதால், அவனுக்குச் "சத் யவான்" என்ற சிறப்புப் பெயர் பெற்றதைப் புரா ணங்களில் காணலாம்.

பின்னும் ஒருவன் மனைவி தன் கணவனிடம் சினம் கொண்டு, விஷத்தை அருந்தி உயிர் மாய்த்தல் நலமெனக்கருதி விஷத்தை ஓரிடத்தில் மறைத்து வைத்திருந்தாள். இக்கொடிய செய்கையை அறிந்த ஒரு தார்மிகன் அவ்விஷத்தைக் களவு கொண்டான். பிற்றைநாள் வைத்த விடத்தில் விஷம் இல்லாமையால் அவள் உயிர் துறத்தலை விட்டாள். இச்சரித்திரத்தால் அந்தத் தார்மிகன் செய்த களவு களவாகுமா? பொய் மையும் வாய்மை இடத்தபுரை தீர்ந்த—நன்மை பயக் குமேனின்" என்ற சிறப்புவிதியை எங்ஙனே! கைப் பற்றுமலிருப்பது?

மயர்வற மதிநலம் பெற்ற ஆழ்வார்களில் திரு

மங்கையாழ்வார், திருநாகையில் சுவர்ணத்தாற் செய்த புத்த சிலையைக் களவுகொண்டு, திருவரங்கம் பெரிய கோயில் மதிலை நிர்மாணம் செய்தார். ஆசாரியர்களில் பெரியவாச்சாம்பிள்ளை ஐந்து இடங்களில் கூறும் பொய், விசேஷ விதியாய்க் கொண்டு பொய்யாகாதென் பதை வியாக்கியானங்களில் விளக்கிக் காட்டினர். எனவே இக்களவொழுக்கம் கற்புநிலையில் நின்று வழு வாமல் பேரின்பமாகிய வீட்டை இறுதியில் பெறச் செய்வதால் இவ்வொழுக்கம் சிறப்புற்றதாகும். இதை எண்வகை மணத்துள் கந்தருவமணம் என வேதம் விதித்தது. அவ்விதி, அநுஷ்டான முறையில் வந்த போது சிலாக்கியமாய், விதித்த வேதமும் சாஸ்த்ர மாயிற்று.

ஆனல், இதற்குக் 'களவு' என்று, ஓர் இழிவான பெயர் வரக்கூடுமோ! எனின், பல அரிய பொருள்களும் மறைந்திருக்கும் காரணம் பற்றி வேதத்திற்கு 'மறை' என்ற ஒரு பெயர் கிடைத்ததுபோல், பிறரறியாமல் இருவரும் கரந்த உள்ளத்தராய்க் கலந்து வந்த கார ணம் பற்றி இதற்கும் இப்பெயர் வந்ததெனத் தகும். இது செய்கையால் மற்றவற்றைக் காட்டிலும் சிறந்த ஒழுக்க முடையதாகும்.

களவாகிய கைக்கோளின் செய்கைகள்.

I. இக்களவொழுக்கின்கண், உள்ளத்தாற் புண

ரும் புணர்ச்சியும், மெய்யுற்றுப்புணரும் புணர்ச்சியும், தலைமகனுக்கே உரிய செய்கைகளாகும். தலைமகனுக்கு அறிவு, புகழ்ச்சி, ஆராய்வு, பண்பு, நண்பு, பழிபாவங்களுக்கஞ்சுதல் முதலிய நிகழ்ச்சிகள் உள்ளப்புணர்ச்சியாகும். அனந்தரம் ஏற்படுவது மெய்யுறு புணர்ச்சியாகும். இதில் காட்சி முதல் சாக்காடு இறுதியாக பத்து அவத்தைகள் விளையும்.

அவையாவன:—

(1) காட்சி - தலைமகன் தலைமகளைக்காணுதல்.

(2) வேட்கை - இவளைப்பெற வேண்டும் என்னும் விருப்பம்.

(3) உள்ளுதல் - இடைவிடாது நினைத்தல்.

(4) மெலிதல் - அவ்வாறு நினைத்தல் காரணமாக உடம்பு வாடுதல்.

(5) ஆக்கஞ் செப்பல் - மனத்தின் கண்ணே தோன்றும் துயரத்தைப் பிறர்க்குக் கூறுதல்.

(6) நாணுவரை யிறத்தல் - நாணத்தின் எல்லை கடத்தல்.

(7) நோக்குவ வெல்லாம் அவையே போறல் - காண்பன வெல்லாம் அவளுறுப்புகள் போலத் தோன்றுதல்.

(8) மறத்தல் - விளையாட்டு முதலியவற்றை மறத்தல்.

(9) மயக்கம் - செய்திறல் அறியாது மயங்குதல்.

(10) சாக்காடு - மடலேறுதலும் வரைபாய்தலும்.

தலைவிக்குள்ள செய்கைகள்

(1) அச்சம் - அன்பு காரணமாகத் தோன்றும் மனக்குலைவு; அல்லது தான் காணப் படாததோர் பொருளைக் கண்ட விடத்து அஞ்சுவது.

(2) நாணம் - காமக்குறிப்பு நிகழ்ந்த வழிப்படுவதொரு மன வொடுக்கம்.

(3) மடம் - கொளுத்தக் கொண்டு கொண்டது விடாத பேதமை: அறிந்தும் அறியாதது போலிருத்தல்.

(4) பயிர்ப்பு - பயிலாத பொருட்களை அருவருத்து நிற்கும் நிலைமை. கணவனல்லாத மற்ற புருஷரது ஆடை முதலியன தம் மேற் படினும் அருவருப்புக் கொள்ளுதல். அல்லது தலைவன் பிரிந்த போது சரீரம் பசலை நிறமாதல்.

II. களவொழுக்கம் நிகழும் இடம்.

இது, பகற்குறி, இரவுக்குறி என இரண்டு பகுதியையுடையதாகும். குறி என்பது பகலினும் இரவினும் எய்துதற் குறியதாய்க் குறிக்கப்படும் இடம். பகற்குறி வீட்டின் எல்லையைக் கடந்திருப்பது. இரவுக்குறி வீட்டின் எல்லையைக் கடவாமல் அதற்குள்ளேயே யுள்ளது.

III. களவொழுக்கத்தின்கண் நிகழும் பிரிவுகள்:—

ஒருவழித்தணத்தலும், வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிதலும் என இருவகை

1. ஒருவழித்தணத்தல்:— பொருள் காரணமாகத் தொலையில் போதற்குப் பிரியாது, ஓரிடத்திலே உறைபவராகிப் பிரிதல். (தணத்தல் — பிரிதல்)

2. பொருள் வயிற் பிரிதலாவது:— வரைவு கொள்ளுதற் பொருட்டுப் பொருள் ஈட்ட, காட்டிடை யிட்டும், நாட்டிடை யிட்டும் பிரிதல். (வரைவு—மணம்.) இப்பிரிவுகள் களவுப் புணர்ச்சி வெளிப்படாமுன்னும், அல்லது வெளிப்பட்ட பின்னும் உளதாகும்.

IV. வரைவு நிகழுங்காலம்.

களவு வெளிப்படுமுன் வரைதலும், அல்லது களவு வெளிப்பட்டபின் வரைதலும் உண்டு. இவை இரண்டும் தலைமகள் மனையிலேனும் தலைமகன் மனையிலேனும் நடைபெறும்.

V. அறத்தோடு நிற்கும் நெறி.

அறத்தோடு நிற்றலாவது:— அறத்தொடு மாறுபடாது நிற்றல். (அறம்—கற்பு). தலைவி, தான் கற்பழியாதவாறு, தனக்குத் தலைவனோடு நிகழ்ந்த களவொழுக்கத்தை வெளியிட வேண்டிய நிமித்தங்கள் பலவும் வந்து புகும். அவை தலைமகன் இரவுக் குறிக்

கண் வரும்போது, வழியிலுள்ள காடி, புலி, பாம்பு முதலியவற்றால் தலைமகனுக்குக் கேடு கி நேரும் என நினைத்த விடத்தும், தலைமகன் வரைதலைச் சுற்றத் தார் மறுத்தபோதும், வேற்று வரைவு நேர்ந்தபோ தும், காவல் மிகுந்த விடத்துமாகும். அதாவது தலை மகன் இரவுக் குறிக் கண் வந்தடையும் போது, தலைவி யின் தாய் துஞ்சா திருத்தல், ஊரிலுள்ள நாய் துஞ்சா திருத்தல், ஊர்சுற்றிவரும் இரவு காவலர்கள் சமீபத்து வருதல் முதலியவற்றால் களவுக்கூட்டம் சிறிதுசிறிதாக வெளியாகி அதுகாரணமாக அன்னை முதலியோர் தலை வியை வீட்டில் வைத்துக் காவற்படுத்துவதுண்டு. அப் போது தலைமகளுக்குத் தலைவனைக் காணப்பெறாத வருத்தம் பெரிதுமுண்டாய், உடல் வேறுபட்டதைத் தாய் முதலியோர் அறிந்து, அதன் உண்மைக்காரணம் உணராது, வேலனைக்கொண்டு வெறியாட்டு வித்துக் குறிகேட்கத் தொடங்குவர். இதன் உண்மை அறிந்த தோழி தலைவியின் கற்புக்குக் குறைவு வாராமல் பூத்தரு புணர்ச்சி, புனல்தருபுணர்ச்சி, களிறுதருபுணர்ச்சி என்ற வியாஜமாக இவள் களவொழுக்கத்தை வெளி யிட்டுத் தலைவியின் கற்பைக் காப்பள். (பூத்தரு புணர்ச்சி, புனல்தரு புணர்ச்சி, களிறுதரு புணர்ச்சி களின் பொருளை ஈட்டில் நம் ஆசாரியர்கள் அழகுபட உரைத்திருப்பதைக் காண்க.)

களவியல், வரையியல், கற்பியல் இவை மூன்றின் வர லாற்றை மேலே விரிவாகக்காணலாம்.

அகப்பொருள்.
(விருட்சம்)

- கைக்கிளை (ஒருதலைக்காமம்)
  - பெண்பால் (கைக்கிளை)
  - ஆண்பால் (கைக்கிளை)
- ஐந்திணை (அன்புடைக்காமம்)
- பெருந்திணை (பொருந்தாக்காமம்)
  1. பிரமம்.
  2. பிரசாபத்தியம்.
  3. ஆரிடம்.
  4. தெய்வம்.
  5. காந்தருவம்.
  6. ஆசுரம்.
  7. இராக்கதம்.
  8. பைசாசம்.

ஐந்திணை

§ குறிஞ்சி	பாலை	முல்லை	மருதம்	நெய்தல்
மலை	சுரம்	காடு	வயல்	கடல்
கூதிர்	வேனில்	கார்	வைகறை	எற்பாடு
முருகன்	துர்க்கை	நெடுமால்	இந்திரன்	வருணன்
புணர்ச்சி	பிரிவு	இருத்தல்	ஊடல்	இரங்கல்

கைக்கோள்
(ஒழுக்கம் கொள்ளல்)

- களவு
  - களவியல்
  - வரையியல் †
- கற்பியல்
  - இல்லறம்
  - துறவறம்
    - வீடு (பேரின்பம்)

§ இந் நிலங்களின் முதல் பொருள், கருப்பொருள், உரிப்பொருள்.

† இதைத் தனியாகப் பிரித்த காரணத்தை வரையியற் பகுதியில் காண்க.

அகப்பொருள் வரலாற்றுச் சுருக்கம்.

உலகின்கண் எல்லாச் சமயத்தாராலும், உலகத்தாராலும் வெறுக்கப்பட்ட களவொழுக்கத்தை எதற்காகக் கற்றல் வேண்டும். இங்குக் கூறும் களவொழுக்கம் (காந்தர்வமணம்) தீமை செய்யாது வீடுபயப்பது ஒன்றாகும். அஃது எவ்வாறெனில் தலைவர் இருவருள் ஒருவர் நோய்கொண்டால் மற்றொருவர் நோய்க்கொண்டும், ஒருவர் சாவாராயின் மற்றொருவர் செத்துப்போகக்கூடிய ஒத்த அன்பினராய் உருவும், திருவும், அறிவும், குலமும், ஒழுக்கமும் முதலியவற்றால் ஆவின் இரு கொம்புகள் ஒன்றுக்கொன்று ஒத்திருத்தல் போன்று, ஒத்து ஒழுகுபவராவர்.

தலைவனொருவன் வேட்டை விருப்பால் ஒரு மானின் பேரில் அம்பு எய்து அதன் பின் தொடர்ந்து, தோழரைப் பிரிந்து ஒரு பூங்காவனத்தை யடைந்தான், ஆங்குத் தன் தோழியரோடு தினைப்புனங்காத்து வந்த வனும் சீலம், வயது, ஒழுக்கம் முதலியவற்றால் ஒப்புயர்வற்றவளுமாகிய மகளொருத்தி, விளையாட்டு விருப்பால் தோழியரைப்பிரிந்து அத்தலைவன் முன்பு எதிர்ப்பட்டாள். இவர்கள் இருவரும் ஊழ்வயத்தால் காமம் சேரும் காந்தர்வமணம் கொண்டனர். பின்னர் ஒரு

வர்க்கொருவர் பிரிவாற்றாது வருந்தி, ஒருவாறு ஆற்று வித்துக்கொண்டு தத்தம் இடம் நோக்கிச்சென்றனர்

இக்களவொழுக்கம் என்பது, ஒருவனும் ஒருத்தியும் அந்தரங்கத்தில் கூடும் கூட்டம். திரும்பவும் காணும் அவாவினால், பிரிந்த தலைமகளைக் காணத் தலைமகன் தூண்டப்படுவான். இங்ஙனம் தூண்டப்பட்டத் தலைமகன் முன்போலத் தலைவியைக் கண்டு உள்ளம் மகிழ்வான்; இவ்விதம் மூன்று முறை நடந்தபின், பாங்கனால் தலைவி யிருப்பிடமறிந்து சென்று அவளைச் சேர்வான்.

பின்னர், தலைவி பல தோழியரால் எப்போதும் சூழப்பட்டிருப்பதால், தனி யிடத்தில் எதிர்ப்பட்டுக் கூடுதல் அருமை யெனக்கருதிய தலைவன், அதற்குத் தக்க துணையாவாள், இவள்காதற் தோழியே என்பதைத் தெரிந்துகொண்டு, அத்தோழியிடம் சென்று குறிப்பாகவும் வெளிப்படையாகவும் தன் குறை கூறி வேண்டுவான். தோழி பலபடியாக ஆராய்ந்து இருவர் ஒழுக்கத்தின் உண்மையையும் உணர்வாள்; இனி நாமும் இதற்கு உடன்படலே நலம் என்று, அவ்விருவரையும் கூட்டுதற்குத் தோழி முயல்வாள். இவ்வாறு சில நாட்கள் கழியும்.

பின்பு தினைப்புனம் முற்றிக் கதிர் கொய்த அனந்தரம், தலைவி காவல் நீங்கித் தான் தன் மனையகத்தே

தங்கும்படி நேரும். அக்காலத்து இரவில் தோழி அவ்விருவரையும் கூட்ட முயல்வள். இங்ஙனம் நிக ழும் களவொழுக்கம் முதலில் சிலர் அறிந்து, நாளடை வில் ஊரில் பலர் அறிய அலர் எழும். இந்நிகழ்ச்சி யைத் தாய் தந்தையர் அறிந்து தலைவியை அகத்தில் தக்கபடி காவல்படுத்துவர். தலைவி தலைமகனைக் காணப் பெறாமையின் கொள்ளும் ஆற்றாமையைத் தோழி கண்டு, கற்பு நெறிப்பட இவள் இனி இறந்து படவும் கூடும் என்று கருதித் தலைவனை நோக்கி, "நீர் இவளை உடன் கொண்டு சென்று மணந்து கொள்வதே இனிச் செயற்பாலது" என்று கூறி, ஒருவரும் அறியாதபடி தலைவியை வெளியேற்றித் தலைமகன் பாற் சேர்ப்பள்.

அவன் அவளை உடன் அழைத்துக்கொண்டு, தன்னூர் நோக்கிச் செல்வன். செல்லுமிடத்தில் தலை வன் சுற்றத்தார் இவ்விருவரும் அன்பால் நிழல் போல் பிரியாமலிருப்பதை யறிந்து "இவள் கற்பு நெறிப்பட் டாள்" என்றெண்ணி, அவ்விருவருக்கும் தீங்கு செய் யாது திரும்பிச் செல்வர். தோழி, தாய், தந்தை இவர்கள் வார்த்தைக்கிசைந்து, தலைவன் தன்னூரிலே னும் தலைவியின் ஊரிலேனும் தலைவியை விதி முறைப் படி மணந்து இல்லறத்தை நல்லறமாக நடாத்துவன். இவ் வில் வாழ்க்கையில் இவனுக்குக் குலமுறைப் படி நேரும் ஓதற்குப் பிரிதல், காவற்குப் பிரிதல், தூதிற் பிரி தல், துணை வயிற் பிரிதல், பொருள் வயிற் பிரிதல், பரத் தையிற் பிரிதல் முதலான ஆறு வகைப் பிரிவின் சில

வற்றால், தலைவிக்கு ஊடல் முதலியவைகள் வந்து சேரும். இங்ஙனே இல்லறத்தைப் பேணி அதை நலம் பெறச் செய்து, தலைமகனும் தலைமகளும் மக்களோடு கூடி மகிழ்வுடன் காம வேட்கை தீர்ந்த போதே தம்மூர் நீங்கிக் காட்டிடைச் சென்று, தவம் புரிந்து நீங்குதலில்லாத வானவர் நாட்டை எய்தி பேரின்பத்தைப் பெற்றுப் பெரிதும் வாழ்வார்கள்.

அகத்திணையியல் முற்றிற்று.

களவியல்.

இது களவென்று சிறப்பித்துச் சொல்லப்படும் ஒழுக்கமாகிய காந்தருவ மணத்தின் இலக்கணத்தை உணர்த்தல் எனப்படும்.

இதன் வரலாறு:—இயற்கைப் புணர்ச்சிக்கு முன் பெரும்பான்மையுந் தலைவனிடம் காட்சி, ஐயம், தெளிதல், தேறல் ஆகிய கைக்கிளை நிகழும். திருமகளருளையும், கலைமகளருளையும் வாய்க்கப் பெற்ற அரசிளங்குமரன் ஒருவன் வேட்டையை வேட்டுக் கானிடைப் புக்கான். பாங்கர் பலரும், ஏவல் இளைஞரும் அவன் பின் தொடர்ந்தனர். அத்தலைவன் தன் கண்ணிற் பட்ட மான் ஒன்றைத் துரத்திக்கொண்டே தன் பாங்கரையும், மற்றோரையும் விட்டுத் தனிப்பட்டான்; அவ்வமயம் ஓர் அழகிய பூங்காவனத்தைக் காணுவதில் வேட்கையுற்றுத், தன்னைத் தொடர்ந்துவந்த தோழியைப் பிரிந்து அறிவிலும், திருவிலும் சிறந்த கன்னி ஒருத்தி வருவதை அத் தலைமகன் காணலுற்றான். அக் கன்னியின் அழகும், உருவும் அவன் மனத்தைக் கொள்ளைகொண்டன. சிறிது நேரம் ஒன்றுந் தோன்றாது திகைத்து நின்றான். அஃது ஒரு மலர் பூத்த கொடியாகவோ! அன்றி புஷ்பங்கள் அலர்ந்த வாவியாக

வோ ! இருக்கக்கூடும் என்னும் எண்ணம் அவனுக்குத் தோன்றிற்று. பின்னும் உற்றுநோக்கினன். முன் எண்ணங்கள் அறவே ஒழிந்தன. அஃது ஒரு பெண்ணுருவெனவே அவன் யூகித்தான். ஆனல் இத்துணை உருவ அமைப்பும், வனப்பும் வாய்ந்த இம்மங்கை மானிட மகளோ ! தெய்வ மகளோ ! என்னும் ஐயம் அவனைப் பெரிதும் வாட்டிற்று. சிறிது அருகில் போந்து உற்றுப் பார்த்தான். அவள் கூந்தலில் அணிந்திருந்த மாலை சிறிது வாடியிருந்தது மையுண்ட கண்கள் இமை கொட்டின. இவை அவன் ஐயத்தைத் தெளிவித்தற்குத் தக்க ஊன்றுகோலாயிருந்தன. இறுதியில் இவள் மானிட மகளே ! எனத் தீர்மானித்தான். காதல் கனிந்தது. ஆனல் அவளுக்குத் தன் மாட்டு விருப்பம் உண்டோ என்பதை அறிய அவன் மனம் விழைந்தது. ஆதலின் இனிய பார்வையுடன் அவளையே நோக்கி நின்றான். அவ்வமயம் அவள் விழிகளில் தோன்றிய சிறப்பு நோக்கம் ஒன்று அவள் வேட்கையை நன்கு வெளிப்படுத்திற்று. அக்குறிப்பால் அம்மங்கைக்குத் தன்பால் விருப்பம் உண்டு என்பதைத் தலைவன் உணர்ந்து தெளிவடைந்தான். உடனே வருந்திய தன் மனத்திற்குத் தேறுதல் கூறி, இனி நடைபெறவேண்டிய காரியங்களில் மனத்தைச் செலுத்தினன். இத்தொகுப்பு முறையே காட்சி, ஐயம், துணிவு, குறிப்பறிதல் இவற்றை விளக்குவதைக் கண்டுகொள்க.

இக்களவியல் பகுப்புகள் இயற்கைப்புணர்ச்சி, முதல்
வரை விடை வைத்துப் பொருள் வயிற் பிரி
தல் ஈருகப் பதினேழாகும்.

இயற்கைப்புணர்ச்சி வன்புறை தெளிவே
பிரிவுழி மகிழ்ச்சி பிரிவுழிக் கலங்கல்
இடந்தலைப் பாடு பாங்கற் கூட்டம்
பாங்கி மதியுடம்பாடு பாங்கியிற் கூட்டம்
பாங்கமை பகற்குறி பகற்குறி யிடை யீடு
இரவுக் குறியே யிரவுக் குறியிடை யீடு
வரைவு வேட்கை வரைவு கடாதல்
ஒருவழித்தணத்தல் வரை விடை வைத்துப்
பொருள் வயிற் பிரிதலென்றெரு பதினேழுங்
களவிற் குரிய கிளவித் தொகையே.

இவை ஒவ்வொன்றையும் தனித் தனி ஆராய்வாம்.

I. இயற்கைப் புணர்ச்சி:— தலைமகளுக்குத் தன் மாட்டுள்ள வேட்கையைக் குறிப்பால் உணர்ந்த தலைமகன் மனம் வேருகித் தலைமகளைக் கூடும். இது தெய்வங்கூட்டக் கூடும் கூட்டமாதலின் இயற்கைப் புணர்ச்சி எனப் பெயர் பெற்றது.

இதன் உட் பொருள்: தலைமகள் மனப் போக்கை அறிந்த தலைமகனுக்குத் தன்வேட்கையை வெளிப்படுத்தி இனிய மொழிகளினுல் தலைவியை இரக்கலாம் என்னும் கருத்துத் தோன்றிற்று. ஆகலின் தலைமகளைப்பார்த்துத் “திருமகள் போன்றவளே, உன்னை விரும்பி நிற்கும் என்னை நோக்காது நிற்பது உனக்கு அருள் ஆகுமா!

நீ இங்குத் தனியாய் நிற்றற்கு காரணம் யாது?" என வினவினான். நாணத்தினால் தலைவியின் நா அதற்கு மறுமாற்றம் ஒன்றும் பகர்ந்திலது. ஆயினும் வேட்கை மீதூர, நாணம் ஒரு பால் ஒதுங்கி நிற்கும் தலைவியின் நிலைமை தலைவனுக்குப் புலனாயிற்று. அவன் கூந்தலில் மொய்த்திருக்கும்வண்டுகளை ஓட்டுவான்போன்று அவள் தோளைத் தொட்டான். பின்பு தலைவனின் பொய்யும் மெய்யுமான பாராட்டுத் தலைமகளை அணிசெய்தது. இருவரும் கவலை யின்றி இருத்தற் கேற்ற ஓர் அழகிய சோலையைத் தலைமகன் அப்பெண் மணிக்குக் காட்டி அவளை வழிபடுவானாயினன். தலைவிக்குப் பெரிதும் நாணமுண்டாயிற்று. ஆதலின் அருகிலிருந்த குருக்கத்திக் கொடியின் மறைவில் நின்றனள். அவள் கையாகிய தாமரை, கண்களாகிற குவளையை மறைத்தது இது நாணுடையார் செய்கையன்றோ! அச்செயல் தலைவனுக்குத் துன்பமூட்டியது. காலம் நீட்டித்தலையும், பெரும் வேட்கையினால் தன் உயிர் ஊசலாடுவதையும் தலைவிக்குத் தெரிவித்தான். தலைவன் வேட்கையின் மிகுதி அவள் மனக் கண்முன் காட்சியளித்தது. இனி நம் நாணத்தினால் இதைத் தடுத்தல் அரிதென நன்கு உணர்ந்தனள். அவள் புன்னகை பற்களிடம் தோன்றாது, முகத்தினிடம் புலப்பட்டு மலர்ந்தது. அம்மங்கையின் சிறு நகை அவன் ஆவியைத் தாங்கும் ஊன்று கோலாயிற்று எனக் கூறல் மிகையாகாது. அம்மங்கையை அணைந்து ஆனந்தக் கடலிலாழ்ந்தான். பெறுதற்கரிய ஐந்தலை நாக மணியைப்

போன்ற அப்பெண் மணியின் சேர்க்கை அவனுக்கு அளப்பிலா உவகையை யூட்டிற்று.

இதனால், முயற்சி எவ் வரிய பொருளையும் பெறச் செய்யு மெனத் தீர்மானித்தான். "இவள் மையுண்ட கண்களுக்கு கிரால்கெண் டையும், இடைக்கு மின்னலும் வெட்கி மறைந்து கொள்ளும்" என்பன போன்ற பல புகழ் மொழிகள் தலைவன் வாயிலிருந்து ஒன்றின் பின் னொன்றாகத்தோன்றி அவளைப்பாராட்டின. அப்பா ராட்டினல் தலைவி யணிந்த முத்து வடம் முதலிய அணி கள் நிலை குலைந்து ஒன்றோடொன்று கலந்து உறவா டின. அவற்றைத் தலைவன் முன்னிருந்தபடி திருத்தி அலங்கரித்தான்.

இப்பொருளை விளக்கும் துறைகள்:—

இரந்து பின்னிற்றற்கு எண்ணல் பின்னிற்றல்—(இதஞ் சொல்லுதல்)
இரந்து பின்னிலை நிற்றல்.
முன்னிலை யாக்கல். எதிர்முகமாக்கல், விளித்தல்.
மெய் தொட்டுப் பயிறல். பயிறல்—நெருங்குதல்.
பொய் பாராட்டல்.
இடம் பெற்றுத் தழால். தழாஅல்—தழுவுதல்.
வழிபாடு மறுத்தல்.
இடையூறு கிளத்தல்.
நீடு நினைந்திரங்கல்.
மறுத்தெதிர் கோடல். கோடல்—விரும்பல்.
வறிது நகை தோற்றல். (வறிது—சிறிது)

முறுவற்குறிப்புணர்தல்.
முயங்குதலுறுத்தல்.
புணர்ச்சியின் மகிழ்தல்.
புகழ்தல்.
ஏற்புறவணிதல், (இதைத்தான் சூத்திரத்தில் பிற வும் எனக் கூறப்பட்டுள்ளது)

வன்புறை

வன்புறை வற்புறுத்திக்கூறல். இஃது, ஐயந்தீர்த்தல், பிரிவறிவுறுத்தல் என இருவகைப் படும். அவற்றுள் இஃது ஐயம் தீர்த்தலின் பாற்படும்.

பாங்கியால் அணியப்பட்ட அணிகளைத் தலைவன் திருத்திய போது இவர் செய்கை தோழிக்கு வேறுபாட்டைப் புலப்படுத்தி ஐயத்தையுண்டாக்குமே, எனத் தலைவி நாணினள். அதை அவள் முகக் குறிப்பால் உணர்ந்த தலைமகன் "உன் ஆருயிரன்ன தோழியர் உன்னை அலங்கரித்தது போலவே யானும் செய்தேன் கவலற்க," என வற்புறுத்திக் கூறினான். இத்துணை அன்புடைத்தலைவன் மீண்டும் நம்மை நோக்கி வருவனோ என்னும் எண்ணம் தலைவிக்குத் தோன்றிற்று. அவ்வெண்ணம் அவளை விட்டு நீங்க, தலைமகன் வண்டுகளை நோக்கி இடம்புதல் முகமாய்த் தலைவியைப் பெரிதும் புகழ்ந்து தனக்கு அவள் மாட்டுள்ள பெருங்காதலை வெளிப்படுத்தினான். பின்னும் தலைவியின் மனம் தெளிந்திலது. அவள் தெளிவடைய, முயற்சி ஒரு சிறிதுமின்றி முன்பின் அறியாத தம் இருவரையும் ஒருங்கு கூட்

டிய தெய்வத்தின் திறத்தை அவன் வியந்தான். ஆயினும் தலைவன் நம்மை விட்டுப் பிரிவனோ என்ற எண்ணம் தலைவியின் உடலுக்குப் பசலை நிறத்தை யூட்டிற்று.

ஓரோ நிலைமையில் பிரிவு உண்டு, பிரிவின் தரிக்கலாற்றாத் தன்மையும் உண்டு என்பதைத் தலைவிக்கு அறிவிக்கத் தலைவன் "கொடி போல்வாய்! நின்னைவிட்டு பிரியேன், பிரியினும் இமையும் தரியேன்" எனச்சூளுரைத்தான். சில விநாடிகள் தாழ்த்து "இன்றியமையாத ஒரு காரியத்தின்பொருட்டுச் சிறிது அயல் சென்று விரைவில் வருவேன்" எனத் தலைவன் இயம்பினான். அவ்வார்த்தைகள் தலைவிக்கு அம்பெனப் பொத்தின. பெரிதும் வருந்தினள். ஆதலின் தன் ஊர் அணித்து என்பதைத் தக்க சான்றுடன் அவளுக்குச் சுட்டிக் காட்டினான்.

இப்பொருளை விளக்கும் துறைகள் :—

பெருநயப்புரைத்தல். (மிக்க அன்பை வெளிப்படுத்தல்)
தெய்வத்திறம் பேசல்.
பிரியே னென்றல்.
பிரிந்து வருகென்றல்
இட மணித்தென்றல்

III. தேளிவு.

தலைவன் சொல்லைத் தலைவி உண்மையெனத்
தெளிந்து ஆறியிருத்தல்

தலைவன் சொற்களை உண்மை யெனத் தெளிந்த

தலைவி தன் ஆயக் கூட்டத்தை நோக்கிப் புறப்பட்டாள்.

IV. பிரிவுழி மகிழ்ச்சி.

தலைவன் வார்த்தையை நம்பிய தலைவி அவனிருந்து நீங்கிச் செல்லுங்கால், அவள் செல்லும் அழகைக் கண்டு தலைவன் மகிழ்தல்.

அகிற் புகை யூட்டிய மேக மன்ன கூந்தலை ஒரு கையிலும், துல்லிய துகிலை மற்றொரு கையிலும் ஏந்திக் கொண்டு காற்சிலம்பு ஒலிக்க அசைந்து அசைந்து செல்கின்ற அவள் செல்கை தலைவனுக்குப் பெரும் மகிழ்வை யளித்தது. ஆயக்கூட்டத்தாரையும், தலைவனையும் முன்னும் பின்னுமாகப் பார்த்துக் கொண்டே செல்லும் அப் பெண்ணணங்கைப் பாகனுக்குக் காட்டிக் காட்டி உவகை பூத்தனன்.

துறை : செல்லுங் கிழத்தி செலவுகண்டுளத்தோடு சொல்லல்.
பாகனோடு சொல்லல்.

V. பிரிவுழிக் கலங்கல்

தலைவி தன்னை விட்டு நீங்கியவுடன், அவள் காணுவாறு மறைந்திருந்த தலைமகன் அவள் சிறப்பைக்கண்டு மயங்கிக் கூறல்.

அங்ஙனம் சென்ற தலைவி தன் ஆயக்கூட்டத்தை

அடைந்தாள். பாங்கியர் பலர் பல் வேறு வகையில் அவளுக்கு வழிபாடு புரிந்தனர். மறைவிடத்தில் நின்று அவளை நோக்கி நின்ற தலைவனுக்கு அக்குற்றேவல்களின் சிறப்பு ஓர் அதிசயத்தை உண்டு பண்ணிற்று. இத்துணைப் பாதுகாப்பிலிருக்கும் இம்மங்கையை நாம் அடைந்தது மாயமோ! கனவோ! அன்றிப் பொய்யோ! எனத் தன்னைத் தானே நம்பாமல் ஐயுற்றனன். அவ்வமயம் தலைவியின் கண்களாகிற கயல்கள் அக்கூட்டத்திலிருந்த பாங்கியருள் ஒருத்தியின் முக ஓடையில் போய்ப் போய்த் தங்கின. அப்பார்வைக் குறிப்பு அத்தலைவனுக்கு ஓர் உயர்ந்த தத்துவத்தைக் கற்பித்தது. தான் தலைவியை அடைதற்குத் தக்க தூது (வழி) அப்பாங்கியே எனத் தெளிந்தான். உடனே அவனுற்றுமை சூரியனைக் கண்ட பனியென நீங்கிற்று. பின்பு தலைவி உறுப்புகளின் அழகு ஒன்றின்பின் ஒன்றாக அவன் முன் தோன்றின. அவற்றைப் பல இயற்கைப் பொருள்களுக்கு ஒப்புப்படுத்தி அவள் பண்பைப் புகழ்ந்தான். இறுதியில் அவளை ஈன்ற சான்றோரிடம் அவன் சிந்தை சென்றது. இவளைப் பெற்றோர், தமிழ் வேதத்தை உலகுய்யத்தந்த குருகூர்ச் சடகோபன் திருமஞ்சனம் சேவித்த பெரியோர் பல்லாண்டு கூறுவது போல், பல ஆண்டுப் வாழ்க எனக்கூறிக் கொண்டே வீடு திரும்பினன். அன்றிரவு அவன் இமையோடு இமைபொருந்தில்து. அன்புடையாளைப் பிரிந்த துன்பம் அவனைப்பெரிதும் வாட்டிற்று.

துறை:—

வாயில்பெற்றுய்தல்.	வாயில்—தூது.
பண்பு பாராட்டல்.	பண்பு—அழகு.
பயந்தோர்ப் பழிச்சல்.	பெற்ளேர் வாழ்த்தல்.
கண்படைபெறது கங்குனேதல்.	இரவில் வருந்தல்.

முதல் நாள் செய்கை
முடிந்தது.

VI. இடந்தலைப்பாடு

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்துசென்ற தலைவன் மறுநாள் அவ்விடத்தை நாடிவந்து தலைமகளைக் கூடுதல்.

மறு நாளும் தலைவியைக் காணவேண்டுமென்ற அவா அவனைத் தூண்டிற்று. நேற்று நம்மைச்சேர்த்து வைத்த தெய்வம் இன்றும் அவளைக் கூட அருள் புரியும் எனக்கருதி முன்பு தலைவியைச் சந்தித்த இடத்திற்கே சென்ருன். தெய்வப் பெண் போன்ற அத்தலைவியின் வடிவம் தலைவன் முன் தோன்றிற்று. தன் எண்ணம் முற்றுப் பெற்றதைத் தன் நெஞ்சுடன் கூறிஉவந்தான். இக் கூட்டுறவிற்குத் தெய்வ அருளே காரணம் என் பது தலைவன் கருத்து. பின்பு தலைவியினிடம் சென்று கலந்தான். அத் தோற்றம் வாவியில் மலர்ந்த தாமரையின் அகவிதழில், அரச அன்னம் சேர்ந்ததெனக் காணப் பட்டது. அப்போது மலர்ந்த செந்தாமரையும் அவள்

முகத்திற்கு ஒப்பாகாதென அவன் நா தலைவியைப் புகழ்ந்தது. இறுதியில் ஆயக் கூட்டத்தைச் சென்றடைய தலைவியை அன்புடன் விடுத்தான்.

துறை:—

தந்ததெய்வம் தருமெனச்சேறல்.
முந்துறக் காண்டல்.
முயங்கல். தழுவல்.
புகழ்தல்
ஆயத்துய்த்தல்.

இரண்டாம் நாள் செய்கை
முடிந்தது.

VII. பாங்கற் கூட்டம்

இக் காதல் நோய் பாங்கனாலன்றி நீங்காதெனக் கருதிய தலைவன், பாங்கனை அணைந்து அவன் கூட்டத் தலைவியைக் கூடுதல்.

பாங்கனாலன்றித் தன் குறை நீங்காதென்றுணர்ந்த தலைவன் தன் உயிர்த் தோழனை அடைந்தான். தலைவனின் மனத்தளர்ச்சியும், தோள் மெலிவும் பாங்கனுக்குத் தன் நெஞ்சும், அறிவும் சென்று மயக்கும் பெண்மணியின் தெளிவைக் கூறினன். "கல்வியறிவிற்றுறைபோய நீ, ஒரு மறவர் பெண்ணுக்காக இங்ஙனம் மயங்கல் அறிவுடைமையோ!," எனப் பாங்கன் தலை

வனை இடித்துரைத்தான். "அவள் பண்பமைந்த அழகு உன் கண்ணிற் பட்டிலது, அங்ஙனமாயின் உன்னினும் பெருந்தகையாளரும் கலங்காமலிருத்தற்கு முடியாது," எனத் தலைவன் அவனுக்கு எதிர்மொழிப் பகர்ந்தான். பாங்கனின் பல வீரச் சொற்கள் தலைவனை இழிவிற்குள்ளாக்கின. தலைவியின் செவ்வரி படர்ந்த கண்கள் அவன் நிறையைக் கொள்ளை கொண்டமையின் பின்னும் ஆற்ருமை அவனுக்கு மேலிட்டது. தலைவன் ஆற்ருமைக்குப் பாங்கனின் மனம் பெரிதும் வருந்திற்று. வஞ்சனையுடைய பெண்களின் மாட்டு நீ அன்பு செலுத்தல் தக்கதன்று, எனப் பாங்கன் கூறிய அறவுரைகள் பலவும், தலைவனுக்குச் சிறிதும் பயனளித்தில. ஆகலின் "அந்தோ, இனி என் செய்வேன்! கடல்நீரே கொதிக்கின் எந்நீரைக்கொண்டு ஆற்றுவது. அதைப்போல், கலைவல்ல இவனே இங்ஙனம் மயங்கின் நாம் என் செயலாம். இவர்களைச் சேர்த்து வைத்தலே நம் கடமை இன்றேல் இவன் இறந்து படுவன்," என எண்ணித். தலைவியையும் இடத்தையும் அவன் இயல்பையும் தலைவனால் உணர்ந்து அவண் நோக்கிச் சென்றான்.

தலைவன் குறிப்பித்த இடம் பாங்கன் கண்ணிற்குப் புலப்பட்டது. நம் அண்ணலின் கலையறிவாகிற நீரைப் பருகின்ற மேக மன்ன கூந்தலுடையாள் இன்று இங்கு வருவளோ! என்ற ஐயத்துடன் அங்கு உற்று நோக்கினன் முழுமதி முகத்தையும், கயற் கண்ணையும் வாய்ந்த மங்கையுருவம் ஒன்று அவ

னுக்குத் தோன்றிற்று. அவ்வனிதையின் ஒப்பற்ற பேரழகு அவன் மனத்தையும் கண்களையும் ஒருங்கே கவர்ந்தது. "அழகே திரண்டதெனக் காணும் இம்மங் கையின் கண்ணாகிய வலையில் பிணிப்புற்ற நம் தலைவன் வருந்தாது என் செய்வான்! அப் பிணிப்பிலேயே சிக் குண்டு இவன் இருந்துவிடாமல் மனத்திட்பத்துடன் நம்மிடம் வந்து நாம் இடித்துரைத்ததையும் தாங்கிக் கலங்காமலிருந்தது அவன் அறிவின் மாட்சியே! இவ் வுலகில் இவனே திண்ணியன், கல்வல்லோன். எங்ஙன மேனும் நம் தலைவனின் மெலிவை இவள் தன் அருட் பார்வையினால் தணிப்பள்," எனத் தீர்மானித்துத் தலைவனிடம் சென்றான். தலைவன் நிறையைக் கொள்ளை கொண்ட வஞ்சிக்கொடியன்ன ஒருத்தி அவன் குறிப் பித்த இடத்தில் தனியே நிற்றலை தலைவனுக்கு உணர்த் தினான். நம் தலைவன் தோழியர் முன்னிலையில் வந்து விடுவனோ, அன்றி ஆற்றாமையினால் இறந்து படுவனோ என்னும் நாணத்தினாலும், அச்சத்தினாலும் மெலிந்து நின்ற தலைவியின் அழகுருவம் பாங்கனால் தூண்டப் பட்டு அங்குச் சென்ற தலைமகனுக்குக் காணப்பட்டது. மேகத்தை நோக்கி நிற்கும் சாதகப்புள்ளையும், மயிலையும் ஒப்ப நிற்கும் அத்தலைவியைத் தலைவன் நெருங்கி அவளைக் கூடி மகிழ்ந்தான். பலபடியாக அவளைப் புகழ்ந்தான். "நீ இனி இங்கு வருங்கால் உன் தோழி யுடன் வருதல் நலம். உன்மாட்டுள்ள வேட்கையே இவ் வாறுப் புகலும்படி என்னைத் தூண்டிற்று," எனச் செப்பித் தலைவிக்கு அழகிய முல்லை மாலை யொன்றைச்

கூட்டித்தோழியர் கூட்டத்திற்குப் போக விடுத்தான்.

துறை:—

தலைவன் பாங்கனைச் சார்தல்.
பாங்கன் தலைவனை உற்றது வினுதல்.
தலைவன் உற்றது உரைத்தல்.
கற்றறி பாங்கன் கழறல். (கண்டித்துக்கூறல்)
தலைவன் கழற்றெதிர் மறுத்தல்.
பாங்கன் தலைவனைப் பழித்தல்.
தலைவன் வேட்கை தாங்கற்கருமை சாற்றல்.
பாங்கன் தன் மனத்து அழுங்கல். (இரங்கல்)
பாங்கன் தலைவனோடு அழுங்கல். (இரங்கல்)
எவ்விடத்தெவ்வியற்றென்றல்.
இவ்விடத்து இவ்வியற் றென்றல்.
பாங்கன் இறைவனைத் தேற்றல்.
பாங்கன் குறிவழிச் சேறல்.
பாங்கன் இறைவியைக் காண்டல்.
பாங்கன் தலைவனை இகழ்ந்ததற்கிரங்கல்.
பாங்கன் தலைவனை வியத்தல் (வியந்து கூறல்)
பாங்கன் தலைவியை வியத்தல்
தலைவன்றனக்குத் தலைவி நிலை கூறல். குறியிடத்
[தில் நிற்றலை.
தலைவன் சேறல்.
தலைவியைக் காண்டல்
கலவியின் மகிழ்தல்.
புகழ்தல்.
பாங்கியோடுவருகெனப்பகர்தல். (பாங்கி துணையாக)
பாங்கிற் கூட்டல்.

VIII. பாங்கிமதியுடன்பாடு.

தன்னை நோக்கி வந்த தலைவியைக் கண்ட தோழி, அவள் வேறு பாட்டை அறிந்து ஆண் மகன் கூட்டுறவி னாலேயே இஃது இவளுக்கு ஏற்பட்டிருக்கக்கூடு மென்பதை எண்ணிச் சிறிது ஆராய்ந்து தன் மதியை அவ்வாராய்ச்சியுடன் உடன் படுத்திப் பார்த்தல்.

தலைவனைப் பிரிந்து சென்ற தலைவி, தன் பாங்கி யருடன் கலந்து வழக்கம்போல் தினைப்புனத்தைக் காவல் செய்தாள். தலைவியின் வேறுபாடு அவள் உயிர்த்தோழிக்கு ஐயத்தை விளைவித்தது. அதன் காரணத்தைத் தோழி தன் மதியினால் ஆராயத் தொடங் கினாள். தலைவி பல்வகை விளையாடல்களையும் இனிய தின்பண்டங்களையும் வெறுத்தனள். தோழி பூசாத சாந்தின் மணம் அவள் மீது வீசிற்று. கண் சிவந் தும், உதடு வெளுத்தும் தோன்றின. எப்போதும் தொழும், பிறைச்சந்திரனையும் அன்று தொழுதிலள். இவற்றால் தலைவியின் இயல்பு தோழிக்குப்புலனாயிற்று. இவற்றின் காரணத்தை அறிய தோழியின் மனம் விழைந்தது. அதை யறிந்த தலைவி தான் அழகிய சுனை யொன்றில் நெடுநேரம் ஆடியதன் பயனே இஃ தெனத் தோழிக்கு விடை யிறுத்தனள். இவ்வார்த் தைத் தோழிக்கு நகைப்பை விளைவித்தது. ஆதலின் "உன் இதழின் செம்மையையும், கண்ணின் கருமையை யும் பெற்றுக்கொண்ட அச்சுனை அவற்றிற்குப் பதிலாக

இம் முல்லைமாலையை உனக்குச் சூட்டி அனுப்பிய நன்றியே நன்றி ! அங்ஙனமாயின் யானும் அச்சுனையில் ஆடிக் காண்கின்றேன் என்று விகடமாகப் பேசினள். அன்றியும் உன்னை யொத்த தெய்வப்பெண் ஒருத்தி சிறிது நேரத்திற்குமுன் சுனையாடச் சென்றனள். நாம் இங்கு இருப்பின் அவள் இத்தகைய பண்புகளுடன் திரும்பி வருகின்றனளா என்பதைக் காணலாம்,"! எனக் கூறித் தோழி நகைத்தனள். இவ்வார்த்தைகள் தலைவிக்கு நாணத்தை யுண்டாக்கின.

பின்னும் "உதிரத்தால் சிவந்த கொம்புகளையுடைய யானை யொன்றை வீரன் ஒருவன் தன் கைவேலால் குத்தினன்," எனத் தோழி தலைவி நடுங்குமாறு பொய்யுரைகள் சில கூறினள். அங்ஙனம் எய்தவன் நம் தலைவன் தானோ எனத் தலைவிக்கு நடுக்கமுண்டாயிற்று. அந்நடுக்கமே தலைவியின் களவைப் பளிங்கென நன்கு விளக்கியது. அதனால் தோழி உண்மையை யுணர்ந்தாள்.

மூன்றும் நாள் செய்கை
முடிந்தது.

இவர்கள் இவ்வாறிருப்ப, தலைவியின் பிரிவு தலைவனைப் பெரிதும் வருத்திற்று. கடலிலுள்ள மணியைப் பெற விரும்புவோர் மரக்கலத்தைத் துணையாக அடைதல் போன்று, அணங்காகிய தலைவியைப் பெறச்

சில தழைகளை கையில் ஏந்தி உயிர்த்தோழியை அடைந்து இரத்தலே தகுதியெனத் தலைவன் தீர்மானித்தான். ஆதலின், அவன் முதலில் பாங்கியிடஞ் சென்று உம் ஊர் யாது? உம் பேர் என்ன? என மிக்க பணிவுடன் வினவினன். அவற்றிற்கு விடை கிடைத்திலது. மீண்டும் மண் பதிந்த கோட்டையும், என் அம்பு பாய்தலால் புண்பட்ட உடலையும் உடைய மதமுடைய யானை யொன்று உம் புனத்தில் வந்ததுண்டோ? எனக் கேட்டான். அதற்கும் விடையில்லை. இவையொன்றையும் கூறுவிடினும் உம் சிற்றூருக்குச் செல்லும் வழியையேனும் இயம்புதல் கூடாதோ? என்றான். எதிர்மொழி கிடைத்திலது. என்செய்வான் பாவம்! தான் வினவியவற்றிற்கு விடையாக ஒரு மொழியையேனும் சொல்ல வேண்டும் எனத் தோழியை இரந்தான். ஒன்றிற்கொன்று மாறுபட்ட அவன் சொற்கள் சோழிக்கு வியப்பையுண்டாக்கின. இறுதியில் இவன் செயலும் சொல்லும் நம் தலைவியைப் பெறுதற்கே எனத் தோழி தீர்மானித்தாள்.

சிறிது விலகிச் சென்ற தலைவன், மீண்டும் அவர்களிடம் போந்து "என் மனம் இவண் வந்ததுண்டோ"? எனத் தன் வேட்கை புலப்படக் கேட்டான் இனியும் விடை யிறுக்காமலிருத்தல் தகுதி யன்று என உணர்ந்த தோழி "அழகினும் வன்மையினும் மன்மதனைப்போல்வீர், நீர் குறிப்பித்த ஒன்றும் இந்த

வரக் கண்டிலம்!'' என விடை யிறுத்தனள். அவன் கையிலேந்தியிருந்த தழையினல் அவன் எண்ணம் முற்றும் பாங்கிக்கு விளங்கிற்று. ஆகலின் பாங்கி "ஆளி போன்று வன்மையுடைய இவன் எய்த உண்மையான மான் இவன் கையில் ஏந்திய மாந்தளிராகும் அம்பை ஏற்று வெகுதூரம் சென்றுள்ளது. தயரதன் மகனை ஏமாற்றிய பொய்ம்மானைக்காட்டிலும் இது மிகக் கள்ள முடையது போலும் எனக் கூறி தன் தலைவியைப் பார்த்து நகைத்தனள். முடிவில் தலைவியின் குறிப்புகளையும், தலைவன் செயல்களையும் நன்கு ஆராய்ந்து இவ்விருவரும் தம்முள் நட்புக்கொள்ளுதற்கே அமைந்தனர் எனத் தோழி தீர்மானித்துத் தலைவியை அங்கு விட்டகன்றுத் தான் தனியாக ஓரிடம் சென்றாள்.

துறை:—

முன்னுற உணர்தல்
தோற்றத்தாலாராய்தல்.
ஒழுக்கத்தால் ஐயந்தீரல்.
சுனைநயப்புரைத்தல்.
சுனை வியந்துரைத்தல்.
தகையணங்குறுத்தல். தகை-அழகு; அணங்கு-தெய்
[வப் பெண்.
நடுங்க நாட்டம். (மூன்றும் நாள் செய்தி முற்றிற்று)
பெட்டவாயில் பெற்றிரவு வலியுறுத்தல். பெட்ட-
[விரும்பப்பட்ட; வாயில்-தூது
ஊர் வினதல்.

கெடுதி வினுதல்.
வழி வினுதல்
ஒழிந்தது வினுதல். (ஊர் பேர் சொல்லா தொழிந்தது)
என்னாந் தெளிதல்.
இருவருமுள்வழி அவன் வர உணர்தல்.
தலைவன் கையுறையேந்திவருதல்(கையிற்கொடுப்பது)
தலைவன் அவ்வகை வினுதல்.
எதிர் மொழி கொடுத்தல்.
பாங்கி இறைவனை நகுதல்.
பாங்கி மதியின் அவரவர் மனக்கருத்துணர்தல்.

IX. பாங்கியிற் கூட்டம்.

பாங்கியிற் கூட்டம்:—பாங்கிக் கூட்டுவிக்கத் தலைவன் தலைவியை அடைதல்.

தலைவன் தோழியின் பாற் சென்று உமக்கு வேண்டிய பொருள் எத்துணை அருமை யுடையதேயாயினும் கொணர்ந்து கொடுப்பன். ஆதலின் உன் தலைவி என்மாட்டுக் கருணை வைத்து என்னை ஆளும்படி செய்வாய்; எனத்தலைவியின் பால் தான் கொண்ட காதலை வெளிப்படுத்தினன்.

தோழி:—உயர் குலத்தில் பிறந்த நீர் தாழ்ந்த குலத்திற்றோன்றிய மறக்குலப்பெண்ணை விரும்பல் தகுதியுடையதன்று.

தலைவன்:—மறக்குலப்பெண்ணை முருகனும், வலையர் பெண்ணை வசிஷ்டனும் மணந்ததை நீ யறியாயோ? அங்ஙனமே இதுவும் எனக்குப் பொருத்தமானதே.

அவன் இயம்பிய யாவும் தன் தலைவியைப் பற்றியதே என்பதைத் தோழி நன்கு அறிவள். ஆயினும் அதைத் தான் தெரிந்து கொண்டதாக அவனிடம் சொல்ல அவள் மனம் இசைந்திலது. அன்றியும் இன்னும் அவனை ஆராய வேண்டும் என்ற கருத்தும் அவளுக்குண்டு.

தோழி: — உயர்குலத்தில் பிறந்த வெற்பரே! இவண் தேவரும் வியக்கும் அழகுவாய்ந்த மங்கையர் பலருண்டு, அவருள் நீர் விரும்புவது யாரை? என யான் அறியலாமா?

தலைவன்:—யான் விரும்பிய மங்கைக்குக் கண்கள் கருங்குவளை; கைகள் செந்தாமரை; முகம் முழுமதி.

தோழி:—நீர் விரும்பியுள்ள அவ்வனிதை இம்மலையரசரின் அருந்தவப்புதல்வி. நீர் எண்ணுகிறபடி அவள் எளியள் அல்லள். அவளை அடையும் அத்துணைப் பெருந்தகைமை உம்மிடம் உள்ளதாக எனக்குத் தோன்றிலது.

தலைவன்:—என் நல்வினைப் பயனே பெண்ணுருக் கொண்டு வந்ததெனக் காணும். அவளை அடையாவி

டின் என் உயிர் நில்லாது என்பதை, உனக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தோழி:—அங்ஙனமாயின் உம் குறையை நீரே தீர்த்துக்கொள்ளுதல் தான் ஆண்மை. இப் பெருங் காரியங்களில் எம்போன்றார் நுழைதற்குத் தகுதியுடையரல்லர். நீரே அவளிடம் சென்று உம் குறையை முறையிட்டுக்கொள்வீராக.

தலைவன்:—மெல்லியல்லை யுடைய உன் தலைவிக்கு என் குறையை உணர்த்துபவர் உன்னையன்றி வேறொருவருமிலர். இங்ஙனம் மறுப்பாயென யான் சிறிதும் கருதினேனில்லை. உன்னியல்பு அறியாது இன்று முழுதும் உன்னை இரந்து நின்றது என் அறியாமையே யாகும்.

நான்காம் நாள் செய்கை
முடிந்தது.

தோழி:—என் தலைவி, பிறர் உள்ள நோயை அறியுந் தகைமையற்ற பேதைப்பருவத்தினள். ஆதலின் நீர் அவளிடம் வேட்கை கொள்ளல் தகுதியுடையதன்று.

தலைவன்:—என் கல்வியறிவு, வேட்கையால் குற்றமுறும்போது, அக்குற்றந்தீரத் தனது அருட்கண்

னீரால் ஆற்றிய உன் தலைவி மூதறிவுடையளே யன்றி நீ எண்ணுகிறவாறு பேதைப் பருவத்தினள் அல்லள்.

தோழி:—முன்பே உம் வேட்கையைத் தணித்த அவளுடன், இப்போது நீர் சென்று அடைவதற்குத் தடை யாது? என் போன்ற மற்றவரால் உமக்கு என்ன காரியம் ஆகவேண்டும்.

தலைவன்:—உன் தலைவியை அடைந்தாலன்றி வேறு எந்தச் சிகிச்சையினாலும் என் துன்பம் மாறாது. அதற்கு உன் உதவி இன்றியமையாதது. என்னை உய்யச் செய்தலும், நையச் செய்தலும் உன்னைப் பொறுத்ததே.

தோழி:—எம் மங்கை மாட்டு உமக்கு விருப்பம் உண்டேல், சான்றோரை முன்னிட்டு வந்து மணஞ் செய்து இன்புறுதலே தகுதி. இது நம் சுற்றத்தாரை மகிழ்விப்பது மாத்திரமே யன்றி இயற்கையுமாகும்.

தலைவன்:—இப்போது எனக்குள்ள ஆர்வத்தை உன்னருளால் போக்கின், பின் உலகியலின்படி உன் தலைவியை மணந்து கொள்வேன்.

தோழி:—இருளோ வந்துவிட்டது, யாங்களும் வீடு செல்லல்வேண்டும். புனங்காக்க வரும் எம் சுற்

றத்தாரோ உம்மைக்காணின் சினங்கொள்வர். ஆகலின் நீரும் இவண் விட்டு நீங்குதல்தான் தகுதி.

தலைவன்:—தழைகளாலும், மலர்களாலும் ஆக்கப்பெற்ற இவ் வுடையும் இக் கண்ணிகளும் தேவருலகத்திலும் கிடைத்தல் அருமை. இஃது உன் தலைவி அணிதற்கு ஏற்றதாகும்.

தோழி:—இவை இந்நாட்டில் உள்ளன அல்ல. இவற்றை எம் தலைவி அணியில் எம்மனோர் ஐயம் கொள்வர். பழிப்பிற்கும் இடமாகும். ஆதலின் யாங்கள் இவற்றைப் பெற்றுக்கொள்ளோம்.

இது தலைவன் மனத்தைப் பெரிதும் வருத்திற்று. ஆதலின் அவன் நெஞ்சை நோக்கி, நெஞ்சே! இத்தோழி நம் மாட்டு மனமிரங்கும் என நாம் கருதியது பலனற்றதே! இம் மாந்தழையும் நம்மைப் போன்றே அழகு வாடத் தவஞ்செய்தது போலும். என் செய்வோம் எனத் தன நெஞ்சோடு கூறிக் கொண்டான். ஆனல் தன் பெருந்துயரம் ஒன்றையும் கூறுதற்கு இடந்தந்திலது. ஆதலின் வாளா இருந்தான். அத்தலைவனின் நிலை, தோழிக்கு இரக்கத்தை யுண்டாக்கியது. ஆகவே தோழி தலைவனைப் பார்த்து † இக்கையுறையைப்

---

† கையுறை:—கையிலுறுத்துவது, கையிற் கொடுப்பது, ஒருவரைக் காணப் போவோர் அவரைத் தம்மாட்டு முகஞ்செய்தல் காரணமாக அவர் கையிற் கொடுக்கும், பூத் தழை முதலியன.

பெறுமாறு இன்று இரவு முழுதும் என் தலைவியை இறைஞ்சி வேண்டுவன். நீர் இன்று போய் நாளை விடியல் வருவீராக எனப் பகர்ந்தனன்.

ஐந்தாம்நாள் செய்கை
முடிந்தது.

தோழி இயம்பிய வாறே மறு நாள் அவண் வந்த தலைவனுக்கு யாதொரு பயனுங்கிடைத்திலது, தோழியும் அவனை வரவேற்றிலள். ஆதலின் அவ் வேட்கை நோய்க்கு ‡ மடலேறுதலே தக்க மருந்தெனத் தீர்மானித்துத் தோழியைப்பார்த்துக் கூறத் தொடங்கினன்.

தலைவன்:—இன்று யான் உங்களை இரத்தற்கு உங்கள் மனம் கசியவில்லையேல், நாளை பூளைப்பூ, எருக்கம், என்பு மாலைகளையணிந்து உன் தலைவி உருவத்தை வரைந்த § கிழி யொன்றைக் கைப்பிடித்து மடன்மா ஏறி வருவேன்.

---

§ கிழி—எழுதுபடம்

‡ மடலேறும் முறை:—மடலேற விரும்புவான் உடை ஒன்று மின்றி உடலெங்கும் நீறு பூசித் தான் கருதிய தலைவியின் உருவத்தைத்தானே தீட்டி, அதன் தலைப்புறத்தில் அவள்பெயரெழுதி அக்கிழியைத் தன் கரத்தில் பிடித்து ஊர் நடுவே நாற்சந்தியில் உணவுறக்கமின்றி, அக்கிழிர் மாட்டே

தோழி:—இஃது இயலாத காரியம். அவளை நீர் எழுதப்புகின், அவள் ஒவ்வொரு அவயவமே உம் அறிவை மயக்கும். அம்முறையில் அவள் முழு உருவத்தையும் எங்ஙனம் எழுதவல்லீர்? அதனால் மடலேறுதல் உமக்குக் கைப்புகும் காரியமன்று.

தலைவன்:—சித்திரம் தீட்டுவதில் யான் மிக வல்லன், எனக்கு இஃதோரருமையன்று. உன் தலைவியின் உருவத்தை அழகுபடத் தீட்டுவேன்.

தோழி:—பனைமரத்தில் பறவைகள் கூடுகட்டி வசிக்கும். அதில் முட்டைகளும், குஞ்சுகளும் உரையும்.

பார்வையையும், சிந்தையையும் இருத்தி வேட்கை வயத்தனாய் வேறு உணர்ச்சியற்று இருப்பன். அவ்வமயம் பசு அவன் மீது பாயினும், நெருப்பு மேல் படினும் அறிதலின்றி மழை, வெயில், காற்றிற்கு அவன் மனம் சலியாதிருக்கும். இதனைக் கண்ட அவ்வூரார் நீ மடலேறுதியோ? எனக் கேட்பர். அதற்கு அவன் ஒப்புக்கொள்ளின், அரசனுக்குத் தெரிவித்து, பனங்கருக்காற் குதிரையும், பனந்தருவினால் வண்டி முதலியனவுஞ் செய்த மடலில் அவனை ஏறுமாறு கேட்பர். பின்பு தலைவன் பூளை, எலும்பு, எருக்கு முதலிய மாலைகளையணிந்து அம்மடலில் ஏறுவான். நாட்டார் அந்த வீதியில் ஈர்த்துச் செல்வர். அவ்வுருளை உருண்டோடும்போது பனங்கருக்கு அந்தலைமகன் உடலைக் கீறி அறுக்கும். அவ்வறுபட்ட இடத்தில் வீரியம் தோன்றின் அவன் விரும்பிய பெண்ணை அலங்கரித்து மணம் செய்து தருவர். செந்நீர் தோன்றின் அவனைக் கொலை செய்வர்.

அத்தகைய பனையை வெட்டிக் குதிரை செய்து மடலே றுதலால் அப்பறவைகள் வசிக்க இடமற்று இறந்து படும். அத்தால் பாவம் வந்து சேரும். இஃது, அரு ளுடையார்க்குப் பொருத்தமன்று. ஆதலின் தலைவா! உன் துயரங்களை யான் தலைவியிடம் முறையிடுகின் றேன். அவள் மறுக்கின் பின்பு நீ மடலேறலாம். ஆனால், நீலோற்பலம் போன்ற அவள் கண்களில் களவு வெளிப்பட்டிலது. குமுதம் போன்ற வாயில் வெண் ணிறப் பற்கள் முளைத்தில. இவ்விளமைப் பருவத்தின ளாகும் என் தலைவியிடம் உன் வேட்கையை இயம்பி இரப்பது யாங்ஙனம்?

தலைவன்:—மயிலனைய உன் தலைவியின் கண்கள் இளமையிலேயே கொடுமை வாய்ந்துள்ளன. விஷம் போன்ற அவள் விழி என் ஆவியைத் துன்புறுத்தின.

தோழி:—என் தலைவி சுனையாடல், பந்தடித்தல். பாவை விளையாடல் முதலியவற்றை அறவே மறந்தாள். அவளிடம் யான் சென்று உன் வேட்கையை எவ்வாறு தெரிவிப்பேன்?

தலைவன்:—யான் வந்த செய்தியை நீ அவளி டம் செப்புவையேல் யாரென்றும் கேளாமலே அவள் உருப்புகள் மகிழ்ச்சியினால் பூரிக்க உன்னைத் தழுவிக் கொண்டே இவண் வந்து விடுவள்.

இவற்றைச் செவியேற்ற தோழி "இவ்வார்த்தை

களினால் உங்கள் நட்பை யுணர்ந்தேன். இத்தனையும் எனக்குத் தெரியாமலே நடந்தன. என்னை மறைத்துச் செய்யும் காரியமும் உங்களுக்கு நிறைவேறுமோ! எனக் கூறி நகைத்தனள். துன்புறும் தலைவனைத் தேற்றாது வருத்தற்குக் காரணமாகிய அவள் நகை அத் தலைவனைப் புண்ணில் வேல் நுழைத்தாலன்ன துன்பத்தைத் தந்தது. இக்காட்சி தோழிக்கு இரக்கத்தை யுண்டாக்கிற்று. ஆதலின் அவள் தலைவனைப் பார்த்து தலைவிக்கு என் மாட்டு அன்பும், அருளும் உண்டு. என் வார்த்தையை மறுக்காள். உம் எண்ணத்தை முடித்து வைக்க அவளை உம்பால் வரவிடுவேன், வாடற்க" எனப் பகர்ந்து அவன் கொணர்ந்த கையுறையை ஏற்றுக்கொண்டாள். இவள் எங்ஙனமேனும் தன் குறையைத் தீர்ப்பள் எனத்தலைவன் ஆறியிருந்தான்.

தலைவிபால் சென்ற தோழி "மன்மதனைப் போன்ற ஒருவன் அழகிய தழைகளைக் கொய்து, நமக்குத்தந்து வாடி நிற்கின்றனன். அவனுக்கு யாம் செய்ய வேண்டுவது யாதோ! அறியேன்" எனத் தலைவன் வருந்துவதைத் தலைவிக்குத் தெரிவித்தனள். இதைத் தான் தெரிந்து கொண்டிருப்பதாக தோழிக்குக் காட்டத் தலைவி மனம் இசைந்திலது. ஆதலின் அதற்கு பொருத்தமற்ற வேறொரு பொருளைத் தோழிக்கு காட்டிப் பேசினாள். இது தோழிக்கு கோபத்தை

மூட்டியது. உன் பொருட்டே பன் முறையும் இவண் வந்து போகும் அவனைக் குறித்து எனக்கு மறைத்தல் யாது கருதியோ? என்றனள். "யாரோ ஒருவர் புதிதாய் நம் புனத்திற்கு வரின் அவருக்கும் எனக்கும் என்ன தொடர் உண்டு. அவர் என் பொருட்டால் வந்தனர் என நீ கருதுதல் தகுதி யுடையதன்று" எனத் தலைவி மறுமொழி பகர்ந்தனள். இனி நன்மொழிகளாலும் இவள் உண்மையை அறிய வேண்டும் எனக் கருதிய தோழி, "என்னுடன் ஒக்க உண்டும் உறங்கியும் வந்த எனக்கு இதை மறைத்தல் தகுதியோ? இச் சந்தனத் தழையைப் பார். இஃது உன்னைப் போல் வார் சூடிக்கொள்ளத் தக்கதே யன்றி வாடவிடுதற் கேற்றதன்று. அவ்வெற்பன் தவிர வேறொருவராலும் இதைக் கொண்டுவர முடியாது. இத்தகையோன் உன் மாட்டுள்ள வேட்கையினல் வருந்தா நிற்கின்றனன். அவனிடத்தில் உன் பொருட்டாய் யான் கூறிய பல விதப் பொய்யும் பயனற்றன. இனிக் கூறுதற்கு ஒரு பொய்யும் என்னிடம் இலது. அவனோ இன்னும் இப் புனத்தை விட்டு நீங்கிலன். மடலேறும் குறிப்பினையும் கொண்டுள்ளான். அவன் மெய்யும் அலைந்தலைந்து மெலிந்தது. இனி அவன் வரின் யான் மறைதல் வேண்டுமே யன்றி அவன் கண் வட்டத்தில் படுதல் கூடாது" எனத் தோழி இயம்பினள்.

அப்போதும் தலைவி தன் உண்மையைக் கூறாது பாரா முகமாய் இருந்தனள். இதற்குத் தலைவியின்

நாணமே காரணமாகும். இது தோழிக்கு வருத்தத்தை விளைவித்தது. அதனால் தோழி, ஊன் மாட்டுள்ள அன்பினால் இவ்வளவும் கூறினேன். அவை பிழையெனில் இத்தனையும் பொருத்தருள்க. இஃது என் அறியாமையே யாகும் பழியை வெளித் தூற்றாது மறைக்கும் உண்மையாளர்க்கே நின் மனக்கருத்தைத் தெரிவி, எனத் தலைவியிடம் சிறிது சினத்துடன் சாற்றினள். குற்றேவல் மங்கை தன் பொருட்டு நம்மை வந்து இரந்தனள் எனத் தலைவர் அறியின் என் நினைப்பர்? என்ற எண்ணம் தலைவியை வருத்திற்று.

"என் அருமைத் தோழி! அரிய வேட்கையை நல் வினை வாய்ந்த தலைவர் ஆற்றினும் என்னால் ஆற்றுந் தகைமை யுடையதன்று. இத்தழையை யான் அணியின் நாணமற்றவளாவேன். குலப்பழிக்கு அஞ்சுவேனா! அன்றி உனக்கு அஞ்சுவேனா! ஒன்றும் அறிகிலேன்" எனத் தலைவி வருந்தி அக்கையுறையை ஏற்றனள். இது தோழிக்குப் பெரும் மகிழ்வை யூட்டிற்று. தலைவி, கையுறையை, அக்காலத்தில் திருவடி தந்த கணையாழியை, உருவெளிப்பாட்டால் பெருமானாகவே நினைத்து சீதா பிராட்டித் தழுவியதைப் போல், இவள் தழுவியதைத் தலைவனுக்குத் தோழி இயம்பி மகிழ்ந்தனள். தலைவன் தோழி குறித்த ஓரிடத்தில் இருந்தான். தலைவியைத் தலைமகன் இருக்கும் இடத்திற்கு அழைத்துச் செல்லக் கருதிய தோழி, "வாவியில் மூழ்கி மலர் கொய்து, சிற்றிலிழைத்து, மாதவிப் பந்தரின் கீழ் விளையாடப்

போவோம்" எனத் தலைவியை வெளி யழைத்துச் சென்றனள். அனந்தரம், தோழி மலர் கொய்து வருவதாகப் போக்குக் காட்டித் தலைவியை அவண் இருத்தி விலகினள்.

அவ்வமயம் தலைமகனும் தலைமகளும் ஒருவரை ஒருவர் காண நேர்ந்தது. இருவரும் இன்பக்கடலில் ஆழ்ந்திருந்தனர். இவ்வின்பம் பாற்கடல் ஈந்த அமுதத்திலும் சிறந்தது என்பது தலைவன் கருத்து. அது, தலைவியின் பண்பைத் தலைவன் நா மிகுதியும் புகழச் செய்தது. பின்பு தலைவன் அவளைப் பாங்கியிடம் விடுத்தனன். அவளைக் கண்ட தோழி தான் மலர் கொய்யும் வியாஜமாய்ச் சென்றது போல் நடித்துக் கொணர்ந்த மலர்களை அவர்களுக்கு காட்டிக் காட்டி மகிழ்ந்தனள். அவை தலைவிக்குக் கையுரையாக வழங்கப்பட்டன. இருவரும் ஆயக் கூட்டத்தை நெருங்கினர். தலைவனைக் கண்டு சில சொல்லத் தோழியின் மனம் தீர்மானித்தது. ஆதலால் தோழி தலைவனிடம் வந்து "நீர் எம் தலைவியின் பொருட்டுப் பண்ணைட்களாகப் பகர்ந்த பணி மொழிகள் உம் நினைவிலிருக்கலாம். இன்று அவளிடம் பாராட்டிய அன்பை என்றும் மறுத்தல் கூடாது. என்னைப்பற்றிய நினைவும் உமக்கிருக்கட்டும். உற்றூர் அயலூரிலிருந்து வந்தால், அவர்க்கு ஊண் கொடுத்துபசாரஞ் செய்தல் உலகியல்பாதலால் அவ்வுலகியல் பெருமைப்பட நீவிர் இன்று நம் குடியில் இருந்துண்டு செல்க" எனக் கூறி அவன் செல்

லலை விலக்கினள். தலைவர் சொற்கள் அக் குறவன் விருந்தைப் பெரிதும் புகழ்ந்தன. இங்ஙனமே தோழியின் உதவியால் தலைவன் பல நாள் தலைவியைச் சந்தித்து வந்தான்.

தலைவன் உட்கோள் சாற்றல். சரு-தினை
பாங்கி குலமுறை கிளைத்தல்.
தலைவன் தலைவி தன்னை யுயர்த்தல்
பாங்கி யறியாள் போன்று வினுதல்.
இறையோன் இறைவி தன்மை இயம்பல்.
பாங்கி தலைவி அருமை சாற்றல்.
தலைவன் இன்றியமையாமை இயம்பல்.
பாங்கி நின் குறை நீயே சென்று உரை யென்றல்.
பாங்கியைத் தலைவன் பழித்தல்.
பாங்கி பேதமை யூட்டல்.
காதலன் தலைவி மூதறி வுடைமை மொழிதல்.
பாங்கி முன்னுறு புணர்ச்சி முறையுறக் கூறல்.
தன்னிலை தலைவன் சாற்றல்.
பாங்கி யுலகியல் உரைத்தல்.
தலை மகன் மறுத்தல்.
பாங்கி யஞ்சியச்சுறுத்தல்.
தலைவன் கையுறை புகழ்தல்.
பாங்கிகையுறை மறுத்தல்.
ஆற்ற நெஞ்சினேடு அவன் புலத்தல்.
பாங்கி ஆற்றுவித்தகற்றல்.
இரந்து குறை பெறது வருந்திய கிழவோன் மடலே பொருளென மதித்தல்.
பாங்கிக் குலகின் மேல் வைத்துரைத்தல்.

அம்மடலேற்றினத் தலைவன் தன் மேல் வைத்துச் சாற்றல்.
பாங்கி தலைமகள் அவயவத் தருமை சாற்றல்.
தலைவன் தன்னைத் தானே புகழ்தல்.
பாங்கி யருளியல் கிளைத்தல்.
கொண்டு நிலை கூறல், (தாங்கிக் கொண்டு நிற்றல்)
தலைவி இளமைத் தன்மை பாங்கி தலைவற்குணர்த்தல்.
தலைவன் தலைவி வருத்திய வண்ணமுறைத்தல்.
பாங்கி தலைமகள் செவ்வி யருமை செப்பல்
செவ்வி—காலம்.
தலைவன் செவ்வி எளிமை செப்பல்.
என்னை மறைப்பின் எளிதென நகுதல்.
அந்நகை பொறுது அவன் புலம்பல்.
பாங்கி கையுறை நேர்தல்.
கிழவோன் ஆற்றல்.
இறைவன் றனக்குக் குறையுணர்த்தல்.
இறைவி யறியாள் போன்று குறியாகக் கூறல்.
(வேறொன்றை)
பாங்கி இறையோன் கண்டமை பகர்தல்.
பாங்கியைத் தலைவி மறைத்தல்.
பாங்கி யென்னை மறைப்பதென்னெனத் தழா அல்
(தழுவிக் கூறல்).
பாங்கி கையுறை புகழ்தல்.
தோழி கிழவோன் துயர்நிலை கிளைத்தல் (சொல்லல்).
மறுத்தற்கருமை மாட்டல் (அருமையைப் பொருத்திக் கூறல்).
தலைவன் குறிப்பு வேறாக நெறிபடக் கூறல்.

தோழி தலைவியை முனிதல்.
தலைவி பாங்கியை முனிதல்.
தலைவி கையுறை யேற்றல்.
இறைவி கையுறை யேற்றமை பாங்கி இறைவற்குணர்த்தல்.
பாங்கி தலைமகற்குக் குறியிடங் கூறல் (கூடக் குறித்த இடம்).
பாங்கி குறியிடத் திறைவியைக் கொண்டு சேறல்.
குறியிடத்துய்த்து நீங்கல்.
இறைவி யிறையோனிடத்தெதிர்ப் படுதல்
புணர்ச்சியின் மகிழ்தல்
புகழ்தல்.
தலைமகளைத் தலைமகன் விடுத்தல். (ஆயத்திற் செல்ல விடுத்தல்.)
பாங்கி தலைவியைச் சார்ந்து கையுறை காட்டல்.
தலைவியை பாங்கிற் கூட்டல்.
நீங்கித் தலைவற் கோம்படை சாற்றல் (பாதுகாப்பு, பேணுதல்)
உலகியல் மேம்பட விருந்து விலக்கல்.
விருந்திறை விரும்பல் (விருந்தாகத்தங்குதலை).

பாங்கியிற்கூட்டம்

முற்றிற்று.

X. ஒரு சார் பகற்குறி

ஒரு சார் பகற்குறி—அஃதாவது, ஒரு கூற்றுப் பகற்குறி

பகலில் தன்னை வருமாறு குறிப்பித்த இடத்திற்குத் தலைவன் வந்து தலைவியைக் கண்டு செல்லுங்கால் சில இடையூறு கள் ஏற்படும்: தலைவியின் தாய் சாலங் குறிக்காது அடிக் கடி வருதல்; அவள் தலைவியின் உடல் வேறு பாட்டை யறிந்து ஐயுற்றுச் சினத்தல்; முற்றிய தினைக் கதிரைக் கொய்ய உறவினர் சேரல்; இவற்றால் தாங்கள் இல்லேகல் முதலியன. இக்காரணங்களைப் பாங்கித் தலைவனுக்குத் தெரிவித்துத் தலைவியைக் குறியிடத்துச் செலுத்தாது மறுத்துக் கூறத் தலை வன் வருந்தி போதலான் பகற்குறி யாகாது, ஒரு சார் பகற் குறி யாயிற்று

அன்றுடைத் தலைவன் பிரிந்த அம்மாலையில் தலைவி பெரிதும் ஆற்றாளாயினள். தலைவியின் ஆற்றாமை பாங்கியைக் கவலைக்குட்படுத்திற்று. ஆயினும் அவள் சிறிது தெளிந்து “ சில சமயங்களில் ஒருவரை விட் டொருவர் பிரிதல் இயல்பு. இதற்கு நீ வருந்தல் பெரும் பேதமை” எனத்தலைவியை இடித் துரைத்த னள், இது தலைவியை வருத்தியது. “ஒருத்தித் தலைவர் மாட்டுக் கொண்ட வேட்கையைத் தணித்து உயிர் வாழ் தல் அருமையினுமருமையே. முற்றும் அறியாதவர் களுக்கும், முற்றும் அறிந்தவர்களுக்கும் சொல்லாம்.

இவ்விருதிறத்திலும் சேராதவர்களுக்குப் பகரின், பிழையாகவே முடியும்,'' எனத்தலைவி தோழிக்குப் புறமாகத் திரும்பி இயம்பினள்.

தோழியின் மனம் அதைக் குற்றமெனக் கொண்டிலது. அவள் பின்னும் தலைவியைப் பெரிதும் உபசரித்தனள். தலைவர் பிரிவு தலைவிக்கு நஞ்செனத் துன்பமளித்தது. அதையறிந்த தோழி, "பலரும் அறியுமாறு நீ இங்ஙனம் வருந்தல் தகுதி யுடையதன்று. இதனால் உன் நாணம், பெண்மை, நிறை முதலியன அழியும். கற்பற்றவள் என உலகம் இகழும். இத்தகைய இருப்பு நம் மனோர்க்கு ஐயத்தை யூட்டும் நம்மைத் தினைப்புனத்தினின்றும் நீக்கி வீட்டிலிருத்துவர். ஆகலின் நீ தெளிந்திருத்தலே நன்மை'', எனத் தலைவியை அச்சுறுத்தினள். அவ்வமயம் தலைவன் தேரொலிக் கேட்டது. அதைத்தோழி தலைவிக்குத் தெரிவித்தனள். தலைவன் தேர் வேலிப்புறத்தை யடைந்தது. அப்பொழுது தோழி, கிளி, வண்டு முதலியவற்றிற்குக் கூறுதல் போன்று, "யாங்கள் வீட்டிற்குச் செல்லுகின்றோம்; சோலையிற் கூடி இன்பந்துய்த்த அன்பர் மறப்பினும் நீங்கள் மறக்க மாட்டீர்களல்லவா !,'' என்றனள். அவ் வார்த்தைகளுக்குக் கலங்கிய தலைவன் அவர்கள் முன் வந்து நின்றான். தோழி அவனை நோக்கித், "தினைக்கதிர்கள் முதிர்ந்து சாய்ந்தன. எம் மனோர் அவற்றைக் கொய்யத் தொடங்கினர். தினைப்புனம் இனி எங்கள் காவலை எதிர் நோக்காது. யாங்

கள் வீட்டிற்குச் செல்லல் வேண்டும். ஆயினும் என் தலைவிக்கு உம்மை யன்றி பற்றுக் கோடு வேறின்மை யின் நீர் அவளை மறத்தல் கூடாது", என இயம்பினள். தலைவி பிரிவை யுணர்ந்த தலைமகன் தான் தினைப் புனத்தை நோக்கி வந்ததும், நெடு நேரம் அவண் காத்திருந்ததும் பயனற்றன வென வருந்தினன்.

துறை:—

கிழத்தி மாலையம் பொழுது கண்டிரங்கல்.
பாங்கி புலம்பல்.
தலைவ ‡ னீட்டத் தலைவி வருந்தல். ‡ வாராத பொழுது நீட்டித்தழி.
தலைவியைப் பாங்கி † கழறல். † கடிந்து கூறல்.
தலைவி முன்னிலைப் புற மொழி மொழிதல்.
பாங்கியோடு பகர்தல்
தலைவியைப் பாங்கி யச்சுறுத்தல்.
நீங்கற்கருமை தலைவி நினைந்திரங்கல்.
தலைவிக்கவன் வரல் பாங்கி சாற்றல்.
†† சிறைப்புறமாக ‡‡ செறிப்பறிவுறுத்தல்.
†† வேலிப்புறம். ‡‡ செறிக்கப் படுதலை.
முன்னிலைப்புறமொழிமொழிந் § திற் செறிப்புணர்த்தல் § இற்செறிக்கப்படுதலை,
பாங்கி தலைமகன் ¶ முன்னின்றிற் செறிப்புணர்த்தல் ¶ நேரே
முன்னின்று செறிப்புணர்த்தியோம் படைசாற்றல்.
தஞ்சம் பெறாது நெஞ்சொடு கிளத்தல்.

ஒருசார் பகற்குறி
முற்றிற்று.

XI. பகற்குறி இடையீடு.

பகற்குறி இடையீடு:—தினைப்புனத்தின் கண் பகற்காலத்தில் தலைவியைக் கண்டுவரும் தலைவனுக்கு நாளும் அங்ஙனம் செய்ய இயலாத சில தடைகள் நிகழ்தல்.

சில நாட்கள் பகற் காலத்தில் குறித்த இடத்திற்கு வந்து தலைவியைக் கண்டு செல்லல் தலைவனுக்கு வழக்கமாயிருந்தது. அம்முறையில் ஒரு நாள் பாங்கித் தலைவனை நோக்கி, "எம் தலைவியின் வளை களையும், மனத்தையும் ஒருங்கே கவர்ந்த நீர் இனி இவண் வருதல் தகுதியுடைய தன்று. எம் அன்னை அடிக்கடி இங்கு வருகின்றனள். அவள் வருங்காலம் இன்னதென எங்களால் நிர்ணயிக்க முடியவில்லை. அன்றியும் நீர் தலைவியைக் கண்டு சென்ற பின் வந்த அன்னை அவள் உடலின் வேறு பாடுகளைக் கண்டு ஐயுற்றுச் சினந்தனள். இனி எங்களை இங்கு இருக்க விடாமல் வீட்டிற்கு அழைத்துச் செல்ல வேண்டுமென்பது அவள் கருத்து. இவற்றை நெஞ்சிறுத்தி அதற்கேற்ப நடந்து கொள்வீரென நம்புகின்றேன்", என்றனள். இச்செய்தித் தலைவன் மனத்தைப் பெரிதும் வருத்திற்று என் செய்வான் பாவம்! ஒன்றும் சொல்ல வகையற்றுனைப் வீடு திரும்பினான்.

தான் தினைப்புனத்தையும், மலர்ச் சோலையையும் விட்டுச் செல்ல வேண்டியதைத் தோழியால் அறிந்த தலைவியின் நெஞ்சம் புண்பட்டது. தான் கட்டிய சிற

றில்களையும், ஓடிய அருவிகளையும், மலர் கொய்த கொடி, செடிகளையும் பார்த்துப்பார்த்து வருந்தினாள். அன்னையின் ஏவலால் அவர்கள் ஊர்க்கேகுவதைத் தலைவனுக்குத் தெரிவிக்குமாறு பாண் † முதலியவற்றை வேண்டிக் கொண்டனள். தோழியும் தலைவியும் சென்று வீடு சேர்ந்தனர்.

ஆறும் நாள் செய்கை
முடிந்தது.

அவர்கள் சென்றபின்பு, வழக்கமாகத் தலைவியைக் காணுமிடத்துத் தலைவன் வந்தான், அவன் கண்கள் தலைவியை அங்குமிங்கும் தேடின; ஆனால் பயன் பெற்றில. "என் உயிரன்னவள் எங்குச் சென்றனள்! என் வேட்கையை அளந்தறியவும், தன்னைத்தேடும் ஆர்வத்தைக் காணவும் இச்சோலையின்கண் ஒளிந்துள்ளனளோ,!" என அவண் வதியும் மான், கிளி முதலியவற்றை வினவினன். எவ்வகையினும் தலைவியைக்காண இயலாமையின் அவள் வதியும் ஊருக்கேனும் சென்று அவளைக் காணலாமென்ற நினைவு அவனுக்குத் தோன்றிற்று. ஆனால் அவ்வூர் இன்னதென அவன் அறியான். ஆதலின், "அவளைத் தொடர்ந்து சென்ற என் நெஞ்சமும் திரும்புகின்றதில்லை. அவள் ஊரையும் இன்னதென அறிவதற்கியலவில்லை என் செய்வேன்", எனத் தலைவன் மிக்க மயங்கிச்சென்றான்.

† பாண் — காவற்பாண்.

துறை:—

இறைவனைப் பாங்கி துறிவால் விலக்கல்.
பாங்கி யிறைவியைத் துறிவால் விலக்கல்.
இறைமகளாடிடநோக்கி*யழிதல். *தன்னுளிரங்கல்.
பாங்கி ஆடிடம் விடுத்துக்கொண்ட§கறல்,§போதல்.
நெடுந்தகை துறிவயினீடு நின்றிரங்கல்.
வறுங்களநாடி¶மறுகல். ¶ வருந்துதல்.
தலைவன் தலைவி வாழுமூர் நோக்கி மதிமயங்கல்.

பகற்குறி இடையீடு
முற்றிற்று.

XII. இரவுக் குறி

இரவுக்குறி:—தலைவன், தன்னை இரவில் வருமாறு குறிப்பித்த இடத்திற்கு வந்து தலைவியைக் கூடுதல்.

தலைவியின் பிரிவிற்காக வருந்திய தலைமகன் "இம் மழையில் யான் எங்கள் ஊர் செல்ல இயலாது. ஆதலின் இன்றிரவு உம் வீட்டிற்கு வந்து உம் தலைவியுடனிருக்க அருள் புரிதல் வேண்டும்," எனத் தோழியிடம் பகர்ந்தான். அவ்வமயம், "கொல்லுந்தொழிலையுடைய சிங்கங்களும், அச்சந்தரும் சூராமகளும் இயங்கும் காட்டு வழியில் நீர் இரவின்கண் வருதல் தக்கதன்று," எனத் தோழி இயம்பிய உரைகள் அவன் செவியில் நுழைந்தன. அவற்றிற்கு, "யான் அஞ்சுந்தகைமையுடையேனல்லேன்," எனத் தலைவன் வீரமொழிகளைப் பகர்ந்தான். ஆயினும்

தலைவனைத் தங்கள் இல்லத்திற்கு வருமாறு அவ்வளவு எளிதில் ஒப்புக்கொள்ளத் தோழியின் மனம் இசைந்திலது. ஆதலின் வேறு விதமாகத் தன் குறிப்பைத் தெரிவிக்க எண்ணிய தோழி, அவன் நாட்டு மங்கையர் அணியும் தழை, மலர், அணி, சந்தனம், விளையாடும் பொழில் ஆகிய இவை யாவை எனத் தலைவனை வினவினள். அவள் வினவிய காரணத்தை அறிந்த தலைவன், "அவற்றைப் பின்னர் இயம்புவேன், உம் நாட்டுமகளிர் அணிவன, விளையாடுவன முதலியவற்றை எனக்கு அன்புடன் தெரிவிப்பாயாக," என்றனன். அவர்கள் நாட்டுமங்கையர் மாந்தழை, காந்தளம் போது, யானைக் கோட்டு முத்தம், சந்தனச்சாந்து இவற்றை யணிந்து கங்குலில் புன்னைத்தின் நிழலில் விளையாடுவதைத் தோழி தலைவனுக்குத் தெரிவித்தனள்.

பின்பு தோழி தலைவனை ஓரிடத்து நிறுத்தித், "தலைவன் இரவில் நின்பால் வருதலை விரும்பினன்," எனத் தலைவியிடம் கூறினள். இவ்வார்த்தைத் தலைவிக்கு அச்சத்தை யுண்டாக்கியது. "நம் பாங்கி வழியின் அருமையைச் சிறிதும் அறிந்திலள் போலும். இக்கொடு வழியில் அவரை வர விடுதல் தகுதி யுடைய தன்றே," என அவள் மனம் பெரிதும் வருந்திற்று. ஆயினும் அதை ஒருவாறு தணித்துக் கொண்டு, 'காதலர் இரவில் வருதலை விரும்பின் யான் என் கூறவல்லேன். அஃது இன்றியமையாததெனின் நீ கருதியதை அவருக்குப் பகருக", எனத் தோழியிடம் செப்பினள். தலைவி

இணங்கியதைத் தோழியால் அறிந்த தலைவனின் மனந் தெளிந்தது.

தலைவன் அவ்விரவில் தலைவியின் இல்லத்தருகில் வந்து தன் வரவைத் தலைவி அறிதற் பொருட்டு ஒரு குறியைச் செய்தான். அது பாங்கியின் செவியிற் பட்டது. தாய் நன்கு துயில்கின்றனள், என்பதை உணர்ந்ததோழி அன்புடைத் தலைவர் வந்திருப்பதைத் தலைவிக்கு உணர்த்தி அவளைக் கொண்டுபோய்த் தலைவன் நின்ற இடத்தில் சேர்த்தனள்; பின்பு தான் அவள் கூந்தலுக்கு அணிய அழகிய மலர்களைக் கொய்து வருவதாய்ப் போக்குக் காட்டி அகன்றனள். தலைவன் தலைவியைக் கண்டு, "இருள் செறிந்த இவ்விரவில் நீ தனியாய் யாங்ஙனம் வந்தனை? அன்பின் உறுதியே இத்தீரத்தை யுனக்களித்தது போலும்," ! எனக்கூறித் தலைவியை வியந்தனன். தலைவன், முதலைகள் செறிந்த ஆழ்ந்த மடுக்களையும், சுழியுற்ற அருவியாற்றையும் கடந்து வந்ததை நினைத்துத் தலைவியின்மனம் வருந்திற்று. அவள் விழியை யொக்கும் கைவேலும், இடையை யொக்கும் மின்னலுமே இருளை யொழித்து அவனுக்கு வழிகாட்டின, எனத்தலைவன் கூறித் தலைவியைத் தேற்றினான். இருவரும் அளவளாவியிருந்தனர். தலைவியின் முகமதியைக் கண்டு தடாகத்தாமரையும் குவியும் என்பதைப் போன்ற புகழ்ச் சொற்கள் பல தலைவனின் வாயினின்று வெளிவந்தன. தலைவிக்குத் தலைவன் மாட்டுள்ள அன்பு, "கதிரவன் கதிர்களும் நுழைதற்கரிய இருள் சூழ்ந்த எம் சாலையினிடத்து

என் பொருட்டு நீர் தனியே வருதல் தகுதி யுடைய தன்று", எனச் சொல்லித் தடுத்தது.

தலைவன் தலைவியை வீட்டருகில் கொண்டு போய் விட்டான். அவ்வமயம் தோழி தலைவியைச் சேர்ந்து தான் கொணர்ந்த மலர்களை அவள் கூந்தலில் சூட்டினள். முல்லை மலர் முதலியன அவள் கூந்தலில் பொருந்தி அழகுபெற்றன. தாய்விழித்துக்கொண்டு தங்களைத் தேடுவளோ! என்னும் கவலை அவர்களைக் கலக்கிற்று. தோழி விரைவில் தலைவியைக் கொண்டு போய் வீட்டில் விட்டுத் தலைவன் பாற் சென்றனள். சென்ற அவள், "இரவில் தலைவி வெளி வருதல் அருமை யாதலின் நீர் இனி இரவில் வருதல் தக்கதன்று," எனத்தலைவனுக்குப் பகர்ந்தனள். அவ்வார்த்தைத் தலைவனுக்கு அமுதில் நஞ்சுகலந்த தென வாயிற்று. அதனால் அவன் முகம் துயரால் வேறு பட்டது. அதைக் கண்ட பாங்கி, "எதிரில் ஊரும் அரவமுந் தோன்று இவ்விருளின்கண் இடையூறின்றி நீர் வீடு சேருவீரோ! எனத் தலைவியின் மனம் துன்புறுகின்றது. ஆதலின் நீர் சுகமே வீடு சென்றதற்கு அறிகுறியாகக் கொம்பை யூதின் நலம்," எனப் பகர்ந்தனள். "மடவார் குழலிலணிந்த மாணிக்கவொளி எளிதில் என்னை என் நாட்டிற்குக் கொண்டு போய் சேர்க்கும், நீங்கள் கவலற்க," எனத்தலைவன் சொல்லித் தன் ஊர் சென்றான்.

ஏழாம் நாள் செய்கை
முடிந்தது.

துறை:—

இறையோ னிருட்குறி வேண்டல்.

பாங்கி நெறியினதருமை கூறல்.

தலைமகன் நெறியினதெளிமைகூறல்.

பாங்கி ‡‡ அவனாட்டணியியல் வினாதல்

‡‡ நாட்டார் அணிகலது.

தலைமகன் அவன்நாட்டணியியல் வினாதல்.

தலைமகற்குப் பாங்கி தந்நாட்டணியியல் சாற்றல்.

பாங்கி தலைமகட்குத் தலைமகன் குறிப்பறிவுறுத்தல்.

தலைமகன் நேராது நெஞ்சொடு †† கிளத்தல்.

†† சொல்லுதல்.

தலைமகள் நேர்ந்து பாங்கியோடுரைத்தல்.

நேர்ந்தமை பாங்கி நெடுந்தகைக்குரைத்தல்.

பாங்கி தலைமகளைக் குறியிடை § நிறீயித்தாய் துயிலறிதல். § நிறுவி.

தலைமகட்குத் தலைமகன் ¶ வரவறிவுறுத்தல்.

¶ வந்தமை.

பாங்கி தலைமகளைக் குறிவயிற் கொண்டுசேறல்.

குறியிடத்துய்த்து நீங்கல்

தலைமகன் தலைவியைக் குறிவிடத்தெதிர்ப்படுதல்.

‡ ஆற்றின தருமை நினைந்திரங்கல் ‡ வழியின்.

தலைவன் தலைவியைத் தேற்றல்.

புணர்தல்.

புகழ்தல்.

தலைவி தலைவனைக் குறிவிலக்கல்.

தலைவியை * இல்வயின் விடுத்தல். * வீட்டிற்கு.

பாங்கி தலைமகளை யெய்திக் கையுறை காட்டல்.

பாங்கி தலைமகனை இற்கொண்டேகல்.
தலைமகனைப் பாங்கி வரவு விலக்கல்.
தலைமகன் மயங்கல்.
தோழி தலைமகள் துயர் † கிளந்து விடுதல்.
† கூறி.
தலைமகனைப் புணர்ந்தவன் சேறல்.

இரவுக்குறி
முற்றிற்று.

XIII. இரவுக்குறி யிடையீடு.

இரவுக்குறி யிடையீடு:— எட்டாம் நாள் இரவுக்குறிக் கண்வந்த தலைமகனுக்குச் சிலதடைகள் நிகழ்கல்.

முதல் நாள் தலைவன் ஒரு புன்னை மரத்தின் அடியில் வந்து அதன் மேலுள்ள மயில்களை எழுப்பினான். அக்குறி, தலைவியை அவ்விடத்திற்கு வருமாறு செய்தது. மறுநாள் இரவு அன்னங்கள் தற்செயலாய் ஆரவாரித்தன, தலைவி அவ்விடத்தை நாடிச் சென்றனள். ஆனால் தலைவனைக் காணாது அவள் மனங்கலங்கிற்று. வீடு திரும்பினள். சிறிது நேரத்திற்குப்பின் அவண் வந்த தலைவன் நெடு நேரம் காத்திருந்தும் பயனற்றது. தலைவியைக் காணாது வருந்திய தலைவன் கருங்குவளை மலர் மாலையை மகிழ மரத்தில் வைத்துத் தன்னிருப்பிடம் சென்றான். அன்று தலைவனைச் சந்தியாதது தலைவிக்குத் துயரமளித்தது. வேறு ஓசையைத் தலைவன் குறியெனத் தான் ஏமாற்றமடைந்ததைத் தலைவி தோழியிடம் சொல்லி

துன்புற்றனள். நீ அறிந்து கொள்ளக் கூடாத குறியைச்செய்து உன்னைவாட விட்ட தலைவர் கொடியர் என்றனள் தோழி.

எட்டாம் நாள் செய்கை
முடிந்தது.

தலைவி மறுநாட் காலை சோலையில் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று பார்த்த கவலையுற்றனள். "தலைவர் பொய் புரையார் என்று நினைத்த என் எண்ணம் பொய்த்தது. அவர் குறித்த இடத்திற்கு வாராமல் பொய்த்தார்," எனத் தோழி யிடம் குறை கூறினள்.

"அங்ஙனமன்று, அவர் வைத்துச் சென்ற இக்கருங்குவளை மாலையே அவர் வந்தமையைத் தெரிவிக்கிறது. ஆகலின் நீ அவரைப் பொய்த்தார் என நினையற்க," எனத்தோழி தலைவியைத் தேற்றினள்.

அன்றிரவு தலைவன் குறியிடத்து வந்து சேர்ந்தான். அவனைக் கண்ட பாங்கி, "நீர் நேற்று வருதலை ஒழித்தீர். அஃது எம்மைக் கவலைக் குள்ளாக்கியமையின் நீர் கூறியபடி செய்ய இயலாமற் போயிற்று," எனக் குறிப்புத் தவறிய குறையை அவன் மேல் சாற்றினள். தான் செய்த குறிப்பைஅறியாதது தலைவியின் குற்றமே என்பது தலைவனின் எண்ணம் தலைவி வந்து ஏமாற்றமடைந்து சென்றதைத் தோழி தலைவனுக்குத் தெரிவித்

தாள். அது தலைவன் மனத்திற்குச் சிறிது ஆறுதலை யளித்தது. திருமகளைப்போன்ற அம்மங்கையை அடை யலாம் என்ற அவாவினால் குறியிடத்து வந்த தலைவன் அத்தலைவியைக் காணாது மனம் புண்பட்டுத் திரும்பிய தைத் தலைவனால் உணர்ந்த தோழி தலைவிக்கு அறிவித் தனள். தலைவியின் நெஞ்சம் அதில் ஆழ்ந்து சென்றது. "காய்ந்த நொச்சியிலைகளின் வீழ்ச்சித் தலைவர் செய்யும் குறிப்புப் போன்று என்னை ஏமாற்றியது! பன் முறை யும் சென்று பயனற்றுத் திரும்பிய யான் அவர் உண் மைக் குறிப்பு இன்னதென அறியும் வன்மை யற்றேன்! இருளில் வந்த தலைவர் பயனின்றியே மீண்டுப் போயி னர், என அயலூர் அறியின் நகைக்கும்! இஃது என்ன பாபமோ உணரேன்." என எண்ணித் தலைவி வருந்தினள்!

இங்ஙனம் தலைவன் வந்து போகுங்கால் தலைவி தலைவனைக் காணாதவாறு சில இடையூறுகள் நிகழ்ந்தன. தாயும், ஊராரும் தூங்கினரில்லை நாய்கள் குரைத்துக் கொண்டே யிருந்தன. காவல் கைப்பறையின் கடிப்பு ஓய்ந்தபாடில்லை. நிலவோ எங்கும் பரந்து வீசிற்று. கூகைகள் ஒலித்தன. சேவல்கள் கூவின. இவற்றால் பொழுது விடிந்து விட்டதென ஊரார் எழுந்து அவண் வரும் தலைவனைப் பார்த்து விடுவரோ எனத் தலைவி பெரி தும் வருந்தினள்.

ஒன்பதாம் நாள் செய்கை
முடிந்தது

துறை:—

தலைவிக்குப் பாங்கி தலைமகன் வரவுஉணர்த்தல்.
தான் குறி § மருண்டமை தலைவி பாங்கிக்குறைத்தல் § மெய்யாக மயங்கிக் குறியிடம் சென்று மீண்டமை.
பாங்கி தலைமகன் நீங்கேடுத்தியம்பல்.
தலைமகன் புலந்துபோதல்.
¶ வறுங்களந் தலைவி கண்டிரங்கல். ¶ தலைவன் நின்று நீங்கியவதனாற் பயன்டாதகளம்.
தலைவி பாங்கிக்குரைத்தல்.
தலைமகன் வலம் பாங்கி தணித்தல்
பாங்கி தலைவன்மேற் குறிபிழைப்பேற்றல்
தலைவன் தலைவிமேற் குறிபிழைப்பேற்றல்.
தலைவி குறிமருண்டமை பாங்கி தலைவர்க்கு உரைத்த
பாங்கி தலைவன் மொழிக் கொடுமையைத் தலைவிக்குச் சொல்லல்
தலைவி யென் பிழைப்பன்றென நோதல்
தாய் துஞ்சாமை.
நாய் துஞ்சாமை.
ஊர் துஞ்சாமை.
காவல் ‡ கடுகுதல். ‡ கடுகி வருதல்
நிலவு வெளிப்படுதல்.
கூகை குழறல்.
கோழி குரற் காட்டுதல்.

இரவுக்குறி யிடையீடு
முற்றிற்று.

XIV. வரைதல் வேட்கை.

வரைதல் வேட்கை:— தலைவன் தன் ஊருக்கு வரச் சில இடையூறுகள் ஏற்பட்டமையின் அவன் தன்னை வரைந்து கொள்ளுதல் நலம் என்ற விருப்பத்தால் தலைவி சில கூறல்.

இராக்காலத்தில் வந்து போய்க் கொண்டிருந்த தலைவனுக்கு கீழ்க் கூறிய இடையூறுகளினால் வழக்கம் போல் வர இயலவில்லை. அதனால் தலைவியின் முகம் ஆதித்தனைக் காணாத் தாமரையென கூம்பிற்று. அதன் காரணத்தை அறிய தோழியின் மனம் விழைந்தது. அதை யறிந்த தலைவி தோழியைப் பார்த்து, "நீர் வேட்கையைத் தணித்துக் கொள்ள வந்தவர் போன்று நம் வீட்டை நோக்கி வந்த தலைவரைக் கண்டவுடன் உன் முகம் பின் வருவதை யறியாது நாணத்தினால் கவிழ்ந்தது. அக்குறிப்பினால் நம் களவை செவிலி அறிந்திருக்கக் கூடும் எனக் கருதுகிறேன். அன்றியும் நிலவு, கூகையின் ஒலி முதலியன அவரை இவண் வாராதவாறு தடுக்கின்றன. ஆதலின் நாம் இருவரும் அவர் ஊருக்குச் செல்லலாமெனத் தோன்றுகின்றது. ஆயினும் அவர் ஊரை அவர் வெளிப்படையாகச் சொன்னாரில்லையே! இனி என் செய்வோம்," என வருந்தினள். இத்தலைவியின் துயரைக்கண்ட தோழியின் மனம் இரங்கிற்று. தோழியின் சொற்கள் தலைவர் இரக்கமற்றவர் எனப் பழித்தன. இதைப் பொறாத் தலைவி தன் ஆற்றாமையை

அவர் அறியாமலிருந்ததற்குக் காரணம் தன் ஊழ்வினையே எனத் தகுனைத் தானே வெறுத்துக் கொண்டாள்.

பத்தாம்நாள் செய்கை
முடிந்தது.

தலைவி அன்றிரவு தலைவனோடு இன்பந்துய்த்ததாகக் கனவு கண்டனள் விழித்தவுடன் அது பொய்யாயிற்று. அதனால் தலைவனைக் காணவேண்டும் என்னும் வேட்கை அவள் மேனியின் அழகு நலத்தைக் குலைத்தது. ஆகவே தலைவி தோழியை நோக்கி, "என் நோயைத் தலைவர்க்கு உரைப்பார் யாரேனும் உளராயின் என் உயிர் தங்கும். உரைத்தவர்க்கும் புகழுண்டாகும்," எனப் பகர்ந்தனள். "உன் துயர் தலைவர்க்குத் தெரியாததன்றே! வருகிறேன் எனப் பகர்ந்த வாக்கை அவரே மிறழ்ந்தாரெனின் பிறர் சொல்லக் கேட்பரோ! நீயே சென்று குறையிரத்தல் நலம்," எனத் தோழி விடையிறுத்தனள். பலர் தன்னைக் கண்டு கூறும் அலர் மொழிகளும், தலைவன் வரும் வழியின் அருமையும் தலைவி மனத்தைப் பெரிதும் வருத்தின. ஆதலின் அவள் கழிகளில் உள்ள புள்ளினங்களை நோக்கி, "நீங்கள் என் தலைவரைக் கண்டீரோ! அங்ஙனமாயின் துணையற்றுத் துன்புறும் எனக்கு ஒரு சொல்லேனும் கூறுதல் கூடாதோ? ஈதோ உங்

களுக்கு என் மாட்டுள்ள அன்பு! " எனப் பெரிதும் இறங்கினள்.

பின்னும் தலைவன் இருளின்கண் தன்னை நோக்கி வருதல் துன்பமெனத் தலைவிக்குத் தோன்றிற்று. ஆகலின் அவனை வாரா வண்ணம் தடுத்தல் நலமென்றும், அவள் தினைப்புனங்காக்க வருங்காலம் நெருங்கினமையின் அப்போது காணலாமென்றும், அவற்றைத் தலைவனுக்குத் தெரிவித்தல் நலமென்றும் தலைவி தோழிக்கு வற்புறுத்தினள். தலைவியின் மயக்கம் அவள் தமருக்கு அச்சத்தை யூட்டியது. அவளைப் பேய்த் தீண்டியதென்பது அவர்கள் எண்ணம். அதனால் சுற்றத்தார் வேலனைக்கொண்டு முருக வேளை வழிபட்டு உயிர் பலியிடுதலை மேற்கொண்டனர். அதைத் தடுக்கும் முயற்சியை மேற்கொள்ளுமாறு தலைவி தோழியை இறைஞ்சினள். தலைவியை மணம் பேச வந்தவர் கூட்டம் நாளுக்குநாள் மிகுந்தது. இச்செய்தியைத் தலைவனுக்குத் தெரிவிக்குமாறும், தலைவன் வரைவு விரும்புங்கால் தமர் தடுக்காமல் ஏற்றுக்கொள்ளுமாறும், இரு திறத்தாரையும் வசப்படுத்தத் தலைவி தோழியை வேண்டிக்கொண்டனள்.

பதினொன்றாம் நாள் செய்கை

முடிந்தது.

துறை:—

பாங்கி தலைமகளைப் ‡‡பருவரல் வினவல். ‡‡துன்பம்

†† அருமறை செவிலி யறிந்தமை கூறல். ††அரிய களவொழுக்கம்

தலைமகன் வருந்தொழிற் கருமை சாற்றல்.

தலைவி தலைவனூர்க்குச் செலவொருப்படுதல்.

பாங்கி தலைமகளைப் பழித்தல்.

தலைமகள் *இயற்பட மொழிதல்* தகுதி பொருந்த

† கனவு நலிவுரைத்தல். † கனவினாலழிதல்.

‡ களவினழிபுரைத்தல். ‡ அழகு கெடுதல்.

தன்றுயர் தலைவர்க்குரைத்தல் வேண்டல்.

துன்புறல் பாங்கி சொல்லெனச் சொல்லல்.

அலர் பார்த்துற்ற வச்சக் கிளவி.

ஆறு பார்த்துற்ற வச்சக் கிளவி.

காம மிக்க கழிபடர் கிளவி.

தன்னுட் கையாறெய்திடு கிளவி.

தலை மகன் ¶ நெறி விலக்குவித்தல். ¶ வழி

தலை மகன் § குறி விலக்குவித்தல். § இரவுக்குறி

வெறி விலக்குவித்தல்.

பிறர் வரைவு விலக்குவித்தல்.

அறத்தொடு நிலை வரைவுகடாதல் கொள்ளுவித்தல்

வரைதல் வேட்கை

முற்றிற்று.

XV. வரைவு கடாதல்

வரைவு கடாதல்:—தலைவியை மணஞ் செய்துகொள்ளலே நலமெனத் தலைவனுக்குப் பாங்கி வற்புறுத்திக் கூறல்.

மறுநாள் வந்த தலைவனைப் பார்த்துத் தோழி சில பகர முன்வந்தனள்: "எங்கள் இல்லில் தலைவியின் மணத்தைப்பற்றி பேச்சுகள் நடந்துகொண்டிருக்கின்றன. எம் தாய்மாரிடம் யாங்கள் பெரிதும் துன்புறுகின்றேம். தலைவியின் வேறுபாட்டிற்குக் காரணத்தையறிய விழைந்த தாய்க்குத் தலைவி சிங்கத்தைக் கண்டு பயந்தனள் என யான் பொய்யுரைப் புகன்றேன் நீர் தலைவிக்குச் சூட்டிய முல்லை மாலையின் மணத்தினால் தலைவியின் களவொழுக்கத்தைத் தாய் அறிந்து கோபக்குறியோடு உள்ளனள். நீர் அவள் வேட்கை நோயைத் தணிப்பதற்குத் தக்கவழி தேடாமையின், அதைப்போக்க வெறியாட்டாளனை விரைதலில் எம்மனோர் மனஞ் சென்றுள்ளது நிற்க. என் தலைவியின் அழகுக்கு ஆவல் கொள்ளாதார் யார்? அவளை மணம் பேசக் கருதி பலர்பேர் வந்துகொண்டிருக்கின்றனர். ஆதலின் நீர் அந்தணரோடும், தக்க பரிசோடும் வந்து தலைவியை மணஞ்செய்து தருமாறு கேட்கில் எம்மனோர் உம்மை மறுக்காது நலம் புரிவர். வேங்கைமலர் பூத்தன. திங்களை அரவ ஆபாணம் (பரிசேடம்) வளைந்தது. இதுவே மணத்திற்குத் தக்க காலமாகும். நீர் அவளைப் பிரிந்து சென்ற குறையை என்னிடம்

கூறின் யான் பழிப்பனே என நாணி உம்பிழையை என்னிடமும் கூறுதவளா இருக்கும் என் தலைவியின் அறிவுடைமையை என்னென்று இயம்புவேன்.''

இவை யனைத்தையும் கேட்டும் தலைவன் மணம் புரிய இசைந்திலன். ஆகவே, தோழி தலைவனை நோக்கி ''நீர் இவண் வருவதைத் தாய் ஒருவாறு அறிந்தனள். அவள் இப்போது இங்கு வரினும் வரலாம். ஆதலின் உம் விளையாட்டிற்கு, நீர் வேறிடத்தைக் குறித்துக்கொள்ளலே தகுதி'' யென்றனள்.

பன்னிரண்டாம் நாள் செய்கை
முடிந்தது.

தலைவியைத் தலைமகன் மணப்பதற்குத் தக்க வழிதேடலே நம் கடமை எனத் தீர்மானித்த தோழி, பகல் வருந்தலைவனை இரவில் வா என்றும், இரவில் வரும் தலைவனைப் பகலில் வா என்றனள்.

பதின் மூன்றும் நாள் செய்கை
முடிந்தது.

பகலிலும், இரவிலும் வருவாய் என்றும், இருவேளைகளிலும் இங்கு வரவேண்டாமென்றும் பலவாறு சொல்லித் தலைவனைத் தடுத்தனள். அப்போதும் அவன் தன் களவொழுக்கத்தை விட்டானில்லை.

" இக் களவொழுக்கம் உம் குலத்திற்கும், குணத்திற்கும், கீர்த்திக்கும் தக்கதன்று. நீர் வரும் வழியில் முதலைகள் பெரிதும் உள்ளன. தலைவியோ கலங்கியும், தெளிந்தும், பெருமூச்செறிந்தும், கைவளைக் கழல மெய்யினைத்தும் துன்புறுகின்றனள். அத்துயர் அவளால் ஆற்றிக்கொள்ளும் தன்மையில் இல்லை. அன்னை முதலியோர் அருகிலே இருக்கின்றனர். முன்னினும் காவல் மிக்கிருக்கின்றது தலைவி நின்னைக் கனவிற் கண்டு, விழிப்பிற் காணாமையின் கலங்குகின்றனள். அவள் உடல் நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகின்றது என இதைப்போன்ற பலவும் தோழி தலைவனுக்குக் கூறி அவன் தலைவியை மணந்துகொள்ள வேண்டும் என்னும் எண்ணத்தை இன்னொரு முறை அவனுக்குப் புலப்படுத்தினள்.

துறை:—

வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பல்.
‡அலாறி வுறுத்தல். ‡பழிமொழி
தாயறிவுரைத்தல்.
வெறியச் சுறுத்தல்.
பிறர்வரைவுரைத்தல்.
வரைவெதிர் வுரைத்தல்.
வரையுநாளுரைத்தல்.
அறிவுறுத்தல்.
குறிபெயர்த்திடுதல்.
பகல் வருவானை யிரவு வருகென்றல்.

இரவு வருவானைப் பகல் வருகென்றல்.
பகலினுமிரவினும் ¶ பயின்று வருகென்றல்.
¶ நெருங்கி
பகலினுமிரவினு மகலிவணென்றல்.
தலைமகன் § நாடு முதலியன கூறல். § குலம், குணம் முதலியன
ஆறு பார்த்துற்றவச்சங்கூறல்.
ஆற்றாத் தன்மை யாற்றக்கூறல்.
காவன் மிக வுரைத்தல்.
காமமிக வுரைத்தல்.
கனவு நலி வுரைத்தல்.
† கவினழிவுரைத்தல். † மகிழ்ந்ததனை

வரைவு கடாதல்
முற்றிற்று.

XVI. ஒரு வழித்தணத்தல்.

ஒரு வழித்தணத்தல்:—தலைவியை மணத்தற்கு உடன் பட்ட தலைமகன் தன்னூருக்குச் சென்று வருதலாகிய ஒரு வகைப் பிரிதலைப் பாங்கிக்குத் தெரிவித்தல்.

இங்ஙனம் களவொழுக்கத்தை மேற்கொண்டிருந்த தலைமகன் "என் ஊருக்குச் சென்று திரும்பி வந்து உன் தலைவியை மணம்புரிவேன்" எனத் தோழிக்குச் சாற்றினன். "நீர் பிரியில் என் தலைவி இறந்துபடுவள். ஆதலின் செல்லுதலை ஒழித்தலே நலம்" என்றனள் தோழி. இன்றியமையாது, தான் தன் ஊருக்

குச் செல்லவேண்டுவதை, அவன் வார்த்தைகள் குறிப் பித்தன. "உம்பிரிவினால் தலைவிக்குத் துன்பம் நேரு முன் நீர் திரும்பி வர வல்லீரேல் ஏகலாம்" எனத் தோழி விடை யளித்தனள். தலைவன் தன் ஊர் நோக்கி நடந்தான். தலைவன் பிரிவு தலைவிக்குத் தெரிந்தது. "ஒருக்கால் தலைவர் நம் வேட்கைக் கனலைத் தணித் தார்; உன்னை என்றும் பிரியேன் எனத் தெய்வத்தின் முன் சூளுரைத்தார்; இக்கால் நம் நெஞ்சம் நையப்பிரிந் தார். இவ்வுலகியற்கை நன்று நன்று," எனத்தலைவி இரங்கினள்.

பதினான்காம் நாள் செய்கை
முடிந்தது.

சென்ற தலைவன் மாலைக் காலம் வந்தும் திரும் பிற்றிலன். அது தலைவியைப் பெரிதும் துன்புறுத் திற்று. அவ்வாற்றாமை மிகுதியால் தலைவி கடற்கரையி லுள்ள அன்னத்தைப் பார்த்து "யான் துயிலாது படும் நிலையைப் பற்றி நீ ஒன்றும் சொல்கின்றாயில்லை. நீயோ துணையுடன் மலரணைமேல் கண்ணுறங்குகின்றனை! இஃது உனக்குத் தக்கதன்று எனச் சொல்லித் துயருழந்த னள். பாங்கி அவளுக்குப் பல நய வார்த்தைகளைச் சொல்லித் தேற்றினாள்.

பதினைந்தாம் நாள் செய்கை
முடிந்தது.

தலைவியின் கண்ணீரும், இரவும் புலர மறுநாள் தலைவன் வந்துற்றான். இச் செய்தியைத் தோழி தலைவிக்குத் தெரிவித்து, அவனிடைச் சென்று, "தெய்வகதியால் ஏதோ இது காறும் பிழைத்திருக்கின்றோம். பிரிந்தால் உயிர் வாழ இயலாதவரை விட்டுப்பிரிதல் உமக்கு நியாயமா?" என்றனள் தோழி. "என் பிரிவைத் தலைவி எங்ஙனம் ஆற்றி யிருந்தாள்? நீ அவளை ஆற்றுவித்தது எவ்வாறு?" எனத் தலைவன் வருத்துடன் கேட்டான். 'தலைவி மனம் தளராவாறு ஆற்றுவி' என நீர் பிரிந்து போகும் போது கூறிய வார்த்தையைக் கருதி உம் ஊரையும், கீர்த்தியையும், நீர் மூரைந்து வருவேன் எனச்செப்பிய சொற்களையும் இயம்பி ஆற்றுவித்தேன்" எனத்தோழி விடை பகர்ந்தனள்.

துறை.

தன் பதிக் ¶ ககற்சி தலைவன் சாற்றல். ¶ பிரிதல்
பாங்கி தலைவனைச் செலவு விலக்கல்.
தலைவன் நீங்கல் வேண்டல்.
தலைமகனைப் பாங்கி விடுத்தல்.
பாங்கி தலைவிக்கவன் செலவுணர்த்தல்.
தலைவி நெஞ்சொடு புலத்தல்.
காமம் மிக்க கழிபடர் கிளவி.
தலைவியைப் பாங்கியாற்றுவித்தல்.
தலைமகன் வந்தமை பாங்கி யுரைத்தல்.
வந்தோன்றன்னேடு நொந்து வினதல்.

தலைவன் பாங்கியோடு நொந்துவினுதல்.
தலைவியை யாற்றுவித்திருந்த அருமை கூறல்.
ஒரு வழித்தணத்தல்
முற்றிற்று.

XVII வரைவிடை வைத்துப் பொருள் வயிற்பிரிவு.

வரைவிடை வைத்துப்பொருள் வயிற் பிரிதல்—மணம் செய்து கொள்ள பொருளீட்டுதற் கெனத் தலைவன் தலைவியைப் பிரிதல்

இவ்வாறு தலைவன் இருந்து வருகையில் தலைவியை மணம் புரிதற்குப் பரிசம் வேண்டியிருந்தது. அதற்குப் பொருளீட்டத் தான் பிரிவதைத் தோழியிடம் கூறித் தலைவிக்கும் புகலுமாறு செப்பினுன். "இவ் வார்த்தைத் தலைவிக்குக் கரும்பின் சாற்றில் வேம்பைக் கலந்ததை யொக்கும். ஆதலின் நீரே சென்று தலைவியின் மனம் பொருந்துமாறு சொல்லி பின் செல்வீராக," எனத் தோழி விடை யிறுத்தனள். யான் இம்மாலைப் பொழுதிற்குள் திரும்பி வருவேன் எனத் தலைவன் சென்றுன். நடப்போரின் காலை அறுக்கும் கற்கள் நிறைந்த காட்டில் தலைவன் சென்றதைத் தோழியால் யறிந்த தலைவியின் மனம் வருந்திற்று. இதை யுணர்ந்த தோழி நின்னை மணத்தற்குப் பொருள் கொணதற் பொருட்டன்றோ தலைவன் பிரிந்தது, இதற்கு வருந்துவானேன்? எனத் தோழி தலைவியை இடித்துரைத்த

னள். தன் மனோ நிலையை அறியாது இங்ஙனம் தோழி செப்புதற்குத் தலைவியின் நெஞ்சம் பெரிதும் நுந்தியது. விரைவில் தலைவன் திரும்பி விடுவான் என்ற தோழியின் சொற்கள் தலைவியைச் சிறிது ஆற்று வித்தன.

தலைவன் வருவதாகச் சொன்ன கார்ப்பருவம் வந்தது. அவ்வமயம் தலைவன் வாராமையை நினைத்துத் தலைவி புலம்பினள். "இது மழை கால மல்ல. அல்லாத காலத்தில் இம்மழை பெய்கிறது" எனத் தோழி செப்பியதற்கு "மழைக்கால மன்றேல் மயில் ஆடுமோ! கொன்றை பூக்குமோ! இந்திரவில் உண்டாகுமோ!" எனத் தலைவி கூறினள். "இம்முகில் தலைவர் தூதாக நின்னிடம் வந்துள்ளது. இனி சிறிது நேரத்தில் தலைவரும் வருவர்" எனப் பகர்ந்த தோழியின் வார்த்தைகள் தலைவியை ஆற்றுவித்தன. பிரிந்து சென்ற தலைமகனுக்கும் ஆற்றாமை மிகுந்தது.

பதினாறும் நாள் செய்கை
முடிந்தது.

பின்பு தலைவன் பொருளீட்டத் திரும்புங்கால் தேரை விரைவிற் செலுத்துமாறு பாங்கனைத் தூண்டினன். தேர் மனத்தினும் கடுகிச் சென்றது. பசலை நிறம் மெய்யெங்கும் போர்த்து வருந்தும் தலைவிக்குத் தூது செல்லத் தலைவன் மேகத்தை வேண்டினன். தலை

வன் வாயில் வைத்த சங்கம் தலைவியின் செவியிற்படு மாறு பேரொலியை யுண்டாக்கிற்று. இச்சங்கொலி தோழியின் காதிற் பட்டது. உடனே தோழி தலைவி யை நோக்கி "மெலிவால் கழன்று விழும் நின் கை வளைகள் கையிலேயே தங்கும் காலம் நெருங்கிற்று நம் தலைவர் பொற்றேர் வருகையை அவர் வாய் வைத்த சங்கம் நமக்கு முன்னரே தெரிவிக்கின்றது" எனப் பகர்ந்தனள். "திருமால் சங்கம் போன்று இது வும் அழியாமல் பல்லாண்டு வாழக்கடவது" எனத்தலை வியின் வாய், அச்சங்கை வாழ்த்திற்று. "தோழி தலைவனிடம் சென்று என் தலைவியைப் பிரிந்து பொ ருட்காரணமாகச்சென்ற நீர்; கண்ணுறங்காத வேட் கைநோயால் துன்புற்ற எம் தலைவியை நினைத்ததுண் டோ!" என வினவினள்.

"அழகு யாவும் ஒருங்கே திரண்டதெனத் தோன் றும் உம் தலைவியை யான் மறந்திலன். மறந்திருந்தா லன்றோ நினைத்தல் வேண்டும். என் மனத்தைத் தனக் கு இடமாகக் கொண்ட அவள் அதை விட்டு இமையும் நீங்கிலள்" என்றனன் தலைவன். பின்பு தோழி தான் தலைவியைப் பல வகையிலும் ஆற்றுவித்திருந்ததைப் புகன்றனள்.

துறை.

என் பொருட் பிரிவுணர்த் தேந்திழைக் கென்றல்
நின் பொருட் பிரிவுரை நீயவட் கென்றல்.
நீடே னென்ற வனிங்கல்.

பாங்கி தலைவிக்கவன் செலவுரைத்தல்.
பூங்குழை யிரங்கல்.
பாங்கி கொடுஞ் சொற் சொல்லல்.
தலைவி கொடுஞ் சொற் சொல்லல்
பாங்கி கழறிய வதனை ஊரின்மேல் வைத்துச் கூறியது.
வருதுவர் மீண்டெனப் பாங்கி வலித்தல்
பருவங்கண்டு பெருமகள் புலம்பல்.
இருளை †வம்பென்றல். † நிலையில்லது
தலைவிமறுத்தல்.
அவர் தூதாகி வந்தடைந்ததிப்பொழுதெனத் துணைவி சாற்றல்.
தலைமகளாற்றல்.
அவ ‡ னவட் புலம்பல். ‡ அவ்விடத்து
தலைவன் பாகனோடு சொல்லல்.
தலைமகன் மேகத்தோடு சொல்லல்.
பாங்கி வலம்புரிகேட்டு அவன் வரவறிவுறுத்தல்
வலம்புரி கிழத்தி வாழ்த்தல்.
தலைவன் வந்துழி பாங்கி நினைத்தமை வினாதல்.
தலைமகனினைத்தமை செப்பல்.
தலைமகளையாற்று வித்திருந்த அருமையை பாங்கி கூறல்.

வரை விடை வைத்துப் பொருள்
வயிற் பிரிவு முற்றிற்று.

களவியல்
முற்றும்.

வரைவியல்.

வரைவு:— தலைமகளைத் தாய், தந்தையர், சுற்றத்தார் முத லியோர் மணஞ் செய்து கொடுப்பினும், கொடா விடி னும், தலைமகன் அவளை விதியின் படி பலரறிய மணஞ் செய்து கொள்ளல். இதுவும் கற்பியலைச் சேர்ந்த ஒரு பகுதியே யாகும். புணர்தல் நிமித் தமும், புணர்தலும் குறிஞ்சி யெனக் கூறி யதுபோன்று இல்வாழ்கையின் பொருட்டு நடைபெறும் முயற்சிகளும், இல்வாழ்க் கையும் கற்பியல் எனக் கூறப்பட்டது.

வரைவியல்:—இல் வாழ்க்கையில் நுழைதற்காக மேற்கொள்ளும் முயற்சிகள்.

கற்பியல்:—இல் வாழ்க்கையிலிருந்து ஒழுகும் கற் பொழுக்கம்.

I. வரைவுமலிதல்.

வரைவு மலிவு:— மணத்தைக் குறித்த முயற்சிகள் நடை பெறுதல்.

பொருள் செய்தற்குக் காரணமாகத் தலைவியை

விட்டுப் பதினொரும் நாள் பிரிந்த தலைமகன் முப்பத்து நான்கு நாட்களில் பொருள் திரட்டி ஐம்பத்தொன்றும் நாள் திரும்பி வந்தான். அங்ஙனம் திரும்பிய தலைமகனின் மனம் மணத்திற்காக விரைந்தது. தலைவன் தலைவியின் பெற்றோர்க்கு முதியோர் மூலமாகச் சில பரிசுகளை அனுப்பினன். அவ்விஷயம் தோழிக்குத் தெரிந்தது. தோழி ஓடோடியும் வந்து "நின் காதலர் பெரும் பொருளை நினக்குப் பரிசாக அனுப்பியுள்ளார். ஆதலின் உன் மணம் விரைவில் நிறைவேறும். உன் வருத்தத்தை ஒழிப்பாயாக" என்னும் சந்தோஷச் செய்தியைத் தலைவிக்கு அறிவித்தனள். அது தலைவிக்குப் பெரு மகிழ்வை ஈந்தது.

தலைவன் தமர், கொணர்ந்த பரிசைத் தலைவியின் தமர் முழு மனதுடன் ஏற்றுக்கொண்டு அத்தலைவனுக்குத் தம் மகளை மணஞ்செய்து தர ஒப்புக்கொண்டனர். இதைத் தோழியால் அறிந்த தலைவியின் மகிழ்வு கடலினும் பரந்து நின்றது. அவ்வாநந்தத்தை அவளால் அடக்கமுடியவில்லை. ஆதலால் அவள் "மனமே நீ இருளாகிய கடலைக் கடந்து ஒளியாகிய கரையை யடையும் காலம் நெருங்கிற்று. இனி துன்பத்தால் வருந்தற்க" எனத், தன் நெஞ்சிற்குக் கூறித் தேற்றினள். தோழி மனத்திற்கும் ஆறுதலுண்டாயிற்று. அவள் தலைவியிடம் சென்று "உலகத்தார் தூற்றும் பழி நீங்க நீ அவனுக்கு அன்று சூட்டிய மாலையையும் பலாறிய

இன்றும் சூட்டி நெடுங்காலம் வாழ்வாயாக" என அவளை வாழ்த்தினள்.

தலைவி தன் மணம் அன்றே நடைபெறுதற் பொருட்டுத் தெய்வத்தைப் பரவி நின்றாள். அவள் தெய்வத்தை வரம் வேண்டி நிற்கும் நிலையைத் தொலைவிலிருந்து கண்ட தலைவனின் மனம் வியப்பினாலும் மகிழ்வினாலும் நிரம்பப்பெற்றது.

ஐம்பத்தோன்றும் நாள் செய்கை
முடிந்தது.

துறை :—

காதலன் முலைவிலைவிடுத்தமை பாங்கி காதலிக்குரைத்தல்.
காதலி நற்றயுள்ள மகிழ்ச்சி †யுள்ளல். † நினைத்தல்
தமர், வரை வேதிர்ந்தமை தலைவிக்குப் பாங்கியுரைத்தல்.
தலைமகளுவகை யாற்றதுளத் தொடு கிளத்தல்.
தலைமகனைப் பாங்கி வாழ்த்தல்.
அணங்கைப் ‡பராநிலை காட்டல்.
‡ சிறப்புச் செய்து வாழ்த்தும் நிலை
பராநிலை கண்ட தலைமகன் மகிழ்தல்.

வரைவுமலிதல்
முற்றிற்று,

II. அறத்தோடு நிற்றல்.

அறத்தொடு நிற்றல்—உண்மை கூறுதல். உண்மை கூற
லே அறமாதல் காண்க. அறம் என்பதற்கு கற்பு என
மற்றொரு பொருளும் உண்டு. இம்முறையில் கற்
பின் நிலையில் நிற்றல் என்றுகும். தலைவிக்கும், தலை
வனுக்கும் நடந்தவரும் களவொழுக்கத்தைத்
தலைவி பாங்கிக்கும், பாங்கிச் செவிலிக்கும்,
செவிலி நற்றாய்க்கும், நற்றாய், தந்தை
தமருக்கும் தெரிவித்தல்.

தலைவியின் கண், மிக்க துயரத்தினால் கண்ணீர் வடித்தது. இதைக் கண்ட தோழி தலைவிக்குப் பல தேறுதல் கூறியும் பயனற்றது. பின்பு தோழி தலைவியின் அருகிருந்து அவள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்தாள். இது நிற்க, இதற்கு முற் பிரிவில் மணச் செய்தியினால் மகிழ்ந்திருந்த தலைவி இங்கு வருந்துதற்குக் காரணம் யாது எனச் சிறிது ஆராய்வாம்: அவர்களுக்குண்டான களவுப் புணர்ச்சியால் உலகம் அலர் தூற்றிற்று. பெற்றோர் வெறுப்படைந்து மணத்தை மறுத்தனர். அஃதுணர்ந்த தலைவன் பிரிந்தேக, அவ்வாற்றாமைத் தலைவியை வருத்திற்று.

மிக வருத்தத்திலாழ்ந்த தலைவி "என்னுடன் கூடி இனி உன்னைப் பிரியேன் எனத் தெய்வத்தைக் காட்டிச்

சூளுரைத்த தலைவர் இப்போது பிரிந்து போயினர். அவர் வார்த்தையை மெய்யென நம்புவது என் அறியாமையே. இனிப் பெரியோர் சொற்றவறுர் எனக் கருதுதல் யாங்ஙனம்! தெய்வத்தின் முன் உரைத்த சபதம் தவறினல் அவருக்கு யாது கெடுதி யுண்டாகுமோ என என் மனம் வருந்துகின்றது'' எனத் தன் வருத்தத்திற்குக் காரணத்தைத் தோழியிடம் பகர்ந்தனள். அது தோழிக்குக் கோபத்தை மூட்டியது. ஆகலின் அவள், "அவர் மனம் கல் போலும், நின் அன்பின் திறத்தை அவர் சிறிதும் உணர்ந்தாரில்லை. தெய்வத்தின் முன் சூளுரைத்ததையும் மறந்து நின்னைப் பிரிந்த அவர் நல்லவரல்லர்'' எனச் சினந்துரைத்தனள்.

இவ்வார்த்தைகள், தலைவியின் மனத்தைப் புண்படுத்தின. அவள் தோழியை நோக்கி, "நீ அங்ஙனம் கூறுதல் தகுதியுடையதன்று. அவர் தாமதித்தற்கு ஏதோ தக்க காரணம் ஒன்றிருத்தல் வேண்டும். இன்றேல், சொன்ன சொல் பிறழ அவர் முற்பட்டிரார். அவர் எத்தெய்வத்தை நோக்கி வாக்குறுதி செய்தனரோ அத்தெய்வம் மிகக் கொடியது. அது சத்தியம் தவறியதற்காக அவருக்குத் தீங்கிழைப்பினும் இழைக்கும். ஆதலின் நாமிருவரும் அத்தெய்வத்தினிடம் சென்று பலி தூவி தலைவரைப் பொறுக்குமாறு துதிப்போமாக'' எனச் செப்பினள்.

அத்தலைவியின் மேல், பெண்கள் தூற்றிய அலர் நற்றாயின் செவிக்கெட்டியது. அதைப் பொறுக்கலாற்றாத நற்றாய், ஈத்துண்ணா லோபிகள் புதைத்து வைக்கும் பொன் போலத் தலைவியை வீட்டில் வைத்துக் காவல் செய்தனள். இருட் குறியின் கண் வந்த தலைவனை ஒரு நாள் செவிலி உணர்ந்தனள். இவற்றைத் தலைவி தோழியிடம் செப்பி வருந்தினள். அவ்வமயம் செவிலி அவ்விடம் வந்து, "என் மகள் பசலை நிறம் அடைதற்கும், கண்ணீர் காலுதற்கும், இனிய பாலையும், என் சொல்லையும் உட் கொள்ளாமலிருத்தற்கும் காரணம் யாது?" எனத் தோழியை வினவினள். தனக்கு ஒன்றும் தெரியாது எனத் தோழி விடை யிறுத்தனள். தாய் முதலியோர் வெறியாட்டாளனை யழைத்துக் கேட்டு, அவள் வேறுபாட்டிற்குக் காரணம் பேயென்றெண்ணி முருகனுக்குப் பூசை செய்து ஆடு பலியிட எண்ணினர். அங்ஙனம் ஆட்டைப் பலியிடுதல் பயனற்றதெனவும், அதனால் தலைவியின் நோய் தீராதெனவும் தோழி விலக்கினள். இது செவிலிக்குக் கோபத்தை மூட்டியது. அவர்கள் மேற்கொண்ட முருகன் வழிபாட்டைத் தடுத்த தோழியே தலைவியின் மெலிவிற்குக் காரணத்தைத் தெளிவுறக் கூறல் வேண்டுமெனச் செவிலி அவளை வற்புறுத்தினள். அதற்குத் தக்க விடையிறுக்க எண்ணிய தோழி, "நாங்கள் தினைப்புனத்தில் இருந்தபோது, மாலையணிந்த உயர் தோளினையுடைய ஒருவர் 'இம்மலரும் நின்னோடு உற

வுடையது' எனக் கூறி நீலப்பூ ஒன்றைத் தலைவியின் கையில் கொடுத்தார். மற்றொரு நாள் காவிரியில் நீரா டும் போது நின் மகள் நீர்ச்சுழியில் அகப்பட்டுத் துன் புற்றாள். அவ்வமயம் அப்பெரியார் அவளைக் கரை யேற்றி விட்டார். வேறொரு நாள் மதம்பிடித்த யானை யொன்று அவளைத் துறத்தி வந்தது. அதைத் தம் வேலால் அடக்கித் தன் பிராணனை நோக்காது அவளைக் காத்தனர். பிறிதொரு நாள் உன் செல்வி ஒரு மரத்தின் நுனிக்கொம்பிலிருந்த பூவை இமை கொட்டாது நோக் கியதை, அவ்வழிச் சென்ற அத் தலைவர் தன் உடல் நலத்தைப் பேணாமல் அம்மரத்திலேறி புட்பத்தைக் கொய்து அவள் ஆற்றமை ஆற்றினார். அந்நாள் தொ டங்கி நின் மகள் அவர் மாட்டே நினைவுற்றுள்ளாள்" எனப் பொய்க் காரணங்களினால் தலைவிக்கு ஒருவன் மாட்டு அன்பு சென்றிருத்தலை வெளிப்படுத்தினாள். இவைச் செவிலிக்கும் உண்மையை உணர்த்தின. தலை வியின் வேறுபாடுகள் நற்றாய்க்கும் ஐயத்தை உண்டாக் கின. அவளும் செவிலித் தாயைக் கேட்டு உண்மை யை யுணர்ந்தாள். பின்பு அவ்விஷயம் தமருக்குத் தெரிந்தது.

துறை:—

*கையறு தோழி கண்ணீர் துடைத்தல்.

* கையறல்—செயலறல்

தலைவி கலுழ்தற்காரணங்கூறல்.

தலைவன் தெய்வங்காட்டித் தெளிப்பத்தெளிந்தமை யெய்தக்கூறல்.
தலைவனிகந்தமை யியம்பல்.
பாங்கி § யியற் பழித்துரைத்தல். §இயலை
தலைமகளியற்பட மொழிதல்.
தெய்வம் பொறை கொளச் செல்குவ மென்றல்.
இல்வயிற் செறித்தமை சொல்லல்.
செவிலி கனையிருள் அவன்வரக் கண்டமை இயம்பல்.
செவிலி தலைவியின் வேற்றுமை கண்டு பாங்கியை வினவுதல்.
வெறி விலக்கல்.
விலக்கிய வழி செவிலி பாங்கியை வினுதல்.
பூத்தரு புணர்ச்சி.
புனல்தரு புணர்ச்சி.
களிறுதரு புணர்ச்சி.
தலைமகள் வேற்றுமைகண்டு நற்றாய் செவிலியை வினுதல்.
செவிலி நற்றாய்க்கு முன்னிலை மொழியான் மொழிதல்.

அறத்தோடு நிற்றல்
முற்றிற்று.

ஐம்பத்திரண்டாம் நாள் செய்கை
முடிந்தது.

III. உடன் போக்கு.

உடன் போக்கு:— தலைவன் முயற்சியினாலும், தலைவியின் உண்மை பலரும் அறிதலாலும் மணம் நிகழும். சில சமயங்களில் இருவருக்கும் மணஞ் செய்ய தமர் விருப்பங் கொள்ளார். அவ்வமயம் ஒருவருமறியா வண்ணம் தலைவன் தலைவியைத் தன் ஊருக்கு அழைத்துச் செல்லுவன்.

தோழி:—அழகிய நாட்டை யுடையவரே, எம் தலைவிக்காக நீர் எத்துணைச் சிறந்த பரிசில்களைத் தரினும் எம்மனோர் ஏற்றுக்கொள்ளார்! தலைமகளுக்கு இப்போது மணஞ் செய்ய அவர்கள் மனம் இசைந்திலது. அவளை நீர் உம்முடன் உம்மூருக்குக் கொண்டு போதலே தற்சமயம் செய்யத் தக்கது. இன்றேல் நீர் அவளை மணம் புரிதற்கு வேறு வழியில்லை.

தலைவன்:—அழகிய வளையணியுடையாய், என் ஊரோ மிக்க தூரத்திலுள்ளது. இடையில் பேய், புலி முதலியன நிறைந்த கொடிய காடுகளும், பாலை நிலமும் உள்ளன. உன் தலைவியோ மெல்லிய தன்மை வாய்ந்தவள். இம்முறையில் யான் அவளைக் கொண்டு போதல் யாங்ஙனம்?

தோழி:—என் தலைவி தன் உயிரைக் காட்டிலும் உம்மை உயர்வாக நினைத்திருக்கின்றனள். ஆதலின் உம்முடன் வரும் போது அவைகள் அவளுக்குச் சிறிதும் துன்பத்தைத் தாராமல் இன்பத்தையே தரும்.

தலைவன் :—அனிச்சமலர் போன்ற அடிகளுடைய உன் தலைவியை அழலென்னக் காயும் பாலையில் கொண்டுபோக யான் நினைப்பது கொடிதினும் கொடிதே. ஆயினும் வேறு வழியின்மையின் உடன்படுகின்றேன்.

தலைவன் தலைவியைத் தன் ஊருக்கு அழைத்துப் போக உடன்பட்டதைத் தோழி தலைவிக்குத் தெரிவித்தனள். உயிரினும் சிறந்த நாணத்தை இன்று துறத்தற்காயிற்றே, இனி இத்தகைய பெண் பிறவி நோவத் திருத்தலே நலம், என்று எண்ணித் தலைவியின் மனம் பெரிதும் இரங்கிற்று. அதனை உணர்ந்த தோழி, "உயிரைக் காட்டிலும் நாணம் சிறந்ததெனின், நாணத்தைக் காட்டிலும் கற்பு சிறந்தது. ஆதலின் அவர் பின் படாரலே உன் கடமை" எனத் தலைவிக்கு அறிவுறுத்தினள். ஊரார் வசைச் சொல்லையும், தாயார் சினத்தையும் பொறுக்கலாற்றாமையின் தலைவனுடன் போகத் தலைவியின் மனம் உடன்பட்டது. செல்லும் வழியிலுள்ள சுரத்தின் கொடுமையைத் தோழி தலைவிக்குச் செப்பினள். அச்சுரத்தின் கொடுமை தாயின் சினச் சொற்களைக் காட்டிலும் கொடிதாயிராது எனத் தலைவி விடையிறுத்தனள். தோழி தலைமகளைக் கொண்டு போய்த் தலைமகனிடம் ஒப்புவித்து, "இவள் உன் அடைக்கலம், இனி இவளுக்கு யாவரும் நீயே. இன்று போன்றே என்றும் இவள்மாட்டு நீ அன்பு பூண்டொழுகல் வேண்டும். நீங்கள் சுகமே செல்லுங்

கள். இங்குள்ளோருக்குச் சிறிது மன ஆறுதலைக் கூறிவிட்டு யானும் உம்முடன் வருகிறேன்" எனத் தலைவனுக்குக் கூறி அவர்களைச் செல்ல விடுத்தனள்.

ஐம்பத்து மூன்றும் நாள் தலைவன் தலைவியைப் பாலையின் வழி மெதுவாக அழைத்துச் சென்றான். தலைவிக்குச் சிறிது தளர்ச்சி ஏற்பட்டது. ஆதலின் ஒரு மரத்தினடியில் இருவரும் இளைப்பாறினர். தலைவன் அங்குள்ள அழகிய மலர்களைக் கொய்து தலைவியின் கூந்தலில் சூட்டி மகிழ்ந்தான். "இவ்விருவரும் தேவரோ, அன்றி மானிடரோ" எனக் கண்டோர் அயர்ப்புற்றனர். அவர்களுக்கு அத்தலைவர்களிடம் அன்பு பெருகிற்று. ஆதலின், அவர்கள் அவ்விரவில் கொடிய பாலை நிலத்திற் செல்லுதலை யொழித்துத் தங்கள் வீட்டிலிருந்துண்டு மறு நாள் விடை கொள்ளுமாறு அவர்களை வேண்டினர்கள். ஆனால் அப்போதே தன் பதிக்குச் செல்ல தலைவனின் மனம் விழைந்தது. அங்ஙனமே வழிகொண்டான். வழிச் செல்வோர் செப்பிய குறிப்பால் தலைவன் ஊர் அணித்தாயுள்ளதெனத் தெரிந்தது. தன்னாட்டை அடைந்த பின் தலைவன் தலைவிக்குத் தன் ஊரிலுள்ள இடங்களையும், அழகுகளையும் காட்டிக் காட்டி மகிழ்ந்தான். அதனால் தலைவிக்கு வழி நடந்த இளைப்பு நீங்கிற்று.

துறை:—

பாங்கி தலைவற் குடன் போக்குரைத்தல்.

தலைமகன் போக்கு மறுத்தல்.
பாங்கிதலைவனை யுடன் படுத்தல்.
தலைவன் போக்குடன் படுதல்.
பாங்கி தலைவிக்குந்தன் போக்குரைத்தல்.
தலைவி நாணழி விரங்கல்.
பாங்கி கற்பின் மேம்பாடு கூறல்.
தலைவி யொருப்பட்டெழுதல்.
பாங்கி சுரத்தியல் புரைத்துழித் தலைவி சொல்லல்.
பாங்கி † கையடை கொடுத்தல். † அடைக்கலம்.
பாங்கி வைகிருள் விடுத்தல்.
தலைவன் தலைவியை சுரத்துய்த்தல்.
தலை மகன் தலைவி * யசைவறிந்திருத்தல்.
* அசைவு—வருத்தம்
உவந்தலர்சூட்டி யுள்மகிழ்ந்துரைத்தல்.
கண்டோர‡யிர்த்தல். ‡ ஐய முறல்.
கண்டோர் காதலின் விலக்கல்.
கண்டோர் தம்பதி யணிமை சாற்றல்.
தலைவன் தன் பதியடைந்தமை தலைவிக் குணர்த்தல்.

உடன் போக்கு
முற்றிற்று.

IV. கற்பொடு புணர்ந்த கவ்வை.

கற்பொடு புணர்ந்தகவ்வை:— தலைவி தலைவனுக்கு உரிமைப் பட்டுக் கற்புடையளாய்த் தலைவனுடன் சென்றதைச் சேரியர் பலரும் அறிதல். (கவ்வை—அலர், வெளிப்பாடு.)

தன் கற்பைக் காத்தற் பொருட்டுத் தலைவி தலைவனுடன் சென்ற பிறகு, அவளைக் காணுது செவிலியின் மனம் பெரிதும் வருந்திற்று ஆதலின், "நாமும் அவள் விளையாடுமிவ்விடங்களும், இச்சோலையும் வருந்துமாறு என் மகள் எங்குச் சென்றுள்", எனச் செவிலி தோழியை வினவினள். "அவள் விரும்பிய தலைவர்க்கு அவளை மணம் முடிக்க நம்மனோர் மறுத்தனர். கற்பினின்றும் பிறழ அவள் மனம் இசைந்திலது. அதைக் காத்தற் பொருட்டுச் சுரத்தின் கொடுமையையும்பொறுத்தாளாய் அவள் அக்காளையின் பின் நடந்தாள்" என்றனள் தோழி. "இனிய சொற்களை இயம்பி பாலூட்டி வளர்த்த என்னை விட்டுப் பிரிய அவள் மனம் எவ்வாறு இசைந்ததோ! என் மகள் தான் காளையுடன் செல்லலைச் சில குறிப்புகளால் காட்டினள். ஆனல் என் பேதை மதி அவற்றை அறியாமற் போயிற்று. இஃது என் அறியாமையேயன்றோ!" எனச் சொல்லிச் சொல்லிச் செவிலியின் மனம் பெரிதும் கவன்றது. தன் மகள் தன்னிடம் திரும்பி வர அவள் முருகக் கடவுளைத் துதித்தனள். பின்பு தலைவி காளையுடன் சென்றதைச் செவிலி நற்றாய்க்கு உணர்த்தினள்.

இச் செய்தி நற்றாயின் மனத்தைப் புண்படுத்திற்று. ஆதலின், "இதை ஏன் முன்பே எனக்குத் தெரிவித்திருத்தல் கூடாது, அங்ஙனமாயின் உன் தந்தையை யான் மணந்தது போன்று அவ்வஞ்சியன்னும் மணம் பெற அவள் விருப்பத்தை முற்றுவித்தி

ருப்பேனே. அஃதொழிந்து அவளை வீணே சுரத்தில் போக்கினேயே" என இன்னனைய சொற்கள் பல அவள் வாயிலிருந்து வெளிப் போந்தன. நற்றுயின் கண்ணீரும், வார்த்தைகளும் தோழியைப் பாலைநிலத்தியைக் காட்டிலும் மிக்கு சுட்டன. "சில் வளையணிந்த என் மகள் தாமரை மலரொக்கும் அடிநோவ வெவ்விய பாலை நிலத்தில் பாங்கியர் புலம்பப் பிரிந்து போயினளே! பத்து மாதம் சுமந்து மெய் வருந்திப் பெற்றும் துன்பமடைந்தேனே" எனப் பாங்கியிடமும், அயலாரிடமும் சொல்லிச் சொல்லி நற்றுய் புலம்பினள்.

தலைவி கட்டிய சிற்றில்லையும், விளையாடிய வண்டலம் †பாவைகளையும், கந்துக‡ங்களையும் பார்த்துப் பார்த்து நற்றுயின் மனங் கரைந்தது. அந்நிலை கண்டோர் நெஞ்சை உருக்கியது. அவள் "இப்பதியில் உவகையில் ஊன்றியிருக்கும் காகமே, என் மகள் என்னிடம் வருமாறு அழைத்திடுவையேல் இன்று உனக்குச் சோறு தசை முதலிய பலிகளை ஈந்ததைப் போன்று என்றும் ஈவேன். சூரியனே, சுருண்ட குழலையுடைய என் மகளுக்குப் பாலை நிலம் குளிர்ந்திருக்குமாறு நீ செய்யவேண்டும். இளந்தன்மையுடைய தோழியே, கரும்பினும் இனிய சொற்கள் வாய்ந்த என் மகள் என்னை விட்டுப் பிரிய நீ இரும்பனைய நெஞ்

---

† வண்டல்—சேர். சேற்றாலமைத்த பாவை.

‡ கந்துகம்—பந்து.

சம் வாய்ந்தது யாங்ஙனம்! மலரை மிதிப்பினும் பொருத என் மகளின் பாதங்கள் பாலை நில வெம்மையைப் பொறுத்தல் எவ்வாறு! மிக்க இளமையுடைய என் மகளை அங்கே பாதுகாப்பார் யார்!" எனப் பல விதமாய் இயம்பி துக்கித்தனள். அவள் துயரம் தோழிக்கு அச்சத்தை யுண்டாக்கிற்று.

அணங்கு போன்ற தலைவியைத் தான் சென்று தேடிக் கொணர்வதாய் நற்றாய்க்கு ஆறுதல் பகர்ந்து, செவிலி புறப்பட்டனள். தேடச் சென்ற செவிலியின் கண்கள் வழியில் முக்கோலேந்திய அந்தணரைச் சந்தித்தன. தன் மகளைப்பற்றி அவர்களைக் கேட்டறிய விழைந்த அவள், "அருந்தவ முனிவரே, வஞ்சிக் கொம்பன்ன ஒருத்தி ஒரு வீரன் பின் சென்றதைக் கண்டீரோ?" என வினவினள். "ஆம், யாங்கள் கண்டோம். இதைக் குறித்து நீ வருந்துதல் தகுதியுடையதன்று. முத்தும் தான் பிறந்த சங்கை விட்டு, அணிபவரை யடைகின்றது. நீயும் உன் பெற்றோரை நீங்கி ஒரு தலைவனை அடைந்திருக்கின்றாய். அங்ஙனமே அவளும் ஒரு கொழுக் கொம்பை நாடிச் சென்றாள். இஃது உலகியற்கை. ஆதலின் நீ துன்புறுதலை ஒழிக" என முனிவர் அவளை ஆற்றுவித்தனர்.

செவிலி மேலும் பாலையிற் செல்லும் போது அங்குச் சென்ற மறத்தினையும், அவண் நின்ற குராமரம் முதலியவற்றையும் நோக்கித் தன் மகள் வழிக்

கொண்டதைப் பற்றி விசாரித்துக் கொண்டே சென்றாள். வழியில் இருவர் காற் சுவடும் காணப்பட்டன. அது செவிலிக்குப் பின்னும் துன்பத்தைத் தந்தது. ஓர் இளங் காதலியும், காதலனும் அவ்வழிச் சென்றனர். அவர்களைக் கண்ணுற்ற செவிலி, "திருமகளும் திருமாலும் போன்ற இருவர் உங்களைப் போன்றே தனித்துச் சென்றனர். அவர்களை நீங்கள் கண்டதுண்டோ?" என அக்காதலரை வினவினள் அவர்கள் "ஆம், அவர்களை யாங்கள் கண்டோம். பாலைவன வெம்மை நீங்க அவர்கள் இதுகாறும் ஊர் அடைந்திருப்பார்கள், நீ வருந்தற்க" எனக் கூறி அவள் ஆற்றாமையைத் தணித்தார்கள்.

துறை :—

செவிலி பாங்கியை வினுதல்.

பாங்கி செவிலிக் குணர்த்தல்.

இனையலென் போர்க் கெதி ¶ ரழிந்து மொழிதல்.

¶ கொந்து.

செவிலி தன்னறிவின்மை தன்னை நொந்துரைத்தல்.

செவிலி தெய்வம் வாழ்த்தல்.

நற்றாய் புலம்பல்.

செவிலி நற்றாய்க் கறத்தோடு நிற்றல்.

நற்றாய் பாங்கியோடு புலம்பல்.

பாங்கி † யழுங்கல் கண்டு நற்றாய் புலம்பல்.

† வருந்தல்.

பாங்கியர் தம்மோடு நற்றாய் புலம்பல்.
அயலார் தம்மோடு நற்றாய் புலம்பல்.
பயிலிடந் தம்மோடு புலம்பல்.
நிமித்தம் போற்றல்.
சுரந்தணிவித்தல்.
தன் மகளின் மென்மைத் தன்மைக் கிரங்கல்.
இளமைத் தன்மைக்கிரங்கல்.
அச்சத்தன்மைக் கச்ச முற்றிரங்கல்.
கண்டோர் இரங்கல்.
செவிலி யாற்றத் தாயைத் தேற்றல்.
ஆற்றிடை முக்கோற் பகவரை வினாதல்.
மிக்கோ ரேதுக் காட்டல்
செவிலி †யெயிற்றி யோடு புலம்பல்.

† பாலை நிலப்பெண்.

செவிலி ‡ குரவொடு புலம்பல். ‡ குராமரம்.
செவிலி சுவடு கண்டிரங்கல்.
கலந்துடன் வருவோர்க் கண்டு கேட்டல்
கலந்துடன் வருவோர் புலம்பறேற்றல்.
புதல்வியைக் காணாது கவலை கூர்தல்.

கற்போடு புணர்ந்த கவ்வை

முற்றிற்று.

ஐம்பத்து மூன்றும் நாள் செய்கை

முடிந்தது.

V. மீட்சி.

மீட்சி:— செவிலி தலைமகளைக் காணாது மீளுதல். உடன் சென்ற தலைவனும், தலைவியும் மீண்டு ஊர் வந்து சேர்தல்

பல இடங்களில் தேடியும் தலைவியைக் காணாமையின் கவலையுற்று வீடு திரும்பிய செவிலி நற்றாய்க்கு அதைத் தெரிவித்தனள். தலைவர் இருவரும் தலைவியின் ஊர் நாடித் திரும்பினர். இளமையில் தலைவி மகிழ்ந்திருந்த சோலையையும், பாவைவைத்து விளையாடிய சிற்றில்லங்களையும் தலைவனின் கரங்கள் தலைவிக்குச் சுட்டிச் சுட்டிக் காட்டின. தங்கள் வரவைப் பாங்கியர்க்குத் தெரிவிக்குமாறு தலைவி முன் செல்வோரிடம் செய்தி அனுப்பினள். அச் செய்தியை உணர்ந்த பாங்கியர் உள்ளம் ஆநந்தக் கடலிலாழ்ந்தது. வீரன் பின் சுரத்தில் சென்ற மங்கை தம்மூருக்குத் திரும்பி வந்த சந்தோஷச் செய்தி நற்றாய்க்குத் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் தன்னில்லிலே வந்து மணஞ் செய்து கொள்ள வேண்டுமென்பது நற்றாயின் விருப்பம். ஆதலின் நற்றாய் வெறியாளனைப் பார்த்து “ தலைவன் என் மகளை என் வீட்டிற்கு அழைத்து வருவானா ? அன்றி அவன் ஊருக்கே அழைத்துப் போவானா ? ” என்று கேட்டாள்.

துறை:—

தலைவி ‡ சேணகன்றமை செவிலி தாய்க்குரைத்தல். ‡ சேண்—தூரம்

தலைவன் தம்மூர் சார்ந்தமை சாற்றல்.
முன் செல்வோர் தம்மோடு தான் வரல்.
பாங்கியர்க்குணர்த்தி விடுத்தல்.
முன் சென்றோர் பாங்கியர்க்குரைத்தல்.
பாங்கியர் கேட்டு நற்றய்க்குரைத்தல்.
நற்றய் கேட்டவனுளங் கோள வேலனை வினுதல்.

மீட்சி
முற்றிற்று.

ஐம்பத்து நான்காம் நாள் செய்கை
முடிந்தது.

VI. தன் மனை வரைதல்

தன் மனைவரைதல்:— உடன் போய் மீண்டு வந்த தலைவன் தலைவியைத் தன் ஊருக்கு அழைத்துப் போய்த் தன் மனையின் கண் வரைந்து கோடல்.

தன் அருஞ் செல்விக்குத் தன் மனையிலேயே மணம் செய்தல் வேண்டும் என்பது செவிலியின் ஆர்வம். ஆதலின் அவள் தோழியை நோக்கி "மணத்திற்குச் செய்யவேண்டிய சடங்குகள் சில, முன்னரே தலைமகன் வீட்டில் செய்திருந்தாலும் இப்போது நம் வீட்டிற்கு வந்து மணம் செய்யுமாறு தலைவனின் தாயிடம்

இயம்புவாயாக" என்றனள். முன்னரே அவர்களிருவருக்கும் நல்லநாளில் தலைவன் வீட்டில் மணம் முடிந்ததைத் தோழி செவிலிக்கு அறிவித்தனள். இச்செய்தி நற்றாயும் அறிந்தனள். மணமக்கள் இருவரும் தலைவியின் ஊரை அடைந்தனர். தலைவன் தாங்கள் மணம் செய்து வந்ததைத் தலைவியின் தமருக்குத் தெரிவிக்குமாறு தோழியிடம் செப்பினன். "நீர் உம் சுற்றத்தார் முன் தலைவிக்குச் செய்த மாங்கல்ய தாரணத்தை முன்னரே எம்மனோர்க்குக் கூறியுள்ளேன்" எனத் தோழி விடையிறுத்தனள்.

துறை:—

நற்றாய் மணமனையர் வேட்கையிற் செவிலியை வினாதல்.

செவிலிக் கிதனை வரைந்தமை யுரைத்தல்.

தோழி, வரைந்தமை செவிலிக்கும் நற்றாய்க்கும் உரைத்தல்.

தலைவன் பாங்கிக்கு யான் வரைந்தமை நுமர்க்கி யம்பு சென்றேன்றல்.

பாங்கி தானது முன்னே சாற்றியதுரைத்தல்.

தன்மனை வரைதல்

முற்றிற்று.

VII. உடன்போக்கிடையீடு.

உடன்போக்கிடையீடு:—தலைவனும் தலைவியும் உடன் சேர்ந்து செல்லுகையில் நிகழும் தடை.

தலைவி தலைவனுடன் செல்லுகின்றனள் என்பதையுணர்ந்த தலைவியின் தமர் அவர்களைத் தொடர்ந்து செல்ல அவர்களுடன் எதிர்க்க மனமற்ற தலைவன் அவளை விட்டு நீங்குவான். அது தலைவிக்குத் துன்பத்தை விளைவிக்கும்.

தம் ஊரை விட்டுத் தலைவனுடன் செல்லும் கிழத்தித் தன் செலவைப் பாங்கியர், தாய் முதலியோருக்கு உணர்த்துமாறு, வழி போவாரையும், அந்தணரையும் வேண்டினள். தன் மகள் ஒரு சேவகன் பின் சென்றதை அந்தணரால் அறிந்த தாயின் மனம் வருந்திற்று. அவன் வாயிலாகத் தமர் அறிந்தனர். அவர்களுக்குச் சினம் மூண்டது. அவர்கள் ஆயுதங்களைத் தாங்கிப் பின் தொடர்ந்தார்கள். அக் கூட்டத்தின் தொடர்பு தலைவிக்கு அச்சத்தை உண்டாக்கிற்று. அதை அவள் தலைவனுக்குத் தெரிவித்தனள். தலைவன் தலைவியை நோக்கி "நுண்ணிய இடையை யுடையாய் வருந்தலை, நம்மைத் தொடர்ந்து வருபவர் வேடராயின் என் ஓரம்பே அவர்களைக் கொன்று குவிக்கும். உன் தமராதலின் அவர்கள் முன் செல்ல என் மனம் அஞ்சுகின்றது. நீ என்னுடன் வருதலை நிறுத்திக் கொள்ளலே தகுதி" எனக்கூறி அவர்களிடம் தலைவியை விடுத்துச் சென்றனன். அது தலைவிக்குப் பெருந் துக்

கத்தை விளைத்தது. தமரை வந்தடைந்த தலைவி அவ்வீரன் தன்னை விட்டுப் பிரிந்ததை நினைந்து நினைந்து வருந்தினள். அவள் நா அவன் நீடூழி வாழவேண்டுமென வாழ்த்திற்று.

துறை:—

தலைவி பாங்கியர் தமர்க்குத் தன் செலவுணர்த்தி விடுத்தல்.
தலைவி தன்செலவு ஈன்றட்குணர்த்திவிடுத்தல்.
நற்றாய்க் கந்தணர் மொழிதல்.
தமர் தன் பின் சேறலைத் தலைவி தலைவற் குணர்த்தல்.
தலைவியைத் தலைவன் விடுத்தல்.
தலைவியவன் புறம் நோக்கிக்கவன்றுற்றல்.

உடன்போக்கிடையீடு
முற்றிற்று.

ஐம்பத்து ஐந்தாம் நாள் செய்கை
முடிந்தது.

ஐம்பத்தாறும் நாள் தலைவன் மீண்டும் தலைவியின் இல்லை நோக்கி வந்தான். தலைவியின் தமர் தலைவனை எதிர் கொண்டழைத்து வந்து வேண்டுவன ஈந்து அந்தணரையும், சான்றோரையும் முன்னிட்டு இருவருக்கும் மண முடித்தனர். அப் பெருவிழாவைக் கண்

8

டோர், "இவன் திருமாலை யொப்பான், இவள் திரு மகளை யொப்பாள், இவரைப் போன்று ஒத்த மணமக் களைக் காணல் அரிது" எனப் புகழ்ந்து மகிழ்ந்தனர்.

துறை:—

சென்றேன் மீண்டு வந்து அந்தணரையும் சான்றோ
ரையும்
முன்னிட்டு வரைந்து கொண்டுழிக் கண்டோர்
மகிழ்ந்து கூறல்.

வரைவியல் முற்றும்.

கற்பியல்.

கற்பியல்:—கற்பிக்கப்படுவதெதுவோ அது கற்பெனப்படும். பெண் மகள் ஒருத்தி பேதை, பெதும்பைப் பருவங்களைக்கடந்து மங்கைப் பருவத்தையடைந்து வீரம், ஆண்மை வாய்ந்த ஓர் ஆண் மகனை மணந்து ஒரு புதிய வீட்டிற்குச் செல்லுவள். அங்குத் தான் இதுகாறும் பழகியிராத புதியோர் பலர் நிறைந்திருப்பர். தான் கண்டும், கேட்டும் இராத பழக்க வழக்கங்கள் சில அவண் நடையாடும். இம்முறையில் அக் குடும்பத்திற்குப் புதியளாய்ச் செல்லும் பெண்மணிக்கு அவர்களுக்கேற்ப ஒழுகுமாறு அறிவும், ஆசாரமும் நிரம்பியிருத்தல் வேண்டும். அவற்றை இரு முது குரவரும், செவிலியும், அந்தணர் முதலிய சான்றோரும், தலைவரும் அவளுக்குக் கற்பிப்பர். ஆதலின் இது கற்பியல் எனப் பெயர் பெற்றது.

முன்பு "தன் மனை வரைதல்" என்னும் துறையில் தலைவன் தலைவியைத் தன் மனையில் வரைந்து கொண்டதைத் தோழியால் தலைவியின் தமர் அறிந்தனர் எனவும், பின்பு மணமக்கள் இருவரும் தலைவியின் வீட்டிற்குத்தோழியால் அழைத்துச் செல்லப் பட்டனர் எனவும்

கூறியுள்ளோம். அதன் பிறகு அவரிருவரும் சேர்ந்து இல் வாழ்க்கையை நடத்துவர். இஃதொரு விதம்.

உடன் போக்கு இடையீடு :— தலைவன் தலைவியைத் தன் வீட்டில் வலரந்து கொள்ள சுரத்தின் வழியே கொண்டு போகையில் தலைவியின் தமர் மறுக்கத் தலைவன் தலைவியை தமரிடம் விட்டுச் செல்லுவன். பின்பு தலைவியின் கற்பு நிலையை உணர்ந்த தமர் இருவருக்கும் மணத்தை நிகழ்த்துவர். அதன் பிறகு இருவரும் இல் வாழ்க்கையை நடத்துவர். இஃதொரு விதம். ஆக இவ்விருவழியின் முடிவும் இல்வாழ்க்கையே ஆகும். ஆதலின் இனி இல்வாழ்கையைப் பற்றிப் பேசுவாம்.

I. இல்வாழ்க்கை.

இல்வாழ்க்கை:— தலைவனும் தலைவியும் இல்லின்கண் வாழும் வாழ்க்கையைக் கூறல்.

தலைமகன் தோழியை நோக்கி "யான் இவ்வழகிய நங்கையை அடைதற்கு உன் உதவியே காரணம்", எனத் தலைவியின் முன் அவளைப் புகழ்ந்துரைத்தான். அது தோழிக்கு நாணத்தை விளைத்தது. ஆதலால் தோழி, "இவ்வமயம் என்னையும், எம் குலத்தையும், இத் தலைவியையும் காத்தருளிய உம்மையே யான் புகழ்தல் வேண்டும் எனக் கூறி, நீவிர் இருவரும் பல்லூழி வாழ்வீராக" என மணமக்களை வாழ்த்தினள். தலைவர் இருவரும் ஈருடலும் ஓருயிருமென வாழும் நேர்மை

தோழிக்குப் பெரும் மகிழ்வை யூட்டிற்று. ஆதலின் தோழி தலைவியை நோக்கி, "இத்துணை அன்போடுங் கூடிய நீ பிறரால் தூற்றப்பட்ட அலர் மாலையையும், பொருள்தேடச்சென்ற தலைவரின் பிரிவு பாரத்தையும் தாங்கி எங்ஙனம் ஆறியிருந்தாய்" என வினவினள். அப்பெருந் துக்கக்கடல்களைத் தலைவரின் கருணைத்தெப் பத்தைக்கொண்டு தான் நீந்திக்கொண்டிருந்ததைத் தலைவியின் நா தோழிக்குத் தெரிவித்தது. இதுவும், தலைவியை மணப்பதற்கு முன்பு தலைவன் ஆற்றியிருந் ததும் தோழிக்குப் பெரும் வியப்பை யுண்டாக்கின. மணமக்கள் இருவரின் அன்பு திறத்தையும், அவர்கள் இல்லறம் நடாத்தும் மாண்பினையும் தோழி செவிலிக்கு அறிவித்தனள். அப்பெருமிதத்தைக் காணச் செவிலி தலைவன் வீடு போந்தனள். மணமக்களின் ஒற்றுமை யும், காதற்பிணிப்பும், அவர்கள் இல்லற மாண்பும் அவளை ஆனந்தத்திலாழ்த்தின. அருந்ததியும் தோல் வியுறத் தன் மகள் மேற்கொண்டிருக்கும் கற்பொ ழுக்கத்தையும், அவள் கணவன் மாட்டுக் கொண் டுள்ள காதற் சிறப்பையும் செவிலி நற்றாய்க்குப் பாராட் டிக் கூறினள்.

துறை:—

தலைவன் தலைவிமுன் பாங்கியைப் புகழ்தல்.
தலைவனைப் பாங்கி வாழ்த்தல்.
வருந்தாதிருந்தமை பாங்கி தலைவியை வினாதல்.
தலைமகள் காரணங்கூறல்.

பாங்கி தலைவனை நிலைபெற வாழ்த்திய நிலைமை வினுதல்
பாங்கி செவிலிக்குஇருவரன்பு முரைத்தல்.
பாங்கி செவிலிக்கு வாழ்க்கை நலமுரைத்தல்.
தலைவி கற்பியல் செவிலி நற்றய்க்குணர்த்தல்.
செவிலி நற்றய்க்கு நன்மனை வாழ்க்கைத் தன்மை கூறல்.
செவிலி நற்றய்க்கிருவர் காதலுமறிவித்தல்.

இல்வாழ்க்கை
முற்றிற்று.

II. பரத்தையிற் பிரிவு.

பரத்தையிற் பிரிவு:—தலைவன் பரத்தைமேல் காதல் கொண்டு தலைவியைப் பிரிந்து பரத்தையர் சேரிக்கு ஏகுதல்.

அறிவுடையோர் பலரும் புகழ இல்லறம் நடைபெறுங்கால் தலைவனுக்குப் பரத்தைமேல் காதல் சென்றது. அதன் பொருட்டுத் தலைவியை விட்டு நீங்கிப் பரத்தையர் சேரிக்குச் சென்றான். அங்ஙனமாயின் தலைவன் அறிவிலன், தலைவிமாட்டு அன்பிலன் எனக் கருதற்கு இடந்தாராதோ என்னில், அற்றன்று. அவன் அரசனாதலின், தன்னரசுரிமையில் மணத்தற்குரிய பரத்தையர் சிலரும், மணத்தற்குத் தகாத சேரிபரத்தையர் பலரும் இருப்பர். அவர்க

ளுள் சிலர் பிறந்தநாள் தொட்டு இவன் வரிப்பதற்கெனவே வகுக்கப்பட்டிருப்பர். அத்தகையோரை நீக்குதல் தலைவனுக்குத் தகுதியுடையதன்று.

இன்னும் மன்னனுக்குப் பெண்கள் ஆடல் பாடல்களைக் காணல் தன் அரசியலில் ஒன்றாகும். அதற்கு உரியவர் பரத்தையரே. அவ்வமயம் அவர்கள் மாட்டு அவனுக்கு மனஞ் செல்லல் இயல்பு. இம்முறைகளினால் தலைவன் பரத்தையிற் பிரிய நேரிடும். இது குற்றமாகாது. இது நிற்க.

இல்வாழ்க்கை நிகழ்ந்து வருங்கால் கீழ் குறித்த காரணங்களினால் தலைவன் பரத்தையரை நாடிச் சென்றான். இதைக் கண்டோர், 'இது தலைவிக்குப் பிணக்கையுண்டாக்குமே!' என இரங்கினர். தலைவனின் பிரிவு தலைவியைத் துன்பக்கடலில் ஆழ்த்தியது. "இவ்விரவும் என் கண்ணீரும் புலர்வது எப்போதோ அறியேன்! என்னைப்போன்று இவ்விரவில் உறக்கமின்றி இமையாமலிருப்பவர் ஒருவருமிரார்" எனப் பெரிதும் தலைவி வருந்தினள். மறுநாள் தலைவியை நோக்கி வந்த தோழிக்குத் தலைவியின் நிலை பரிதாபத்தை யுண்டாக்கிற்று. காரணமென்னவென அவள் தலைவியை வினவினள். தலைவி தலைவனின் புறவொழுக்கத்தைத் தோழிக்குத் தெரிவித்தனள். "கற்பிலக்கணத்திலிருந்து வழுவாமல் இல்லறத்தைக் காத்தலே நம் கடமை யன்றி, தலைவரின் புறவொழுக்கத்தை வெளிப்படுத்தல் முறை

யன்று" எனத் தோழி தலைவிக்குப் புத்தி புகட்டினள்.

தலைவன் பரத்தையர் வீட்டில் இருக்குங்கால் தலைவிக்குப் பூப்பு நேர்ந்தது. அதைத் தலைவனுக்குத் தெரிவிக்கத் தலைவி ஒருத்தியைச் செம்மலர், செவ்வாடை, செவ்வணிகளால் அலங்கரித்துத் தலைவன் இருக்கும் இடத்திற்கு விடுத்தனள். இஃது அக்கால வழக்கு. "இச்செயல் பரத்தையர்க்குப் பொறுமையை யுண்டாக்குமாதலால் அம்மடந்தையர் தலைவியை இன்னும் அதிகமாய்ப் பழிப்பரே" எனப் பாங்கியருக்குத் துன்ப முண்டாயிற்று. அங்ஙனமே அச்சேரியர், "நாணம் முதலிய அகவணிகளை யொழித்துப் பொற்றொடி முதலிய புறவணிகளை யணிந்த இம்மடக்கொடி இச்சேரியில் வந்து தோன்றினள். இவள் பெண்மைக் குணங்கள் யாவும் பறந்தன போலும்" எனச் சென்ற அம்மடந்தையைப் பரத்தையர் நாபழித்துப் பேசியது. தலைவி பூப்படைந்து நீராடியபின் ஈராறு நாட்கள் தலைவன் தலைவியுடன் இருக்க வேண்டுமென்பது பண்டைய உலகியல்பு. அதை நன்குணர்ந்த பரத்தையர் தலைவனைத் தலைவியின் பால் விடுத்தனர்.

அவர் செல்கை தலைவியின் இல்லத்தை நோக்கிற்று. அவர் வரவைப் பாங்கி தலைவிக்குத் தெரிவித்ததுடன், குற்றத்தை மனங் கொள்ளாமல் அவரை அன்புடன் எதிர்கொள்ளலே தகுதி யெனவும் அறிவு

புகட்டினள். வந்தவரை மகிழ்வுடன் வரவேற்கத் தலைவியின் மனம் தீர்மானித்தது. அங்ஙனமே அவரைப் பணிவுடன் வரவேற்றனள். இருவர் உவகை கடலினும் விஞ்சியது. அவர்களின் கூட்டுறவு கண்டோரின் கண்களைக் களிக்கச்செய்தது.

பின்னாளில் மீண்டும் தலைவன் பரத்தையரை நாடிச் சென்றான். தலைவிக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. அச்செய்தியைத் தலைவனுக்குத் தெரிவிக்கத் தலைவியின் மனம் விழைந்தது. ஆதலின் அவள் வெள்ளைமலர், வெள்ளாடை, முதலியன அணிந்த சேடி ஒருத்தியைத் தலைவன் பால் விடுத்தனள். முதலில் இக்குறியைத் தலைவன் அறிந்துகொண்டானில்லை. ஆனால் அவளைக் கண்டவுடன் தலைவியிடம் செல்ல வேண்டுமென்ற ஆர்வம் அவனை உந்தியது. ஆகவே அவன் வந்த தோழியை நோக்கி “உன் தலைவி என்னை மறுக்காமல் ஏற்றுக்கொள்ளுமாறு செய்வாயாக” எனக் குறை யிரந்தான். தோழி, தலைவி உலகம் புகழப் பாலனைப் பெற்று நெய்யாடியதைத் தலைவனுக்குத் தெரிவித்தனள். தலைவன் மனம் பெரிதும் மகிழ்ந்தது. தலைவனுக்கு, முதன் முதல் தலைவியைக் கண்டதைக் காட்டினும், இவ்விஷயத்தைக் கேட்ட போது அவள் மாட்டுக் காதல் மிகுந்தது. அவன் தலைவியை நோக்கிச் சென்றான். பிள்ளையைக் காணும் அவா உந்த விரைந்து சென்ற தலைவனின் வரவைத் தோழி தலைவியிடம் செப்பினள். பரத்தையர் மாட்டு

அன்பு செலுத்தி இன்புற்ற தன் இல்லக் கிழவன் மாட்டுத் தலைவி சினங்கொண்டு பிணங்கினள்.

தலைவன் பாணனைத்† தூது விடுத்தான். தூது வந்த பாணனைத் தலைவியின் சொற்கள் இழிவு படுத்தின. அவனைப் போ போ எனக் கூறி அவன் மேல் கல்லெறிந்தனள். "அவருக்கு நீரும், உமக்கு அவருமே ஏற்றவர். யான் செய்த குற்றத்திற்கு இக்கல்லெறிதலே எனக்குத் தகுந்தது" என அப்பாணன் பகர்ந்து, தலைவியின் பிணக்கைத் தலைவனிடம் சென்றுரைத்தான். பின்பு தலைவி, தலைவன் விடுத்த விறலியையும் (விறல்—சத்துவநிகழ்ச்சி உடலிற் புலப்பட ஆடுபவர்; பாடன் மகடூ) பாங்கியரையும், பாணனைப்போன்றே மறுத்தனள். அவ்வமயம் தலைவன் மனம் ஒன்றுந் தோன்றாது தியங்கிற்று. ஆனால் நற்காலமாக விருந்தொன்று அவனை நோக்கி வந்தது. அவ்விருந்தை யழைத்துக் கொண்டு தலைவன் உட்போந்தனன். விருந்தினரைக் கண்டவுடன் தலைவி தன் பிணக்கை ஒதுக்கி அவ் விருந்தினரை இன் முகத்துடன் உபசரித்தனள். தலைவன் நெஞ்சம் மகிழ்ந்தது. "ஊடலினால் சிவந்த நம் தலைவியின் விழியைக் குளிரவைத்தற்கு விருந்தொன்று வரப்பெற்றது யாம் செய்த மாதவப் பயனே" எனத் தலைவன் தனக்குள்ளே சிந்தித்து உவகை பூத்தனன்.

---

† பாணர்—சங்கீதம் பாடிப் புகழ்வோர்.

பின்பு தலைவன் தலைவியை யணுகினன். அவ்வமயம் அவள் பிணக்குத் தலைகாட்டிற்று. தலைவன், "மலர்த்திருவை யொப்பாய்! நீ காரணமின்றி ஊடுதல் சிறிதும் தகுதியன்று. அங்ஙனம் என்னிடம் ஏதேனும் குற்ற முண்டாயிருப்பினும் சிறியோர் செய்பிழை பெரியோர் பொறுத்தல் மரபன்றோ! அம்முறையில் என்னைப்பொறுக்க உன்னைத் தொழுகின்றேன்" எனப் பணிவுடன் இயம்பினன்.

தலைவி:—வண்மை வாய்ந்த மன்னரே, என்னை அன்புடன் நினைத்தலை யொழித்த உம் நெஞ்சமும், நீரும் என் பாதம் பணிதலை, உம் கண்ணனைய என் தங்கையராகும் பரத்தையர் அறிந்தால் உமக்குத் தீங்கை விளைப்பர்.

தலைவன்:— நீ சுற்றம் பாராட்டிக் கூறும் பரத்தையர் யார்? அத்தகையோர் ஒருவரையும் யான் இதுகாறும் அறிந்திலேனே இது வியப்பினும் வியப்பே!

தலைவி :— நம் அருமைக் குழந்தை வீதியிற் போய்த் தனியே விளையாடுங்கால், அங்குச் சென்ற ஒருத்தி அக்குழந்தையை எடுத்தணைத்து முத்தமிட்டுச் சென்றாள். அதைக் கண்ட அங்குள்ளார், இவள் அன்னியள் அன்று. இவள் தான் இக்குழந்தையின் சிற்றன்னை என்றனர், இம் முறையில் உம் களவு ஊர் முழுதும் அறிந்துள்ளது.

தலைவன்:— அவர்கள் வார்த்தையை நீ நம்புதல் தகுதியுடைய தன்று. நம் ஒற்றுமையில் அழுக்காறு கொண்டவரே அங்ஙனம் பகர்ந்திருத்தல் வேண்டும்.

தலைவி:—அஃதொன்றுமேயன்று. மற்றொரு நாள் தெருவில் விளையாடிக் கொண்டிருந்த புதல்வனை அவள் தழுவி யெடுத்தலைக் கண்ட யான், "நீ அயலாளல்லள், நினக்கு இவன் மகனே, நீ இவனுக்குத் தாயே, ஆகலின் இவன் மாட்டு நினக்கு அன்பு செல்லுதல் இயல்பே" எனக் கூறினேன். அம்மொழிகள் அவளுக்கு நாணத்தையுண்டாக்கின. விடை யொன்றும் பகர இயலாது, மிறள, மிறள விழித்து நின்றாள். இதனாலும் அவளை என் தங்கையென உணர்ந்தேன்.

தோழி:— சித்திரப் பாவையன்ன செல்வியே, ஒன்னலர் பலரும் தம்மடி வணங்கிப் போற்றும் வீரத் தலைவன் நின்னைப் பணிந்து இரக்கும் தன்மையைச் சிறிதும் கருதுகின்றாயில்லை. சிவபிரான் இடதுபக்கத்தை நீங்காமலிருக்கும் அம்பிகையும், அவன் கங்கையைத் தழுவித் தன் சடைமேல் வைத்துள்ளதைப் பொறுத்திருக்க வில்லையோ? ஆதலின் உன் பிணக்கை நீக்கித் தலைவனோடு அளவளாவுதலே நலம்.

அப்போதும் தலைவி பிணக்கிலிருந்து நீங்கினாளில்லை. அது தலைவன் மனத்தைப் புண் படுத்திற்று.

ஆதலின் அவன் தன் நெஞ்சைப் பார்த்து, "நெஞ்சே! ஒரு கால், புட்களும் வாழாத பாலையின்கண் நம்மோடு போந்தவளல்லள் இவள். இவள் இயற்கைத் தத்து வமும், நம் மாட்டுச் செலுத்திய அன்பும் மாறுதல டைந்தன. ஆதலின் இவளுடைய பழங்காதலை நினைத்து வருந்தற்க" எனக் கூறிக் கொண்டே தானும் பிணங் கினன். இது தோழியை வருத்திற்று. அவள் தலை வனை நோக்கி, "எம்மதிமுகத் தலைவியின் இன்பத்தை ஒரு கால் அமுதெனக் கருதி நீங்காத நீர் இப்பொழுது பரத்தையர் மேல் வைத்த அன்பினால் எம் தலைவியை நஞ்செனக் கருதுகின்றீர். இஃது ஒரு காலும் உமக்கு ஏற்றதன்று'' என்றனள். அதைச் செவியில் ஏற்றுக் கொள்ளாத தலைவன் தேரூர்ந்து பரத்தையரிடம் செல்லுங்கால், தேர்ந்தெடுத்த அணிகளை யணிந்த தன் மகன் குறு நடை நடந்து குறுக்கிட்டனன். அத் தோற்றம் அவன் மனத்தைக் கரைத்தது. தலைவன் தன் அரும்புதல்வனைத் தழுவித் தாங்கிக் கொண்டு வீடு வந்தனன். வந்த தலைவனைக் கண்டவுடன் தலைவி யின் ஊடல் நீங்கிற்று. இருவரும் இன்பமனு பவித்து மகிழ்ந்தனர்.

தலைவன் வெளிச் சென்ற பிறகு தலைவி, தன் தோழியைநோக்கி, "புதல்வர், தம் பெற்றோர்க்கு இம்மை மறுமைப் பயன்களைத் தருவர் எனக்கலைகள் கழறும் அவ்விரு பேறுகளையும் நம் மைந்தன் நமக்கு இப்பிறப் பிலேயே ஈந்தான். பரத்தையர்ச் சேரிக்குச் செல்லும்

நம் தலைவரின் தேரை, நம் செல்வப் புதல்வனின் இளமை யழகும், தளர் நடையும் தடுத்தன. அவன் குறுநடையே அவரை நம் வீட்டிற் குக் கொணரும் தூதாக நின்றது" எனத் தன் மகனைப் புகழ்ந்து, "என் தலைவர் பழைய அன்பில் குறைந்தாரில்லை, கணவனினும் நெருங்கிய சுற்றமில்லை என்னும் பெரியோர் வாக்கின் பெருமை இன்றே எனக்கு விளங்கிற்று" எனத் தன் கணவரையும் பாராட்டிப் பேசினள். "தலைவன் செய்த குற்றங்களைப் பொறுத்து அவனை ஏற்றுக் கொண்டமையின், உயர்குல மங்கையர் கற்பிலக்கண மெல்லாம் ஒருருவாகத் திரண்டு வந்த தெனக் கூறும் தன்மையள் நீயே! உன்னைப் போன்ற கற்புத் திலகத்தை இவ்வுலகின் கண் காணல் அரிதினுமரிது" எனத் தோழி தலைவியைப் பாராட்டினள்.

பரத்தையிற் பிரிவு
முற்றிற்று.

III. ஓதற் பிரிவு

இங்ஙனம் இல்லறம் நடை பெறுங்கால் உயர் குலத்திலும், சீரிய ஒழுக்கத்திலும், மெய்யறிவிலும் துறை போய அத்தலைவனுக்குத் தெள்ளிதின் அறம், பொருள், இன்பம், வீடு முதலிய பேறுகளை உணர்த்தும் நூல்களில் வல்லோர் பரதேயத்திருப்பரேல் அவர்

களைக் காண வேண்டுமென்னும் அவா விஞ்சும். அவன் அவண் சென்று அவரை வென்று தன் ஞானத்தை நிலைநாட்டலே தான் கற்றதின் பயன் என்னும் கருத்துடையவனாவான். அதன் பொருட்டு அயல் நாடு செல்வன்.

ஓதற் பிரிவு
முற்றிற்று.

IV. காவற் பிரிவு.

நாட்டிலிருந்து தன் நகரத்திற்கு வந்து முறை இயம்ப இயலாத மூத்தோர், பெண்டிர், மூடவர், கூனர், குருடர், பிணியுடையோர் பலருடைய குறைகளைத் தீர்த்தற்கும், வளமற்ற இடங்களைத் தக்க முயற்சியினால் வளம் படுத்தற்கும், சாலை, அம்பலம் இவற்றை ஆராய்தற்கும், தாயைக்கண்ட சேய் இன்புறுதல் போன்று தன் குடிகள் தன்னைக்கண்டு குதுகுலித்தற்கும் தலைவன் தலைவியை விட்டுப் பிரிவன்.

காவற் பிரிவு
முற்றிற்று.

V. தூதிற் பிரிவு.

வேறு அரசர் இருவரும் மனம் வேறுபட்டு 'நாளையே பொருதற் கெழுவோம'' எனத் தீர்மானித்துக் கொண்டிருக்குங்கால், அப் போரினால் நிகழப் போகும் உயிர்ச்சேதத்தையும், பொருள் நஷ்டத்தையும் உன்னிய அருள் நிறைந்த இவ்வரசனின் மனம் துன்பப்படும். அவ்வமயம் இவன் தூதுவனைப்போல் சென்று இருவரையும் இரந்து சந்தி செய்து வைப்பன்; இன்னும் தேவருக்கும், அசுரருக்கும் பகை நேர்ந்த போது, 'மிக்க குற்றம் செய்தாரை யான் ஒறுப்பன்' எனப் படையுடன் சென்று இரு திறத்தாரையும் அடக்கிச் சமாதானத்தை உண்டாக்குவன்.

தூதிற் பிரிவு
முற்றிற்று.

VI. துணைவயிற் பிரிவு.

தன் உயிர் நண்பனாகிய வேந்தன் ஒருவனுக்குப் பகைவேந்தர் இடையூறு இழைத்தவழி, நட்பின் மிகுதியால் அவனுக்கு உதவி புரிதல் பொருட்டுத் தலைவன் தானே செல்லுவன்.

துணைவயிற் பிரிவு
முற்றிற்று.

VII. பொருள்வயிற் பிரிவு.

தன் முதுகுரவரால் திரட்டப்பட்ட பொருள் மிகுந்திருப்பினும், அதைக்கொண்டே தன் வாழ்க்கையை நடத்தல் ஆண்மையன்று என்பது தலைவனின் எண்ணம். அன்றியும் "நம் முயற்சியினால் தேடிய பணத்தைக்கொண்டே தேவர், பிதிர் கடனாற்றல் வேண்டும். தாயப் பொருளால் செய்யும் கடன்களில் அவர்கள் இன்புறுதல் இல்லை. நம் முயற்சியினால் வந்தது சிறிதெனினும் அதுவே சிறந்தது. போனகமென்பது தாளுழந்துண்டலன்றோ!" என்பவற்றை மனத்துட்கொண்ட அறிவுடைத்தலைவன் பொருள் தேடற் பொருட்டுத் தலைவியை விட்டுப் பிரிவன்.

பொருள் வயிற் பிரிவு
முற்றிற்று.

இங்ஙனம் பல துறைகளில் பிரியவேண்டியமை தலைவனுக்கு ஏற்பட்டபொழுது அவன் அவற்றைத் தோழிக்குத் தெரிவித்துத் தான் திரும்பி வருங்கால அளவையும் அவளுக்குக் குறிப்பிப்பான். அச்செய்தி தோழியைத் திடுக்கிடச்செய்யும். தலைவன் பிரிவினால் தலைவிக்கு நேரக்கூடிய துன்பத்தை அவள் தலைவனுக்கு வெளிப்படுத்துவள். தன் பிரிவின் இன்றிய

மையாமையைத் தோழிக்கு எடுத்தியம்பித் தலைவன் செல்வன். வேறு வகையறியாத தோழி அந்தந்தக் காலத்தில் தலைவன் பிரிவைத் தலைவிக்குத்தெரிவிப்பள், அது தலைவியைப் பெரிதும் வருத்தும்.

இம்முறையில் தலைவன் ஓதற் காரணமாகப் பிரிந்திருக்குங்கால் இடியுடன் மேகங் கலந்த கார்ப் பருவம் வரும். அவ்வமயம் " தாங்கற்ற கல்வியினு லாய கீர்த்தி வித்தைக் கற்றோர் முன் விதைக்கச் சென்ற என் காதலர் இப்பருவத்திலும் வந்தாரில்லையே'' எனத் தலைவியின் மனம் புண்படும். அவன் பார்த்த நிலத்தைக் காவல் செய்ய சென்றிருக்குங்கால், கூதிர் காலம் வரும், " வாடைக்காற்று என் மீது வீசி வருத் தும் போதும், பிரிந்த தலைவரைப் பெற்றிலேனே '' எனத் தலைவி வருந்துவள். தலைவன் தூதின் காரண மாக நீங்கியபோது முன்பனிக்காலம் வரும். அதைக் கண்ட தலைவி " மெலிந்த நெஞ்சினையும் வெளுத்த உட லையும் உடைய என்னை விட்டுச்சென்றவர் முன் பனிக் காலம் வந்தும் முகம் காட்டிலரே, இஃது என் ஊழ் வினையோ ! என் செய்வேன் " எனத் தலைவி மனங் கசிவள். தலைவன் தன் நட்பினருக்குத் துணை புரிய சென்றிருக்குங்கால், பின்பனிக் காலம் வரும். அதை நோக்கிய தலைவி " ஞாயிற்றின் சாயலையும், காண் பதற் கரிதாயுள்ள இவ் விருள்செறிந்த பின்பனிக்கா லத்தும் யான் படும் துன்பத்தை மாற்ற என் தலைவர்

வந்திலரே" எனத் தலைவி கண்ணீர் விட்டழுவள். தலைவன் பொருள்தேடச் சென்றிருக்குங்கால் "அரிய பொருளைத் தேடச்சென்ற நம் தலைவர் செங்கண் வாய்ந்த கருங் குயில் ஆரவாரிக்கும், இவ்விள வேனிற் காலம் வந்ததையும் அறிந்திலரே" என வாய்விட்டலறுவள். அவள் ஆற்ருமையைப் பொருத தோழி, தலைவியை நோக்கி "இந்தப் புயலும், கார் காலமும், முன் பனியும், பின் பனியும், தென்றலும், குயிலார்ப்பும் அவர் உன்னை நோக்கி வருகின்றனர் என்பதைக் காட்டும் அறிகுறிகளாகும். ஆதலின் நீ வருந்தற்க" என அவ்வக் காலங்களுக்குத் தக்கவைகளை முறையே பகர்ந்து தலைவியை ஆற்றுவிப்பள். இங்ஙனம் தலைவன் இவ்வைந்து காரணங்களில் ஒன்றையோ அன்றிப் பலவற்றையோ மேற் கொண்டு தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் ஊர் திரும்புங் கால் தலைவியின் மாட்டு அவனுக்குள்ள ஆர்வமிகுதியினுல், இளம்பிறைபோன்ற நுதலையும், மேகம் போன்ற கருங்குழலையும் உடைய தலைவியின் உருவெளித் தோற்றம் ஒன்று அவனுக்குத் தோன்றிற்று. அஃது அவனை வியப்பில் ஆழ்த்தியது. அவன் மனம் ஊர் செல்ல விரைந்தது. தலைவனின் உள்ள நிகழ்வை உணர்ந்த தேர்ப்பாகன் தேரை மிக்க விரைவாக ஊருக்குச்செலுத்தினன். அவ்விரைவு இருது பன்னனைக் குண்டினபுரத்திற்குச் செலுத்திய நளன் தேரின் விரைவையும் தோற்கடித்தது. இவ்விரைவு தலைவனை வியப்பிலாழ்த்திற்று. ஆதலின் தலைவன் பாகனைப்

பெரிதும் புகழ்ந்தான். தலைவன் வரைவைத் தோழி தலைவிக்குத் தெரிவித்தனள். இனி இவர்கள் வாழ்க்கை சிறப்புற நடைபெறும் என்பது தோழியின் கருத்து. தலைவி அன்புடனும், மகிழ்வுடனும் தலைவனை வர வேற்றனள். இங்ஙனமே ஒவ்வொரு பிரிவிலும் நிகழும்.

இறுதியில் ஒத்த அறிவும், ஒத்த எண்ணமும், ஒத்த அன்பும் பெற்ற மணமக்கள் இருவரும் இல்லறக் கடமைகளை வழுவாது நடாத்திப் பலருக்கும் உதவி புரிந்து இன்புற்று வாழ்ந்து வந்தனர். பேறுகளில் சிறந்த, அறிவறிந்த மக்கட்பேறும் அவர்களுக்குண்டாயிற்று. ஊருணி நீர் நிறைந்ததைப் போன்று அப்பேரறிவாளர் செல்வம் பலருக்கும் பயன்பட்டது. அத்தலைவன் இல்லத்திற்கு மங்கலமாகிய நற்குண, நற்செய்கையுடைய இல்லாளையும், நன்கலமாகிய நன்மக்கட் பேற்றையும் பெற்று தேவ போகத்தை யனுபவித்தான். அவனும் இல்லாள் அறிவுடையளாயின் அவ் வீட்டிற்குக் குறை யாது? என்பதைச் செய்கையிற் காட்டினன். இம்முறையில் தலைவர் இருவரும் இல்லறத்தை நடாத்தி துறவறத்தை யடைந்து பேரின்பத்தை எய்தினர்.

துறை:—

(i) தலைவன் தலைவிமுன் பாங்கியை புகழ்தல்.
தலைவனைப் பாங்கி வாழ்த்தல்.
வருந்தாதிருந்தமை பாங்கி தலைவியை வினுதல்.

தலைமகன் காரணங் கூறல்.
பாங்கி செவிலிக் கிருவரன்பு முரைத்தல்.
பாங்கி செவிலிக்கு வாழ்க்கை நலமுரைத்தல்.
தலைவி கற்பியல் செவிலி நற்றாய்க்குரைத்தல்.
செவிலி நற்றாய்க்கு நன் மனை வாழ்க்கைத் தன்மை கூறல்.
செவிலி நற்றாய்க் கிருவர் காதலையுமறிவித்தல்.

(ii) காதலன் பிரிவுழிக் கண்டோர் இத்தலைவியின் புலவிக்கு ஈது காரணம் என்றுரைத்தல்.
தனித்துழியிறைவி தனித்தழ திரங்கல்.
ஈங்கிது வென்னெனப் பாங்கி வினாதல்.
தலைவன் புறத் தொழுக்குத் தலைவியுணர்த்தல்.
தலைவியைப் பாங்கி கழறல்.
தலைவி *செவ்வணி யணிந்து சேடியை விடுத்துழி அவ்வணி † உழையர்கண்டழுங்கிக் கூறல்.
பரத்தையர்கண்டு பழித்தல்.
தலைமகன் வரவு கண்டுவந்து வாயில் கன் மொழிதல்.
பாங்கி தலைவிக்குத் தலைவன் வரவுணர்த்தல்.
தலைவனைத் தலைவி யெதிர் கொண்டு பணிதல்.
புணர்ச்சியின் மகிழ்தல்.
வெள்ளணி யணிந்து விடுத்துழித் தலைவன் வாயில் வேண்டல்.
தலைவி நெய்யாடிய திதலை சாற்றல்.
தலைவன் தன் மனத்துவகை கூர்தல்.

---

* செவ்வணி — சிவந்த பூ முதலியன.
† உழையர் — அணுக்கர்

பாங்கி தலைவிக்குத் தலைவன் வரல் சாற்றல்.
தலைவியுணர்ந்து தலைவனோடு புலத்தல்.
தலைவி தலைவன் விடுத்த பாணனை மறுத்தல்.
பாணன் கூறல்.
தலைவி விறலி வாயின் மறுத்தல்.
விருந்தோடு வந்துழித் தலைவி பொறுத்தல் கண்டு தலைவன் மகிழ்தல்.
ஊடல் வெளிப்படநோக்கித் தலைவன் சீறேலென் றவள் சீறடி தொழல்.
இஃதெங்கையர் காணினன்றன்றென்றல்.
அங்கவர் யாரையுமறியேனென்றல்.
தலைவி காமக்கிழத்தியைக் கண்டமை பகர்தல்.
பாங்கி தலைவி புலவிதணித்தல்.
தலைவிபுலவிதணியாளாகத் தலைவனூடல்.
பாங்கி தலைவனை யன்பிலை கொடியை யென்றி கழ்தல்.
மகனுமாற்றமையும் வாயிலாகவா தலைவி எதிர் கோடல்
தலைவி வந்த பாங்கியோடு மைந்தனைப் புகழ்தல்.
தலைவி தலைவனைப் புகழ்தல்.
பாங்கி தலைவியைப் புகழ்தல்.

(iii) பாங்கி தலைவிக்கு ஓதற்பிரிவுணர்த்தல்.
பிரிந்துழித் தலைவிகார் கண்டு வருந்தல்.
வருந்திய தலைவியைப் பாங்கியாற்றுவித்தல்.

(iv) பாங்கி தலைவிக்குத் தலைவனின் காவற் பிரிவுணர்த் தல்.
தலைவி கூதிர் கண்டு வருந்தல்.
வருந்திய தலைவியைத் தோழி யாற்றுவித்தல்.

(v) தோழி தலைவிக்குத் தூதிற் பிரிவுணர்த்தல்.
பிரிந்துழித் தலைவி முன்பனி கண்டு வருந்தல்.
வருந்திய தலைவியைத்தோழியாற்றுவித்தல்.

(vi) தோழி தலைவிக்குத் துணைவயிற் பிரிவுணர்த்தல்.
பிரிந்துழித் தலைவி பின்பனி கண்டு வருந்தல்.
வருந்திய தலைவியைத் தோழியாற்றுவித்தல்.

(vii) தோழி தலைவிக்குப் பொருள்வயிற் பிரிவுணர்த்தல்.
பிரிந்துழித் தலைவி இளவேனிற் கண்டு வருந்தல்.
வருந்திய தலைவியைத் தோழியாற்றுவித்தல்.
தலைவியுரு வெளிகண்டு தலைவன் கூறல்.
தலைவன் பாகனோடு சொல்லல்.
தலைமகன் கார்ப்பருவங்கண்டு கூறல்.

ஐம்பத்தாறும் நாள் செய்கை
முடிந்தது.

கற்பியல்
முற்றும்.

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

அருளிச்செயல்.

நூல் வெளியிட்டார் அருந்திறன்.

[வக்த்ரு வைலட்சண்யம்.]

திருக்குருகூரில் தாமிரவருணி நதி தீரத்தில் நான்காவது வருணத்தில் திருவழுதிவளநாடரென்பவர் ஒருவர் இருந்தனர். அவர் சந்ததியில் தோன்றிய காரி யென்பவர்க்கும், உடையநங்கை யென்னும் வனிதையர்க்கும் கலியுகம் 43-வது ஆண்டில் தெய்வத் தன்மை பொருந்திய குழவி ஒன்று திருவவதரித்தது. பிறந்தநாள் தொடங்கி அழுதல், பால்குடித்தல் முதலிய குழந்தை செயல்கள் ஒன்றும் அதனிடம் தோன்றில. ஆயினும், அதனால் அக்குழவி யாதொரு வாட்

டமும் அடையாமல் பூர்ணமாய் வளர்ந்தது. இவ்வற்புதத்தைக் கண்ட தாய், தந்தையர் அக்குழவியைக் கொடுபோய் பொலிந்துநின்ற பிரான் திருவடிகளில் ஸமர்ப்பித்தனர். உடனே அக்குழவி அங்கிருந்த ஒரு புளியமரப்பொந்தில் நுழைந்துகொண்டது.

ஆனல் அக்குழவியாகிய ஆழ்வார், பதினறு பிராயமளவும் கண் திறவாமலே மௌனமாக அவண் எழுந்தருளியிருந்தார். இத்தகைய அவர் மகிமை ஸ்ரீ மதுரகவிகளுக்குத் தெரிந்தது. அவர் ஆழ்வார் திருவடிகளை யடைந்து "வேதத்தினுட்பொருள் நிற்கப்பாடி யென்னெஞ்சுள் நிறுத்தினன்" என்று நான்கு வேதங்களின் ஸாரார்த்தங்களையும் அத்யயனம் செய்து, ஆழ்வாரின் பெருமையைக் "கண்ணிநுண் சிறுத்தாம்பு" என்ற ப்ரபந்தத்தால் வெளியிட்டருளினர். இஃது இன்றும் உலகுய்ய ஓர் ஊன்று கோலாயுள்ளதென்பது யாவரும் அறிந்ததே.

கீழ்க்கூறிய பெருமைகளை அவர் திருநாமங்களே நன்கு விளக்குவன வாகும்:—

i. ஆழ்வார்:—இத்திருநாமம் இவர்க்குச் சிறப்புப் பெயராகும். இவர் உலகின் கண்ணுள்ள மற்ற சேதனர்களைப்போலன்றி பகவத் பக்தியில் ஆழ்ந்து நின்றவர் என்பதை இப்பெயர் நன்கு உணர்த்துகிறது. அன்றியும், அயர்வறுமமர்களதிபதியானவன் அறிவிலா மானிடரை அக்கரைப்படுத்த (மோக்ஷத்தில்

சேர்க்க) அநேக அவதாரங்களெடுத்ததுபோன்று இவரும் ஸம்ஸார ஸாகரத்தில் ஆழ்ந்த நிமக்னரை உயர்த்தவே அவதரித்தனர். ஆதலின் இவர்க்கு ஆழ்வார் என்ற திருநாமம் வந்தது போலும்.

இன்னும் 'ஆழ்வார்' என்ற திருநாமம் மற்ற பதின்மர்களுக்கும் பொதுவாயிருப்பினும், அவர்கள் இவர்க்கு அவயவமாய், இவர் அவர்களுக்கு அவயவி யாய் நிற்றல் பற்றி இத்திருநாமம் இவர்க்கே நிரூபகமா கும். ஒரு காலவிசேஷத்தில் மறைந்திருந்த மற்ற ஆழ் வார்களின் அருளிச்செயல்களை இவ்வாழ்வார் ஸ்ரீமந் நாதமுனிகளுக்கு உபதேசித்தனர் என்பது பிரசித்தம். இஃதே இவர் மற்ற ஆழ்வார்களுக்கு அவயவியாவார் என்பதற்குப் போதிய சான்றாகும். அவயவம் செய் யும் காரியங்களை அவயவி நன்கு உணருமன்றோ!

ii. சடகோபர்:—கர்பத்தில் ஞான முடையனவா யிருக்கும் குழவிகளைப் பிறந்த வுடனே சடமென்னும் வாயு தீண்டி அக்ஞானத்திற்குள்ளாக்குதல் உலக வழக்கு. அவ்வாயு இவரையும் தொடுதற்குவர அதனை ஹுங்காரத்தால் இவர் ஒறுத்து ஓட்டி ஒழித்தனர்; அதனால் இவர் சடகோபர் என்னும் திருநாமத்தைப் பெற்றார். அன்றியும், மதாந்தரத்தவராகிய சடரைக் கோபித்துத் தம் திருவாய்மொழியைக்கொண்டு அவ ரை வென்றதனால் இவருக்கு இத் திருநாமம் வாய்ந்தது என்றும் சிலர் கூறுவர்.

இவ்வாழ்வார், எம்பெருமானது திருவடிகளுக்கு அந்தரங்க பக்தராய் நிகழ்ந்ததனுல், அப்பெருமானது பாதுகைக்கு "ஸ்ரீ சடகோபம்" என்னும் இவருடைய திருநாமமே வழங்கப்படுகின்றது. அவ்வேற்றமும் இத்திருநாமத்திற்குண்டு.

ஆசாரிய ஹ்ருதயத்தில், ("சடரை யோட்டி" என்றதும், சடகோபராகையாலே, "வேத சாஸ்த்ரா விரோதிநா" என்கிறபடியே "ப்ரமாணுநுகூல தர்க்கங்களாலே மத்யஸ்தமாக அர்த்தத்தை ஸாதிக்கையன்றிக்கே ஸ்வபுத்தியாக கல்பித சுஷ்க தர்க்கங்களாலே ஸ்வஸ்வமதஸ்தாபனம் பண்ணும் பாஷ்ய குத்ருஷ்டிகளாகிற சடரை ஶ்ருத்யந்த தாத்பர்யமான ஸ்வோக்தி விசேஷங்களாலே ஸ்வஸந்நிதாநத்தில் நில்லாதபடி தூரத்தி") என்ற அதன் வியாக்கியானமுங் காண்க.

iii. நாவீரன்:—இவ்வாழ்வார், தாம் அருளிச்செய்த "கண்ணன் கழலிணை, நண்ணும் மனமுடையீர், எண்ணும் திருநாமம், திண்ணம் நாரணமே" என்ற பாசுரமெழுதிய மிகச்சிறிய முறி ஒன்றைச் சங்கப்பலகையில் வைக்க அப்பலகை மற்றயோரைத்தள்ளி, இப்பாடல் முறி ஒன்றையே தாங்கியது. அதைக் கண்ணுற்ற சங்கப்புலவர் யாவரும் வியந்து "ஈயாடுவதோ" என்று இவர் நாப்புலமையைப் புகழ்ந்துபாடி அபராதக்ஷாமணமும் பண்ணிக்கொண்டனர்.

இவ்வாழ்வார் "வலக்கையாழி யிடைக்கைச்சங்கம் இவையுடை மால்வண்ணனே, மலக்கு நாவுடை யேற்கு மாறுளதோ இம்மண்ணின் மிசையே" என்று தம் நாவீரத்தை அருளிச்செய்துள்ளனர். இக்காரணங்களினல் "நாவீரன்" என்ற திருநாமம் இவர்க்கே பொருத்தமுடையதாகும். "திருவாய் மொழியைப் பாடி உலகுக்கு உபகரித்தவரும், எல்லாவுயிர்கட்குத் தலைவருமாகிய பெருமைவாய்ந்த நம்மாழ்வாரையே பாடவேண்டுவது என் கடமையாகும். இதுவரை யான் அதைச் செய்யாது பிறரைப் (சக்கரவர்த்தித் திருமகன் உள்ளிட்டாரை) பொருள் செய்து கொண்டாடிப் பாடியது என் பெருங் குற்றமே. இக்குற்றத்திற்காக என் நாவைப் பறித்திடினும் பிழையாகாது" என்று கவிச்சக்கரவர்த்தியான கம்பரும், ஆழ்வாருடைய நாவீரத்தை வெளியிட்டார்.

"பாவைத்திருவாய்மொழிப்பழத்தைப் பசுங்கற் பகத்தின்
பூவைப் பொருகடற்போதவமுதைப் பொருள் சுரக்குங்
கோவைப்பணித்த வெங்கோவையல்லா வென் னைக்குற்றங்கண்டென்
னுவைப்பறிப்பினு நல்லான்மேரு மற்றை நாவலரே
—கம்பர்.

இன்னும் அவரே "பெருமாள் மகுடஞ் சாய்க்கும்படிக்

குக் கவி சொல்லும் ஞானத்தமிழ்க் கடலே" என்றும் ஆழ்வாரைப் புகழ்ந்துள்ளனர்.

iv. மாறன்:—இவ்வாழ்வார் அவதரித்தவுடன் பெற்ஞேர் பொலிந்துநின்றபிரானைச் சேவிக்கச் செய்தனர். அக்குழவி உலக நடைக்கு மாருன செய்கையை மேற்கொண்டதனுல், அப்பெருமானது திருமுன்பே அந்தத் தெய்வக்குழவிக்கு 'மாறன்' என்ற திருநாமம் சாத்தப்பட்டது.

v. தெய்வக்கவிஜ்ஞன்: — பரமாத்மாவின் ஆனந்த குணம் ஒன்றின் எல்லையை மாத்திரம் காணச் சென்ற வடமொழி வேதம், பலபடியாய் முயன்றும் அதன் எல்லையை மனத்தாலும் கிட்டமாட்டாமல் மீண்டது. இக்கருத்தைத்தான் இவ்வாழ்வார்ப்ரபாவத்தை வெளியிடப் புகுந்த கம்பநாட்டாழ்வார் தாம் அருளிச்செய்த 'சடகோபரந்தாதி'' யில் ''வேதத்தின் முன் செல்க" என்னும் பாசுரத்தினுல் ஆழ்வார் கவிகள் தெய்வத்தன்மை யுள்ளதென அறுதியிட்டுள்ளார்.

இன்னும் அக் கம்பநாட்டாழ்வாரே ஸர்வசக்தஞன ஸர்வேஸ்வரனும், 'சிறப்பு வாய்ந்த தமிழ் வேதமாகிய ஆழ்வார் கவிக்கு அவ்வருகு செல்ல மாட்டாதவனுனன்' என்னும் கருத்தை 'போதக் கடலேங்கடேன் குருகூர்ப்புனிதன் கவியோர் பாதத்தின் முன் செல்லுமே தோல்லே மூலப்பரஞ் சுடரே' என்னும் பாசுரத்தால் வெளியிட்டார். அல்ல

னுடம் "வேதத்தின் முன்செல்க" என்பதற்கு வேதத்தின் முதன்மை நீங்க என்று பொருள் கொள்ளுவதுமுண்டு.

திவ்விய தேசங்களில் உத்ஸவங்கண்டருளுகிற காலத்தில், பெருமாள் நடுவே எழுந்தருள, வடமொழி வேதம் அவன் பின்னே பாராயணம் செய்துவர, தென்மொழி வேதமோ அவன் முன்னே அத்தியயனம் செய்துவருதலை நோக்குமிடத்துத் திருவாய்மொழியின் தெய்வத்தன்மை கண்கூடாகும்! இதைப்பற்றியன்றோ, "வேதத்தின் முன்செல்க" என்று கம்பர் தாம் பாடிய ப்ரபந்தத்தின் முதற் பாட்டில் முதலடியில் வெளியிட்டது.

ஆழ்வார் தெய்வக்கவிஜ்ஞர் என்பதற்கு ஒரு ஐதிகம்:

இவ்வாழ்வார் தாம் அருளிச்செய்த 'திருவிருத்தம்' என்ற முதல் பிரபந்தத்தின் முதற் பாட்டில் "இமையோர் தலைவா, நின்று கேட்டருளாய்?" என்று விண்ணப்பித்துள்ளார். ஸர்வஜ்ஞனும், இவர் வார்த்தையின் இனிமைக்கும் பெருமைக்கும் கட்டுப்பட்டு, உற்சவங்களில் எழுந்தருளும் போது, ப்ரபந்த முபக்ரமத்தில் ஸகல வாத்யங்களையும் நிறுத்தச் செய்து சற்று நேரம் இவர் பாசுரங்கட்குத் திருச்செவி கொடுத்து அனந்தரம் திருவீதிகளில் எழுந்தருளுவதை இற்றைக்கும் காணலாம். இஃதும் ஆழ்வார் தெய்வக்கவிஜ்ஞர் என்று பெயர்பெற்றதற்குத் தக்க சான்றாகும்.

vi. திருவாய்மொழிப் பெருமாள் :— ஸ்ரீ வால்மீகி பாடிய ராமாயணத்தை அம்மஹாஸதசில் குசலவர்கள் பாடியதை இனிது கேட்டு சக்ரவர்த்தித்திருமகன் ஆனந்தபரவசனானனல்லவா ? அவ்வாறே திருவாறன் விளையில் எம்பெருமான் "இன்பம் பயக்க எழில்மலர் மாதரும் தானும், இவ்வேழுலகை இன்பம் பயக்க இனிதுடன் வீற்றிருந்து" என்றும், "மாயக்கவியாய் வந்து, என் நெஞ்சு முயிரு மவையுண்டுதானேயாகி நிறைந்த" என்றும், ஆழ்வார் திருவாய் மலர்ந்த அருளிச்செயல்களை அர்ச்சையில் ஆர்வத்துடன் அனுபவித்துக் குமிழ் நீருண்ணும்படியானான். இம்முறையில் ஆழ்வார் 'திருவாய்மொழிப்பெருமாள்' என்று உலகம் போற்ற பெயர்வாய்ந்தனர்.

vii. திருக்குருகூர் நம்பி :—நம்பி என்பதற்குப் பூர்ணர் என்னும் ஒரு பொருளுண்டு. இவர் ஈஶ்வரனை யடைவதற்கேற்ற பூர்ணத்வத்தையும், உலகத்தைத் திருத்தி உயர்த்துதற்கான உபதேச முறையில் முழுதேர்ச்சியையும் பெற்றிருந்தமையின் நம்பி என்ற இச்சொல் இவருக்கே ஏற்றதாகும். இதற்குத் திருக்குருகூரில் அவதரித்த ஆடவரில் சிறந்தவர் என்றும் பொருள் கூறலாம். ஆடவரிற் சிறந்தவனையே நம்பியென்று உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் வழங்குவது கொண்டு இத்திருநாமம் ஆழ்வார்க்கு வந்தது.

viii. பராங்குசன்:—இத்திருநாமம், மிகக்களித்

துச் செருக்கித்திரிந்து எதிர்த்து வாதப்போர்க்குவரும் பிறமதத்தராகிய மத்தகஜங்களை யடக்கும் அங்குசம் போல்வார் என்று பொருள்படும். ஆழ்வார் "உள னெனிலுளனவன்" "தேவு மெப்பொருளும்" "ஒன் றுந்தேவும்" முதலிய பல ப்ரமாணங்களால், மதாந் தரங்களின் தோஷங்களைக் காட்டி வெறுட்டி ஸ்வ மதஸ்தாபனம் செய்தார் என்பது தெளிவு.

ix. வேதம் தமிழ் செய்த பெருமாள்:—ஆழ்வார், யாவரும் அதிகரிக்க வொண்ணாத வடமொழி வேதத் தைத் தென்மொழியில் அருளிச்செய்து அதை ஸர்வாதி காரமாகச் செய்தார்; பின்னும் வேதங்களில் மறைந்து கிடந்த அறிய பொருள்களைத் தென்மொழியில் நன்கு விளங்க வைத்தனர். இக்காரணங்களாற்றான் இவரை "வேதத்தி னுட்பொருள் நிற்கப்பாடி" என்றார் ஸ்ரீ மதுரகவிகளும். ஆகவே, தமிழ் வேதம் செய்த பெருமாள் என்ற திருநாமம் ஆழ்வார்க்குக் கிடைத் தது. இதற்கு வேறு அறிய பொருள்களும் சில உண்டு. அவற்றை ப்ரதிபாத்திய வைபவத்திற் காணலாம்.

x. பிரதமாசாரியர்:—சாஸ்திரங்களைச் சந்தேக மறக்கற்று, கற்ற வகையில் தானும் நின்று, தன்னைக் கிட்டினானையும் தன்வழி செல்லுமாறு செய்யும் சக்தன் எவனோ அவனே ஆசாரியனாவான். இம் மூன்று லக்ஷணங்களில் ஒன்று குறையினும் அவனுக்கு ஆசார் யத்வம் என்ற அரிய பெரிய பதம் நிலைப்பது அரிதினு

மரிது. ஆழ்வார் இறைவன் அருளால் எல்லா வேதங்களையும் மயர்வற ஓதப்பெற்ருர். "சிந்தையாலுஞ் சொல்லாலுஞ் செய்கையினாலுந் தேவபிரானையே, தந்தைதாயென்றடைந்த வண்குருகூரவர் சடகோபன்" என்று சொல்லியபடி தாமும் ஓதியவண்ணம் நின்ருர். தம்மை யடைந்தவர்களுக்கும் "வீடு முன் முற்றவும்" "பரிவதி லீசனைப்பாடி" "திண்ணன் வீடு" முதலிய திருவாய்மொழி வாயிலாக உபதேசமும் செய்தார். அவர்களும் "ஊருநாடுமுலகமுந் தன்னைப்போ லவனுடைய, பேருந்தார்களுமே பிதற்ற" என்று கூறும்படி திருந்தினர்கள். இவைகளாற்ருன் நம் வைணவ குலத்திற்கு, "ஆத்யஸ்யந: குலபதே" என்று ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்தபடி, இவரே பிரதமாசாரியர்; கோத்ரரிஷியுமிவரே என்பதை நம் ஆசாரியர்களும் அறுதியிட்டு அநுஷ்டித்து வருகின்றனர்.

xi. வகுளாபரணர் :—திருக்குருகூரின் பொலிந்துநின்றபிரான் ஆழ்வார் பக்கல் திருவுள்ளமுவந்து பிரசாதித்த மகிழமலர் மாலையை அவர் தரித்தலால் அவருக்கு வகுளாபரணர் என்ற ஒரு திருநாமம் வழங்கலாயிற்று. "வண்குருகூர் நகரான் நாட்கமழ் மகிழ்மாலை மார்பினன் மாறன் சடகோபன்" என்று ஆழ்வாரே தம்மைத்தாம் கொண்டாடியுள்ளார்.

xii. ப்ரபன்ன ஜன கூடஸ்தர் :— இத்திருநாமத்தால், ஆழ்வார் ப்ரபன்னர்களுக்குச் கூடம்போன்

றவர் என்று அறியக்கிடக்கின்றது. கூடம் என்பது கொல்லன் வேலைசெய்யுமிடத்தில் இரும்புகளைக்காய்ச்சிக் கருவிகளாக மாற்றும்போது அமைக்கிற ஒரு அடிப்பட்டரை. இப்பட்டரையின்மீது காய்ச்சின இரும்பை வைத்து சம்மட்டியால் அடித்தபோதே அவைகள் பயனுற்ற பல கருவிகளாக மாறும். அதைப்போன்று, ஆழ்வார் சம்பந்தம் பெற்றவரே பயன் நிறைந்த ப்ரபன்னராவர் என்னும் மாண்பு இத்திருநாமத்தால் அறியத்தக்கது.

அன்றியும், கூடம் என்பது கொல்லனிடமுள்ள சம்மட்டியையும் குறிக்கும். அதன் சம்பந்தத்தால், இரும்பு,மக்கள் உபயோகத்திற்கேற்ற ஆயுதங்களாய்ப் பயன்படுவதுபோல், இவர் சம்பந்தத்தால் ஞானமற்ற மக்கள் திருந்தி ஈஸ்வரன் விருப்பத்திற்கேற்றவாறு விநியோகப்படுவார்கள். இன்னும், கூடம் என்பதற்கு புதையல் என்னும் ஒரு பொருளும் உண்டு. அப்போது, ஆழ்வார் அவதாரம், பிரபன்னர்களுக்கு அழியாத நிறைந்த நிதி எனப் பொருள் பெறும். கூடஸ்தர் என்பது முதன்மையானவர் எனவும், நிருவிகார சைதன்னியத்தை யுடையவர் எனவும் பொருள் தரும். அல்லது குடும்பத்தின் தலைவர் எனவும் கூறலாம். இத்துணை ஹேதுக்களாலே ப்ரபன்ன குலத்திற்குத் தலைவர் ஆழ்வார், என அறுதியிட்டுள்ளமையின்; இங்கு இவரை ப்ரபந்ந ஜன கூடஸ்தர் என முதலிகள் அழைத்தனர் போலும்.

xiii. நம்மாழ்வார்:—கம்பர் இராமாயணம் அரங்கேற்றிய காலத்தில், நம்பெருமாள் தனக்கு ஆழ்வாரிடத்திலுண்டான ஆர்வம் தோற்ற "நம் சடகோபனைப் பாடினையோ" என்று அர்ச்சையில் வாய்விட்டார். அன்று முதல் ஆழ்வார்க்கு இத்திருநாமம் வழங்கலாயிற்று. இத்திருநாமத்திற்குச் சில வேறு ஐதிகங்களுமுண்டு, அவைகளை விரிவிற்கஞ்சி விடுத்தாம்.

இத்திருநாமத்திற்கு இலக்கண முறையில் சிறந்த பொருள் ஒன்றுண்டு: தமிழ் இலக்கணங்களில், பெயர், வினை, உரி, இடை என சொற்கள் நான்குவகைப்படும். இவற்றுள் இடைச்சொற்கள் சிற்சில பொருள்களைத் தருகின்றன. உதாரணமாக 'சி' என்ற இடைச்சொல் இகழ்ச்சியையும், 'அம்ம' என்ற இடைச்சொல் வியப்பு முதலிய பொருள்களையும் தரும். இவ்வாறுகப் பொருள் தருவதில் 'ந' என்ற இடைச்சொல் உயர்வைக் காட்டுவது. இத்தால், நம்மாழ்வார் என்ற சொல்லில் நின்ற 'ந' என்ற இடைச்சொல் உயர்வைக் காட்டுகிறது. ஆகவே, ஆழ்வார்களில் உயர்ந்தவர் நம்மாழ்வார் என்பதை இலக்கணமுறைக் காட்டிற்று என உணர்ந்தாம். இந்தப் பொருளை உட்கொண்டே "நம்பெருமாள், நம்மாழ்வார், நஞ்ஜீயர், நம்பிள்ளை என்பர், அவரவர் தமமேற்றத்தால்" என்ற அருளிச்செயலில் "ஏற்றம்" என்ற சொல்லை நுணிகி ஆராயும்போது, இவர்களுக்கு உயர்வு, அதாவது ஏற்றம் இலக்கண முறையால் வந்த

தென்பதை விஶதவாக் சிகாமணி ஸ்ரீ மணவாள மஹா முனிகள் வெளியிட்டனர் போலும்.

பெரியோர்களின் அரிய நிலை.

சிஷ்யனை ஆசரிப்பிக்கவல்லராதலால் ஆசார்யரென்றும், அஜ்ஞான இருளை அகற்றுவாராதலால் குருவென்றும், தெள்ளிய ஜ்ஞானத்தை உபதேசிப்பவராதலால் தேசிகரென்றும், சிஷ்யனைச் சொத்தாகவுடையவராதலால் ஸ்வாமியென்றும், அதிகாரத்தை உண்டாக்குமவராதலால் ஆசானென்றும், ப்ரஹ்மத்தை நயிப்பிப்பவராதலால் ப்ராஹ்மணரென்றும், ப்ரஹ்ம தேஜஸ்ஸை அளிப்பவராதலால் ஆர்யரென்றும், ஜ்ஞானபிதாவாதலால் குரவரென்றும், பழுதற்ற மெய்ஜ்ஞானியாதலால் பகவரென்றும், பரிசுத்தராதலால் தீர்த்தரென்றும், ஆத்மோஜ்ஜீவனத்துக்குக் காரணமாதலால் அடிகளென்றும், புத்திமானாதலால் புங்கவரென்றும், பண்டிதராதலால் பட்டாரகரென்றும், உத்தரிப்பிக்குமவராதலால் உத்தாரகரென்றும், கடிப்பிப்பவராதலால் கடகரென்றும், ஒப்புயர்வற்ற உபகாரகராதலால் பரமோபகாரரென்றும் சொல்லப்படும் இத்திருநாமங்களைத் தனையும், அந்நாளில் "உபமானம் அசேஷாணாம் ஸாதூனாம்" என்று சொல்லுகிறபடி, ஸாதுக்கள் யாவரையும் ஸ்ரீ ப்ரஹ்லாதாழ்வானுக்கு ஒப்புக் கூறியது போல், இங்கு ஆழ்வார்க்கு அப்பெயர்களிடுவது அவர் புகழுக்கு ஏற்குமேயல்லது அர்த்தவாதங்களாகாது.

ஆழ்வார் திருநாமங்களின் இனிமை.

இதுகாறும் ஆழ்வார் மேன்மைக்குத்தக்கவாறு அவர்க்குத் திருநாமங்கள் வாய்ந்தது கூறப்பட்டது. அத்திருநாமச் சொற்களே செவிக்கினியன என்பதற்கு ஒரு ஐதிகம் உண்டு:—

ஒரு சஞ்சாரத்தில் எம்பெருமானார் ஆழ்வார் திருவடிகளைப் பணிய அடியார் குழாங்களுடன் திருநகரிக்கெழுந்தருளித் திருச்சங்கணித்துறையில் நீராடிக்கொண்டிருந்தனர். அவ்வமயம் அங்கொரு ஸ்ரீவைஷ்ணவ வண்ணாத்தான் ஜீயர் திருவடிகளில் தலைசாய்த்துத் தன் பிள்ளைகளைச் சடகோபன், காரிமாறன், வகுளாபரணன், குருகூர்நம்பி என விளித்து அவர்களையும் எம்பெருமானார் திருவடிகளைத் தொழுமாறு பணித்தனன். இத்திருநாமங்களைக் கேட்ட எம்பெருமானார் சிறிதுபோழ்து தன்னை மறந்து நின்றனர். அருகிலிருந்த வைணவர் ஒருவர் இத்திகைப்புக்கு நிதானம் யாதென அறிவிக்குமாறு ப்ரார்த்தித்தனர். அதற்குப் பற்றற்ற எம்பெருமானார், “ஆழ்வார் நல்ல பதத்தால் மனை வாழ்வர் கொண்ட பெண்டிர் மக்களே” என்று, அருளிச்செய்த நல்லறத்தை அடியேன் பின்பற்றாது, இத்துறவறம் உத்தமமெனக் கருதி அறிவின்மையால் இக்காவியைத் தாங்கிநின்றேன். இல்லறத்தைத் தழுவி இந்த ஈரங்கொல்லியைப்போல் ‘அண்ணிக்கும் அமுதூறும்’ ஆழ்வார் திருநாமங்களை ஆர்வத்துடன் இயம்பப்பெற்றிலேனே! என்று விடை இறுத்தினர்.

வளர்ந்தழைக்க வுண்டாலென் வாச மணந்தாலென்
தெளிந்தகலை கற்றாலென் சீசீ—குளிர்ந்தபொழில்
தண்குருகூர் வாவிச் சடகோபனாரெங்கள்
வண்குருகூ ரென்னாத வாய்.

என்றார் அழகிய மணவாள தாசரும்.

ஆழ்வார்க்கு உபய விபூதியிலும் ஒப்பு இல்லாமையை
அறிதலன்றோ அறிவு !

நித்திய விபூதியில் ஆழ்வார்க்கு ஈஸ்வரன் ஒப்போ ?

"காக்குமியல்வினன் கண்ணபெருமான்" என்ற வாறு சேதனாசேதனங்களைக் காப்பதையே இயல்பாகக் கொண்டவன் ஈஸ்வரன் எனப்படுவான். இந்த ரக்ஷணம் ஈஸ்வரனுக்கு இயல்பாக இருந்தாலும், அஃது அவனுக்குள்ள ஸ்வாதந்தர்யத்தினால் அனுக்ரஹம், நிக்ரஹம் ஆகிய இரண்டு செய்கைகளுக்கும் காரணமாயிற்று. "ஸ்வாமித்வம் ப்ரஹ்மணி ஸ்திதம்" என்கிறபடி, நித்யமான இந்த ஸ்வாதந்தர்யம் ஈஸ்வரனுக்கு உள்ள வரையில் அவன் ஸர்வ ரக்ஷணத்திற்குக் கண்ணழிவு உண்டு. "ஸ்வத்வம் ஆத்மனி ஸ்திதம்" என்கிறபடி பாரதந்தர்யத்தையே ஸ்வரூபகமாக வுடைய ஆழ்வாரோ ! சேதனர்களுக்கு எப்போதும் அநுக்ரஹம்தவிர நிக்ரஹம் செய்ய யோக்கியதையற்று ஸர்வ ரக்ஷணத்தில் விஞ்சியிருப்பார். ஆகவே, ரக்ஷண தர்மத்தில் ஈஸ்வரன் ஆழ்வார்க்கு ஒப்பாகான்.

ரக்ஷணார்த்தமாக ஈஶ்வரன் "மனிசரும் மற்று முற்றுமாய் மாயப்பிறவி பிறந்து" என வெடுத்த பல அவதாரங்களிலும், தன் ரக்ஷணம் பலிக்கக் காணு மல் "தனியன்" என்று, தான் உடுத்து வந்த ஒலி யலோடு தன்னுடைய சோதிக்கு மீண்டான் என் பதை ப்ரமாணங்களால் அறிந்துள்ளோம். ஆழ் வார் அவதாரமோ ஈஶ்வரன் கை விட்ட "ஊரும் நாடும் உலகமும்" தம்மைப்போல் திருத்தமுடைய உதவிபுரிந்தது.

"ஆதித்ய ராம திவாகர அச்சுதபானுகளுக்குப் போகாத வுள்ளிருள் நீங்கிச் சோஷியாத பிறவிக்கடல் வற்றி விகஸியாத போத நற்கமலம் மலர்ந்தது வகுள பூஷண பாஸ்கரோதயத்தாலே" என்று ஆழ்வார் ரக்ஷ ணத்தைப்பற்றி அழகிய மணவாள நாயனுர் அருளிச் செய்த கட்டுரைகள் இங்கு நோக்கத்தக்கன.

பின்னும் "திருந்த அடியவர் தம்மைத் திருத்திப் பணிகொள்ள வல்லன்" என ஈஶ்வரனுடைய ஒரு சார் ரக்ஷணம் போலன்று, "பயனன்றாகிலும் பாங்கல்ல ராகிலும் செயல் நன்றாகத் திருத்திப் பணிகொள்ளும்" ஆழ்வார் பூர்ண ரக்ஷணம் எனக் "கண்ணிநுண் சிறுத் தாம்பு" என்ற ப்ரபந்த வாயிலாக ஸ்ரீ மதுரகவியார் வெளியிட்டனர். ஆகையால் ரக்ஷணத்தில் ஈஶ்வரன் ஆழ்வார்க்கு ஒப்பாகான் என்பது தெளிவுறும்.

ஆழ்வார்க்குத் திருமகள் ஒப்போ?

திருமகளுக்குத் தன்னேற்றம், அவள் தன் தலைவனிடம் ஒப்பற்ற காதல் கொண்டிருத்தலேயாகும். அவள் காதலையும், ஆழ்வார் இறைவன் மாட்டுக் கொண்டுள்ள காதலையும் ஒப்பிட்டு நோக்குவாம்: பிராட்டியின் காதல் பிறப்பால் பள்ளமடையாயிற்று. ஆழ்வார் காதலோ பிறப்பால் மேட்டுமடையாயிற்று. நிற்க, பிராட்டி நிலை பள்ளமடையானாலும் "துல்ய சீல வயோவ்ருத்தாம்" இத்யாதியின்படி இருவர் காதலும் பரஸ்பரம் ஸத்ருஶமேயன்றி ஏற்றத்தாழ்வுடையதன்று. ஆழ்வார் நிலை மேட்டுமடையானாலும் "சூழ்ந்த தனின் பெரிய என்னவா" என இவர் காதல் சித்து, அசித்து, ஈஶ்வரன் இவர்களைவிட அதிகம் பெருகி வெள்ளமிட்டது. ஆகவே ஆழ்வார் ஈஶ்வரனிடம் வைத்த அபினிவேசம் பிராட்டியை விட மிக விஞ்சியது. பின்னும், பிராட்டிகளில் திருமகள், நிலமகள் ஆகாள். நிலமகள், திருமகள் ஆகாள். பின்னைமகளும் அவ்வாறே. இவர் மூவர் காதலும் இவருக்கு ஒன்று சேர்ந்ததினாலன்றோ! இவரைப் "பின்னைகொல்? நிலமகள் கொல்? திருமகள் கொல்? பிறந்திட்டாள் என வளர்த்ததாயும் சங்கிக்கும்படி யாயிற்று. பிராட்டியைப்போல் "தத்தஸ்ய ஸத்ருஶம்பவேத்" என்றிருக்கமாட்டாதபடி உள்ளது இவர் காதல். அவருக்குள்ளது ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யம். இவருக்குள்ளது ப்ராப்யாநுரூபமான

ஸ்வரூபம். இம் மூறையில் காதல் என்ற பக்தி ஆழ்வார்க்குப் பிராட்டியிலும் விஞ்சி நின்றது என அறிகிறோம். இத்தால் காதலில் பிராட்டி ஆழ்வார்க்கு ஒப்பு எனப் பகரல் யாங்ஙனம்?

ஆழ்வார்க்கு நித்ய ஸூரிகள் ஒப்போ?

இடைவிடாது எம்பெருமானையே சேவித்துக் கொண்டிருப்பதால் "ஸதா பஶ்யந்தி ஸூரய:" எனப் பெயர்பெற்றுச் சிறப்புற்றார்கள் ஸூரிகள். இத்துணைப் பெருமை அவர்கள் பெற்றதற்குக் காரணம் அவர்கள் தேகம், தேசம், தேசிகர்களே யாகுவன. அவர்கள் தேகம் ஶுத்தஸத்வம், தேசமும் ஶுத்தஸத்வம், அவ்வாறே தேசிகரும். இவை அவர்களின் ஜ்ஞான, பக்தி, வைராக்யங்கள் மேன்மேலும் வளருகைக்குக் கருவிகளாயின. ஆழ்வார் பெற்ற தேகம், தேசம், தேசிகரோ எனின் ஜ்ஞானத்தைக்கெடுக்கும் விரோதிகளாகும். அங்ஙனமிருந்தும் "விண்ணுளாரிலும் சீரியர்" என்னுமாறு ஆழ்வார் ஞானபக்தியாதிகள் அவர்களினும் விஞ்சிநின்றன. இம் முறையில் நித்யஸூரிகளைக்காட்டிலும் ஆழ்வார் உயர் நிலையில் நின்றனர் என இயம்புதற்குத் தடை யாது?

ஆழ்வார்க்கு ப்ரஹ்மாதிகள் ஒப்போ?

ப்ரஹ்மா, ருத்திரன் இவர்கள் ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களில் அவ்வருகில்லாத புகழைப் பெற்றுள்ளார்கள். பின்னும், "நான்முகனை நாராயணன் படைத்தான்"

இத்யாதியால், இவர்கள் பிறப்பிற்கும் ஏற்றமுண்டு. அவைகளைக்காட்டிலும் "ஏறாளு மிறையோனும் திசைமுகனும் திருமகளும், கூறாளுந் தனியுடம்பன்" இத்யாதியால் இவர்கள் திருமகளுக்குச் சமமாக ஒரு இடத்தை அவன் திருமேனியிலே பெற்றுள்ளார்கள் எனப் பெரும் மதிப்பையும் அறிகின்றோம். இது அவர்களுக்கு பெரும் ஏற்றமன்றோ? ஆகவே இவர்கள் செய்யும் தொழிலாலும், பிறந்த வழியாலும், இருக்குமிடத்தாலும் வீறு பெற்றார்களென அறிகின்றோமல்லவா? நிற்க ஆழ்வாருடைய ஸ்ருஷ்டி ஸம்ஹாரமோ! "அன்று நான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்" இத்யாதியால், சேதனர்கள் அஜ்ஞானத்தைப் போக்குகையும் ஜ்ஞானத்தை யூட்டுகையுமாகிய ஞான ஸ்ருஷ்டியாகும், அவர்கள் ஸ்ருஷ்டி யாதிகள் ஸம்ஸாரத்திற்கு ஹேது. இவர் ஸ்ருஷ்டியாதிகளோ ஸம்ஸார நிவர்த்திக்கு ஹேது.

இன்னும் அவர்கள் பெற்ற இருப்பிடம் போலன்று, ஆழ்வார் பெற்ற இருப்பிடம். "வலத்தனன் திரிபுரமெரித்தவன் இடம் பெறத் துந்தித்—தலத்தெழுதிசைமுகன்" இத்தியாதியால் அவன் திருமேனியில் ஏகதேசத்தைப்பெற்று அத்தால் அவர்கள் சத்தைப்பெற்றார்கள். ஆழ்வாரோ! "இவையுமவையுமுவையும்" என்னும் திருவாய்மொழியில் "அருகலிலானே" "என்னெஞ்சுளானே" "நெஞ்சினுள்ளானே" "நெற்றியுளானே" "எனதுச்சியுள்ளானே"

எனத் திருவாய்மலர்ந்தருளினமையால் அவன் உத்த மாங்கத்தில் எங்கும் ஸஞ்சரிக்கப்பெற்றனர் என்பது தெளிவு. இஃதொன்றுமோ! "உச்சியுள்ளே நிற்கும் தேவதேவற்கு" என்கிறபடி ஆழ்வாருடைய ஸ்பர்சத்தாலே உபயவிபூதி நாதனும் சத்தைப்பெற்றுத் தேவர்க்குத் தேவனானான் என்றால் ஆழ்வாருடைய பெருமையை ப்ரஹ்மருத்ராதிகளுக்கு ஒப்பிட்டுக் கழிக்கவும் இடமுண்டோ?

ஆழ்வார்க்கு வியாஸ பராசராதிகள் ஒப்போ?

மாப்பிசினும் குப்பையும் போல் யாவராலும் வகுக்க அரிதான வேதங்களை வெவ்வேறு பகுதிகளாக வகுத்து, அவ்வழியாலே உலகத்திற்கு உபகரித்த ஏற்றம் வியாச பராசராதிகளுக்கே உண்டு. வேதத்தை மாதாவாக உருவகப்படுத்துவது இயல்பு. மாதாவோ எல்லாப்ரஜைகளையும் ஒரு கண்ணாகப்பார்த்துக் காக்கும் தகவுடையவள். மாதாவான வேதமோ! வியாஸர் வகுத்த முறையில், உயர்குடியில் பிறந்த சிலரே கற்கவும் அனுஷ்டிக்கவும் கட்டளைப்பட்டது. ஆதலின் தாழ்குடியில் பிறந்த முமுக்ஷுக்கள் ஒரு பிறவியிலேயே இறைவன் திருவடிகளைப்பெற்று ப்ராப்யத்தைப் பெறும் ப்ராப்தியை இழந்தார்கள். ஆழ்வாரோ வசிஷ்ட சண்டாள விபாகமற யாவரும் அவகாகிக்கும் கங்கையைப் போலக், கால, தேச, அதிகாரி நியதியற்று யாவரும் அறிந்து உஜ்ஜீவிக்கும் முறையில் அவ்வேதங்களைத் தமிழ் வாயிலாகத் தொகுத்து உலகுக்கு இன்றி

யமையாத பேருதவியைப் புரிந்தனர். இங்ஙனம் வேதங்களை வகுத்தவகையில் வியாஸாதிகள் ஆழ்வார்க்கு எங்ஙனே ஒப்பாவர்கள்!

ஆழ்வார்க்கு ரிஷிகள் ஒப்போ?

சில பெரியோர்கள் புலன்களை வென்று யோகஞ் செய்து அகத்துள்ளே உறையும் இறைவனைத் தரிசிக்கும் வன்மை பெற்றதனால் அவர்கள் ரிஷிகள் என்றும் முனிகள் என்றும் பெயர் பெற்றார்கள். இந்த ஸாக்ஷாத்காரம் ஆழ்வார்க்குமுண்டு. ஆனால் ரிஷிகள் ஸாக்ஷாத்காரம் போன்றதன்று ஆழ்வார் ஸாக்ஷாத்காரம். ரிஷிகள் அநுபவம் மனத்திற்கு அவ்வருகு சென்றதில்லை. ஆழ்வார் அநுபவமோ! காயிகத்தளவும் சென்று, அத்தால் அவனைக் கிட்டப் பெறுமையின், தம்நிலைமை குலைந்து பெண்நிலைமை யடைந்து, அவன் சென்றவிடத்துத் தூதுவிடுதல், அவன் வந்தபோது அவனைக் கிட்டாது அகலுதல், மடலேறுதல், "போகு நம்பி" "கழகமேறேல் நம்பி" என்று ஊடுதல் முதலிய அரிய செய்கைக்கு இடமாயிற்று. இந்நிலைகளை ரிஷிகளிடத்தில் கண்டாரொருவருமில்லை. இம்முறையில் ரிஷிகள் ஆழ்வார்க்கு ஒப்பு எனக் கூறல் எவ்வாறு பொருந்தும்?

இவ்வாழ்வார்க்கு மற்ற ஆழ்வார்கள் ஒப்போ?

ஏனைய ஆழ்வார்கள் இவரைப்போன்றே இறைவனால் மயர்வற மதிநலம் அருளப்பெற்று இவர்க்கு ஒப்

புக் கூறும் முறையில் நின்றாலும், அவர்கள் அவயவம் இவர் அவயவி என ப்ரமாணங்கள் முறையிடுவதால் பெரும்பான்மையும் ஒப்புக்கூறக் கூடிய மற்ற ஆழ்வார்கள் இவருக்குச் சமம் ஆகார் என உணர்ந்தாம். இத் தன்மைகளை உற்று நோக்குங்கால் இவருக்கு ஒப்பானவர் உபயவிபூதியிலும் ஒருவருமிலர் என்றும், இவரே ஒப்பற்ற உயர்ந்த நிலையில் நிற்கின்ற ஓர் சிறந்த நிதி என்றும் தெள்ளிதின் விளக்க முறும்.

கீழ்க்குறிப்பிட்டவர்கள் ஒருமுறையில் ஆழ்வார்க்கு ஒப்புநிற்கும் வகையை நோக்குவாம்.

ஈஶ்வரனும் ஆழ்வாரும்:—

i. ஜகத் ரக்ஷணார்த்தமாக ஈஶ்வரன் "என்னின்ற யோனியுமாய்ப் பிறந்தது" போல, "மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்து" உழன்ற தன்மை ஆழ்வார்க்குமுண்டு.

ii. ஈஶ்வரன், சோக மோகங்களைக்கடந்து, அத்தால் கடவுள் எனப் பேர் பெற்று "காட்டிற் பிறந்து படாதனப்பட்டு" "தேசமறிய வோர் ஸாரதியாய்ச் சென்று" "ஆத்மானம் மாநுஷ்யமன்னியே" என்றவாறு மக்களைப்போல் நடித்து உலகை வாழ்வித்தான். ஆழ்வாரும், சடம் என்னும் காற்றைத்தடித்துச் சடகோபன் எனப் பெயர் பெற்று, "நீசனேன் நிறைவொன்றுமிலேன்" "பல நீ காட்டிப் படுப்பாயோ"

என்று சாமான்ய மக்களைப்போன்று அநுகரித்து முடிவில் உலகைத் திருத்தி நன்மை படுத்தினர்.

iii. சரணாகதி என்ற அரிய தர்மத்தை வெளியிட்டதே ஈச்வரனுடைய வராக, ராம, க்ருஷ்ண முதலிய அவதாரங்களுக்கு முக்கிய ப்ரயோஜனம். அந்த தர்மத்தைத் திருவாய்மொழி வாயிலாக மக்களுக்கு உபதேசித்து உலகை உத்தரிப்பித்தனரன்றோ ஆழ்வார்?

iv. ஈச்வரவவதாரத்தில் துஷ்டநிக்ரஹம், சிஷ்டபரிபாலனம் முக்கிய தர்மமாகக் காண்பது போல், ஆழ்வார் அவதாரத்திலும் தம்ப்ரபந்த முகேன செய்த பாஹ்ய குதிர்ஷ்டி மத நிரஸனத்தையும், வைதிகமத ஸ்தாபனத்தையும் காணலாம்.

ஆகையால் இம் முறைகளில் இருவர்படியும் ஒப்பு என்பதை ஏற்றுக்கொள்ளாதார் யார்?

திருமகளும் ஆழ்வாரும்:—

'ஸ்த்ரீப்ராயமிதரம் ஜகத்' என்ற ப்ரமாணத்தால், பரிஶுத்தாத்மஸ்வரூபத்துக்கு "அநந்யார்ஹ ஶேஷத்வம், அநந்ய ஶரணத்வம், அநந்ய போக்யத்வம், ஸம்ஶ்லேஷத்தில் தரிக்கை, விஶ்லேஷத்தில் தரியாமை, ததேக நிர்வாஹ்யத்வ" மாகிற ஆறு ப்ரகாரத்தாலே, பரிபூர்ணையான பிராட்டியோடு ஸாம்யம் நைஸர்கிகமாக வுண்டாயிருப்பது போல், இவ்வவஸ்தைகள் ஆழ்வாரிடத்தில் குறைவற உண்டாயிருப்பதை அவர்

இயற்றிய ப்ரபந்தங்களில் பரக்கக் காணலாம். அவை களை விரிக்கில் பெருகும்.

ஸூரிகளும் ஆழ்வார்களும்:—

நித்தியர்களுக்கு தேகயாத்திரையும் ஆன்மயாத் திரையும் "அஹமன்னம் அஹமன்னம் அஹமன்னாத:" என்கிறபடி பரமாத்மாவானன். "ஆழ்வார்க்கும் உண் ணுஞ்சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம், கண்ணன்" என உபயயாத்திரையும் பகவானே யானன். இம்முறையில் ஸூரிகளும் ஆழ்வாரும் ஒப் பரல்லரோ ?

ஸ்ரீபாதாழ்வானும் ஆழ்வாரும்:—

இராமாயண புருஷர்கள் நால்வரில் பாரதந்தர்யம் என்ற ஆன்மஸ்வரூபம் ஸ்ரீபாதாழ்வானல் வெளியிடப் பட்டது. இஃதே அவனுடைய அவதாரத்திற்குச் சிறந்த ப்ரயோஜனமாகும். பெருமாள் முடிதுறந்து காடேறினவாறே படைவீடான அயோத்தியை அவன் தீயென மதித்தனன்; ஆகையால் அதில் கால் பாவாதபடி பெருமாளைப் பின் தொடர்ந்து "உன் பொன்னடிக் கடவாத வழிவருகின்ற அடியரை" எனத் தன் நிலையை விண்ணப்பித்துச் சரணமடைந்தனன். அங்ஙனம் சரணமடைந்தும் தன் நினைவு பலியாமை யின், பெருமாள் நினைவையே தனக்குப் புருஷார்த்த மென மதித்துப், பெருமாள் அருளிய பாதுகைகளைச்

சிரோபூடணமாகத் தன் சிரத்திற்றுங்கி உள்ளக்களிப்புடன் நந்திக்கிராமத்தை அடைந்தனன். இச்செய்கை தான் ஆத்மதர்மங்களிற் சிறந்ததான "பாரதந்த்ர்யத்தோடுங் கூடிய சேஷத்வம்" என்று சொல்லப்படுவது.

இம் முறையைப் பின்பற்றித்தான் "பொல்லா வாக்கையின் புணர்வினையறுக்கலறு — சொல்லாய் யானுன்னைச் சார்வதோர் சூழ்ச்சியே" "மங்கவொட்டு மாமாயா" என ஆழ்வார் தம் உடலைப் போக்கித் தந்தருளுமாறு ஆர்த்தப்பாபத்திப் பண்ணினர். ஈஶ்வரன் திருவுள்ளமோ இவரைக்கொண்டு நாட்டைத் திருத்திப் பிரபந்தத்தைப் பாடுவித்துக் கொள்ளவேணுமென்று விழைந்தது. இதை உணர்ந்த ஆழ்வார், "யானும் நீ தானே யாவதோ மெய்யே அருநரகவையும் நீயானல், வானுயரின்பமெய்திலென்?" இத்யாதியால், அறுத்துத் தாவேணுமென்று ஆதியில் விண்ணப்பித்த தம் பொல்லா வுடலைச் சின்னாள் அவன் திருவுள்ளத்தை அடியொத்தித் தாங்கிக்கொண்டிருந்தனர். இதனல் நந்திக்கிராமத்தில் பெருமாள் வரவை ஸ்ரீ பரதாழ்வான் ஆற்றாமையுடன் எதிர்நோக்கியதுபோல் இவரும் "உன மனத்தாலென்னினைந்திருந்தாய்" என்கிறபடி அவன் திருவுள்ளத்தையே தமக்குப் பெரும்பேறாக அறுதியிட்டுப் பாடாற்றி வாளாய்த் தம்முடலைத் தாங்கி நின்றனர் எனப் பெற்றும், இவர் தாம் "அவன் பொகட்ட விடத்தே கிடக்கைக்கும் குணாநுஸந்தாநத்தாலே ஜீவித்திருக்கைக்கும் ஸ்ரீ பரதாழ்வா

ஞேடொப்பர்". இஃதே இவர்கள் இருவரும் அவ தரித்துக் காட்டிய ஆன்ம தர்மங்களில் தலை சிறந்தது.

இளைய பெருமாளும் ஆழ்வாரும்:—

பித்ரு வசன பரிபாலன வியாஜமாக அயோத்தியைக் கடந்து வனத்தையடைந்த பெருமாள் திருமேனியின் சௌகுமாரியாதிகளுக்குத் தக்கவாறு, "ஆளுமாளாராழியுஞ் சுமப்பார்தாம், வாளும் வில்லுங்கொண்டு பின்செல்வார் மற்றில்லை" என்று, ஒருவரும் வயிறு பிடிக்க வேண்டாதவாறு "குடிக்கிடந்தாக்கஞ் செய்து நின் தீர்த்த அடிமைக்குற்றேவல் செய்து—உன் பொன் அடிக் கடவாதே வழி வருகின்ற அடியரோர்க்கருளி" "அஹம் ஸர்வம் கரிஷ்யாமி" என்பவற்றைப்போல் தன் சேஷத்வத்தை மிக வுணர்ந்து, அவர் பின் காடேறி ஊணும் உறக்கமுமற்று எல்லா அடிமைகளையும் அவர் திருவடிகளில் இளைய பெருமாள் இறுத்தினன். ஆழ்வாரோ! "ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி—வழுவிலா அடிமை செய்யவேண்டும் நாம்" என்று பாரித்தார். முதல் முன்னம் அவனும் இவரை அடிமை கொள்ள திருக்கோளூரில் வந்து சாய்ந்தான். இவரும்

"கொடியார் மாடக் கோளூரகத்தும் புளிங்குடியும்
மடியாதின்னே நீ துயில் மேவி மகிழ்ந்தது தான்
அடியாரல்லல் தவிர்த்த அசைவோ? அன்றேல் இப்
படி தான் நீண்டு தாவிய அசைவோ? பணியாயே"

என்று அவனுடைய விபவம், அர்ச்சை முதலிய எல்லா அவதார நிலைகளிலும் ஈடுபட்டு, அவ்வோ நிலைகளில் தோற்றின அவன் தளர்ச்சிக்குத் தாம் நெஞ்சுருகித் "தோள் நொந்தால் தோளைப்பிடிக்கிறேன், தாள் நொந்தால் தாளைப்பிடிக்கிறேன் பணியாயே" என்று ப்ரார்த்தித்துப் பணி கொண்டனர். இவர்தாம் 'நசஸீதாத்வயாஹீநா' என்றும், 'குருஷ்வமாமநுசரம்' என்றும் சொல்லுகிறபடியே, வ்யதிரேகத்திலே தரியாமைக்கு இளையபெருமாளோ டொப்பர். இம்முறையில் இவர் இருவர் படியும் ஒன்றேயாயிற்று.

ததீய சேஷத்வத்தில்

ஸ்ரீ சத்ருக்நாழ்வானும் ஆழ்வாரும்:—

தசரதன் புதல்வர் நால்வரில், பகவத் சேஷத்வத்தின் எல்லை "ததிய சேஷத்வம்" என்பதை உலகறிய அநுஷ்டித்துக் காட்டினவன் ஸ்ரீ சத்ருக்னாழ்வானேயாவன். மலைக்கும் மடுவுக்கும் எத்துணை வேறுபாடுண்டோ, அத்துணை வேறுபாடு பகவத் சேஷத்வத்திற்கும் பாகவத சேஷத்வத்திற்கும் உண்டு. பாகவத சேஷத்வத்தின் எல்லையில் நின்றபோதே பகவத் சேஷத்வம் ஸித்திக்குமென்பதையும், பாகவத சேஷத்வமில்லாதபோது பகவத் சேஷத்வம் இல்லை என்பதையும், இருந்தாலும் அது தேவதாந்தர சேஷத்வத்திற்கு ஒப்பு என்பதையும் இவர் வெளியிட்டனர். இவ்வர்த்தம் "கச்சதா மாதுலகுலம் பரதேன ததா:" என்ற ப்ர

மானத்தால் நன்கு தெளியக் கிடக்கிறது. இதுவே நிரூபகமானால் "குணைர்தாஸ்யமுபாகத:" என பகவத் சேஷத்வத்தில் நின்ற இளையபெருமாள் படியையும் பகவத் சேஷத்வத்தின் எல்லையான பாகவத சேஷத்வத்தில் நின்ற ஸ்ரீ சத்ருக்னாழ்வான் படியையும் ப்ரதம சரம பர்வங்களாகக் கொள்ள வேண்டுவதித்தனை.

சேஷத்வம், குணத்தால் வருவதைக் காட்டிலும் ஸ்வரூபத்தால் வருவதே தலை சிறந்து நிலை நிற்பதாகும். இவ்விருவர்கள் நிலையை உற்றுநோக்கியதில் பகவத் சேஷத்வம் குணத்தாலும், பாகவத சேஷத்வம் ஸ்வரூபத்தாலும் வரக்கடவதென்ற அரிய பொருள் கிடைத்தது.

"அடியாரடியார் தம்மடியார் தமக்கடியாரடி தம் அடியோங்களே" என்று இதற்கவ்வருகு இல்லாத ததீயர்களைச் சேஷிகளாகக் கொண்ட ஆழ்வாருடைய ததீய சேஷத்வமோ, ஒரு படி தாழ நின்ற ஸ்ரீ பாதாழ்வானிடம், ஸ்ரீ சத்ருக்னாழ்வான் கொண்ட ததீயசேஷத்வத்தைக் காட்டிலும் உயர்வுற்றது. இவர்கள் இருவரோ, பாகவதர்கள் சேஷி என்பதை உலகிற்கு அறிவித்திட்டவர்.

இது காறும் ஆழ்வார்க்கு ஒப்பு நின்றார் சிலரைக் குறிப்பிட்டோம். இனி இவர் ஜ்ஞானத்தைச் சிறிது ஆராய்வாம்

ஆழ்வார் ஜ்ஞானப்பெருக்கு:—

இவ்வாழ்வார் பெருமை வாய்ந்ததற்குக் காரணம்

ஜ்ஞானமேயாகும். ஒருவனுக்குக் கல்வி அறிவாலும் முன் செய்த நல் வினையாலும் பிறக்கும் ஜ்ஞானம் அளவுபட்டேயிருக்கும். அங்ஙனமின்றி ஆழ்வார் ஜ்ஞானம் ஈஶ்வரன் அருளால் மயர்வறப்பெற்ற மதி நலமாதலால் அளவு கடந்து நின்றது. இஃது ஒன்றுமோ! ஜ்ஞானத்திற்கு இருப்பிடமான திருவனந்தாழ்வான் அவதாரமான திருப்புளி ஆழ்வார் மடியில் வளரப்பெற்றதும், "உண்ணுஞ் சோறும் பருகு நீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம், கண்ணன்" என்ற ஶுத்த ஸத்வமான உணவை உண்ணப் பெற்றதும், இவர் ஜ்ஞானப் பெருக்குக்குத் தக்க கருவிகளாயின, இம்முறையில், இவருக்கு ஜ்ஞானம் வந்த வழி, அது வளர்ந்த இடம், அது பெருகிய காரணம் ஆகிய யாவும் ஜ்ஞானப் பெருக்குக்கு இன்றியமையாத தத்வங்களாயின. இதனாலன்றே, ஆழ்வார், வேதம் அறியமாட்டாது கை விட்ட ஈஶ்வரன் ஆநந்த குணத்தின் எல்லையை அளவிட்டறியும் தன்மையையும், அவ்வேத ப்ரதிபாத்யனான ஸர்வஜ்ஞனுக்கும் "உனக்கொன்றுணர்த்துவன் நான்" என்று ஜ்ஞானத்தை ஊட்டும் வன்மையையும் பெற்றனர். ஆகையால் ஆழ்வார் ஜ்ஞானம், உபய விபூதியில் ஒருவரிடமும் காணவொண்ணதவாறு விஞ்சி நின்றது உணரத் தக்கது.

ஆழ்வாரைப் போற்றும்
நூல்கள்:—

ஒருவன் உயர்வை அறியும் கருவி அவனைப்பற்றிப்

பிறர் இயம்பும் நூல்களேயாகும். இதற்குக் கண் கூடாக, இறைவனைப் பற்றி உலாவி வரும் நூல்கள் "அனந்தாவை வேதா:" என, வேதங்கள் அநந்தமாயும், அவைகளைப் பின்பற்றி எழுந்த இதிஹாஸ புராணாதிகள் பலவாகவும் பரவி உள்ளன. இம்முறையில் ஆழ்வார் பெருமையை வெளியிட வந்த நூல்கள் பலவற்றில் சில வற்றைக் கூறுவாம்.

கண்ணிநுண்சிறுத்தாம்பு :—இஃது, ஆழ்வார்களில் ஒருவரான ஸ்ரீ மதுரகவிகள் அருளிச்செய்த ஒரு அரிய பதிகம். இதில் தமக்கு ஆசாரியரான நம்மாழ்வாரே தெய்வமென்றும், அவரே தமக்குத் தாயும் தந்தையுமென்றும், அவரே தம் புன்மையைப் பாராது தம்மை நோக்கினரென்றும், அவர் அருளிச் செய்த ப்ரபந்தமே வேதத்தின் அரும் பொருளென்றும், அவர் இருப்பிடமே தமக்கு வைகுந்தமென்றும் அவரே தமக்கு உத்தாரகர் என்றும் அறுதியிட்டுள்ளார். இதன் சீர்மைக்குத் தக்கவாறு இப்பதிகத்தை ஸ்ரீமந் நாதமுனிகள் நாலாயிரப் பிரபந்தத்தின் நடுவில் நடுநாயகமாக அமைத்துள்ளது பெரிதும் போற்றத் தக்கதே. இவர் அமைத்த பெருமை தோற்ற

"வாய்த்த திருமந்திரத்தின் மத்திமமாம் பதம் போல்
சீர்த்த மதுரகவி செய்கலையை—ஆர்த்த புகழ்
ஆரியர்கள் தாங்களருளிச் செயல் நடுவே
சேர்வித்தார் தாற்பரியம் தேர்ந்து."

என்று ஸ்ரீ மணவாளமாமுனிகளும் தாம் இயற்றி

உபதேசரத்நமாலையில் உலகமறிய வெளிப்படுத்தினர்.

திருவாய்மொழி நூற்றந்தாதி :— இஃது, ஆழ்வார் விஷயமாக அவர் பாடியருளிய திருவாய்மொழியை நூறு வெண்பாக்களாக ஸ்ரீ மணவாளமாமுனிகள் இயற்றியது.

ஆசார்ய ஹ்ருதயம் :— இஃது, அழகிய மணவாள நாயனுர் தொகுத்த ஒரு அரிய பெரிய நூல். இந்நூல், ஆசாரியர்களில் நம்மாழ்வாரே தலைவரென்றும் அவர் அருளிச் செயல்களே ஆரணங்களில் மிகச் சிறப்புற்றதென்றும் பல உறுதி மொழிகளால் அறுதியிடுகின்றது.

பாதுகாஸஹஸ்ரம் :— இஃது, ஸ்ரீ வேதாந்த மஹா தேசிகர் தம் பெருமிதம் தோன்ற ஆழ்வார் பரமாக வெளியிட்ட ச்லோகங்கள் ஆயிரம் கொண்ட விரிவான ஒரு க்ரந்தம். "மதிளரங்கர் வண் புகழ் மேல், ஆன்ற தமிழ் மறைகளாயிரமும்—ஈன்ற, முதல் தாய் சடகோபன்" எனப் பெரிய பெருமாள் பெருமைக்குத் தக்கவாறு ஆயிரம் பாக்கள் ஆழ்வார் பாடியதைப் போன்று, தானும் அப்பெருமாள் பாதுகைகளான ஆழ்வார் ஏற்றத்திற்குத் தகுதியாக ஆயிரம் க்ரந்தங்களாக்கி இயற்றிய ஒரு ஸ்தோத்ர நூலாகும்.

த்ரவிடோபநிஷத் ரத்நாவளி:— இதுவும் தூப்பில் பிள்ளை இனிமை தோற்றத் திருவாய்மொழியின்

சிரிய பொருள்களை வெளியிட்ட நூல்களுள் ஒன்று. பின்னும் இவை போன்று இவர் பாடிய க்ரந்தங்கள் பலவும் உள.

சடகோபரந்தாதி :— இஃது, கம்பநாட்டாழ்வார் ஸ்ரீரங்கத்தில் இராமாயணம் அரங்கேற்றிய காலத்தில் பெருமாள் நியமனத்தாம் அகப்பொருள் துன்னப் பாடிய ஒரு தமிழ் இலக்கிய நூல்.

மாறன் அலங்காரம், மாறன் அகப்பொருள், மாறன் கோவை, மாறன் யமகவந்தாதி, ஆழ்வார் அனுபூதி, சடகோப ஸஹஸ்ரம். இத்துனை நூல்கள் இன்னம் பல உள.

ஆழ்வார் யார்?

மடுவுக்கும் மலைக்கும் உள்ள வாசி நித்தியர்க்கும் பத்தர்க்கும் உண்டு. இங்ஙனேயிருக்க ஆழ்வார் நித்தியரா? அல்லது பத்தரா? என்னும் சங்கை உதிக்குமாறு இவர் பிறப்பு, வளர்ப்பு முதலியவை உள்ளன. ஆனால் "சிந்தையாலும் சொல்லாலும் செய்கையாலும்" அறப் பெரிய ஆழ்வார், பத்தரில் ஒருவரே எனக் கூறுதற்கு நிதர்சனங்கள் பல உள:—

(i) ஆழ்வார் நித்தியரில் ஒருவராய் இவண் அவதரித்து நாட்டைத் திருத்திப் ப்ரபந்தத்தைப் பாடி இறுதியில் நித்திய விபூதியை யடைந்தார் என ஏற்றுக்கொண்டால் இங்குள்ள முமுக்ஷுகளுக்கு அந்நாட்டில்

தாய பாகம் இல்லை என்றும், அது நித்தியருக்கே உரித்தென்றும் தீர்மானிக்கப்படும். இஃதே உண்மையானால் மோக்ஷ சாஸ்திரங்கள் எல்லாம் பொய்த்ததாகும். அப்போது நாஸ்திகம் தலையெடுத்து உலகம் நாசமடையும். பின்னும், இவ்விபூதியில் அவதரித்த ஆழ்வார் இறைவன் அருளால் மதிநலம் பெற்று "அவாவற்று வீடு பெற்ற குருகூர்ச் சடகோபன்" என்கிறபடி, நித்திய பூமியைப் பெற்றார் என்ற சரித்திரமும் மித்தையாகும்.

(ii) ஆழ்வார்க்குப் பிறந்த பரபக்தியாதிகள், முமுக்ஷுதசையிலுள்ள ஸம்ஸாரிகளுக்குப் பிறவாமையைக் கொண்டு, ஆழ்வாரை நித்தியரில் ஒருவராக சங்கிக்க ஹேதுவாயிற்று. ஆனால் ஆழ்வாருக்குப் பிறந்த அவஸ்தைகள் யாவையும், ஈச்வரன், முமுக்ஷுக்களுக்கு அவர்கள் ஆன்மா உடலை விட்டுப் பிரியும் க்ஷண காலத்தில் பிறப்பித்து, அனந்தரம் அவர்களைத் தன் திருவடிகளில் சேர்த்துக்கொள்ளுகிறான் என்ற உண்மையை அறிந்தவர்களுக்கு இச்சங்கை பிறப்பதற்கு இடமில்லை. அத்தால் ஆழ்வார்கள் ஆர்த்தராய் வீடு பெற்றார்கள் என்றும், முமுக்ஷுக்கள் த்ருப்தராய் வீடுபெறுகிறார்கள் என்றும் விவேகிக்கத்தக்கது.

(iii) ஒருவர் பிறப்பு வளர்ப்பு முதலிய ஐதிகங்களைப் பிறர் வாயால் அறிவதுமுண்டு. ஆனால் அவரவர் வாயால் அறிவதே சாலவும் நம்பத்தக்கது. இம்

முறையில் ஆழ்வார் அவதாரத்தைப் பற்றி அர்த்தவாதங்களால் மற்றவர்கள் சொல்லுவதைக் காட்டிலும் "மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து" என்று தாமே அருளிச்செய்த வார்த்தைகள் மறுக்கவொண்ணாத ப்ரமாணங்களாகும். பின்னும் ஆழ்வார் பாடிய ப்ரபந்தங்கள் " பொய்யில் பாடல்கள் " ஆனபடியால் அவர் பாடல்களில் அர்த்தவாதங்கள் சிறிதும் காண்பதற்கு வகையில்லை. இத்தன்மைகள் யாவும் ஆழ்வார் பத்தரில் ஒருவராய் அவதரித்தார் என்பதைத் தெள்ளியதாக உணர்த்துகின்றன.

(iv) இன்னமும் நித்தியரில் தலைவரான சேனை முதலியார் சேதனர்களைத் திருத்த ஆழ்வாராய் அவதரித்தார் என்றும், திருக்குருங்குடி எம்பெருமானே ஆழ்வாராகப் பிறந்தான் என்றும் இன்னும் பலவிதமாகக் கூறிவருவதை அறிகிறோம். இக்கட்டுரைகள் யாவும் உண்மையே. ஆனால் பலர் சேர்ந்து ஒரு ஆழ்வாராகப் பிறந்தார் என்னில், பல ஆன்மாக்கள் கூடி ஒரு ஆன்மாவாக ஆயிற்று என்று கொள்ளவேணும். அது அசங்கதம். ஆனால் பலருடைய சக்தி, குணம், ரூபம் முதலியவை ஒரு ஆன்மாவுக்கு வருவது இயல்பு என்பதைக் கண்கூடாகக் கண்டுவருகிறோம். ஆத்மாவை "புத்ரனுமாஸீத்" என்ற ப்ரமாணத்திற்கும் இதுவே பொருள். மற்றபடி பிதாவின் ஆத்மா புத்ரன் ஆத்மாவாக ஆயிற்று என்பது கூடாதகாரியம். இதனால், சேனை முதலியார் திருக்குருங்குடி எம்பெரு

மான், மற்றும் பலருடைய அரிய பெரிய குணங்களைப் பெற்று ஆழ்வார் அவதரித்தார் என்பதே இங்குக் கொள்ளத்தக்கது. மற்றபடி அவர்களே ஆழ்வாராக மாறினர்கள் என்பது ஏற்கத்தக்கதன்று. திருமகள், ஸ்வரூபத்தால் சேதனர் கோடியிலும், ஸ்வபாவத்தால் ஈஶ்வர கோடியிலும் பொருந்துவது போல்; ஆழ்வாரும் ஸ்வபாவத்தால் நித்தியரில் ஒருவராயும், ஸ்வரூபத்தால் பத்தரில் ஒருவராயும் உள்ளனர். இம் முறையில் ஆழ்வார் பலர் ஸ்வரூப ஸ்வபாவங்களைப்பெற்று உலகுய்ய அவதரித்தனர் என்பதே அறிவு. ஆகவே, இதுகாறும் கூறியதில் பத்தரில் ஒருவர் ஆழ்வார் என்பதில் யாது பிணக்கு ?

இவர் ஸ்ரீமந் நாராயணனுடைய அம்சமும் விஷ்வக்ஸேனருடைய அம்சமும் பொருந்திய ஒரு ஸம்ஸாரி சேதனர். இவ்வர்த்தம் த்ருதீய ப்ரம்ம தந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி அருளிச் செய்த குருபரம் பராப்ரபாவம் மூவாயிரப்படியில் உளதாகச் சொல்லுவர்.

ஆழ்வார் இயல்பு.

" சேலேய் கண்ணியரும் பெரும் செல்வமும் நன்மக்களும், மேலாய் தாய் தந்தையும் அவரே யினி யாவாரே " என்று, ஆழ்வார்க்கு ஸ்ரீய:பதி எத்தகைத்தோ அத்தகைத்து ஆழ்வார் நம் வைணவகுலத்திற்கு என்பதை ஸ்ரீ ஆளவந்தார் "மாதா பிதா யுவதயஸ்தநயாவிபூதிஸ்ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்,

ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம்" என்கிற தனியனில் வெளியிட்டனர். இக்கருத்தை "உண்டோ சடகோபர்க்கொப்பொருவர்" என்று ஸ்ரீ மணவாள மாமுனிகளும் சுருங்க அருளிச்செய்து ஆழ்வார் பெருமையை வெளிப்படுத்தினர். இத்தால் உபயவிபூதியிலும் ஆழ்வார் ஒருவரே விலட்சணர் என்பதை வற்புறுத்தி "வக்த்ரு வைலட்சண்யம்" முற்றுப்பெற்றது.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

அருளிச்செயல் இரண்டாம்பகுதி

ப்ரபந்த வைலக்ஷண்யம்.

(நூல் இயலின் பொலிவு)

திருவாய்மொழிப்ரபந்தம், நம்மாழ்வார் திருமால் திருவருளால் மதிநலம் பெற்று, அது பரமபக்தியளவும் பெருகி வெள்ளமிட்டு அஃது உள்ளடங்காமற் ததும்பி வெளிவந்த சொற்களேயாகும். இவை இவர் கல்வி அறிவால் இசைத்த பாக்களன்று. ஆயினும் ஸ்ரீவான்மீகி பகவான் சோகத்தால் சபித்த சொற்கள் செவிக்கினிய ஸ்லோகங்களாக எவ்வாறு அமைந்தனவோ, அதுவேபோல் பக்திபரவசராய் ஆழ்வார் பாடின பாவிய பாக்களும் ப்ரபந்தத்திற்குள்ள அமைப்புகள் சிறிதும் வழுவாதபடி, "சொல் பாடலான தமிழ் ஆயிரம்" எனக்கட்டளைப் பட்டன.

இப்பிரபந்தம் ஆயிரம் பாக்களாய் அந்தாதி முறையில் தொடுக்கப்பட்டுள்ளது. தமிழ் பாக்களில் ஆசு, மதுரம், சித்திரம், விஸ்தாரம் எனப்பகரப்படும் நான்கு வகைகளையும் இதில் காணலாம்.

ஆசுகவி:— [ஆசு — விரைவு] மூச்சு விடுமுன்னே முன்னூறு ஆச் சென்றாலாயிரம் பாட்டாகாதோ, என விரைவிற்பாடும்கவி. இஃது, பொருளடி, பாவணி, முதலிய கொடுத்து மற்றொருவன் பாடுக வெனப் பாடுங்கவி இம்முறையில் ஸ்ரீ மதுரகவிகள் ஸ்ரீய:பதியின் ஸ்வரூபாதிகளை கேட்டுக் கொண்டேவர, ஆழ்வார் தட்டுத்தடையின்றிச் சொல்லிக் கொண்டே வந்த ப்ரபந்தமாதலால் இஃது ஆசு கவியாகும்.

மதுரகவி:— இது பொருட் செல்வம், சொற்செல்வம், தொடை, தொடை விகற்பம், செறிய உருபக முதலிய அலங்காரத்தோடு இனிய ஓசையோடுப் பாடும் கவி. "துயக்கின்றிதொழுதுரைத்த ஆயிரம்", "செயிரில் சொல்லிசைமாலை ஆயிரம்", "பண் கொள் ஆயிரம்" என சொற் செல்வமும் "நேமியும் சங்குமிருகைக் கொண்டு, பன்னேடுஞ் சூழ் சுடர் ஞாயிற்றோடு பால்மதி யேந்தி, ஓர் கோல நீல, நன்னெடுங் குன்றம் வருவதொப்பான்" என உருவகமாகவும் பாடிய திருவாய்மொழி மதுர கவியாகும்.

சித்திரக்கவி:— திருவாய்மொழி முதற்பாட்டில் முதல் மூன்றடிகள் ஸர்வார்த்த ஸாரமாகிய பிரணவத்தை வகுத்துச் சொல்லுகையாலே இவை "காந்தறை"ச் செய்யுளை யுடையது. போன்ற சித்திரக்கவிகளாகும்.

விஸ்தாரக்கவி:— "அளவியன்ற வந்தாதி ஆயிரத்து" "குழாங் கோளாயிரத்து" இத்தியாதி

கூற்றுகளால், பதினொரு பாடல்களைக் கொண்ட நூறு பதிகங்களின் வடிவமாய்ப் பகவத் விஷயம் ஒன்றையே பலபடியாக விரித்தும் அழகு படுத்தியும் ஆயிரங்கவிகளுக்கு மேலாய்ப் பாடியுள்ளதனால், திருவாய்மொழி விஸ்தாரக் கவியாகும்.

முதல் நூல்:— முதல்வன்வாக்கு. அஃது, என் சொல்லால் யான் சொன்ன இன் கவியென் பித்து, தன் சொல்லால் தான் தன்னைக் கீர்த்தித்த மாயன்" எனத் திருவாய்மொழி இறைவன் பாடியதாகும். அல்லது, இதற்கு முந்தி இதைப் போன்ற வேறொரு நூல் இல்லாமையுமாகும். மற்ற ஆழ்வார்களுடைய ப்ரபந்தங்களோ திருவாய் மொழிக்கு அங்கமாகவும், உபாங்கமாகவு மிருத்தலால் இம்முறையில் இது முதல் நூலாயிற்று.

அற நூல்:— "மின்னின் நிலையில" என்ற பதிகத்தால் யாக்கை நிலையாமையும், "ஒரு நாயக"த்தால் செல்வநிலையாமையும், "பிறிவகையின்றி நன்னீர் தூய்ப் புரிவதும் புகை பூவே" என்பதனால் பகவதாராதனமும், "ஆணையாயிரத்து" என்றதனால் பகவதாஜ்ஞாரூபமான தர்மங்களும் விதிக்கிறபடியால் திருவாய்மொழி அறநூலாயிற்று.

பொருள் நூல் :—பொருளாவது, – உடைமை, உண்மை, சம்பத்து, சொற் பொருள், தலைமை முதலியவற்றைக்காட்டும். "நுங் மெய்வருத்திக்கை செய்துய்

மினே" என நல்வழியில் பொருள் தேடுமுபாயத்தையும், "பொய்யில் பாடலாயிரம்", "தூயவாயிரம்" "கட்டெழி லாயிரம்", "சொல்வலங் கொண்டவாயிரம்" என்றதனுலும், மற்றும் பல நலன்களையும் தருவதலானும் திருவாய்மொழி பொருள்நூலாயிற்று.

இன்பநூல்:— "பண் தலையிற் சொன்ன தமிழ் ஆயிரம்" என்றதினுலும், "மலிமாமை குறைவிலம்", "வரிவளையாற்குறைவிலம்", "உடம்புடையான்கவராத வுயிரினுற் குறையிலம்" எனக்களவும், கற்புமாகிய அகப் பொருள் துறைகள் இதில் நிறைந்திருத்தலால் திருவாய்மொழி இன்பநூலாகும்.

வீட்டு நூல்:— "நிரனிறையாயிரத்து இவை பத்தும் வீடே", "இவைபத்தும் வல்லார் அமரரோடுயர்விற் சென்று அறுவர்தம்பிறவி யஞ்சிறையே", "வீடுபெறுத்தி" இத்யாதியால் திருவாய் மொழி வீட்டு நூலாகும்.

இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழும் இன்நூலில் குடி கொண்டுள்ளன :—

இயற்றமிழ்:— (செந்தமிழ், வழக்கத்தமிழ்). கம்ப நாட்டாழ்வார் "பா வொக்கும்" என்றருளிச் செய்தபடி "எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை முதலிய யாப்பிலக்கணத்தைத் தம்முள் அடக்கிக் கொண்டிருப்பதால் திருவாய் மொழி இயற்றமிழ்ச் செய்யுளாகும். ஆழ்வாரும் "செந்தமிழ்

பத்தும்'' "கட்டெழில் ஆயிரம்'', "சீர்த் தொடை ஆயிரம்'' என்றருளிச் செய்துள்ளதை நோக்குக.

இசைத்தமிழ்:—(சங்கீதத் தமிழ்). "நுண் இசை ஒடுக்கும்'', "பண்ணார் பாடல்கள்'' என்றருளிச் செய்தபடி, குறிஞ்சி, செருந்தி, இந்தளம், கொல்லி, காமரம், தக்கேசி, பஞ்சமம், கைசிகம், காந்தாரம், பாலையாழ் முதலிய பண்களைத் தம்முள்ளே கொண்டிருப்பதாலும், "பண்ணார் பன்னிரு நாமப்பாட்டு'', "மொய்ய சொல்லாலிசை மாலைகளேற்றி உள்ளப் பெற்றேன்'' என்று ஆழ்வார் தாமே அருளிச் செய்தபடியாலும், தாள ராகங்களுக்கு இடங்கொடுத்து நிற்பதினாலும் திருவாய்மொழி இசைத்தமிழ் நூலாகும்.

நாடகத்தமிழ்:— "பலவும் பறையும் நா ஒடுக்கும்'' என்று வெளியிட்ட படியால், பல விஷயங்களையும் கூறுகிற நாடகத் தமிழின் இலக்கணத்தைத் தம்முள் அடக்கிக் கொண்டிருத்தலால் நாடகத் தமிழாகும் திருவாய்மொழி.

இது "பாலே தமிழரிசைகாரர் பத்தர் பரவுவன'', "மொய்மாம் பூம் பொழில்............. எம்மானைச் சொல்லிப்பாடி யெழுந்தும் பறந்தும் துள்ளாதார்'', "பாடிப் பறந்தும் குனித்துழலாதார்'', "புகழு நல்லொருவ னென்கோ'' என்று பலவும் சொல்லுவதான 'நா' [இயலுக்கும் இசைக்கும் நடு நிலைமையான]

நாடகத்தையும் தம்முள் கொண்டிருப்பதாலும் திருவாய்மொழி நாடகத் தமிழாகும்.

பின்னும் நாடகமாவது:— ஒருவன் தன் கருத்தை பிறர்க்கு நன்கு புலனாகுமாறு, பலவகை வேடம் பூண்டு அதற்கேற்ப அபிநயித்துக் காட்டுவதொரு அநுகாரமாகும். ஆழ்வார் தம் உட்கருத்தைப் பல்லோர்க்கும் விளங்கச்செய்ய, காமான தன்மையைக் குலைத்து பெண் வேடம் பூண்டு தலைவியாகவும், தோழியாகவும், தாய் ஆகவும், "அஞ்சிறைய மடநாராய்", "தீர்ப்பாரை", "ஆடியாடி", "கங்குலும்பகலும்" முதலிய பதிகங்களில், பலகருத்துகளை அமைத்துப் பாடியுள்ளார். இம்முறையில் திருவாய்மொழி நாடகத் தமிழ் எனக் கூறுதற்குத் தடை யாது?

இதன் கருத்தை யோகியான ஸ்ரீமன் நாதமுனிகள் அறிந்து, கீழையகத்தாழ்வான், மேலையகத்தாழ்வான் என்கிற இருவர்க்கும் இதைக் கற்பித்து வைத்து தம் காலத்தில் ஸ்ரீரங்கம் முதலிய திவ்விய தேசங்களில் நடன முறையில் அநுஷ்டிக்கச் செய்ததைப் பின்பற்றி இற்றைக்கும் நடைபெறுதலை யரியாதார் யார்?

"சொல்லார் தமிழ் ஒரு மூன்றும் ச்ருதிகளும் நாலும்" எனத் திருவரங்கத்தமுதனார் தாம் இயற்றிய ப்ரபந்தத்தில் திருவாய்மொழியை நாடகத்தமிழென இசைவித்தார். இத்தன்மைகளினால் திருவாய்மொழியை நாடகத்தமிழெனக் கூறுதற்குக் குறையில்லை.

இத்தகைய காரணங்களைப் பற்றியல்லவோ, கம்பரும் " மும்மைத்தமிழை, ஈன்றான் குருகைப்பிரான்", "அருந்தமிழ்க்குப் பாயிரம்" திருவாய்மொழி என்றார். [பாயிரம், முகவுரை, நூன்முகம், இவை ஒரு பொருளைக்குறிக்கும் பன்மொழியாகும்] "பாயிரமில்லது பனுவலன்றே" என்றபடி ஒரு நூலுக்குப் பாயிரம் எங்ஙனம் இன்றியமையாததோ அங்ஙனமே தமிழ் நூல்களுக்கெல்லாம் திருவாய்மொழி இன்றியமையாததாகும். "பருப் பொருட்டாகிய பாயிரம் கேட்டார்க்கு" என்கிறபடி; ஒரு நூலின் பாயிரம் ஓதினார்க்கு அந்நூல் இனிது விளங்குவது போலத் திருவாய்மொழி யோதினார்க்கு எல்லா நூல்களும் இனிது விளங்கும். இதைப்பற்றத்தான் "அருந்தமிழுக்குப்பாயிரம்" என்றார். "திருவிருத்தத் தோரடிக்கற்றீர் திருநாட்டகத்தே" என்று கிடாம்பியாச்சானும் பணித்தது.

திருவாய் மொழியைப் பலரும் கொண்டாடியது:—

திருக்குருகூரில் ஓர் உத்ஸவத்தில் "வேதம் தமிழ் செய்த மாறன் வந்தார்" என அநேக விருதுகளைக் கூறித்திருச்சின்னம் முழங்கினர். இதைச் செவியேற்ற சங்கப்புலவர்கள் இவர் பாடிய திருவாய்மொழி, சங்கமேறிய செய்யுளன்றே என்று பல குதர்க்கம் பேசி விருதுகளைத் தடுத்து விட்டார்கள். அப்போது எம்பெருமான் கிழப் பிராமண வடிவு கொண்டு வந்து திரு

வாய் மொழியில் "கண்ணன் கழலிணை" என்ற பாசுரத்தின் முதலடியை ஒரு சிற்றேட்டில் எழுதி அதைச் சங்கப்பலகையில் வைக்கும் படி செய்தார். அந் நியமனத்தின் படியே ஆழ்வாரின் பக்தர் அப்பாட்டை எழுதிய சிற்றேட்டை அப்பலகையில் வைத்தனர். அப்போதே சங்கப் புலவர்கள் ஏறியிருந்த பலகை பொற்றாமரைப் பொய்கையில் மூழ்கித் தன்மேலிருந்த புலவர்களை நீரில் வீழ்த்தி தன் மீது வைத்த சிறு முறியை மாத்திரம் ஏந்திக்கொண்டு மிதந்தது. நீரிலிருந்து கரையேறிய புலவர்கள் ஆழ்வாருடைய தெய்வீக பாண்டித்தியத்தை யுணர்ந்து, அவரிடம் அபசாரப் பட்டதற்கு அநுதாபமுற்று, அதனை க்ஷமிக்கும் பொருட்டு ஒவ்வொருவரும் ஆழ்வாரின் மகிமை தாங்கிய பிரபாவத்தைக் குறித்துத் தனித்தனி ஒவ்வொரு பாடல் பாடி வெளியிட்டார்கள். அப்பாட்டுகள்யாவும் ;

> "சேமங் குருகையோ! செய்ய திருப் பாற்கடலோ!
> நாமம் பராங்குசமோ! நாரணமோ! — தாமம்
> துளவோ! வகுளமோ! தோளிரண்டோ! நான்கு
> முளவோ பெருமானுக்கு."

என்ற இப்பாடல் வடிவாகச் சிறிதும் வேற்றுமையின்றி ஒற்றுமைப் பட்டிருக்கக் கண்டு அவர்களனைவரும் அதிசயமுற்று ;

"ஈயாடுவதோ கருடற்கெதிரே யிரவிக் கெதிர் மின்
மினி யாடுவதோ,

நாயாடுவதோ வுறுமிப் புலிமுன் நரிகேசரி முன் நடை
யாடுவதோ
பேயாடுவதோ வழகூர்வசிமுன் பெருமான் வகுளா பர
ணன்னருள் கூர்ந்
தோவாதுரை யாயிர மாமறையின் றெருசொற் பொ
றுமோ வுலகிற் கவியே"

என்று லஜ்ஜையுற்றார்கள் என்பது ஐதிகம்.

திருவள்ளுவர்

"குறுமுனிவன் முத்தமிழு மென்குறளு நங்கை
சிறு முனிவன் வாய் மொழியின் சேய்" என்றும்,

ஔவையார்

"ஐம்பொருளு நாற்பொருளு முப்பொருளும் பெய்தமைத்த
செம்பொருளையெம்மறைக்குஞ் சேட்பொருளைத்—தண்
குருகூர்
சேய்மொழியதென்பர் சிலரியானிவ் வுலகில்
தாய் மொழியதென்பேன் தகைத்து"; என்றும்,

இடைக்காடர்

"சேய்மொழியோ தாய் மொழியோ செப்பினிரண்டு,
மொன்றவ்
வாய் மொழியோ யாகுமறை யென்ப — வாய் மொழி
போல்
ஆய்மொழிகள் சாலவுள வெனினுமம் மொழியின்
சாய்மொழிக ளென்பேன் நகைத்து"; என்றும்,

மற்றும் புலவர்கள் பலர் ஆழ்வார் மீது பாடிய கவிகள் பலப்பல விரிப்பிற் பெருகும்.

திருவாய் மொழி.

யாப்பின் அமைப்பு.

திருவாய் மொழி ஆயிரமும் பா, பாவினத்தைச் சேர்ந்தது. அவைகளுக்குள்ள ஓசை ஸாமகானத்தைத் தழுவியுள்ளது. 'பா'என்பது, எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய அறுவகை உறுப்புகள் அமைந்து, சான்றோர்களுடைய கருத்தும் பொருட்கிடனும் இயலுந்தன்மைத்து. இந்த இலக்கணங்கள் யாவும் அமையச் செய்யப் படுதலால் செய்யுளெனப்பட்டது. அதுவே யஞ்சினால் போற்றொடர்ந்து வழங்குதலால் 'பா' என்னுந் தன்மைத்து.

பாக்களின் வகை:— வெண்பா, ஆசிரியப்பா கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நான்கு வகையுடன் [இனமில்லாத] மருட்பாவையுஞ் சேர்க்கப் 'பா' ஐந்து வகைப்படும்.

பாவினமென்பது:— அரசனது ஆக்கினை, நீதி முதலிய வற்றைத் தழுவிக்கொண்டு அவனது செயலை நடத்துகின்ற மந்திரி, சேனாபதி, படைத் தலைவன் முதலிய உரிமைச் சுற்றம் போல, பாக்களுக்குறிய இலக்கணங்களைத் தழுவி, சீரினாலும், அடியாலும், ஓசையா

லும், சந்தத்தினாலும் அவற்றினின்றும் வேறுபட்டு, அப்பாக்களுக்கு இனமாய் வருந்தன்மையது.

மருட்பாதவிர, மற்றை ஒவ்வொரு பாவிலும் தாழிசை, துறை, விருத்தம் என மூன்று வகைகள் உண்டு.

திருவாய்மொழி அந்தாதித் தொடையை யுடையது'—

அஃதாவது, முதல்பாட்டின் அந்தமாய் நிற்கும் எழுத்து, அசை, சீர் முதலியன இரண்டாம் பாட்டில் ஆதியாய் நின்று தம்முளொன்றத் தொடுக்கப்படுந் தொடை அந்தாதித்தொடை எனப்படும்.

இது முடிவு பாசுரத்தின் இறுதிச்சீரே முதலுமாய் நின்று புணர்தலால் மண்டலவடியந்தாதி எனப்பட்டது. மண்டலடி; சக்ராகாரமாய் வளைந்து போய் முதல் பாட்டின் முதலடியின் முதலினின்ற "உயர்வற" என்றதோடு "உயர்ந்தே" என்ற முடிந்த பாட்டின் இறுதிச் சீர் ஒன்றிற்று.

அந்தாதியில், இயலிசையந்தாதி, பொருளிசை யந்தாதி என இருவகையுண்டு. பொருளிசை யந்தாதியும் சில விடங்களில் வருவதுண்டு.

வந்தஇடம்:—"புரிவதுவும் புகை பூவே" என்று பாட்டு முடிந்தவுடன் "மதுவார் தண்ணந்துழாயான்"

என்று மேல் பாட்டு உபக்கிரமித்தது. "பூவாகில் மதுவோடே கூடி யல்லதிராமையாலே சேரும்" என்று சொல்லுவர்கள் தமிழர்—(ஈடு)

திருவாய்மொழி அந்தாதியாய் அமைந்ததின் கருத்து.

அந்தாதிக்ரமத்தில் பாடிய ப்ரபந்தங்களில் இடையிடையே வேற்றுப் பாக்களை நுழைத்தல், அவைகளில் ஒன்றை மறைத்தல் முதலிய தீய செயல்கள் எளிதில் இயலாது. பின்னும், ஒரு பாசுரத்தின் அநுசந்தானம் முடிந்தவுடன் மேல் பாட்டின் முதல் பாதத்தை எளிதில் எடுத்துக்கொடுத்து, இம் முறையில் ப்ரபந்தம் முழுமையையும் விடாமல் அநுசந்திப் பதற்கு ஒரு தக்க கருவியாயுமிருக்கிறது. இத்தால் திருவாய் மொழி சதா அநுசந்தேயம் என்பதையும் அறிவித்ததாம்.

திருவாய்மொழி ஆயிரமாக அமைந்த சிறப்பு.

எண்கள் ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், லக்ஷம், கோடி என வழங்கி வருகின்றன. அவைகளில் ஆயிரம் என்ற எண் மிகச் சிறியதும் பெரிதுமாயில்லாமல் நடுத்தரமாய்ப் பலவிடங்களில் பெரியோர்கள் கையாடி வருவதைக் காண்கின்றோமல்லவா. வேதங்களில் சிறந்ததான சாமவேத சாகைகள் ஆயிரம்; அவ்வேதங்களின் ப்ரதிபாத்தியனான நாராயணன் நாமங்கள் ஆயி

ரம்; "தாள் ஆயிரம், தோள் ஆயிரம், திருக்கண் ஆயிரம்" என அவனுடைய அவயவங்கள் ஆயிரம்; அவன் திருப்பள்ளியான அனந்தன் பணமுடி ஆயிரம்; அவன் உருப்புக்களுக்குப் போலியான புண்டரீகத்தின் அல்லிகள் ஆயிரம்; அவ்வொப்பனைகளோடு வீற்றிருக்கும் கோயில் திருமாமணி மண்டபத்தைத் தாங்கிநிற்கும் தூண்கள் ஆயிரம்; ஆங்கு இருளைப் போக்கும் கதிரவன் காலும் கிரணங்கள் ஆயிரம்; அவ்வமயம் ஆனந்த பரவசராய்ப் பக்தர்கள் பரவும் திருவாய் மொழி பாக்கள் ஆயிரம்; அவ்வொப்பனைகள் காட்டில் எரித்த நிலாவாகாமல் அநுபவிக்கும் ஸ்ரீவைஷ்ணவ குழாங்கள் ஆயிரம்; அவ்வழகிய தோற்றத்திற்குக் கண்ணெச்சல் வாராது காப்பிடும் அநந்ய ப்ரயோசனர்கள் பாடும் பாசுரமும் "பல் ஆயிரத்தாண்டே". இம்முறையில் திருவாய் மொழி ஒரு அரிய ஏற்றத்தைப் பெற்றுள்ளது.

நூறு பாக்கள் கொண்ட பத்துப் பகுதி களாகவும், பத்துப் பாக்கள் கொண்ட நூறு பதிகங்களாகவும் திருவாய்மொழி அமைந்த அழகு:—

ஒரு பெருக்காறு, பாழ்நிலத்தில் பாயாமல், பள்ளத்தில் வடியாமல், உப்புக் கடலில் புகாமல் பசு, பயிர், மக்கள் இறுதியாக "துப்பார்க்குத்துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்—துப்பாய தூஉ மழை" என யாவர்க்கும் பயன் படுமாறு, அப்பெரிய நதியைச் சிறியதும், பெரிதுமானப் பல அணைகளாற்

அடுத்துச் சிற்ருறு, கால்வாய், தடாகம், ஊருணி முதலியவற்றில் பலர் உய்யுமாறு தேக்கிவைப்பது போல, திருவாய்மொழி அமுதவாரியால் தேவர், மக்கள் யாவரும் உபஜீவிக்குமாறு, அவரவர்கள் மதி நலத்திற்கு ஏற்கும் வகையில் நூறு, பத்து என்கிற அளவில் அமைந்துள்ளது. இஃதே இதற்கு இன்றியமையாத சிறப்பு.

பின்னும் 'ஸ்ரீமன் நாராயணன் நாமங்கள்' ஆயிரத்திற்கு ஸ்மாரகமாக திருவாய்மொழி பாக்கள் ஆயிரங்களாகவும், அவன் பத்து அவதாரங்களுக்கு ஸ்மாரகமாக பத்துப் பத்துகளாகவும், அர்ச்சாவதாரங்கள் நூற்றெட்டுக்கு ஸ்மாரகமாக பதிகங்கள் நூருகவும், இம்முறையில் திருவாய்மொழிப் பல உருவகமாயிற்றென்பது தெளிவு.

திருவின் வடிவு கொண்டது
திருவாய் மொழி

நூல்கள் மங்களச் சொற்களைக் கொண்டுத் துவக்குவது கவிவாணர் வழமை. இம் முறைமை திருவாய்மொழிக்கு மிக ஒற்றுமையுண்டு. இப்ரபந்தத்தின் முதல் பாட்டு, முதல் பாதம், முதல் பதம், முதல் எழுத்து எல்லாம் மங்களகரமே: மங்களங்களுக்கெல்லாம் மங்களத்தைத் தரும் யாதொரு லக்ஷ்மீ வாசகமாயிற்று 'உ' என்ற முதல் எழுத்து. முதல்பதமோ 'உயர்வு' இச்சொல் உலகின்கண் காணப்படும் பொருள்களில்

மிக மேன்மைபெற்ற பொருள் எதுவோ அப்பொருள்களுக்கு வாசகமாய் நிற்றலைப்பற்றி இப்பதம் மங்களகரமாயிற்று. முதல் பாதமோ "உயர்வறவுயர் நலமுடையவ னெவனவன்" என்பது. இச்சொற்றொடர் ஸமஸ்த கல்யாண குணங்களுடன் பிராட்டிக்கு வாசகமான 'உ' காரத்தை முதல் எழுத்தாகக் கொண்டிருப்பதால், திருமகளை விசேஷணமாகக் கொண்ட ஒருவனை 'அவன்' என்று காட்டுகிறபடியால் இதுவும் மங்களகரம். முதல் பாட்டோ! புருஷார்த்தங்களில் தலைசிறந்ததான கைங்கர்யத்தையும் அவன் விக்ரஹத்தையும் "சுடரடிதொழுதெழு" என்று அருளிச் செய்தபடியால் இதுவும் ஸ்வரூபத்திற்கு மங்களகரமாயிற்று. வேதத்திற்கு ப்ரணவம்போல் முதல் பாட்டின் விரிவே திராவிட வேதமாகையால் திருவாய்மொழி முற்றும் மங்களகரமெனத் தடையாது? ஆகவே திருவாய் மொழியும் திருமகளும் ஒன்றென வறிந்தோம்.

ப்ரபந்த வைலக்ஷண்யம்

முற்றும்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

அருளிச்செயல்—மூன்றாம் பகுதி.

ப்ரதிபாத்ய வைபவம்.

(நூற்பொருளின் பெருமை)

ஒரு நூலின் பொருளே அந்நூல்களைப் பெருமை படுத்தும் அரிய கருவியாகும். அஃதின்றி அந்நூல் வேறு பலவற்றால் எத்தகைய வீறு பெற்றிருப்பினும் அவையாவும் கடலோசையே. ஆழ் பொருளில்லா அருளிச்செயல் மணமில்லாத மலருக்கும் ஒளியில்லாத மாணிக்கத்திற்கும் துல்யமாகும். ஆதலால் சீரிய பொருள்நிரம்பிய நூல்கள் பலவற்றுள் தலைசிறந்த திருவாய்மொழியின் பெருமையையே இங்கு கூறப்புகுந்தாம்.

இறைவன் அருள் பெற்ற ஆழ்வார் அருளிச்செயலை "அருந்தமிழ்க்குப்பாயிரம்" என்றார் கல்வியிற் சிறந்த கம்பர். பருப் பொருட்டாகிய பாயிரம் கேட்டார்க்கு நுண் பொருட்டாகிய நூல் இனிது விளங்கும். ஒரு நூலின் பாயிரம் ஓதினார்க்கு, அந்நூல் இனிது விளங்கு மென்பது திண்ணம். அதுபோல திருவாய்மொழி யோதினவர் எல்லா நூல்களின் உயர்பொருள்களையும் அறிந்தவராவர். ஆகவே, உலகில் உலவி

வரும் அறிய நூல்களுக்கெல்லாம் திருவாய் மொழி பாயிர நிலையில் உள்ளது. இன்னும் திருவாய்மொழிப் பாக்கள் ஆயிரத்திற்கும், திருவாய்மொழி என்றசொல் 'பாயிரம்' என்ற நிலையை பெற்றுள்ளது. இம்முறையைப் பற்றி நோக்கும் போது திருவாய் மொழி என்ற சொல் நூல்கள் பலவற்றிற்கும் பாயிரமாய் நின்று சிறப்புற்றதென விளங்கும். இத்தால் அறிய வேண்டிய அர்த்தங்கள் யாவும் ப்ரணவம் போல், திருவாய் மொழி என்ற சொல்லில் அறியலாம் என உணர்ந்தாம். அதை ஆராய்வாம்:—

திருவாய்மொழி என்ற சொல்லின் பிரிவும், பொருளும்.

1. பிரிவு i. திரு + வாய் + மொழி = திருவாய் மொழி,
   ii. திருவாய்+மொழி = ,,
   iii. திரு + வாய் மொழி = ,,
   iv. வாய்மை + மொழி = வாய்மொழி

பொருள் :—திரு = மேன்மை, செல்வம், அழகு இலக்குமி, தெய்வீகம்.

1. வாய்: இடம், ஊதுகுழல்.
2. மொழி: சொல்.
3. வாய்மை: மெய், சொல், வலி.

4. வாய் மொழி: வேதம், வாயினால் வெளி வரும் சொற்கள்.

கீழ் வகுத்த வகையைத்தழுவியும், பிரித்து வந்த சொற்களின் பொருள்களைத் தழுவியும் உணரப்படும் கருத்துகள் சிலவற்றைத் தொகுத்து வெளியிடுவாம்.

இனி, தென்மொழி வேதத்திற்கு உரித்தான பெயர் திருவாய்மொழி என்பதையும்; வட மொழி வேதத்திற்கு உரித்தான பெயர் வாய்மொழி என்பதையும், அறிஞர்கள் அறிவார்களாக. வாய் மொழி என்ற பெயர் வாயினால் வெளிவந்த நூல்களுக்கெல்லாம் பொதுப் பெயராயிருக்க, வட மொழி வேதத்திற்கு மாத்திரம் நிரூபகமானதின் காரணம் யாது? என்பதை நோக்குவாம். நூல்கள் ஒலி வடிவாகவும் வரிவடிவாகவும் வழங்கி வருகின்றன ஒருவன் மொழிந்த சொற்கள் அவ்வோசையைத் தழுவி மற்றவன் சொல்லு முறையில் வெளிவந்த நூல்களே ஒலிவடிவென்பன. ஆகவே ஒருவன் ஓதியதை மற்றொருவன் ஓதி ஓரான்வழியாய் வந்ததே வேதம் எனப் பெயர் பெற்றுள்ளது. இது பற்றியன்றோ, ஶ்ருதி, சொல்லாமொழி, எழுதாமறை, என்னும் பல பெயர்கள் வேதத்திற்கு வழங்கி வருகின்றன.

இன்னும் வாய்மொழி என்பதை, வாய்மை + மொழி யென வகுத்து அதற்கு மெய்யான மொழி

யென்றும், வலிமையுடைய மொழி யென்றும், பொருள் கூறினும் கூறலாம். இவ்வேதத்தில் அறியப்படும் அர்த்தங்களை வேறு நூல்களைக் கொண்டு தெளிவதற்கில்லாமல், அவைகளே அவ்வர்த்தங்களுக்குத் தக்க ஆதாரமாயிருத்தலே வன்மை யுடைமையாகும். ஆதலால், இவ்வேதம் அநாதி என்றும், நிர்தோஷம் என்றும் யாவராலும் போற்றும்படியாயிற்று. ஆகவே வாய்மொழி என்பது வடமொழி வேதத்தின் பெயர் எனத் தெளிந்தாம்.

இவ்வர்த்தங்களைப் பின் பற்றித்தோன்றிய இதிஹாஸ புராணாதிகள் யாவும் வரிவடிவாக வந்தன.

இனி வட மொழி வேதத்திற்கும், தென் மொழி வேதத்திற்கும் பெயர் வாசி பெரும்பாலும் ஒத்திருப்பினும், தென் மொழி வேதம 'திரு' என்ற அடை மொழியைப் அதிகம் பெற்றிருத்தலால், வாய் மொழியாகிய வடமொழி வேதத்தைக்காட்டிலும் 'திரு' என்ற அடை மொழியைப் பெற்றுள்ள இத்தென் மொழி வேதம் பல அரிய அர்த்தங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளதென்பது சான்றோர் கருத்து. அதை விளக்குவாம்.

திருவாய் மொழி.

2 i. திருவாகிய பிராட்டியை (வாய்) இடமாகக் கொண்ட மொழி திருவாய் மொழி எனப் பெறும் இத்தால் திருவைப்பற்றி வெளி வந்த மொழி யாதோ அது திருவாய் மொழி எனப்பட்டது.

ii. அல்லது, திருவின் (வாய்) வாயாகிய கரணத்தால் வந்த மொழி எதுவோ! அது திருவாய் மொழி எனப்படும். இத்தால் பிராட்டி கூறிய மொழியே திருவாய் மொழியெனவாயிற்று.

iii. அல்லது (திரு) மேன்மை, அழகு, செல்வம் தெய்வீகம் இவற்றை (வாய்) இடமாகக்கொண்ட வாய் மொழிக்குத் திருவாய் மொழி எனப் பேரமைந்தது எனவும் இயம்பலாம்.

iv. திரு—அழகிய (வாய்—ஊதுகுழல்) வாத்தியத்திற் கொப்பான, மொழித் திருவாய் மொழி என உண்மைப் பொருளைப் பெறும்.

கீழ் வகுத்த முறைகளைத் தழுவிய அரும் பொருள்களாவன:—

1. திருவைப்பற்றி வந்த மொழி திருவாய் மொழி என்றதின் கருத்து:—உலகில் உலவிவரும் நூல்களுள் சிறந்தது இதிஹாஸங்களும் புராணங்களுமே. இவைகளுள் இதிகாசமாகிய இராமாயணத்தில் ராமாயணம் க்ருத்ஸ்னம் ஸீதாயாः சரிதம் மஹத் என்றும், "சிறை யிருந்தவள் ஏற்றம் சொல்லிற்று ஸ்ரீராமாயணம்" என்று நம் ஆசாரியர்கள் அறுதியிட்டிருக்கத் திருவாய் மொழி பிராட்டியின் பெருமையை பேச வந்தது எனக்கூறுவது யாங்ஙனம் ? என்பதை ஆராய்வாம்.

பத்னிக்கு உரித்தான "க்ருபை, பாரதந்தர்யம் அநந்யார்ஹசேஷத்வம்" முதலிய தர்மங்கள் சொல்லொடு நில்லாமல் பிராட்டி, தன் மூன்று பிரிவுகளிலும் அவற்றைச்செயல் முறையில் காட்டிய தன்னேற்றம் இராமாயணத்திற்கே உரிமைப் பட்டிருப்பினும்; நாயகன் பிரிவை ஆற்றியிருக்காது மதி கலங்கிக் கண்ட கண்ட திரியக் குகளை இரந்து தூது விடுதலும்; நாயகனைப் பிரிந்த காலையில் நாரை, கழி, மதி, முதலிய சேதந சேதனங்கள் தன்னைப்போன்றே பிரிவுற்று துயருற்றதாகக் கொண்டு, அவர்கள் இழவுக்குத் தான் புலம்புதலும்; தன் நிலை குலைந்த தசையைத் தாய், தோழி முதலானவர்கள் நாயகனுக்கு அறிவிக்கு முறையில் நடந்து கொள்ளலும்; அவன் வரவு தாழ்ந்த காலத்தில் தன் ஸ்வருபத்திற்கு இயல்பான மடம், அச்சம், நாணம் முதலியவற்றையும்; அவன் உகக்கும் மேகலை, பந்து, கழல், முதலிய லீலோபகரணங்களையும் வெறுப்போடு உதரித்தள்ளுதலும்; அவ்ன் அறை குலையத் தலை குலைய வந்தபோது "போகு நம்பி" "கழகமேறேல் நம்பி" இத்யாதி கடுஞ்சொற்களால் அவனைப்புறக்கணித்தலும்; கலவிக் குரித்தான ஊடல், உணர்த்தலும், மடலேருதல், முதலிய ஸாஹஸக்ருத்யங்களில் மனம் செலுத்தலும்; இவை போன்ற மற்றும் அரிய செயல்களை மேற்கொள்ளுதலும் ஆகிய சீர்மைகளைத் திருவாய் மொழி கூறியது போல் கீழ்க் கூறிய ஸ்ரீராமாயணம் பேசிற்

றில்லை. இத்தால் திருவின் அரிய செயல்களைக் கூறவந்தது; திருவாய்மொழி என்பதே தெளிவு.

2. திரு—வாயினுல் வெளிப்பட்டது திருவாய்மொழி என்றதின் உண்மையாவது:-வடமொழி வேதத்தில் திருவின் நிலையைப்பெற்று எவரேனும் பேசிய சொற்கள் காண்பதற்கில்லை. தேன்மொழி வேதமாகிய திருவாய் மொழியோ திருவே வாய்ப் புலற்றிய பல பதிகங்களைத் தாங்கிக் கொண்டுள்ளது. திருவாய்மொழியில் தாய், தோழி இவர்கள் கூறிய பதிகங்கள் பல விருந்தாலும் அவைகள் தலைவியின் நிலையைப் பற்றி வந்த பாசுரங்களே. ஆகையால் அவைகளும் தலைவியின் கூற்றே எனக் கொள்ளுதல் வேண்டும். அதில் அகப்பொருள் அல்லாத புறப் பொருள் நிறைந்த திருவாய் மொழிகள் பல துன்னப் பெற்றிருப்பினும், அப்புறப்பொருள்கள்யாவும், திருவின் கருத்தைப் பின் பற்றி வந்தமையால், திருவே அவைகளை வெளியிட்டதாகக்கொள்வதும் அறிவு. அதாவது புறப்பொருளாகிய மற்றதிருவாய்மொழிகள் சேதனர்களுக்கு அறிவையூட்டி, இறைவன் தாள்களில் சேர்ப்பிக்கும் முறைகளை உபதேசித்துள்ளன. இந்த உபதேசம் புருஷகார பூதையான திருவின் க்ருத்தியமாகையால், அவர் கருத்தையே திருவாய் மொழி வெளியிட்டதன்றி வேறொன்றுமல்ல. இத்தால் திருவின் திருவுள்ளமே திருவாய் மொழி எனப்படும்.

3. பின்னும், திரு என்ற சொல்லுக்கு மேன்மை அழகு, செல்வம், தெய்வீகம், என்னும், பொருள்களைக் கீழ் குறிப்பிட்டதின் கருத்தைச் சிறிது விளக்குவாம்:—

4. திரு—மேன்மை. இத்தை இடமாகக் கொண்டது திருவாய்மொழியாகும். இந் நூல் மேன்மைகள் பலவற்றையும் சொல்லியிருப்பினும், குலத்தைப் பற்றிய மேன்மையையே இங்கு உதாகரணமாகக் கொண்டாம். ஸ்ரீவைஷ்ணவ குலம் மற்றெல்லா குலங்களை விட அவ்வருகா யுள்ள தென்பதும் யாவரும் அறிந்ததே. ஒருவன் உயர்குலத்தை இச்சித்தால் அது பல தவங்களைப் புரிவதாலும், பல பிறவிகளெடுப்பதாலுமே பெறக் கூடிய தொன்றாகு மென்பது ஆன்றோர் கருத்து. இந்நியமம் "இவைபத்தும் அறியக் கற்று வல்லார் வைட்டணவர் ஆழ்கடல் ஞாலத்துள்ளே" என்ற கட்டுரையால், திருவாய்மொழி ஓதினோர்க் கில்லை என்பது தெளியப் படுகிறது. இதைக்கற்றோர் விலக்ஷண ஜென்மாக்களுடன் கலந்து பரிமாறி பெருமதிப்பை யடைந்து வருவதை இற்றைக்கும் காணலாம். இத்தால் திருவாய் மொழி உயர் குலத்தைத் தரும் வன்மை யுள்ளதென அறிந்தாம்.

5 திரு—அழகு: அழகை இடமாகக் கொண்டது திருவாய் மொழி. இங்கு அழகு என்பது இசையாலும், பொருளாலும் வரும் பெருமைக்கு இயம்பப்பட்டது. இத்தால் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமி

யின் லக்ஷணங்களையும், யாப்புக்குறிய் அசை, சீர், தொடை முதலிய உருப்புகளையும் மிக நேரிய முறையில் பெற்றுள்ளது. இவைகள் கீழே வரையப்பெற்றன. பொருள் அழகைப்பற்றி இப்பகுதியின் இறுதியில் காண்பாம். இத்தால், சொல்லும், பொருளும் திறம் பெற்றது திருவாய் மொழி வாயிலாக என்பது துணிவு. ஆழ்வார், மிடைந்த சொல் தொடை ஆயிரம், சொல்பணிசெயாயிரத்துள், உரையேய் சொல்தொடை என்று, அருளிச்செய்ததைக் காண்க.

6. திரு — செல்வம்: செல்வத்தை அளிக்கும் தன்மை திருவாய் மொழிக்குண்டு. இங்குச் செல்வம் என்பது இருவகைச் செல்வத்தையும் உணர்த்தாநிற்கும். ஆயிரத்துளிவை பத்தும் வல்லார்கள் நல்ல பதத்தால் மனைவாழ்வர் கொண்ட பெண்டிர் மக்களே: என, அத்ருஷ்ட்டத்தையும், ஆயிரத்துள்ளிவையுமோர் பத்தும் வல்லார் மாக வைகுந்தத்து மகிழ் எய்துவார்: என, அத்ருஷ்டத்தையும் வரையாது அளிக்கும் கருவி திருவாய்மொழியே. த்ருஷ்டத்தில் இச்சையுள்ளார்க்கு அத்ருஷ்டக் குறைவும், அத்ருஷ்டத்தில் ஆர்வமுடையார்க்குத் த்ருஷ்டக் குறைவும் என்கிற நியதி இத் திருவாய் மொழி உரைப்பார்க்கில்லை. ஆனால் தனமாஞ் சிலர்க்குத் தவமாஞ்சிலர்க்கு ....குருகூர்மன்னன் வாய்மொழியே' என்று கம்பர் அருளியதும், அதிகாரியின் ஊற்றத்தைப் பற்றியே யாகும்.

7. திரு—தெய்வத்தன்மை: இத்தால் திருவாய் மொழி தெய்வத்தால் வெளிவந்தது என்றும், தெய்வத் தன்மையை அளிக்கும் வீறுடையது என்றும் இருவகையாகப் பொருள் பெறும். திருவாய் மொழி வட மொழி வேதம் போல் இன்னார் பாடினார் என்ற ப்ரசித்தியில்லாமல் குருகூர் சடகோபன் பாடினன் என்று உலகம் பிரசித்தி தோன்றப்பேசினாலும், "தன் சொல்லால் தான் தன்னைக் கீர்த்தித்தமாயன், என் முன் சொல்லும்," "என் நா முதல் வந்து புகுந்து நல்லின்கவி, தூ முதல்பத்தர்க்குத் தான் தன்னைச் சொன்ன" என்ற கட்டுரைகளால் தெய்வத்தால் வெளிவந்தது என்ற ஏற்றத்தையும் பெற்றது. பின்னும் திருவாய் மொழியால் மங்களாசாசனம் பெற்ற ஆலயங்களே திவ்ய தேசங்கள் என்று ஸ்ரீவைஷ்ணவர்களால் பெருமை பெற்று வருகின்ற தென்றும் சீர்மையை அறிந்தார்க்குத் திருவாய்மொழி தெய்வத்தன்மை யுடையது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ.

8. திரு—அழகான. வாய்—ஊது குழல். இத்தால் இனிய குழலை ஒத்தது திருவாய்மொழி எனப்படும் யாழினிசை வேதத்தியல்; ஒலிபுகழாயிரத்து; குழலின் மலியச் சொன்ன; பண் கொளாயிரத்துள் இத்தியாதி வசனங்களால் திருவாய் மொழி குழலுக்கு ஒப்பானது என்பது மிகையாகாது.

9. திரு—வாய் மொழி: (மேன்மைபெற்றது வட

மொழி வேதம்) அதாவது வடமொழி வேதம் மேன்மை பெற்றது—தென் மொழி வேதமாகிய திருவாய்மொழியாலாகும். "வேதவேத்தியே" இத்யாதி ப்ரமாணங்களால் மருங்கி யிருந்த வேதம், வான்மீகி பகவான் வாயிலிருந்து புறப்பட்டதும் எவ்வாறு உலகம் போற்றும் இராமாயணக் கதையாகப் புகழ் பெற்றதோ அவ்வாறே, அந்த வேதம் ஆழ்வாரிடமிருந்து வெளிவந்ததும் தொண்டர்க்கு அமுதமாய்த் திருவாய்மொழி என வுயர் உற்றது. பின்னும் இதன் பெருமையை விரிக்கில் பெருகும்.

10. திருவாய் + மொழி: திருவாய் அவதரித்த மொழி—திருவாய்மொழி எனப்படும். திருவினுடைய கண், மார்பு, இடை முதலிய உருப்புகளை நம் ஆச்சாரியார்கள் ஞானம், பக்தி, வைராக்கியம் எனப் பெயரிட்டுக் கூறி வருவதுண்டு. இந்த அர்த்தத்தைத் தழுவியே ப்ரபந்தம் முற்றிலும் ஞான, பக்தி, வைராக்கியங்களைத் தாங்கிய பதிகங்களாகவே முடிந்தன இத்தால் திருவின் குணவடிவைத் திருவாய்மொழி உருக்கொண்டது போலும். பின்னும் திருவாய்மொழியின் முதல் பத்தில் முதல் பாட்டில் முதல் பாதத்தில் முதல் சீரில் உள்ள முதல் அசை (உயர்). அதன் முதல் எழுத்து (உ) இவைகளில் அமைப்பை நோக்கும் போது "உ" என்ற முதல் எழுத்துப் பிராட்டிக்கு முதல் அபிதானமாயும், உயர் என்ற முதல் அசை,

பதார்த்தங்களுக்கெல்லாம் அற வுயர்ந்த நலத்தைப் பெற்றதாயும்; சொல்லும்–பொருளும் மிகப் பொருந்தியிருப்பதாலும் இதன் பெருமை பெரிதும் பாராட்டத்தக்கதாகும்.

11. ஒரு செப்பிலிருந்து ஆபரணங்களை யெடுத்து அவைகளைப் பூண்வதும், பூண்ட வனந்தரம் மீண்டும் அச்செப்பி லிட்டுப் பத்திரப்படுத்துவது போல், ஓங்காரப்ரபவாவேதா: என்கிறபடி வடமொழி வேதங்கள் ஓங்காரத்தினின்று வெளிவந்ததும், ஓங்காரத்தில் இலயமடைவதும் என்பன.

இம்முறையைத் தழுவி தென் மொழி வேதமும் 'உயர்' என்ற செல்லிலிருந்துண்டாகி உயர்ந்தே என்ற சொல்லில் முடிந்தது. வடமொழி வேதத்திற்கு 'ஓம்' போல், தென் மொழி வேதத்திற்கு 'உயர்' என்ற சொல். இந்த உயர் என்ற சொல்லின் முதலெழுத்தாயும், உயிரெழுத்தான (உ) என்ற எழுத்து, திருவின் வாசகமாயுள்ளது. இத்தால், திருவாய் மொழி ஆயிரம் திருவின் திருவுருவே.

பேறிவையூட்டும் நூல்களுக்கெல்லாம் திருவாய் மொழி ப்ரபந்தம் பாயிரமாகவும் அத்திருவாய் மொழி ப்ரபந்தத்திற்குத் திருவாய்மொழி என்ற சொல் ஒன்றே, பாயிரமாகவும்; இத்திருநாமத்தால் அறியப்படும் பொ

ருள்கள் பல வற்றிலும், தென் மொழி வேதம் வட மொழி வேதத்தை விட மேன்மை அழகு முதலிய வற்றால் சிறந்த தென்றும், திருவின் பெருமையைக் கூற வந்தது திருவாய்மொழி என்றும்; திருவின் வாயால் வெளிவந்தது திருவாய்மொழி என்றும், திரு வின் திருவுருவே திருவாய்மொழி என்றும் பொருள் கள் ஒருவாறு கூறப்பட்டன.

II திருவாய்மொழிக் குண்டான மற்றப் பெயர்களும் அவைகளின் கருத்தும்,

1. திவ்விய ப்ரபந்தம்: இப்பெயர் திருவாய்மொ ழிக்கு நிரூபகமானத் திருநாமங்களில் ஒன்று. இத் திருநாமம் திருவாய்மொழி தெய்வீகமானது, அல் லது மேன்மையானது, எனக்கருதப்படும். "திவிஸ் திதம் திவ்யம்: பவந்தம் ப்ரகர்ஷேண பத்நாதீதி திவ் விய ப்ரபந்த:" இந்த வியுத்பத்தி:- பரமாகாசம் என்று சொல்லப்படுகிற ஸ்ரீவைகுண்டத்தில் ஏழுலகிலும் தனிக்கோல் செல்லுமாறு வீற்றிருக்கும் எம்பெரு மானைக் கட்டுப்படுத்துகிறபடியால், இன்னால், திவ்விய ப்ரபந்தம் எனப்பெயர் பெற்றது. ஈச்வரனைக் கட்டுப் படுத்துகிற கருவி 'பக்தி' என்பதை 'பத்துடை யடிவர்க் கெளியவன்' என்ற பதிகத்தில் ஆழ்வார் அருளிச்செய்த னர். இந்த பக்தியை பிறப்பிக்கும் பதிகமோ! "செய்ய தாமரைக்கண்" எனவெளியிட்டனர், "ஆயிரத்திப்பத் தால் பத்தராகக்கூடும்" என்று பக்தியைப்பலமாக

இப்பதிகத்தின் இறுதியில் சொல்லப்பட்டது. இந்த இரண்டு பதிகங்களோ பக்தியை விளைவித்து அப்பக்தியால் அவனைக் கட்டுப்படுத்தும் வன்மையை கூறிற்றென்றால்; திவ்யப்ரபந்தம் முழுவதும் செய்யும் சீர்மையை யாரால் அளவிடக்கூடும்! பின்னும் "வலக்கை யாழி யிடக்கைச்சங்கம் இவையுடைமால் வண்ணனை மலக்கு நாவுடையேர்க்கு" என்னும்படி "அவாகீ-யநாதர:" என்ற ஸ்வதந்த்ரனை பந்தித்தல் மாத்திரமல்லாமல், அவனை "ஸதா பஶ்யந்தி ஸூரய:" என்ற நித்திய ஸூரிகளையும் கட்டுப்படுத்தும் தன்மையுடையது இப்பிரபந்தம். "திவி" பரமாகாசே என்றதினால் "மஞ்சா: க்ரோசந்தி" என்ற நியாயத்தைத் தழுவி இங்கு நித்ய ஸூரிகளையும் காட்டிற்று.

நிற்க 'ப்ரபந்தம்' என்றாலும் "பாமாலை" என்றாலும் ஒன்றே. திவ்யப்ரபந்தம் என்பது:— திவ்யமாய்த் தொண்டர்க்கமுதுண்ணச் சொல்மாலைகளைச் சொல்லிற்றாயிற்று. அல்லது திவ்யம் என்றால் மேன்மையைக் காட்டும். இத்தால் இறைவனுடைய ஸ்வரூப, ரூப, குண, சேஷ்டிதங்களை மாண்புற வெளியிட்டயேற்றம் இத்திவ்ய ப்ரபந்தத்திற்கு உண்டு என்னலாம். இன்னமும், ப்ரபந்தம், கதை, சரித்திரம் இவையாவும் பரியாயச் சொற்களே. திவ்யம் என்ற அடைமொழி "திவிஸ்திதம் திவ்வியம்" என்ற வ்யுத்பத்தியைத் தழுவி நம்மாழ்வார் "வீடு" என்ற பரமாகாசத்தைப் பெற்ற சீரிய சரிதத்தைச் செப்பிய ப்ரபந்தமான இதைத்திவ்யப்ரபந்தம் எனக்கூறுவது மிகையாகாது.

2. தீர்க்க சரணாகதி: இத்திருநாமம் திருவாய்மொழிக்குச் சிறந்த பெயர்களில் ஒன்று. சரணாகதி வைபவத்தை நன்குவெளியிட்ட 'த்வயம்' என்ற மந்திரத்தின் உட் பொருளை இது விசதமாகப் பேசுகிறபடியால் இப்பிரபந்தத்திற்கு நம் ஆசாரியர்கள் இப்பெயரையிட்டார்கள். இப்பிரபந்தம், அவ்விசதீகாரங்கள் பலவற்றில் சரணாகதிக்குக் காலம், அதிகாரம், ப்ரகாரம் முதலிய நியதிகள் கரந்துறை மந்திரம் போல் சொல்லிற்றேயாகிலும் "திருவேங்கடத்தானே புகலொன்றில்லா வடியேனுன் னடிக்கீழமர்ந்து புகுந்தேனே" என அது பலிக்குமிடம் அர்ச்சாவதாரமே என நன்கு குறிப்பிட்டது. சரணாகதிக்கு அவசியம் வேண்டிய இவ்வர்த்தத்தை வெளிப்படையாக த்வயம் சொல்லிற்றில்லை. ஆகவே நம் ஆசாரியர்கள் இதற்கு இட்ட தீர்க்க சரணாகதி என்ற நாமம் போற்றத் தக்கதே.

3. தெளிவுற்றவாயிரம் "ஸஹ்யத்திலே கலங்கின நீரானது ஓரோர் ப்ரதேசங்களிலே வந்து தெளிந்து உபயோக போக்கியமாமாபோலே, அதிக்ருதாதிகாரமாய்க் கூளமும் பலாப்பிசினும் போலே, ஒன்றை நிஷ்கர்ஷித்துப் பிரிக்க வொண்ணாதபடியாயிருக்கிற வேதார்த்தமானது ஸர்வாதிகாரமாய் ஸர்வ ஸம்ஶயங்களையுந்தீர்த்து தெளிந்து, அவர் பக்கலிலே வந்தவாறே இத்திருவாய் மொழியை யப்யஸிக்க வல்லவர் இவ்வாழ்வார் தம்மைப்போலே தெளிவுற்ற நெஞ்சையுடையரா

வர்." இக்கட்டுரைகளால் தெளிவுற்ற வாயிரம் திருவாய்மொழி என்பதைக் கூறவும் வேணுமோ.

4. தமிழ்வேதம் : திருவாய்மொழிக்கு இத் திருநாமம் வந்த காரணத்தை இப்பகுதியின் இறுதியில் வரையப்பட்டுள்ளது.

5. பொய்யில் பாடல் :— அஞ்ஞானம், அந்நியதாஜ்ஞாநம், விபரீதஞ்ஞானம்இவைகள் சிறிதும் அண்டாதபடி பதார்த்தங்களின் யதாவஸ்தித வேஷத்தைக் காண்பதரிது. கண்டபடி உரைப்பதுமரிது. ஆழ்வார் ஜ்ஞானமோ ! ஸர்வஜ்ஞனால் அருளப்பெற்ற மயர்வறஜ்ஞானம். இந்த ஜ்ஞானம் பெருகி "உனக்கோறுணர்த்துவன்" என்று ஸர்வஜ்ஞனுக்கும் ஜ்ஞானத்தை ஊட்டும்படி வெள்ளமிட்டது. ஆகவே இவர் அருளிச்செயல்களில் பொய்சிறிதும் புகுவதற்கு இடமில்லை. இத்தால் பொய்யில் பாடல் என்றாலும் திருவாய்மொழி என்றாலும் ஒன்றே.

6 அந்தாதி ஆயிரம் : இந்தச் சொற்றொடர் திருவாய்மொழிக்கு ஒரு அரிய திருநாமமாயிற்று. தமிழ் இலக்கியங்களில் ஆயிரம், ஆயிரத்திற்கு அதிகமான செய்யுட்களைக்கொண்ட நூல்களும் பலவுள. அவற்றுள் அந்தாதியைத்தழுவி ஆயிரம் பாக்களைக் கொண்ட நூல்கள் சங்க நூல்களிலும், மற்றவேறு நூல்களிலும் இதுகாறும் வெளிவந்ததாகத் தெரிய

வில்லை ஆகவே, அந்தாதி ஆயிரம் என்ற பெயரும் லக்ஷணமும் திருவாய்மொழிக்கே மிக்கபொருத்த மாயுள்ளது. ஆழ்வாரும் " அளவியன்ற வந்தாதி ஆயிரத்துள் " என்று, திருவாய்மொழி அந்தாதி ஆயிரம் என்ற லக்ஷணத்தைப்பெற்றுள்ளது எனத்தெரிவித்துள்ளார். ஆழ்வார் அந்தாதி முறையைத்தழுவி ஆயிரம் என்ற ஸங்க்யையில் ப்ரபந்தத்தை அருளிச்செய்த காரணத்தைப் பிரபந்தவைலக்ஷண்யம் என்ற இரண்டாவது பகுதியில் வரையப்பட்டுள்ளது.

7. அந்தாதி : இந்தச் சொல்லின் பொருளை நுணிகிஆராயும்போது இதுவும் திருவாய்மொழிக்குரித்தான பெயரெனவேகூறலாம். அந்தம் + ஆதி = ' அந்தாதி ' எனவாயிற்று. அந்தம்—சமீபம், ஆதி—கடவுள். இறைவனைச் சமீபத்தில் கொண்டிருப்பது யாதோ ! அஃதே அந்தாதி எனப்படும் இதற்குத்தகுதியான வடமொழிசொல் " உபநிஷத் " என்பதாம். ' அந்தாதி ' என்ற சொல்லின் பொருளும் ' உபநிஷத் ' என்ற சொல்லின் பொருளும் ஒன்றே. இதைப்பற்றியன்றோ திருவாய்மொழிக்குத் தனியன் கூறவந்த ஸ்ரீமந்நாதமுனிகள் " ஸஹஸ்ரஶாகோபநிஷத் " என்று திருவாய் மொழிக்கு வடமொழியில் ஒரு பெயரிட்டார்கள். ஆகவே அந்தாதி என்ற சொல், ஆயிரம் பாக்களைக்கொண்ட திருவாய்மொழிக்குத் தக்க பெயராயிற்று.

அன்றிக்கே : அந்தம் — அழகு, ஆதி—சூத்திரம் எனப்பொருள் பெறும். சூத்திரமாவது:—முதல் நூல் வழியே விகற்பித்துரைத்தல். இது வழிநூலெனப் படும். 'வேதம் தமிழ் செய்தமாறன்' என்றதினுல் வேதம் முதல் நூலெனவும் திருவாய்மொழி வழிநூலெனவும் கொள்ளுதலுண்டு. இத்தால் திருவாய்மொழி என்பது அழகிய சூத்திரங்களைக்கொண்ட ஒருவழிநூல் எனவாயிற்று.

அல்லது அகன்ற பொருள்கள் சுருங்கியசொற்களில் அமையப்பட்டது சூத்திரமாம். முப்பத்தாறுயிரம் க்ரந்தங்களை ஆயிரம் ஸூத்திரங்களாகச் சுருக்கி ஆழ்வார் வெளியிட்டதால் திருவாய்மொழி ஸூத்திரமாயிற்று.

அன்றியும் வியாஸர் வெளியிட்ட ஸூத்திரங்களைக்காட்டிலும்திருவாய்மொழி வீறுபெற்றுள்ளதால் இஃது அழகிய ஸூத்திரம் எனப்பெயருற்றது.

இதன் அழகாவது :—"ஒருவன் அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா" என்று வேதத்தின் பூர்வபாகமாகிய கர்மகாண்டங்களின் அர்த்தத்தைவிசாரித்தபிறகு தான் ஜ்ஞானமுடையனுகையால், கர்மங்கள் அற்பமென்றும், அஸ்திரமென்றும் உணர்ந்து அநந்த ஸ்திரபலமான ப்ரஹ்மத்தினுடைய விசாரத்தில் இச்சை செலுத்தவேண்டும் என்று ஈஸ்வரனை அறிவதற்கு இத்தனை நியதி ப்ரஹ்ம ஸூத்திரம் விதித்தது போல் இல்லாமல் ஈஸ்வரனை அறிய இச்சையுடையவன் உயர் நலம் உடையவன்.........சுடரடிதொழுதெழு"

என்று அவன் கல்யாணகுணங்களில் ஈடுபட்டு அழகிய திருவடிகளைத்தொழுது உஜ்ஜீவி" என்று திருவாய்மொழி என்ற ஸூத்திரம் அழகிய வழியைக் காட்டிற்று. இத்திருவாய்மொழி ஸூத்திரங்களில் உள்ள நலங்கள் பல. அவற்றை விரிக்கிற் பெருகும். ஆகையால் அந்தாதி என்ற திருநாமம் திருவாய்மொழிக்கு இன்றியமையா அமையவேண்டிய ஒன்றாகும். இன்னமும் அந்தம்—இருள், ஆதி—சூரியன் எனப்பொருள் கொண்டு சூரியன் செய்யும் காரியத்தைத் திருவாய்மொழி செய்துவருவதால் அந்தாதி என்ற பெயர் திருவாய்மொழிக்குப் பொருத்தமே. சூரியன் எங்ஙனம் ஆயிரம் கிரணங்களைக்கொண்டு வெளியிருளை அகற்றி ஞாலத்திற்குப் பதார்த்தங்களின் ஞானத்தைப் பிறப்பித்து உலக சஞ்சாரத்தையும் தருகின்றதோ! அங்ஙனமே ஆயிரம் பாக்களுடன்கூடிய இத்திருவாய்மொழியும் மக்களின் உள்ளிருளைப்போக்கி ஈஶ்வரஜ்ஞானத்தைப்பிறப்பித்து பரமபத சஞ்சாரத்தைத்தரும் வன்மையுடையதாயுள்ளது. இம்முறையில் அந்தாதி என்றாலும் திருவாய்மொழி என்றாலும் துல்யம் எனக்கூறுதற்குத்தடையாது!

8. பகவத் விஷயம்:—இது திருவாய்மொழிக்குற்ற நாமங்களில் தலை சிறந்ததாகும். இத்திருநாமம் ஈடு முப்பத்தாறுயிரப்படிக்கே சிறப்பென்றும், திருவாய்மொழிக்கும், மற்றுமுள்ள வியாக்யானங்களுக்கும் பொதுவென்றும் அறிஞர்கள் கூறுவதுண்டு. இஃது எவ்வாறாயினும், திருவாய்மொழியைப் பகவத் விஷயம்

எனக்கொள்ளுவதில் யாதொரு ஐயமுமிலது. பொது வாக பகவான் அருளிச்செய்த ப்ரபந்தம் பகவத் விஷயம் எனப்பெயர்பெறும். இப்பெயர் ஸ்ரீகீதை பாஞ்சராத்திரம் முதலிய நூல்களுக்கும் உரித்தாகும். இனி, பகவானைப் ப்ரதிபாதிக்கும் ப்ரபந்தம் பகவத் விஷயம்எனக்கொள்ளின், அது ஸ்ரீராமாயணம்,ஸ்ரீபாரதம் முதலியவற்றையும் காட்டாநிற்கும். அல்லது,தேவதாந்தரங்கள் உபாயாந்தரங்கள் இவைகளை அறக்கழித்து பகவத் ஸ்வரூபத்தையே பரவிய ப்ரபந்தம் பகவத் விஷயம் என்று பொருந்தவிட்டாலும், ஏனைய ஆழ்வார்கள் அருளிச் செயலுக்கும் இத்திருநாமம் தகுதியுடையதாகும். அங்ஙனமிருக்க மற்றெந்த நூல்களையும் பகவத்விஷயம் எனக்குறிப்பிடாமல், திருவாய்மொழியை மாத்திரம் பகவத்விஷயம் எனக்கூறுவதின் காரணம் யாது? என்பதை நோக்குதல் வேண்டும்.

"என்னால் தன்னை இந்தமிழ் பாடிய வீசனை" "என் முன் சொல்லும் மூவுருவாம் முதல்வனே" என்ற, கட்டுரைகளால் திருவாய்மொழி பகவானால் பாடப்பட்டதென்பது கண்கூடாகும். ஆனால் "சடகோபன் செய்த ஆயிரத்துள்" "குருகூர்ச்சடகோபன் குழலின் மலியச்சொன்ன" என்னும் சொற்றொடர்களோ திருவாய்மொழி ஆழ்வார் வெளியிட்டதென்பதைத்தெற்றெனத்தெளிவிக்கின்றன. இவற்றால் திருவாய்மொழியைப் பாடினார் இன்னார் என்று அறுதியிடுவதிற்கில்லை. ஆயினும் சேதனனும், பரமசேதனனும் நீரில் நீர் கலந்ததுபோன்று, இரண்டறக்கலந்து

பாடிய பிரபந்தம் பகவத் விஷயம் எனக்கொள்ளு வதில் பிணக்கு யாதுமிலது.

பின்னும் ஆழ்வார் ஓரிடத்தில் "நீசனேன் நிறைவொன்றுமிலேன்" "சீலமிலாச்சிறியன்" எனத்தம் தாழ்நிலையை வெளியிட்டனர். இன்னோரிடத்தில் "நெஞ்சமே! நல்லை நல்லை உன்னைப்பெற்றால்—என் செய்யோம்" "சொல்மாலைகளைச் சொல்லுமாறு—அமைக்க வல்லேற்கு இனியாவர் நிகராகல் வானகத்தே" "திண்—நிழறுதோல்படையாய்! உனக்'கொன்றுணர்த்துவன் நான்" என்று தன் ஸ்வரூபத்திற்கும் இறைவனளித்த ஜ்ஞானத்திற்கும் முரணாகத் தன்னை உயர்த்திக் கூறியுள்ளனர். இஃது ஒன்றுக் கொன்று பொருந்தாத செயலாயிற்றன்றோ?

இங்ஙனம், ஆழ்வார் சிலசமயங்களில் தம்மைத் தாழ்த்திப்பேசியது ஸ்வரூபத்தைச்சார்ந்ததாயும், உயர்த்திப்பேசியது ஸ்வரூபத்திற்குச்சேராத ஆன்மஸ்துதியாகவும் முடிந்துள்ளதே! ஆத்மாவுக்கு ஆன்மஸ்துதியைவிடகொடிய அழுக்கு வேறு யாதுளது? ஆழ்வார் மதிநலம் பெற்றவராயினும் இக்கொடிய குற்றத்தில் ஆழ்ந்த அவர் அருளிச் செயலை எவ்வாறு ப்ரமாணமாக அறிஞர் கொள்ளுவது என்ற சங்கை பலருக்கும் உண்டாகும். ஆனல் இதன் தத்துவத்தை ஆராயின் கீழ்க்கூறிய ஆழ்வார் பாடல் இச்சங்கைகள் யாவும் சிரியவையாய்ப் புலப்படும்.

நிற்க, "திண்ணன்வீடு" "ஒன்றுந்தேவு" "கடல்

ஞாலம்'' முதலிய பதிகங்களை, ஆழ்வார் வெளியிடாத வரையில், அவ்வரிய தத்வங்களை ஈஶ்வரனே பேசினன் என்று கொள்ளவேணும். அங்ஙனம் ஈஶ்வரன் வாய்விட்டதாகக்கொள்ளின், ஆன்மஸ்துதி என்ற மாசு அவனையும் விடாது. இன்னமும், "ஆத்மானம் மாநுஷம் மன்யே" என்றுத் தம்மைத்தாழ்வு படுத்திக்கூறிய அப்பெருந்தன்மைக்கும் சேராது பின்னை இவைகளை எவ்வாறு பொருந்தவிடுவது என நோக்குவாம் :—

இறைவனைப்பற்றி அர்த்த வாதங்களாகக்கூறிய பதிகங்களை ஆழ்வார் பாடினர் என்றும், ஆழ்வாரைப் பற்றிய அர்த்தவாதங்களை இறைவன் ஆர்வத்தால் இயம்பினனென்றும் விபஜித்துப் பொருள் கொள்ளில் இக்குறைகள் இருவர் மாட்டும் சேராதொழியும். ஆகவே, சேதனனும் பரமசேதனனும் உலகுய்ய ஒருமிடராய் வெளியிட்ட ப்ரபந்தம பகவத் விஷயம் எனக் கொள்ளுவதே சிறப்புடைத்தாகும். இவ்வரலாற்றை "என்றைக்குமென்னை" என்ற திருவாய்மொழி வெளியிட்டுள்ளது. இப்பதிகத்திற்கு வியாக்கியானமிட்ட நம் ஆசாரியர்களின் அழகிய சொற்கள் இங்கு காணத்தக்கன :—"சிறு ப்ரஜை யெழுதப்புக்கால் தானே யேதேனு மொருபடியிட்டுத் தலைக்கட்டும், பிதாவாதல் உபாத்யாயனாதல் இடப்புக்கால் தானே யெழுத்தாயிருக்கும்; அங்ஙனன்றிக்கே இவன் கையைப் பிடித்திடுவிக்கப்புக்கவாறே, இவனேரிடத்தே யிழுக்க, அவனேரிடத்தே யிழுக்கக் குதறிக்கொட்டி

யாய் ரூபமழிந்து சிதறிப் போம்; அப்படியே, என்னை யுபகாணமாகக் கொண்டு கவி பாடா நிற்கச் செய்தேயும் என்னால் வரும் தோஷம் தன் பக்கல் ஸ்பர்ஶியாதபடி பாடுவித்தானென்கிறார்''. (ஈடு).

9. சிற்றின்பம், பேரின்பம் என்ற இரு அநுபவங்களை விஷயாந்தரம், பகவத்விஷயம் எனப்பெயரிட்டுக் கூறுவதுண்டு. ஐம்புலன்கள் நுகரும் இன்பத்தையே விஷயாந்தரம் என உலகம் வழங்குகின்றது. இவ் விஷயாந்தரத்தை வேர்முதல் மாய்த்து, பகவத் விஷயத்தில் மூட்டும் ப்ரபந்தம் இதுவாதலால் இது பகவத் விஷயம் எனப்பெயருற்றதாம்.

10. அன்றிக்கே, பேரின்பமாகிய பகவத் விஷயத்தைச், சிற்றின்பம்போல் அகப்பொருள் வாயிலாகப் அநாயாசமாக அனுபவிக்கச்செய்யும் தன்மையுடையது யாதோ அதுவே பகவத் விஷயம் என்னும் பெயர் பெறுதற்கு உரித்தாகுமன்றோ !

11. அல்லது, லீலாவிபூதியில் ஒரு ஸம்ஸாரி சேதனனுக்கு நிர்ஹேதுகமாக மயர்வற மதி நலம் அருளி, பரபக்தி,பரஜ்ஞானம்,பரமபக்தி தலையெடுக்கச் செய்து, தம் ப்ரபந்தத்தைப் பாடுவித்துக்கொண்ட பகவானுடைய அரியபெரிய குணத்தைக்கூறும் ப்ரபந்தம் இதுவேயாதலால் இது பகவத்விஷயம் எனச் சீரிய நாமத்தைப் பெற்றதுபோலும்.

ஆக பகவந் நாமங்கள் பலவற்றுள்ளும் ஏற்றம்

பெற்ற நாராயண சப்தம்போல், அவனைப் ப்ரதிபாதிக்கும் தென்மொழி வேதத்தின் திருநாமங்கள் பலவற்றுள்ளும் திருவாய்மொழி என்னும் இந்நாமம் சிறப்புற்றது என அறிதலே அறிவுளவாம். ஏனெனில் நாராயணனுடைய அவதார சேஷ்டிதங்களைக்கூறும் ராம, க்ருஷ்ண, வாசுதேவாதி நாமங்கள் அவதரித்தது போன்றே, இத்திருவாய் மொழிக்கும் திவ்விய ப்ரபந்தம், தமிழ்வேதம், பொய்யில்பாடல், தீர்க்க சரணாகதி, தெருளுற்றவாயிரம், அந்தாதி ஆயிரம் அந்தாதி, பகவத்விஷயம் எனப்பல நாமங்கள் அவதரித்தன. ஆகவே, இதுகாறும் இயம்பியவாற்ருல் ஆழ்வார் ப்ரபந்தத்தின் நாமவைபவம் ஒருவாறு வெளிப்படலாயிற்று.

ஸ்ரீ.

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:

திருவாய்மொழி முதல் நூலா? வழி நூலா?

திருவாய்மொழியை முதல்நூல் வழிநூல் என இருவகையாகவும் ஏற்றுக்கொள்ளுவதற்குப் பல ஆதாரங்கள் உள. இறைவன் அருளிய நூல்களை முதல் நூலெனக்கொள்வது மரபு. "தன் சொல்லால் தான் தன்னைக் கீர்த்தித்த மாயன்" என்னும் வாக்கியத்தால் திருவாய்மொழி இறைவன் பாடியதெனத் தோற்றுகின்றமையின் முதல் நூலாயிற்று. "வேதம் தமிழ்செய்த மாறன்" என்னும் கட்டுரையால் வடமொழிவேதம்போல் திருவாய்மொழியும் தனித்து ஒரு வேதமாயிற்று என அறிந்தாம். "செந்திறத்த தமிழோசை வடசொல்லாகி" எனத் திருவாய்மலர்ந்த திருமங்கையாழ்வார் திருவுள்ளமும் இஃதே. இவை இரண்டும் முதல் நூலாய் ஸ்வத: ப்ரமாணமாயுள்ளதால், வியாக்கியானங்களில் மேற்கொள்ள வேண்டிய இடங்களில் நம் ஆசார்யர்கள் இவ்வுபய வேதங்களின் வாக்கியங்களையும் உதாரணமாகக் கைக்கொண்டு வருகிறார்கள்.

வடமொழி வேதத்தைப்போன்றே தென்மொழி வேதத்திற்கும் அங்கங்கள் உள்ளன.

திருமங்கை ஆழ்வார் அருளிச்செயல்கள் ஆறும் அங்கமாகவும், மற்றயாழ்வார்களின் ப்ரபந்தங்கள் உபாங்கமாகவும் வாய்ந்துள்ளன. வடமொழி வேதத்திற்குக் கர்மகாண்டம் போன்று தென்மொழி வேதத்திற்குத் திருவள்ளுவர் திருக்குறள், கர்மகாண்டமாக அமைந்துள்ளது என்பது ஆன்றோர் கொள்கை. இத் திருக்குறள் ; இல்லறம், துறவறம் ஊழ்முதலியவற்றை அறத்துப் பாலிலும் ; அரசியல், அமைச்சியல், அங்கவியல் முதலியவற்றைப் பொருட்பாலிலும். களவியல் கற்பியல் ஒழிவியல் முதலியவற்றைக் காமத்துப்பாலிலும் விதித்துள்ளது. இதில் விதித்த யாகம் முதலியகர்மங்கள் பகவானுடைய ஆராதனங்களாகும்; திருவாய்மொழி பகவான் திருநாமத்தை முதலில் வெளியிடாமல், அவன் குணங்களையே நிரூபகமாகக் கொண்டுள்ளது. இங்கும் முதல் குறளிலுள்ள "ஆதி பகவன்" என்னும் சொற்கள் குணங்களைப்பற்றிய வார்த்தைகளாகக் காண்க, பின்னும் திருக்குறள் நாராயணனுக்கு உரித்தான நாமங்களைச் சிலவிடங்களில் வெளிப்படையாகக் காட்டிற்று. இத்தால் திருக்குறள் முழுதும் திருவாய்மொழியின் உட்பொருளே. இவ் வர்த்தத்தை நன்கு இப்பிரபந்தம் விளக்கிக்காட்டிய முறைகளை விரிக்கில் பெருகும்.

திருவாய்மொழியில், இறைவன் கொண்ட விபவ, அர்ச்சாவதாரங்களைப் பற்றிய வைபவங்களையும், மற்றும் சில ஐதீகங்களையும் காண்பதால், இதுயாங்ஙனம் முதல் நூலாகும் என்ற சங்கை பிறக்கலாம்.

ஸ்ரீபாரதம் அளவற்ற கதைகளைக் கொண்டிருந்தாலும் அது "ஐந்தாம் வேதம்" எனப்பெயர் பெற்றதுபோல், திருவாய்மொழியும் திராவிடவேதமெனப்பெயர் பெறக்குறையாது ?

"சுடர்மிகுசுருதி" என்று வடமொழி வேதத்தை ஏற்றமாக ஆழ்வார் கூறினர். அவ்வாறு வடமொழி வேதத்தைக்கூறியதும், தாம் அருளிச்செய்த தமிழ் வேதத்தின் ஆப்திக்கல்லது வழிநூல் என்னும் கருத்தைப்பற்றியன்று. ஆகவே திருவாய்மொழி முதல் நூலாயிற்று எனக்கூறுதற்கு ஐயமிலது.

தென்மொழி வேதத்திற்கு ஸூத்திரம் யாது ?

வியாஸர் வேதங்களை ஸூத்திரங்களாக வகுத்து அதற்கு "ப்ரஹ்மஸூத்திரம்" என்று பெயரிட்டதுபோல், திராவிடவேதங்களை ஸ்ரீ பிள்ளை லோகாசாரியரும் தம்பேரருளால் எளிய ஸூத்திரங்களாக அருளிச்செய்து, அதற்கு "ஸ்ரீவசநபூஷணம்' என்று பெயரிட்டனர். இத்தால் வடமொழி வேதத்திற்கு ப்ரஹ்மஸூத்திரம் போல், தென்மொழிவேதத்திற்கு ஸ்ரீவசநபூஷணம் சூத்திரமாக அமைந்துள்ளது. ஆகவே வேதத்திற்குள்ள உறுப்புகளைத்திருவாய்மொழியும் தாங்கியிருத்தலால், இது திராவிடவேதம் எனப் பெயருற்று முதல் நூலாக விளங்குகிறது.

திருவாய்மொழி வழிநூல்.

வழிநூலாவது :—முதனூல் வழியே விகற்பித்துரைத்த நூல் வழிநூலாகும். வேதங்களில் ஆயிரம் சாகைகளைக்கொண்ட சாமவேதத்தைத்தழுவி வந்தது ஆயிரம் பாக்களைக்கொண்ட திருவாய்மொழிப்பிரபந்தம். இத்தால் "வேதம் தமிழ் செய்த மாறன்" என்று பெரியார் பணித்ததும் வேதத்தைப்பின்பற்றி ஆழ்வார் திருவாய்மொழி இயற்றினர் என்ற கருத்தைக்கொண்டே "சடகோபன் அருளிச்செய்த ஆயிரம்" என்ற கட்டுரையாலும் திருவாய்மொழி வழிநூல் என்பதற்குத்தக்க சான்றாயிற்று. இக்கூற்றுகளால் திராவிடவேதம் சேதனனால் இயற்றப்பட்டதென அறிகிறோம். அங்ஙனமாயின் சேதனனுக்குள்ள முக்குணங்களை இத்திருவாய்மொழியும் பெற்றுள்ளதோ என்னும் சங்கை பிறக்கலாம்.

ஒலிவடிவாயுள்ள வேதங்களை இறைவன் தன் நினைவுக்குக்கொண்டுவந்து ப்ரஹ்மாவுக்கு உபதேசித்தான். ப்ரஹ்மாவோ அவ்வேதங்களை மற்றவர்களுக்கு உபதேசித்துவந்தான். இம்முறையில் வந்தது வேதம். இவ்வேதம் அநாதியேயாயினும் ஈஶ்வரன் வெளியிட்டான், ப்ரஹ்மாசொன்னான் என வழங்குவதுபோல் அநாதியான தமிழ்வேதமும் சடகோபன் அருளினன் என்று பிரசித்திப் பெற்றுள்ளதித்தனை. இஃது அநாதி என்பதை "முந்தை ஆயிரம்" என்றார்

ஆழ்வாரும். ஆகவே புருஷதோஷம் திருவாய்மொழிக் கில்லை என்பது துணிவு.

அன்றிக்கே திருவாய்மொழி ஆழ்வாரே பாடினார் என்றாலும், அவர் அருளிச்செயலுக்குப் புருஷதோஷம் சேர சிறிதும் இடம் இல்லை. ப்ரஹ்மா முதல் ருஷிகள் இறுதியாக சொல்லப்படுகின்றவர்களுக்குள்ள ஜ்ஞானம் போன்றதன்று ஆழ்வார் ஜ்ஞானம். இவர் ஜ்ஞானம் பிறந்த வழியும், வளர்ந்த வழியும் கீழே விரித்துள்ளன. ப்ரஹ்மாவின் பிரசாதத்தால் பெற்ற வான்மீகி பகவான் ஜ்ஞானமோ "ஹஸிதம் பாஷிதம்" இத்யாதி என்னலாம்படி இராமாயணத்தில் சிறிது வெளியிடவன்மையுற்றது. இறைவன் அருளால் பெற்ற ஆழ்வார்கள் ஜஞானமோ பெருமாளுக்கும் பிராட்டிக்கும் நடந்த உள் மர்மங்கள் பலவற்றையும் பேசும்படி கலம் பெற்றது. அவ்வாழ்வார்களுள்ளும் "அறியாக்காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்த" என்றும், "முலையோமுழுமுற்றும் போந்தில" என்றும் சொல்லும் சொற்களை வாய்ந்த நம்மாழ்வார் ஜ்ஞானமோ திருத்துழாய் மணம் போன்றுள்ளது. இத்தகைய காரணங்களால் எக்காலத்திலும் எவ்வகையாலும் இவர் ஜ்ஞானத்திற்குப் புருஷதோஷம் புகும் என்று சொல்லத் துணிவார் யார்! அஃதே இவர் ப்ரபந்தத்திற்கு முள்ளது. ஏனைய வழி நூல்கள் போன்று அன்று இஃது. இது ஶ்ருதியின் வாக்கியங்கள் உள்ளபடி தமிழ்ப்படுத்தியும்,

அவற்றின் இலைமறை கனிபோன்ற அரியபொருள்களை விளக்கியும், ஸ்ம்ருதிவிதித்த கட்டளையைப் பலவிடங்களில் பேசியும், "கற்பார் இராமபிரானை யல்லால் மற்றுங் கற்பரோ" "நம் கண்ணன் கண்ணல்லது இல்லையோர் கண்ணே" என்னும் இதிஹாஸங்களைப் பெருமைப்படுத்தியும், "பொங்கைம்புலனும் பொறியைந்தும் கருமேந்திரியம் ஐம்பூதம்— இங்கிவ்வுயிரேய் பிரகிருதி மானாங்கார மனங்களே" என்னும் விஷ்ணுபுராணத்தின் தத்வங்களை விசதீகரித்தும், "நெஞ்சினால் நினைப்பான் யவன் அவனாகும் நீள்கடல் வண்ணனே" என்று அர்ச்சாவதாரத்தைப்பெரிதும் பாராட்டும் ஸ்ரீபாஞ்சராத்ரத்தின் புகழையும், "சாரதியாய்ச்சென்று சேனையை நாசஞ் செய்திட்டு நடந்த நல்வார்த்தை யறிந்துமே" என்றும், ஸ்ரீகீதையின் சிறப்பையும் பொருந்தியிருத்தல் மாத்திரமேயன்றி "மின்னிடை மடவார்கள்" முதலிய பொருள் இயலைத்தழுவிய பதிகங்களும் துன்னப்பெற்றுளதால் எல்லா நூல்களைத்தழுவி நிற்பது திருவாய்மொழியாகையால், வழி நூல்களில் இதுவே தலைசிறந்தது.

"வியாஸர் அருளிய ப்ரஹ்ம ஸூத்திரங்களையும் தழுவி அமைந்திருக்கும் நேர்மையை ஆராய்வாம்"

ப்ரஹ்மஸூத்திரத்தில் "அதாதோ ப்ரஹ்ம ஜிஜ்ஞாஸா" என்றதில் ப்ரஹ்மசப்தம், ஸ்வரூபம், குணம் முதலியவற்றால் பெரியதாய், சேதனர்களுடைய ஸகல ஸங்கோசத்தை நிவ்ருத்திசெய்து நிரவதிகமான ஆனந்

தத்தை ஆன்மாக்களுக்கு அளிக்கக்கூடிய ஆற்றலை ஸ்வபாவமாகயுடையவன், எனப்பொருள் பெறும். இவ்வர்த்தத்தைத் திருவாய்மொழி முதல்பாட்டு "உயர்வற வுயர்நலம்" என்ற சொற்றொடர் வெளியிட்டது. "மயர்வற மதிநலமருளினன்" என்றதினால் தன்னையடைந்தார்க்கு அளவற்ற ஜ்ஞானத்தை அளிக்கும் வன்மையையும், ஜிஜ்ஞாஸ்யத்வத்தை 'எவன்' என்ற சொல்லால் வெளியிடப்பட்டது.

"அயர்வறு மமரர்களதிபதி" என்பதினால் ஸூரி ஸேவ்யத்வமான மோக்ஷ ப்ரதத்வத்தை "ஜந்மாத்யஸ்ய யத:" என்ற இரண்டாவது ஸூத்திரத்தின் 'ஆதி' பதத்தால் அருளப்பட்டது

ஈஸ்வரன் திவ்ய மங்கள விக்ரஹத்தை "சுடரடி" என்னும் பதத்தாலும், அவ்வடிகளில் சரணாகதி இரத்தலை "தொழு" என்னும் பதத்தாலும், அதுவே புருஷார்த்தம் என்பதை "எழு" என்ற பதத்தாலும், ப்ரபத்தி பண்ணும் அதிகாரி அஹங்கார மமகார மற்ற ஜ்ஞானவானயிருக்கவேண்டும் என்பதை "மனனே" என்னும் பதத்தாலும், முதல் பாசுரத்திலும் மற்றும் மூன்று பத்துகளிலும் பரமத நிரஸன பூர்வகமான தத்வங்களை வெளியிடப்பட்டன. இவ்வர்த்தங்களே ப்ரஹ்மஸூத்ர முதல் இரண்டு அத்யாயங்களின் கருத்து.

மூன்றாவது அத்யாயத்திலுள்ள ப்ரதம பதார்த்த

மான வைராக்யத்தை நான்காம் பத்தில் "ஒரு நாயகம்" முதலிய பாசுரங்களில் உபக்கிரமித்து, 4, 5, 6 பத்துக்களில் மூன்ருவது அத்யாயார்த்தமான பக்தி, தத்பரிகாரங்களை நிரூபித்து, ஆரும்பத்து இறுதியில் "அகலகில்லேனிறையும்" என்று அருளிச்செய்து, நாலாம் அத்யாயத்தை 7, 8, 9, 10 பத்துக்களில் ப்ரபந்நன் இங்கிருக்கும் நாள் இயற்றும் பணிகள் முக்த கைங்கரியம் போன்று போக்யம் என்றும், இங்கு அர்ச்சாரூபியாய் அவதரித்திருக்கிற ஸந்நிதிகளில் ஸர்வகாலமும் கைங்கரியத்தைப்புரிந்து சரீர அவஸானத்தில் அர்ச்சிராதிகதி பூர்வக பரிபூர்ண பகவதநுபவத்தைப் பெறுவர்கள் என்றும் விசதீகரிக்கப்பட்டன.

திருவாய்மொழி முதல் நூலாகவும் வழிநூலாகவும் அமைந்திருக்கும் அழகையும், அதன் தத்வத்தை உன்னி ஆராயும்போது வடமொழி வேதம் போன்று முதல் நூலாய் மாத்திரம் நில்லாமல் "பிறப்பிலி" என்ற இறைவன் தயரதனக்குப் பிறந்தான் என்ற தத்வம் போல் வேதத்திற்கு வழிநூலாயும் அமைந்திருக்கும் சீர்மை கொண்டாடத்தக்கதே.

II. இருள் தருமா ஞாலத்தில் இப்பிரபந்தம் வெளிவந்த காரணம் யாது ?

1. உலகின்கண் பேரிருளைப்போக்கப், பரஞ்சோதியானவன் "மானம் ப்ரதீபம்" என்னும் வேத விளக்கை ப்ரகாசிக்கச்செய்தனன். இவ்வேத விளக்

கால் மக்கள் அஜ்ஞானம் நீங்கி ஞானம் பிறந்து உய்வதற் கில்லாது, அஃது அதிக்ருதாதிகாரமாய், மறைபொருள் களை அடக்கிக்கொண்டு உள்ளது. இத்தால் பலரும் பயில்வதற்கு ப்ராப்தி உண்டாயிற்றில்லை. ப்ராப்தி யுள்ளாருக்கும், அதைப்பயின்று அநுஷ்டித்துப் பேறு பெறுவதற்குச் செயலறுதியும், ஸ்வரூப விரோதமும் தடையாய் நின்றன. இந்நிலையில், ஸர்வாதிகாரமாயும், ஸ்வரூபத்திற்கு இசைந்ததாயும், எளியதாயுமுள்ள திராவிடவேதம் அவதரிக்கலாயிற்று.

2. பின்னும் வடமொழி வேதங்களை ஏற்றுக்கொள் ளாத புறமதங்கள் பலவாயின. ஏற்றுக்கொண்ட சில ரும் குதிருஷ்ட்டிகளாய்த் தங்கள் தங்கள் இச்சைக்கு இசைந்தவாறு வேதவாக்கியங்களுக்குப் பொருள்கூறி நாஸ்திகமதம் தலையெடுக்கச் செய்தனர். இத்தால் உலகம் இருளடைந்தது. “குப்பை உயர்ந்தது கோபு ரம் தாழ்ந்தது” என்ற முறையில் உலகம் தாழ்வுற் றது. “பிபேத்யல்பஶ்ருதாத் வேதோ மாமயம் ப்ர தரிஷ்யதி” என்கிறபடி இத்தையறிந்த வேதம் மிகக் கலக்க முற்றது. மஹத்தான தீமைகள் நேர்ந்த காலங்களில் ஸர்வரக்ஷகன் உலகரக்ஷணார்த்தமாக எடுக் கும் அவதாரங்களைப்போன்று, அவனைப்ரதிபாதிக்கும் வேதமும் “தாழ்வொன்றில்லா மறைதாழ்ந்து, தல முழுதும் கலியே ஆள்கின்ற நாள்வந்த” “எய்தற்கரிய மறைகளை ஆயிரமின் தமிழால், செய்தற்குலகில்வரும் சடகோபன்” என்னும்படி திருவாய்மொழியாய் அவ

தரிக்கலாயிற்று. இது அவதரித்தபோதே "வேதம் களிப்புற்றது" என்று பிள்ளை அமுதனுர் பஹு சாற்றினர். இவ்வர்த்தத்தை "அல்ப ஶ்ருதர் கலக்கின ஶ்ருதி, ஞானத்துறை சேர்ந்து ஆழ்பொருளை அறிவித்து, மேகம் பருகின ஸமுத்ராம்புபோல நாற்கடல் சொல் இவர் வான வாய்த் திருந்தினவாறே ஸர்வ ஸாஸர்வோபஜீவ்யமாமே" என்று, அழகியமணவாள ஜீயர் அழகுபெற அருளிச்செய்தது அநுஸந்திக்கத் தக்கது.

3. பின்னும் வேதார்த்தங்களை அறியுமாறு ஸஞ்சரித்துத் திரிந்த ஸ்ரீமதுரகவிகள் இறுதியில் "வேதத்தினுட்பொருளை எந்நெஞ்சினுளிருத்த" என்று தம் ப்ரபந்தத்தில் வெளியிட்டமையைக்கொண்டு, திராவிட வேதம் வந்த காரணம் யாதென்பதை யறிந்தோம். இவ்வுண்மையை வெளியிட்டதால் இவரை ஆழ்வார்களில் ஒருவராய்ப் போற்றும்படியாயிற்று. இவர் அருளிச்செயலோ இனிய அர்த்தங்கள் மிகக்கொண்டிருப்பதால் இவர் "ஸ்ரீ மதுரகவி" என்ற திருநாமத்தையும் பெற்றனர்.

4. ஸ்ரீ பாஷ்யகாரர், "இதுகொண்டு ஸூத்ரவாக்யங்களை ஒருங்கவிடுவர்" என்னும் வார்த்தையின் உண்மையை அறிவாம்: ப்ரஹ்மஸூத்திரத்திற்குப் பலபாஷ்யங்கள் இவர் காலத்திற்குமுன் ஏற்பட்டுள்ளன. அவைகளில் எதைப்பின்பற்றித் தாம்கொண்ட பொருளை வெளியிடுவதென்று தியங்கிய காலத்தில்,

ஆழ்வார் பாசுரம் தோற்றக்கண்டு விசிஷ்டாத்வைத மதத்தை நிலைநிறுத்தும் பாக்கியம் வைதிகமதம் பெற்றது என இவர் மகிழ்ந்தனர்.

ஸ்ரீவேதாந்த மஹாதேசிகர் "தெரியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே" என்று தம் ஆர்வம் தோற்ற வெளியிட்டதை நோக்குழி, திருவாய்மொழி அவதாரத்தின் பெருமையைக்கூறவும் வேணுமோ!.

கம்பநாட்டாழ்வாரும் "மாமறையுள் அயிர்ந்தாரயிர்ந்த பொருள் வெளியாமெங்கள் அந்தணர்க்கோ" என்றும், "தோன்றாத உபநிடதப் பொருள் தோன்றலுற்றார்" என்னும், அவர் அருள்மொழிய அறிவார்க்கு, வேதத்திற்கு நேர்ந்த தாழ்வை திராவிடம் வேதம் போக்கிற்று என்பது மிகையாகாது.

ஆகவே, தாழ்வுற்ற வடமொழி வேதத்தை உயர்த்தவும், அறியாத அர்த்தங்களை அறிவிக்கவும், தெளியாத பொருள்களைத் தெளிவிக்கவுமே தென்மொழி வேதத்தின் தோற்றம் என்பதைத் தெளிந்தாம்.

III. அர்ச்சாவதாரத்தின் பெருமையை நன்கு நாட்டவே தென்மொழி வேதம் அவதரித்தது.

உபாயாந்தரங்களுக்கு இன்றியமையாத "அதிகாரி முதலிய பலவும் சாணகதிக்குக் கிடையாது விஷய நியமமேயுள்ளது" என, நம் ஆசாரியர்கள் அறுதி

யிட்டனர். இங்கு விஷய நியமமாவது, அர்ச்சாவதாரத்தைச் சொல்லிற்று. இறைவன் உகந்த நிலங்கள் ஐந்தில் பரத்வத்தை வேதமும், வியூகத்தை பாஞ்சராத்திரமும், விபவத்தை இதிஹாஸாதிகளும், அந்தர்யாமியை ஸ்ம்ருதிகளும் பேசின. இவைகளில் அர்ச்சாவதாரவைபவங்களைத்தேடிப்பிடிக்க வேண்டிய அருமைபலவுமுண்டு. காலதேச அதிகாரி நியதியற்றுக் கண்டு பற்றுகைக்கு வேண்டிய ஸௌலப்யம், கைங்கர்யத்திற்கு ஏகாந்தமான சீலாதிகள் பொருந்தியதும், பின்னானார் வணங்கும் சோதியுமான அர்ச்சையைச் செப்பவே ஆழ்வார்கள் அவதரித்துத் தென்மொழி வேதத்தை வெளியிட்டனர். இவ்வர்ச்சாவதாரங்களே உற்சவம் முதலிய பல வைபவங்களையும் பெற்று உலகை வாழ்வித்து வருவன. திருவாய்மொழி இல்லையேல் அர்ச்சாவதாரமும் இல்லையாம். இதைப்பற்றியல்லவோ "சடகோபன் தண் தமிழ்நூல்வாழ" என வாழ்த்தினர் பெரியார்.

IV. சரமோபாயமான ஆசாரியன் பெருமையைக் கூறவே திருவாய்மொழியின் தோற்றம்.

திருவாய்மொழி, எம்பெருமான் வைபவத்தையும் அடியார்கள் பெருமையையும் கூறிய பதிகங்களைப்பலவும் கொண்டுளது. ஆசாரியனைப்பற்றி ஒரு பதிகமும் கொண்டிலது. இந்நிலையில் ஆசாரியனையே

செப்பியதாக யாங்ஙனம் கூறுவது! இஃது ஆசாரியன் தத்வங்களை ஏனைய நூல்கள் வெளியிட்ட முறையில் வெளியிடாது, அவ்வாசாரியன் இயல்புக்குத் தக்க வகையில் அகப்பொருள் வாயிலாக வெளியிட்டது. இவ்வேற்றம் திருவாய்மொழிக்கே இன்றியமையாதது. அத்தை ஆராய்வாம்.

ஆசாரியன் பெருமை ஸர்வஜ்ஞனை ஸ்ரீய:பதியாலும் வெளியிடமுடியாத தொன்று. இஃது, ஈஶ்வரனுக்கு உரித்தான உபாயோபேயங்கள் இரண்டும் ஆசாரியனுக்கும் உள்ளது என்பதை "குருரேவ பரப்ரஹ்மம்" என்னும் பிரமாணங்கள் முறையிட்டன. இவர்களிருவரிலும் ஆசாரியன் ரக்ஷணம் மோக்ஷத்திற்கே ஹேதுவாகவும், ஈஶ்வரரக்ஷணம் பந்த மோக்ஷங்களுக்குப் பொதுவாகவும் இருத்தலால் ஸம்சாரிசேதனர்களுக்கு ஆசாரியன் ரக்ஷணமே அமோகமாகக் கடவது. இதரோபாயங்களுக்கு ஸ்வரூபவிரோதம் துஷ்காத்வம் அதிகாரி துர்லபத்வம் முதலிய துஷ்டங்களும்; ப்ரபத்திக்கு "உன் மனத்தால் என்னினைந்திருந்தாய்" என்கிற அருமையும் கண்டல்லவோ ஈஶ்வரோபாயத்தைக்கழித்து "தேவுமற்றறியேன்" என்று ஆசாரியன் பெருமையை ஸ்ரீமதுரகவிகள் அருளினர். இவ்வாழ்வார் இவ்வினிய ஆசாரியனாகிய உபாயத்தை வெளியிட்டதினால்தான் இவர் ஸ்ரீமதுரகவிகள் என்ற திருநாமத்தைப் பெற்றார் போலும். 'இத்துணை சீரிய ஆசாரியன் பெருமையை அந்யாபதேசத்தாலே பதிகங்கள் பலவும் வெளியிட்ட நேர்மை ஆழ்வார்களுக்கே உண்டென்

புதை அறியத்தக்கது. ஒரு பாசுரத்தின் பொருளை மற்றொன்றால் மறைத்துப்பேசுவதை அந்யாபதேசம் என்பது. அஃது இங்கு அகப்பொருள் வாயிலாக வெளியிட்ட அழகை ஆராய்வாம்.

V. அகப்பொருள் என்பது என்னை ?

அஃது ஆசாரியனை எம்முறையில் கூறிற்று ?

இவ்வகப்பொருளால் அறியும்பொருள்கள் பலவுளவோ ?

அகப்பொருள் என்பது தமிழ் இலக்கணத்தின் ஒரு பகுதி. இதனால் அறியப்படும் பொருள்கள் பலவும் இந்நூலின் முதல்பகுதியில் வரையப்பட்டுள்ளன.

பின்னும், "உயர்வற வுயர் நலம் உடையவன் யவனவன் ?" என்று ஸ்ரீய:பதியின் வைபவத்தை ஆரயப்புகுந்த ஆழ்வார் ஆசாரியனைப்பற்றி பேசவேண்டிய நிலைமை எவ்வாறு வந்தது ? அவ்வாசாரியனை எம்முறையில் வெளியிட்டனர் ? :— ஆழ்வார் அயர்வறுமமரர்களதிபதியினருளால் பாக்க முதல் திருவாய்மொழியில் ஸ்ரீய:பதியை அனுபவித்தவர், ஸம்சாரிகள் படும் துயரத்தைப் பொறுக்கமாட்டாது அவர்களைத்திருத்தி அவர்களுடன் அனுபவிக்க விழைந்தனர். அவர்களுக்குத் திருவிக்கிரமன் அவதாரத்தின் ஸௌலப்யகுணங்களைப் பேசப்புகுந்தவர் அக்குணங்

களில் தாமும் ஆழங்கால்பட்டு அவனைக்காயிகமாக அநுபவிக்கப்பாரித்தனர். அது கிட்டாதபடியால் அளவற்ற துக்கம் அவரை ஆட்சிக்கொண்டது; அது தம்நிலையைக் குலையச்செய்து பெண்நிலையைப் பெறச் செய்தது. இவ்விபத்தில் தத்வஜ்ஞானத்தை ஊட்டு மவனும் இறைவனைக்காட்டுமவனும் ஆசாரியனே யாவான். ஆகவே, ஆழ்வார்க்கு அந்நிலையில் ஆசாரியனைப்பற்றிக் காரியம் கொள்ளவேண்டியதாயிற்று.

இங்குப் பட்சிகளை ஆசாரியனுகக்கொண்ட ஏற்றம் ஆழ்வார்களுக்கே வுண்டு. உலகில் பறவை இனங்கள் இருவகையாகவுள்ளன. சில கமனசக்தியற்றுத்தரை யில் சஞ்சரிப்பன, சில விண்ணில் பறக்கும் வன்மை வாய்ந்தன. தரையில் திரியும் பட்சிகளோ! சில விடங்களில் சஞ்சரிக்கவும், பொருள்கள் சிலவற்றைக் காணவும் அவைகளைக்கொண்டுத் தன் இனங்களும் தானும் உண்டு வாழவும் ப்ராப்த்தி பெற்றுள்ளன. ஆகாயத்தில் பறக்கும் பறவைகளோ! நாடெங்கும் திரியவும் ஆங்காங்குள்ள பதார்த்தங்களின் குண தோஷங்களை ஆராய்ந்து அறியவும், அவைகளை ஈட் டித்தானும் புசித்துத் தன் பார்ப்புக்களைப்புசிப்பிக்கவும் இரவில் ஒரு தருவின் நிழலில் காலத்தைக்கழிக்கவும் பழக்கப்பட்டுள்ளன. இவைகள், சாஸ்திரங்கள் பல வற்றை ஆராய்ந்தறிந்து, நல்லதைக்கைப்பற்றித் தங்க ளைப் பற்றினவர்களுக்கு ஜ்ஞானத்தை ஊட்டி, அவர்க ளையும் நல்வழியில் நிறுத்தி, வாஸுதேவன் தருச்சாயை

யில் இளைப்பாறும் ஆசாரியனைப்போன்றன. மற்றவை சம்சாரிகளைப்போன்றதாம். விண்ணில் உலாவும் பறவைகளும் தன் இறகுகள் இரண்டில் ஒன்று வன்மையற்றாலும், மற்றொரு இறகின் சக்தியைக்கொண்டு சஞ்சரிக்கும் தன்மையற்றுத் தரையில் உழலும் பட்சிகளோடொத்துக் காலத்தைக் கடப்பதாகும். " வீசுஞ் சிறகால் பறத்திர் விண்ணுடுநுங்கட்கேளிது " என்ற ஆழ்வார் கட்டுரையால், " விரைய வீசுகிற சிறகுகளாலே பறந்து செல்லவல்லீர்" எனப்பொருள் பெறும். இத்தால் பறப்பதற்கு, வீசுகிற சிறகுகளே இன்றியமையாதன போல், அவன் வீற்றிருக்கும் மேலுலகம் எளிதில் செல்வதற்கு ஞானம் அநுஷ்டானம் இவை இரண்டுமே ஆசாரியர்க்கு இன்றியமையாததாகும்.

ஆசாரியனைக்கொண்டு காரியம் கொள்ளும் ஆழ்வார், அவ்வாசாரியன் ரூபகுணாதிகளை நேராகப் போற்றாமல் மறைபொருளாகப் பல பட்சிகளின் அழகு, அதன் உறுப்புகளைக்கொண்டாடிய தன் கருத்து யாதென்பதை அறிவாம். ஆசாரியனுக்குற்ற ரூப குணங்கள் ஒரே சேதனனிடத்தில் அமைந்திருப்பது அரிது. ஆகையால் பறவைகள் பலவற்றின் சிறந்த குணங்களைக்கூட்டி ஆசாரியனுக்கு ஒப்பு கூறவேண்டியதாயிற்று ஆழ்வார்க்கு. அங்ஙனேயாகில் மக்கள் பலருடைய குணங்களை ஒன்றுகூட்டி ஆசாரியனுக்கு ஒப்பிடலாகாதோ என்ற ஐயம் பிறக்கலாம். மக்களுக்குக் கல்வி அறிவால் அப்போதைக்கப்போது மாறும் குணங்கள் பட்சிகளுக்கு அவை கிடையா.

இவைகளுக்குள்ளகுணம் எப்போதும் மாறுதத்தன்மையையுடையது. இதுவே பிறவிக்குணம் என்பர். பின்னும், பறவைகளுக்குள்ள மதுரபாஷணம், ஸாராஸாரவிவேகம், தர்ஶநீயம், ஶுத்தஸத்வம், க்ருபை, காம்பீர்யம் முதலிய பல அரிய ஆன்மகுணங்களும் உடல்நலங்களும் ஆசாரியனுக்குள்ள தென்பதைப் பட்சிகளின் குணங்கள் வாயிலாக வெளியிட்டனர். அக்காரணங்களைப்பற்றியே பட்சிகளைப்பின்பற்றினர்.

VI. ஆழ்வார் தன் நிலைமை குலைந்து பெண் நிலைமை யடைந்ததற்குக் காரணம் யாது ?

1. ஆழ்வார் வாமனாவதாரத்தின் ஸௌலப்பிய குணத்தில் ஆழங்காற்பட்டு அவ்வருகு செல்லமாட்டாமையால் அவ்வநுபவம் மானஸ ஸாக்ஷாத்காரமாயில்லாமல் ப்ரத்யக்ஷ ஸாக்ஷாத்காரமாயிற்று. அப்போது அவ்வாமனனைக் கைகளால் கட்டித்தழுவப்பாரித்தனர். அதுகைக்கெட்டாதபடியால் அளவற்ற துக்கத்திற்காளாகி, பெண்நிலைமையுற்றனர். இதுவே இரண்டா கருத்து.

2. ஆழ்வார் பரமகாருணிகராய் ஸம்ஸாரிகள் படும் துன்பங்களைக்கண்டு பொறுக்கமாட்டாதவராய், அவ்வளவில் நில்லாது அவர்களைத்திருத்திப் பணிகொள்ளத் திருவுள்ள முற்றனர். விஷயாந்தரங்களில் கால் தாழ்ந்து அதுவே யாத்திரையாய் அவர்கள் காணப்பட்

டார்கள், நோயுற்ற சிறு பிரஜை மருந்தை விரும்பாத தசையில், தாய் மருந்தைக் கட்டியில் வைத்து மறைத்துக்கொடுப்பது போன்று, ஈஶ்வர ஜ்ஞானத்தைப் பெண் பேச்சாகப் பேசி அவ்வழியாலே அவர்களைத் திருத்த முயன்றார் ஆழ்வார். இஃதும் ஒரு கருத்தாம்.

3. அல்லது, தோத்திரப்பாக்களில் அகப்பொருள் கிளவித்துறைகளை யிடையிடையே கூறுதல் கவி மரபாதலால், ஆழ்வார் தம் ப்ரபந்தத்தில் பெண் பேச்சுகளான அகப்பொருள் பாக்களை விரவி அருளினார் என்பதும் சிலர் கூற்று.

4. அல்லது, "பெண் என்றால் பேயுமிரங்கும்" என்ற முறையில், ஆழ்வார் பெண்பாவத்தைப்பெற்று இறைவனை இறஞ்சினார் எனக்கூறுவதுமுண்டு. இவைகள் ஆபாதப்ரதீதியில் காரணமாகத் தோற்றினாலும் உண்மைப் பொருளை அறிவதே அறிவு.

5. ஸ்ரீநம்பிள்ளை காலக்ஷேப கோஷ்டியில் ஒரு வித்வான் திருவாய்மொழியின் பொருளைக்கற்றுவந்தான், "அஞ்சிறைய" திருவாய்மொழி வந்தபோது அந்த வித்வான் "வீதராகராயிருப்பார் பரிக்ரஹித்துப்போருகிற தொன்றாயிருந்தது, தத்வ பரமாக வடுக்கும்" என்றித் திருவாய்மொழியளவும் வரவதிகரித்து, இத்திருவாய்மொழியளவில் வந்தவாறே "இது காமுகவாக்யமாயிருந்ததீ" என்று கைவிட்டுப்போனானும்.

"நிதித்யாஸிதவ்ய:" என்று விதிக்கிற பகவத் காமமென்றறிந்திலன் பாக்ய ஹாநியாலே என்றனர். இந்த ஐதிகம் ஈட்டில் காணத்தக்கது. இந்த ஐதிகத்தால் "பக்தியைக்" "காமமாக" ஆழ்வார் கூறினார் என்பது கண்கூடாகும்.

பக்தியால் எளிதில் இறைவனை யடையலாமென்றும் இஃது இல்லாதார் எத்துணையாயினும் அவனை அடைவது இல்லை என்றும் "பத்துடையடிவர்க்கு" என்ற திருவாய்மொழியில் அறுதியிட்டனர். ஆகையால் பேரின்பத்திற்குப் பக்தியல்லது, வேறுகருவி இல்லை என்பது திண்ணம். உலகில் ஸ்திரீபுமான்கள் நுகரப்படும் இன்பத்தைச் சிற்றின்பமென்றும், சேதனன் பரமசேதனனோடு அநுபவிக்கும் இன்பத்தைப் பேரின்பம் என்றும் உலகு கூறும். புருஷனைக்கண்டு புருஷன் மோகிப்பது மேட்டுமடையென்பதும், புருஷனைக்கண்டு ஸ்திரீமோகிப்பது பள்ளமடையென்பதும் அநுபவஸித்தம். மேட்டுமடையில் ஜலத்தை ஏற்றுவதரிது. ஏற்றினாலும் ஜலம் தங்குவதரிது. பள்ளமடையிலோ ஜலத்தைப் பாய்ச்சுவது எளிது. அங்குத் தங்கியிருப்பதும் உறுதி. இம்முறையில் பள்ளமடையான ஸ்ரீ ஆண்டாள் பக்தி, ஆழ்வார்களிலும் விஞ்சிற்று என்பதைக் கூறவும் வேண்டுமோ! பக்திக்குப் பர்வங்கள் பல. பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண்—என ஏழு பருவங்களும், ஸ்திரீகளுக்குள்ளன. இந்த பக்தி என்ற

சொல் வடமொழியில் ஸ்திரீலிங்கமாயுள்ளது. ஆகை யால் பெண் நிலைமை யடைந்தவர்க்கே காதல் பிறந்து கழிபேரின்பம் உண்டாதல் திண்ணம். இத்தால் பக்தி யைக் காமம் என்றூர்.

6. பின்னும், தத்வங்களை ஆராய்ந்தவளவில் "ஸ்த்ரீ ப்ராயமிதரம் ஜகத்" என்பதும், ஈஶ்வரன் ஒருவனே புருஷன் என்பதுவும், வெள்ளிடைமலை வேதங்களைத் தன்னகத்தில் கொண்டிருக்கும் பெரிய திருமந்திரமோ, நவவித சம்பந்தங்களில் "பர்த்ருபார்யை" சம்பந் தத்தை, மந்திரத்திற்கு உயிர்நிலையான ப்ரணவத்தின் நடுநாயகமாயுள்ள "உகாரம்" என்ற அக்ஷரத்தால் வெளியிட்டது. இந்த ஸம்பந்தம் ஒன்றில் ஏனைய சம்பந்தங்களின் பெருமைகளை உட்கொண்டிருப்பதால் கைங்கரியத்தையே புருஷார்த்தமாகக்கொண்ட முமு க்ஷுக்கு இந்த சம்பந்தமே தலை சிறந்தது. "கைங்கர் யந்தான் பக்தி மூலமல்லாத போது, பீதிமூலமாய் வர வேணும்" என்று ஸூத்திரகாரர் இட்ட கட்டளை, பெண் நிலைமையுற்ற சேதனர்களுக்கு அதிகமே. இந்த சம்பந் தமோ! "ஆறு ப்ரகாரத்தாலே பிராட்டி ஸாம்யிய முண்டு" என்று ஸ்ரீபிள்ளை லோகாசாரியர் அருளிச் செய்தது நோக்கத்தக்கது.

ஆகவே, இந்த சம்பந்தம் ரூபத்தாலே வந்ததல்ல வென்றும், இது யாவதாத்மபாவி, இங்குள்ளபோதும் அங்குள்ளபோதும் ஸ்வரூபத்தைப் பற்றிவந்ததெனவும் வேதாந்தங்கள் வெளியிட்டன.

ஒருகாலத்தில் ஜனகராஜன் திருமகள் பூர்ண மான குணங்களையுடைய புருஷோத்தமனான பெருமாளையும் வியங்கியமாக "ஸ்த்ரியம் புருஷ விக்ரஹம்" என்று கூறிய அழகை நோக்கும்போது, புருஷ சப்தத் திற்குப்பொருள் சிறிதுமில்லாத சேதனர்களுக்கு என்றும் உள்ளது பெண் தன்மை என்பதைப்பேசவும் வேண்டுமோ! இராமஸௌந்தரியத்தில் கண்வைத்த ருஷிகள் கண்ணன் திருவவதாரத்தில் கோபிகளாகப் பிறந்து தங்கள் விருப்பத்தைப்பெற்றார்கள் என்பதை யும் இவ்வர்த்தத்திற்குப் பொருந்தவிடுவது. ஆகவே ஆழ்வார் பெண்நிலைமையைப்பெற்று, ஆண்ம ஸ்வரூப த்தை சிறம்பெறச் செய்தனர்.

இந்நிலைமையில் அருளிச்செய்த ஸ்ரீஸூக்திகளே அகப்பொருள் என்று தமிழ் இலக்கணங்கள் கூறுவது மரபு. இத்துறையில் வெளிவந்த பாசுகள் அரிய அர்த் தங்கள் பின்னும் பலவற்றைக் கொண்டிருப்பதைச் சிறிது ஆராய்வாம்.

VII. அகப்பொருள் வாயிலாக அஷ்டாக்ஷரப் பொருளைக் காண்க.

திருமந்திரம் மூன்று பதங்களோடுகூடியது. இம்மூன்று பதங்களும் தோழி, தாய், தலைவி இவர்கள் தன்மையைக்காட்டும் முறைமையையுடையன. அநந் யார்ஹ சேஷத்வ சம்பந்த ஜ்ஞானத்தைச் சொல்வதனாலே ப்ரணவத்தைத் தோழியென்றும்; நாயகவிஷயத்

தில் அதிமாத்ர ப்ராவண்யத்தாலே அவன் இருந்த விடத்தே போக வேண்டுமென்று பதறுமளவிலும், அவன் தானே வரக் கண்டிருக்கை யொழிய படிகடந்து பதரிப் புறப்படுகை குலமரியாதைக்குப் போதாதென்று நிஷேதித்துப் போருமாகையாலே மத்யபதமான நம: பதத்தைத் தாய் என்றும், இயற்கையில் புணர்ந்த நாயகன் வைலக்ஷண்யத்திலே ஈடுபட்டுக் குலமரியாதைகளைப் பாராதே கிட்டியல்லது தரியேனென்னும் பதற்றத்தை உடையாளாகையாலே மூன்றுவது பதமான நாராயணபதத்தை மகள் என்றும், தலைவி என்றும் பெயரிட்டுப் போகத்திற்கு உபகரணமான பக்தியை ஸ்தனங்களாகவும், இடையை வைராக்கியமாகவும், கண்ணை ஜ்ஞானமாகவும், அளகபாரத்தை ஜ்ஞாந விகாசமாகவும் வ்யவஹரிக்கையும் மகள் ப்ராப்யத்வரையாகவும், தோழி ஸம்பந்தஞானமாகவும், தாய் உபாயாத்யவஸாயமாகவும் கொள்ளப்படும்.

அகப்பொருள் ஆசாரியனைப் பேசியபடி:—

அகப்பொருள் தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தைச் சேர்ந்த பகுதி என்றும், அஃது உள்நிகழ்ச்சியான சிற்றின்பத்தை உணர்த்தும் இன்பொருள் என்றும் பொருள் கீழ் கூறப்பட்டது.

இனி அகம்+பொருள் = " அகப்பொருள் எனக் கொண்டால் உள் பொருளைச் சொல்லுவது எஃதோ

அஃதே அகப்பொருளாகும். உள்பொருளாவது—உட்கருத்து. ஆழ்வார் அருளிச்செயல்களில் வெளிப்படையான கருத்துடையன சில உட்கருத்துடையன அவற்றுள் உட்கருத்தைக் கொண்டிருக்கும் பாக்கள் அகப்பொருள் செய்யுளாக அமைந்துள்ளன. இந்த அகப்பொருள் கிளவி ஆசாரியன் பெருமையையும், அவன் ஆதீனமான திருமந்திரத்தையும் கூறுவதாக இதுகாறும் ஆராயப்பட்டது. பின்னும் ஸ்ரீ மதுரகவிகள் "வேதத்தினுட்பொருள், நிற்கப்பாடியென் நெஞ்சுள் நிறுத்தினான்" என்று அருளிச்செய்த உட்பொருளை யாது என்று நுணுகி ஆராய்ந்தால் "தேவுமற்றறியேன்" என்று அவர் தாமே வெளியிட்ட ஆசாரியன் வைபவம் கூறிற்றென்பதை மறுப்பார் யார்? ஆக அகப்பொருள் திருமந்திரத்தையும், "தன்மந்தரம் ப்ராஹ்மணாதீனம்" என்கிறபடி, அத்தை வெளியிடும் உரிமை ஆசாரியனுக்கே உண்டு என்பதையும் தெரிவித்தாம்.

அஷ்டாக்ஷரத்தின் விரிவான வேதம் ஆழ்வார் வாயால் இனிமையாயிற்று.

"வேதம் தமிழ் செய்த மாறன்" என்று பெரியார் பணித்தனர். தமிழ் என்ற சொல் தென்மொழிக்குப் பெயராயிருந்தாலும், அச்சொல்லுக்கு 'இனிமை' என்ற பொருள் உண்டு. இங்கு இனிமை என்பதை ஓசை பொருள் ஆக இரண்டிற்கும் கொள்ளுதல் வேண்

டும் ஓசையால் தமிழ் பாஷைக்கு இனிமையாவது :— தமிழில் வல்லோசையும், மெல்லோசையும், இடை யோசையும் சிறந்திருத்தலின் அம்மூவினத்தால் தமிழ் எனப்பட்டதென்றுமாம்.

த — வல்லினம்

மி — மெல்லினம்

ழ் — இடையினம்

தமிழில் பெரும்பான்மையும் இயற்கைச்சொற்களும், சிறுபான்மை செயற்கைச்சொற்களும் இருக்கின்றமை யின் அவ்விலக்கணமும் அமைத்துத் தமிழெனப்பட்ட தென்றுமாம்.

த, மி — இயற்கை யெழுத்து. 2

ழ் — செயற்கை யெழுத்து. 1

தமிழில் ஓரசைச் சொற்கள் மிகுதிப்பட்டிருத்தலின் ஓரசையில் தமிழெனப்பட்டதென்றுமாம். இத்தால் ஓசையின் பெருமை கூறப்பட்டது. இதைப்பற்றியல் லவோ "சேந்திறத்தமிழோசை வடசோல்லாகி" என்று தமிழ் ஓசையைப் பாராட்டினர் திருமங்கை யாழ்வார். ஆ.,"வேதம் தமிழ் செய்த மாறன்" என் றதினல் வேதத்தை செவிக்கினிய ஓசையில் வைத்துத் திருவாய்மொழியைப் பாடினர் மாறன் என்பதாம். இங்கு ஓசை என்பது தேவகானத்தைச் சொல்லிற்று,

இத்தை வெளியிட்டார் ஸ்ரீமந்நாதமுனிகள். அவர் வைபவத்தில் இந்த ஐதிகத்தை நன்கு காணலாம். ஓசையால் இத்துணை சிறப்புவாய்ந்த தமிழ்ப்பாஷை பின்னும் சில நலங்கள் பெற்றுள்ளன. இஃது இயற்கைமொழியாக உள்ளது, சிறு சிறு சொற்களையுடையது. நோய் கொண்டோர், சிறுமிகள், சிறுவர் முதலோர்க்கும் உச்சரித்தற்கு எளிமையானது. கன்னடம் தெலுங்கு முதலிய பல பல பாஷைகளுக்கும் முதன் மொழியாக வுள்ளது. வேதங்களுக்கு நெடிது காலம் முற்பட்டது. சிவன் திருமால் முதலோரும் பேசும் பெருமையுடையது. ஏகாட்சர மந்திர முதலிய வற்றாற் சிறந்தது. தனக்கு மேலொரு பாஷையுமில்லாதது. ஆரியத்தோடொருப்பட்டது. காரணச் சொற்களையே தனக்கு உரிமையாகக் கொண்டுள்ளது. சுருங்கக் கூறலென்னும் அழகில் விரிந்தபொருள் பொதிவுடையது. ஆரியம், கிரீக்கு முதலியவற்றிலும் கலந்துள்ளது. ஆழ்வார்கள் ஆதரித்தது.

இனிமை என்பதற்குப் பொருளாலும் இனிமை என்று கீழ் கூறப்பட்டது. மேலும் காணலாம்.

உலகம் படைத்தான் க்ருஷி பலித்தது ஆழ்வார் பெண் நிலைமை பெற்ற போதே.

கர்ஷகனவன் நிலத்தைத் திருத்தி, எரு இட்டு விதைகளை விலைத்துத் தக்க காலங்களில் நீரைப் பாய்

ச்சிக், குடில்கட்டி காவலிருந்து, பயிரின் செழு மையை நாள்தோறும் பார்த்துகந்து, களைகளை வேரறக் களைந்து, அவைகள் பலித்தவாறே பதரைப்போக்கிச் செந்நெல் சோக்குவித்து உண்ணும் சோறாக்கி "ஏகஸ் வாது நபுஞ்ஜீத" என்றபடி தானும் தன் மக்களுடன் இன்புற புஜிக்குமாப்போல, ஸர்வ ரக்ஷகனான கர்ஷ கன் "நெஞ்சைப் பெருஞ் செய்யுள்" என்கிறபடி ஆழ் வாராகிய பெரிய நெஞ்சைத் "தீமனங் கெடுத்தாய்" என்கிறபடி திருத்தி "ஊரவர் கவ்வை எருவிட்டு அன் னைசொல் நீர்படுத்தி" என்றபடி அதில் அத்வேஷம் ஆபிமுக்கியமாகிற விதைகளை விதைத்து, "காரமர் மேனி" என்ற ஸௌந்தரியமாகிற அம்ருதத்தை வரு ஷித்து "வெள்ளைச் சுரிசங்கொடாழியேந்தித் தாமரைக் கண்ணன் என்னெஞ்சினூடே புள்ளைக்கடாகின்றவாற் றைக்காணீர்" "அன்பருள்நடை" "நெஞ்சமே நீள் நாகராக" இத்யாதிப்படி ஆழ்வார் நெஞ்சில் குடி கொண்டு "எங்கும் பக்கம் நோக்கான்" என்கிறபடி அளவற்ற, ஆனந்தத்துடன் பிரிவின்றி வீற்றிருந்து, அதில் பரபக்தி, பரக்ஞானம்பரமபக்திகளாகப் பெருகி "யாம் மடலூர்தும்" என்னும்படி கடலளவான அபி னிவேசத்தைப் பிறப்பித்து, அம்மனைக் "கடியன் கொடி யன்" எனத்தாய்சொல்லி அப்ராவண்ணியத்தை நிஷே தித்தாலும், "வேம்பின்புழு வேம்பன்றி உண்ணாது" என்ற வகையில் "அவனென்றே கிடக்கும்" என்று

கூறும்படியான நிலை விளைவித்து, உணர்த்தல், ஊடல், கூடல் என்ற கலவிகளில் "இன்பக்கலவியமுதுண்டார்" என்னும் ஊடலாகிய இன்பக்கலவியால் "வா" என்று கூப்பிட வேண்டியவனைப் "போகுநம்பி" "கழகமேறேல் நம்பி" என்று வெறுத்து வார்த்தைச் சொல்லும்படியான அதிமாத்ரப்ராவண்யத்தைப் பிறப்பித்து ஆழ்வார் பெண் நிலைமை பெற்ற போதல்லவோ! அந்நிலையே தலைசிறந்தது; அதுவே யாவர்க்கும் வீடளிப்பது. தமிழ் மாது நோற்ற நோன்பின் மிகுதியல்லவோ திருவாய்மொழியில் அகப்பொருள் பாக்கள் துன்னப் பெற்றுள்ளது.

அகப்பொருள் கிளவி திருவாய்மொழியில் வந்தப்பிரகாரம்.

அசாரம், அல்பசாரம், சாரம், சாரதரமான பாக்கள் ஒரு கன்னலில் அமைந்துள்ளன. அக்கன்னலை கரும்பாலையிலிட்டுக்கோது போக்கி சாற்றை நெருப்பிலிட்டவாறே சர்க்கரையாகவும் கன்னற்கட்டியாகவும் மாறி, நுகர்வதற்கு எளிதாயும் நாவுக்கு இனிமையாகவுமிருப்பதைக் காண்கின்றோம். அவ்வாறே காடு முரடான வடமொழி வேதம், ஆழ்வார் "வாய்" என்னும் யந்திரத்தில் புகுந்தபோதே, அநித்யம், அல்பம் என்னும்படியான ஐச்வர்ய கைவல்யங்களாகிற கோதுகள்கழியப் பெற்று, பக்தியாகிற நெருப்பின் சம்பந்தம் வந்துழி, ஸாரதரம், ஸாரதமம் என்னும்படியான புறப்பொருள்

அகப்பொருள் பதிகங்கள் வெளிவந்து, ஜ்ஞானிகளுக்கு ஜ்ஞானக்கனியாகவும், தொண்டர்க்கு உண்ணும் அமுதமாகவும் மாறிற்று.

பின்னும் அகப்பொருளால் கிடைத்த அரும்பொருள்கள்.

I இறைவன் நிர்ஹேதுக அங்கீகாரம், ஆசாரியன் க்ருத்யம், பிராட்டி புருஷகாரம் இவைகளைக் களவியல் பகுதி கொண்டுள்ளன. இக்களவியல் இயற்கைப் புணர்ச்சி, பாங்கற் கூட்டம், பாங்கிற்கூட்டம் என, மூன்று பிரிவுகளைப் பெற்றுள்ளது. இவை மூன்றும் கீழ் குறிப்பிட்ட மூன்று தத்வார்த்தங்களை முறையே இயம்புவன.

இயற்கைப்புணர்ச்சி:— தலைமகன் தலைமகள் இருவரும் எதிர்பாராத நிலைமையில் கூடும் கூட்டத்தைக் காட்டுவது இச்செய்கைக்குத்தெய்வப்புணர்ச்சி என்று பெயரிட்டனர். இஃது இறைவன் நிர்ஹேதுக அங்கீகாரத்தன்மையை பெற்றிருப்பதை நோக்கத்தக்கது. இது நம்முடைய ஸித்தாந்தத்திற்கே உரித்தான அரிய பெரிய தத்வம்.

பாங்கற் கூட்டம்:—தலைவன், பாங்கனாலே தலைவியின் நிலை, வேட்கை முதலியவற்றை ஆராய்ந்து அறிவன். இந்தச்செயல் மாணவன் அறியவேண்டிய

தத்வங்களை அறிவிக்கும் ஆசாரியன் கடமையை ஒத்த தாகும்.

பாங்கிற் கூட்டம்:— இது பாங்கியின் அரிய முயற்சியால் தலைவன் தலைவி இருவர் கூடும் கூட்டத்தை உணர்த்துவது. இது பிராட்டி புருஷகாரத்தை ஒத்த தாகும். சேதனன் பேற்றுக்கு இப் புருஷகாரம் இன்றி யமையாததென்பது சாஸ்திர சித்தம். ஆகவே, அகப் பொருள் இயலைப் பின் பற்றியதாகும் நம் சித்தாந்தத் தின் நிர்ஹேதுகக்ருபை, ஆசாரியன் கடகத்வம், பிராட்டி புருஷகாரக்ருத்யம் முதலிய அரிய செயல்கள்.

II பரபக்தி, பரஜ்ஞானம், பரமபக்தி

இவை மூன்று அகப்பொருள்
கிரமத்தைப்பற்றி வந்த அழகை
நோக்குவாம்.

பரபக்தி:—இஃது, ஈஶ்வரனுக்கும் சேதனனுக்கும் ஏற்படும் தரிசனத்தைச் சொல்லக்கடவது. இந்த தரிச னம் அகப்பொருள் களவியலில் சொல்லப்படும் வன் புறை, தெளிவு, பிரிவுழி மகிழ்ச்சி, முதலியவற்றோடு ஒப் பிட்டு கூறப்படும்.

பரஜ்ஞானம்:—இஃது ஈஶ்வரனுக்கும் சேதன னுக்குமுண்டாகும் சங்கத்தைச் சொல்லிற்றும். சங்கம் என்பது சேர்க்கை. அகப்பொருள் வரைவியலில் வரை யப்பட்ட வரைவுமலிதல், அறத்தொடு நிற்றல், உடன்

போக்கு முதலியவற்றோடு ஒப்பிடும் தன்மைகளைப் பெற்றுள்ளன.

பரமபக்தி:—இந்த "அகல கில்லேனிறையும்" என்கிற நிலையாகும். அதாவது இருவரும் கூடியிருக்கும் தசையில் உண்டாகும் உள்நிகழ்ச்சியைப் பற்றியதாகும். இந்தச்செயல் அகப்பொருள் கற்பியலில் காணலாம், ஆகவே ஆழ்வார்க்குண்டான பரபக்தி, பரஜ்ஞானம், பரமபக்தி முதலிய அநுபவங்கள் அகப்பொருள் இயலைப்பின்பற்றியதாகும்.

III. திருமந்திரத்தின் மூன்று பதங்களின் பொருள்களும் அகப்பொருளைப் பற்றியதென்பதை ஆராய்ந்தோம்.

இனி முதல் பதம் ஓம் என்றதும் அகப்பொருளைத் தழுவியதாகும் என்பதை அறிவாம்.

இந்த ஓம் என்ற பிரணவம் அ, உ, ம என்ற எழுத்துக்களால் ஆக்கப்பட்டுள்ளது. இவைகள், தோழி, தாய், தலைவி இவர்களை நிறநிறையாகக் காட்டுவதோடு, களவியல், வரவியல், கற்பியல் ஆகிய அகப்பொருள் பகுதிகள் மூன்றின் பொருள்களையும் முறையாகக்காட்டுவன:—

"அ" என்ற எழுத்து சேஷசேஷி சம்பந்த ஜ்ஞானத்தைக் காட்டுவதால், இது தோழியின் செயலைக்காட்டும். "உ" என்ற எழுத்து ஏவகாரார்த்தத்தையும், நம:

பதார்த்தத்தையும் கொண்டு, தாயினுடைய செய்கை யைக்காட்டும். "ம" என்ற எழுத்து ஜீவனைச்சொல் லிற்றேயாகிலும், அந்த "ஆய" பதத்தைக்காட்டக்கட வதாதலால் கைங்கரியத்திற்குப் பாத்தியப்பட்டத் தலை வியைக்காட்டிற்று. ஆகவே, தோழி, தாய், தலைவி இவர்களை ப்ரணவம் சொல்லிற்றாயிற்று.

பின்னும், இந்த ப்ரணவம் அகப்பொருள் மூன்று இயல்களையும் காட்டும் ப்ரகாரமாவன:—களவியலில் தலைவனுக்கும் தலைவிக்கும் வாய்ந்த கூட்டத்தை "அ" "ம" என்ற எழுத்துக்களால் ஏற்பட்ட ஜீவபரசம்பந் தம் சொல்லிற்று. இந்த ஜீவபரசம்பந்தத்திற்கு "ம" என்ற சேதனன், ஞாதாவானபடியால் ஸ்வாதந்தர்யம் தலையெடுத்து அத்தால் சேஷ சேஷி சம்பந்தத்திற்குச் சிறிது நழுவுதல் வரக்கூடும்.

இத்தால் களவியலில் ஏற்பட்ட கலவி, கள்ளப் புணர்ச்சியாதலால் பிரிவும் ஏற்படக்கூடும். இம்முறை யில் முதல் எழுத்து அகாரம் களவியலைக் காட்டிற்று.

"உ" என்ற எழுத்து, "வரவியலை"க்காட்டிய வாறு:—"உ" என்ற எழுத்து ஏவகாரத்தைக்காட்டுவ தால், கீழ்ச்சொன்ன ஜீவபரசம்பந்தத்தை இல்லை செய் யாது, வன்மையுறச்செய்தது. பிரிவுக்கு ஹேதுவான களவியல் கூறிய நிமித்தங்களுக்கு இடமில்லாமல், நாடும் நகரமும்நன்கறிய மணம் புரிந்த செய்கையை, வரைவியல் இயம்புவதால், "உ" என்ற எழுத்து வர வியலைக் காட்டிற்று.

"ம" என்ற எழுத்து ஞானம், அறிவு, உணர்வு இவைகளைச்சொல்லி "ஒண்டாமரையாள் கேள்வனொருவனையே நோக்கும் உணர்வு" என்ற அருளிச்செயலால் "உணர்வு" என்றதினால் ஞானத்தைச்சொல்லி, "ஒருவனையே" என்ற ஏவகாரத்தால் அந்த ஞானத்திற்கு இன்றியமையாத கற்பின் நெறியை காட்டிற்று. இத்தால் "ம" கற்பியலைச்சொல்லிற்று. ஆக அ, உ, ம முறையே களவியல், வரையியல், கற்பியல் இவைகளைக் கூறிற்று எனக்கொள்க.

திருமந்த்ரத்தின் மூன்று பதங்களும் தோழி, தாய், தலைவி இவர்களின் செயலைக்கூறியதாக கீழ் ஆராயப்பட்டது. பின்னும் இம்மூன்று பதங்களும் களவியல், வரைவியல், கற்பியல் இவைகளையும் உணர்த்தும் கிரமத்தை கீழ் கூறிவந்தபொருள்களால் அறியத்தக்கது. விரிக்கிற் பெருகும், ஆகவே, திருமந்திரத்தின் உள்ளும் புறம்பும் அகப்பொருள் இயல் என்பதை இதுகாறும் விரித்தோம்.

IV திருவாய்மொழி வெளியிட்ட துறைகள் சிலவற்றைக்கூறுவாம்.

திருவாய்மொழியில் பதினேழு பதிகம் தலைவிச் சொல்லாகவும், ஏழு தாய்ச் சொல்லாகவும் இரண்டு தோழிச்சொல்லாகவும் உள்ளன.

அஞ்சிறைய — வைகல்பூங்கழி — பொன்னுலகு

—எங்கானல், இவைகள் நாலும் தூதைப்பற்றியது. இந்தத்தூதின் துறை:—"காமமிகக்கழிபடர்கிளவி" என்பது. இக்கிளவி வேட்கை மிக்குச்சிறப்பச்சிந்தித்துச் சொல்லுஞ் சொல். இக்கிளவிச்செய்யுட்குக் கருத்து:— கடல், கானல், பொழில், விலங்கு, புள் இவற்றை நோக்கித்தலைவி இரங்கிக்கூறல்.

(காமம்—வேட்கை, கழி—சிறத்தல், படர்—நினைத்தல், கிளவி—சொல்).

(உ-ம்) ஒண்டுவி நாராய் நின்சேவலு நீயுமாய்
வண்டுது பூங்கானல் வைகலுஞ் சேறிராற்
பெண்டுது வந்தே மெனவுரைத்தெங் காதலரைக்
கண்டீர் கழறியக் காற்கானல் கடிபலோ

(இறையனார் அகப்பொருள்)

வாயுந்திரையுகளும்: (திரு-வா-2-1-1) துறை "தன்னுட் கையாறெய்திகிளவி" (கருத்து) தன்னுட்தன் பத்தை பட்சி முதலிய ஒன்றின்மேலிட்டுச் சொல்லுதல்.

(உ-ம்) பறைவாயொலி யோதம் பந்தருகளுந்
துறைசேர் சிறுகுடியார் துஞ்சினுந் துஞ்சாய்
நிறையின் மருண்மாலை யெம்போல் நீத்த
துறைவனுடையையோ நீவாழிவீராய்

(பந்தர்—சோலை, வீராய்—கடல்)

(என்போல் இரவினெல்லாந்துயிலாய் நீயும் நின்காதலர்
.மாட்டு என்போல் அறிவிழந்தாயோ? என்பது)

(இறையனார் அகப்பொருள்)

மாசறுசோதி (திரு-வா-5-3) மடல். இதன் கருத்தை
முதல் பகுதியில் காண்க.

மின்னிடை (திரு-வா-6-2) "ஊடல்."

ஊடலாவது ஒருவரை ஒருவர் நணுகா
ராகி உரைமறுத்திருத்தல்-அதாவது
தலைவன் வரவுணர்ந்த தலைவி அவன்கொ
டுமை நினைந்து புலந்து கூறுகிற்றல்.

ஏழையராவி (திரு-வா-7-7) "தகையணங்குறுத்தல்"
இது, தலைமகளினது அழகு தலை மகனைத்
துன்புறுத்துதலைக்கூறும்.

(உ-ம்) பண்டறியேன் கூற்றென்பதனை
யினியறிந்தேன் பெண்டகையாற் பேரமர்
காட்டு.

(குறள்)

மண்ணையிருந்து (திரு-வா-4-4) "பிரிவுழிகலங்கல்"

தலைவன் பிரிந்த வழித் தலைவி மனங்கலங்கி
கூறுதல்.

தீர்ப்பாரை (திரு-வா-4-6) வெறிவிலக்கு அறத்
தோடு நிற்றல். (துறை)

தலைமகள் மெலிவு தெய்வத்தால் என்று அறிவார் சொல்லக்கேட்டு அதற்கு பரிகாரமாக கற்றாய் வெறியாட்டெடுத்துக்கொண்ட விடத்து வெறியாடித் தலைவிக்குக் கற்பழிவாமென்று தோழி வெறியடுதலை விலக்கல். (இங்கு அறம் என்பது தலைவிக்குக் கற்பாகும்.)

இதைப்போன்ற மற்ற துறைகள் பலவற்றையும் ஆராய்ந்து உணர்க.

V திருவாய்மொழி அகப்பொருள் பதிகங்கள் வீறுபெற்ற வகையைக் காட்டுவாம்.

"கடலன்ன காமமுழந்து மடலேறாப் பெண்ணிற் பெருந்தகத்தில்" என்று பெண் பிறந்தார் மடலூர் தலைச்செய்யார் எனப்பொருள்இயல்விதித்து.

பின்னும்தாய், தோழி, தலைவி, தலைவன் இவர்களில் யார்யாரிடத்தில் நேரில் வார்த்தை கொள்ளுது என்ற முறைமையை அகப்பொருள் இயல் "தாய் தலைவனிடத்தில் வார்த்தை கொள்ளாள்,, என விதித்தது. ஆழ்வார்களின் பராங்குச பரகால நாயகிகளோ மடலூர்ந்ததாகவும், " ஆடி ஆடி " " கங்குலும் பகலும் " இத்யாதி பதிகங்களால் தாய் தலைவனிடம் தன் பெண்ணின் நிலையை முறையிட்ட ப்ரகாரங்களையும் அவர்கள் ப்ரபந்தங்கள் வெளியிடுவன, இச்செய்கைகள் அகப்பொருள் இயலுக்கு முறணாகக் காண்கையால் ஆழ்வார்கள்

கட்டுரை யாங்ஙனம் உயர்வுற்றதாகும்? என்பதை ஆராயத்தக்கது.

உலக வழக்கில் ‘பொதுவிதி’ ‘விலக்குவிதி’ என இருவகையாக வழங்கிவருவதைக் காண்கின்றோமல்லவா? இவைகள் ‘சாமான்யவிதி’ ‘விசேஷவிதி’ எனப் பெயர் பெற்று வருவன. இவைகள் ஒவ்வொன்றிற்கும் அணுவுக்கும், மேருவுக்கும் உள்ளவாசி தோன்றும் ஆத்மோஜ்ஜீவனத்திற்கு வழிகாட்டியான ப்ரமாணங்களில் “நஹிம்ஸ்யாத் ஸர்வாபூதாநி” என்ற ப்ரமாணத்தால் எந்த ஜந்துவையும் ஹிம்ஸிக்கக்கூடாது” என்பதை அறிந்துள்ளோம். யஜுர்வேதமோ “அக்நிஷோமீயம் பசுமாலபேத” என்று, அக்நிஷோமமென்னும் யாக ஸம்பந்தமான காரியத்தில் நாற்காலுடைய ஜந்துவை கொல்லவேண்டும்” என்பதாக விதித்தது. இத்துணை விகற்பமிருந்தாலும், அநாதியாயும், நிர்தோஷமாயும், ஸ்வத: ப்ரமாணமானவும் வேதங்களுக்கு விருத்தமான ஏனைய விதிகளை த்யாஜ்யமாகவே கொள்ளுவர் அதிகாரிகள். அவ்வாறே தென்மொழி வேதத்திற்கு விரோதமான அகப்பொருள் இயல்கள் த்யாஜ்யமாமித்தனை.

இவைகள் த்யாஜ்யமான காரணம் எவ்வாறென்பதை அறிவாம்? தமிழ் நூல்களில் அகப்பொருள் இயலில் கூறிய கூட்டம், அணுவும் அணுவும் கூடியது போல், ஒரு ஆன்மா மற்றொரு ஆன்மாவோடு கூடியதாகும். ஆழ்வார் அகப்பொருள் இயலில் காணப்படு

பவையோ அணுவும் விபுவும் கலந்ததுபோன்று ஜீவாத்மாவும் பரமாத்மாவும் கூடியதாகும். இத்தால் ஜீவாத்மாவின் சம்பந்தம் கூறும் இயல் த்யாஜ்யமாயிற்றென்பதைக் கூறவும்வேண்டுமே.

மற்றுமோர் அரிய காரணம் புலனுக்குத் தோன்றாமல் போகாது. அஃதாவது, "பக்தி பாரவச்யத்தாலே ப்ரபந்நர் ஆழ்வார்கள்" என்ற ஸூத்திரத்தாலும் "நசாஸ்த்ரம் நைவசக்ரமம் அத்யந்த பக்தியுக்தாநாம்" என்ற கட்டுரையாலும் பக்திக்கு உரித்தானவர்கள் ஆழ்வார்களே என்பதை நம் ஆசாரியர்கள் அறுதியிட்டார்கள். இத்தால், பக்தியில்லாதார் சாஸ்திரமரியாதை, உலகுவழக்கு இவற்றைப் பின்பற்ற வேணுமென்பதும், பக்தி நிஷ்டர்க்கு அங்கியதி இல்லையென்பதும் தெளிவு. ஆகவே பிற நூல்களில் காணும் அகப்பொருள் விதி சாமான்யவிதியென்பதும், அவ்விதி ஆழ்வார்கள் பதிகங்களில் கண்ட அகப்பொருள் இயல்களை வரையிட்டுக் கட்டுப்படுத்தும் வன்மை யற்றதென்பதும் துணிவு. ஆகவே ஆழ்வார்கள் வெளியிட்ட அகப்பொருள் பாக்களே தலைசிறந்ததென்பதும், அவைகளே மோக்ஷாதிகாரிக்கு அவ்வருகில்லாத நீதி என்பதும் கூறப்பட்டன.

இதுகாறும் கூறியதில்:— அகப்பொருள் என்ற சிறந்த இலக்கணம் எப்போது? யாரால்? வெளிவந்தது. அதன் ஏற்றம் யாது? அஃது இயம்பும் துறைகள் யாவை? என்பதை முதற் பகுதியில் வரையப்

பட்டு, அருளிச்செயல் என்ற இரண்டாம் பகுதியில், ஆழ்வார்க்கு ஒப்பு உபயவிபூதியில் இல்லை என்பதை வக்த்ரு வைலக்ஷண்யம்'' என்ற முதல் பிரிவிலும்; திருவாய்மொழி பாக்களின் யாப்பின் சிறந்த தன்மைகளை 'ப்ரபந்த வைலக்ஷண்யம்' என்ற இரண்டாவது பிரிவிலும், இன்னும் நிர்ஹேதுகக்ருபை, ஆசாரியன்பெருமை, அஷ்டாக்ஷரத்தின் பொருள்கள், வேறு சில அரிய பொருள்கள் அகப்பொருள் பதிகத்தின் வாயிலாக விரித்த "ப்ரதிபாத்தியவைலக்ஷண்யம்" என்பன இறுதிப் பிரிவிலும் ஒருவாறு தொகுத்து முடிவுபெற்றன.

அருளிச்செயல் பகுதி

முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

அருளிச்செயலின் அரும்பொருள் சுருக்கம்.

இஃது ஈடு முப்பத்தாறாயிரப்படி யென்னும்
வியாக்கியானத்தைத் தழுவித்
தொகுக்கப்பட்டுள்ளது.

இருளும் புதரும் செறிந்த வனத்தில் வழிதப்பித் திகைத்துக்
கைசோர்ந்த சேதனன், ஒரு தார்மிகனால் இரவி
யென்னும் கைவிளக்கைப் பெற்று வழிதெரிந்து
அவ் வனத்தைக்கடந்து தன் வீட்டையடைந்து
இனிது வாழ்வது போன்றுள்ளது, ஆழ்
வார் எண்ணாத் துயர் விளைக்கும் இவ்
விபூதியின் கண் மாறி மாறிப் பிறந்து
இறைவ னருளால் மயர்வற மதி
நலம் பெற்று அவாவற்று வீடு
பெற்ற வரலாறு.

முதல் பத்து.

ஸ்ரீய:பதியானவன், ஸமஸ்த கல்யாண குணாத்மகனாய் ஸர்வசேதநஸ்வரூபஸ்த்திதிப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்குக் காரணபூதனாய், ஸர்வவ்யாபியாய் ஸர்வஸ்மாத்பரனாயிருக்கும்

ருப்பை ஒரு பெரிய திருநாளைக் கொண்டாடும் முறையில் வி[illegible]தமாக "உயர்வற" வில் பேசி, "வீடு மின் முற்றத் தி[illegible] அனுபவித்த அனுபவம் இனிதுபெறத் [illegible]ணையா[illegible] ஆ[illegible]னுமுண்டோ வென்று, ஸம்ஸாரிகள் பக்கல்லே [illegible]ன்னவத்சனர் ஆழ்வார். இவர் தாம் பகவத் விஷயத்தில ப்ரவணராயிருக்கிறப்போலே, அவர்கள் சப்தாதி விஷயங்களிலே மண்டியிருப்பதைக் கண்டு, இவர்களைத் தம் பரிஹரித்தல்லது தரிக்கமாட்டாதாராய், இதர விஷய வைராக்ய பூர்வகமாக, பகவத் பக்தியைப் பண்ணி ஆஶ்ரயியுங்கோளென்று பரோபதேசம் செய்தருளினர். இவ்வுபதேசம் பெற்ற ஸம்ஸாரிகள் "பஜியுங்கோ ளென்று பலகாலுமருளிச்செய்யாநின்றீர், இருகை முடவன் யானைமேலேறப்போயோ! இந்த க்ஷுத்ரனை ஸம்ஸாரி சேதனனுலே ஸ்வதந்த்ரனைப் பற்றப்போமோ?" என்ன, இஸ்ஸம்ஸாரி சேதனனுக்கு பஜிக்கலாம்படி, அவன் தன்னைக்கொண்டு வந்து தாழவிட்டு, ராமக்ருஷ்ணாத்யவதாரங்களைப்பண்ணி ஸுலபனும் என்று, நீர்மைக்கெல்லையான க்ருஷ்ணாவதாரத்தில் நவநீத சௌர்ய நகர க்ஷோபத்தைச் சொல்லப்புக்கு அதில் அகப்பட்டு "எத்திறம்" என்று ஆறுமாதம் மோஹித்துக்கிடந்ததைக் "பத்துடை யடியவர்" வெளியிட்டது. இத்திருவாய்மொழியில், பெருநிலங்கடந்த நல்லடிப்போதுகளைத்தழுவுவதாகப் பாரித்தாராய் அது ஒரு கால விஶேஷத்திலே யாய்த்தாம் [illegible]ற்பாடுறுத்த தோற்றுகையாலே துணுக்கென்று தாமான தன்மையழிந்து பிராட்டி தஶையை அடைந்து, "இரங்குமிடம் செய்தல்" என்ற முறையில் கடற்கரைக்குச் சென்றனர். அங்கு தன் பரிஸரத்தில் வர்த்திக்கிற பக்ஷிகளைக் கண்ணுற்று, "தன் மேன்மையாலே இத்தலையில் தன்மை பாராதே வந்து கலந்தான், கிட்டினவாறே தோஷ தர்ஶனத்தைப் பண்ணினுன், தனக்கு அபராதஸஹத்வமென்றொரு குணமுண்டு, அதை மறந்தான்,

அதை அறிவிக்கவரும்" என்று அபராதஸஹத்வம் பற்று சாக "அஞ்சிறை மட நாரையில்" அவைகளைத் தூது விட்டனர். இந்தத் தூதப்ரேஷணத்தால் இறைவன் தம்முடைய பிற்பாட்டுக்கு நொந்து, ஆனைக்கு உதவினாற்போல் அரைகுலையத் தலை குலைய வந்து தோற்றினன். அவனுடைய வைலக்ஷண்யத்தையும் தம்முடைய ஸ்வரூபத்தையுங் கண்டு, "தார்மிகன் வைத்த தண்ணீர்பந்தலை அழிப்பாறைப்போல், நித்யஸூரிகளுக்கு அநுபாவ்யமான வஸ்துவை நாம் புக்கழிக்கையாவதென்!" என்று ஆழ்வார் அகலப்புக தம்மை வருந்தி விசைவித்து ஸம்ஶ்லேஷோந்முகனானபடியே கலந்தான் "வளவேழுலகில்." இத்தால் "பகவத்ஸமாஶ்ரயணம் அருமைப்பட்டிராது, போகரூபமாயிருக்கும்" என்று அவனுடைய ஸௌலப்யம் அறியலாயிற்று. இத்தை அறியவே க்ஷுத்ரதேவதாராதனம் துர்லபமென்பதையும், கைவல்யானுபவம் அல்பமென்பதையும் மேல் இரண்டு திருவாய்மொழிகளில் வெளியிட்டு, 'ஒடும் புள்ளில்' அவனுடைய ஆர்ஜவ குணத்தில் ஈடுபட்டார். இவர் பக்தியில் இறைவன் தவக்குண்டு இவரோடு ஏகரஸனாய் யதாமநோரதம் ஸர்வேந்த்ரியத்தாலும், ஸர்வகாத்ரத்தாலும், அநுபவிப்பிக்க அநுபவித்து, அவ்வநுபவஜநிதப்ரீதியாலே "இவையுமவையில்" அவனைப் பேசி அனுபவித்தனர். கீழ் "உச்சியுள்ளே நிற்கும்" என்று நின்றது. பேறு கனத்திருந்தது, இது வந்த வழி என்னென்று ஆராய்ந்தார். இப்பேற்றின் கனத்துக்கு ஈடாயிருப்பதொரு நன்மை தந்தலையில் றிக்கே யிருந்தது. அத்வேஷந்தொடக்கமாக பரிகணனை நடுவாக பரமபக்தி பர்யந்தமாகத் தானே பிறப்பிப்பானொருவன், நித்யஸூரிகளின் பேற்றை அநாதிகாலம் ஸம்ஸரித்து போந்த நமக்குத்தந்தான், இறைவன் விஷயீகாரமிருக்கும் படியென்! என்று நெஞ்சிறந்த ஸர்வாங்க ஸம்ஶ்லேஷ

ரஸத்தை "போருமாநீள்படையில்" அநுஸந்தித்து இனியரானார்.

இரண்டாம் பத்து.

"மணியை வானவர் கண்ணனைத் தன்னதோரணியை" என்று அவன் ஸௌலப்யம், மேன்மை, வடிவழகு முதலியவற்றைக் கீழ் அநுபவித்தார். இவ்விஷயத்தில் பாஹ்ய ஸம்ஶ்லேஷாபேக்ஷை பிறந்து அப்போதே நினைத்த பரிமாற்றம் பெறுமையாலே பிறந்த அவஸாதாதிஶயத்தை, எம்பெருமானோடே கலந்து பிரிந்து ஆற்றாமையாலே நோவுபடுகிறாளொரு பிராட்டி அவ்வாற்றாமை கைகொடுக்க லீலோத்யானத்திலே புறப்பட்டு அங்கே வர்த்திக்கிற பதார்த்தங்களைக்கண்டு அவையுமெல்லாம் பகவதாலபத்தாலே தம்மைப் போலே நோவுபடுகிறனவாகக்கொண்டு அவற்றுக்கு மாகத் தாம் நோவுபடுகிற ப்ரகாரத்தாலே "வாயுந்திரையுகளில்" பேசினார். கீழ் "மூவா முதல்வா" என்று ப்ரஸ்துதமான காரணவஸ்துவை அவதாரத்தில் ஏறிட்டுக்காட்டித் "திண்ணன் வீட்டில்" பரோபதேசத்தாலே அநுபவித்து நின்றார் "ஊனில் வாழில்" வாயுந்திரையுகளில் ஆர்த்தி தீர வந்து ஸம்ஶ்லேஷித்த ஸம்ஶ்லேஷத்தைக் கூறுவது. இத்திருவாய்மொழியிலே "பருகிக்களித்தேனே" என்ற ஆர்த்தி பாகவதர்களோடு போதயந்த: பரஸ்பரம் பண்ணித் தரிக்கக்கோலி, அது பெறுமையாலே மிகவும் அவஸந்நராய், தாமான தன்மையழிந்து பிராட்டி நிலைபெற்று, அது தன்னிலும் தன் தசையைத் தான் பேசமாட்டாதே அருகிலிருந்த திருத்தாயாரருவிக்க வேண்டும்படியாய் "ஆடியாடியில்" சென்றது. இத்திருவாய்மொழியில் கூப்பிட்ட ஆர்த்த நாதம் செவிப்பட "அழகிதாக நாம் ஜகந்நிர்வஹணம் பண்

ணிரோம், நாமாராளேம்" என்று பிற்பாட்டுக்கு நொந்து, தன்னுடைய திவ்யாயுதங்களோடும் வந்து ஸம்ஶ்லேஷித்த ஹர்ஷத்தை வெளியிட்டது "அந்தாமத்தன்பு". இந்த ஸம்ஶ்லேஷம் தன்பேறென்னுமிடம் தோற்ற ஹ்ருஷ்டனாய் அநாதிகாலம் எதிர்சூழல் புக்குத்திரிந்த வஸ்துவை ஒரு படி ப்ராபிக்கப்பெற்றோமே! இவர்தாம் இனி நம்மைவிடில் செய்வதென்" என்று இறைவன் அதிஶங்கை பண்ண, அவன் அலமாப்பைக்கண்டு "நீ இங்ஙன் படவேண்டா" என்று ஆழ்வார் அவன் அதிஶங்கையைப் பரிஹரித்து அவனை உளனாக்குகிறான் என்பதை விரித்தது "வைகுந்தா மணிவண்ணனில்". இத்தால் பிறந்த ப்ரீதி ஆழ்வாரொருவரளவிலுமன்றிக்கே தம்மோடு ஸம்பந்த முடையாரளவும் வெள்ளமிட்டாப்போல், ஈஶ்வரன் தம்மோடு ஸம்பந்த முடையாரளவிலும் இப்படியே பெருகிக் கரைபுரளுகிறபடியை அநுஸந்தித்து "ஸ்ரீமன் நாராயணன் மோக்ஷப்ரதன்" என்னுமிடத்தை "கேசவன்" "அணைவது" இத்யாதியில் ஸம்ஸாரிகளுக்கு அருளிச்செய்தனர். அத்தாலே இவர்க்கு மோக்ஷத்தில் அபேக்ஷையாயிருக்கதென்று பார்த்து, இவர்க்கும் இவர் ஸம்பந்திகளுக்கும் மோக்ஷங் கொடுப்பானாகப் பாரிக்க அதைக்கண்டு "தேவர் எனக்கு மோக்ஷந்தர பார்த்ததாகில" "உனக்கு மோக்ஷங் கொள்ளென்று எனக்காகத் தருகையன்றிக்கே, நமக்காகக் கொள்ளென்று தேவர்க்கேயாம் படியாகத் தரவேணும்" என்று இவ்வாறாக மோக்ஷ லக்ஷணத்தை வெளியிட்டனர் "எம்மா வீட்டில்". "கிளரொளியில்" இவரை அடிமை கொள்ளுகைக்காக சாலவேகாந்தஸ்தலமான தெற்குத்திருமலையில் நிற்கிற நிலையைக் காட்டிக்கொடுத்தான்.

மூன்றாம் பத்து.

தெற்குத்திருமலையிலே அழகருடைய ஸௌந்தர்யத்
தை அநுபவித்து, அந்த குணாதிக விஷயந்தன்னில் ஓர் அக்
ஞானம் அநுவர்த்திக்கிற படியை "முடிச்சோதியில்" வெளி
யிட்டு, முந்நீர் ஞாலத்தில் அந்த அஞ்ஞானம் தம்முடைய
கரண ஸங்கோச நிபந்தமாக வந்ததாகக் கூறி, "ஒழிவில்
காலத்தில்" 'நிலைப்பெற்றென் னெஞ்சம் பெற்றது நீடுயிர்,
என்று அவனைக்கிட்டி ஸ்வரூபாநுரூபமான அடிமை பெற
வேணுமென்று பாரித்தார். இத்திருவாய்மொழியில் தாம்
பாரித்த பாரிப்புக்கெல்லாம் போரும்படி ஈஶ்வரன் தன்னு
டைய ஸர்வாத்ம பாவத்தைக் காட்டிக் கொடுக்க, அத்தை
அநுசந்தித்து "புகழு நல்லொருவனில்" வாசிகமான அடி
மைசெய்தனர். அத்தால் வந்த களிப்பாலே "ஜந்மவ்ருத்த
ஜ்ஞானங்களால் குறைவின்றிக்கே யிருந்தாலும் பகவத்
குணங்களில் விக்ருதராகாதவர்கள், அவஸ்துக்கள் என்று
அவர்களை நிந்தித்து,, "ஜந்மவ்ருத்தாதிகள் ஒன்றும் இன்
றிக்கே பகவத் குணத்தில் விக்ருதராமவர்களுண்டாகில்'
அவர்களுக்கு நான் அடிமை" என்று அவர்களை "மொய்
மாம்பூம்பொழிலில்" கொண்டாடினார். பகவத் குணத்தில்
ஈடுபடாதவர்கள் பண்டே அறிவுகேடால் வழிதப்பிப்போய்
அநர்த்தப்படா நின்றார்கள், விழுவாரைத் தடிகொண்டடிச்ச
லாகாதென்று, தம் பரமக்ருபையால் "ஆஶ்ரயணீயன்த்த
லம் ஸ்ரீயப்பதியல்லது வேறில்லை' என்று அவர்களுக்கு
ஹிதத்தை அருளிச்செய்தார் "செய்யதாமரையில்". "தஞ்
சமாகிய தந்தையில்" அர்ச்சாவதார ஸௌலப்யத்தையும்,
"தேர்கடவிய பெருமான்களை கழல்" என்றதினால் அடியார்
களையும் காணப் பெறாமையாலும் உண்டான துக்கத்தைப்
பரிஹரிக்க நிழலும் அடித்தாறுமாயிருக்கிற ஸ்ரீவைஷ்ணவர்
களைக் காட்டிக்கொடுக்க, இவர்களுஞ் சிலரே! என்று அவர்

களைக் கொண்டாடி அவர்கள் சம்பந்தத்தை ஆசைப்பட்டு அவர்கள் எனக்கு ஸ்வாமிகள் எனார் "பயிலுஞ் சுடரில்," "முடியானேயில்" கீழ்பிறந்த பாகவத ஸம்ஶ்லேஷம் தரிக்கைக்குடலன்றிக்கே, பகவத் குணங்களுக்கு அது ஸ்மாரகமாய், அத்தாலே அபிநிவேசம் கரைபுரண்டு, தம்மிலும் விடாய்த்த கரணங்களும் கரணங்களிற் காட்டில் விடாய்த்த தாமுமாய, க்ஷாமகாலத்தில் பஹுப்ரஜனானவன் தன் பசிக்கும் ப்ரஜைகளின் பசிக்கும் ஆற்றாதே அவற்றின் வாயில் சோற்றைத் தான் பறித்து ஜீவிப்பது; தன்வாயில் சோற்றை அவை பறித்து ஜீவிப்பதாய்; என்பசிக்கு என் செய்வேன் என்பாரைப்போலே, தாமும் தம்முடைய கரணக்ராமும் நோவுபட்டுக்கூப்பிட்டார். இவ்வாறு கூப்பிடுகிறவர் இவ்விழவுக்குக்கூட்டாவார் ஆரேனுமுண்டோவென்று ஸம்ஸாரிகள் பக்கல் கண்வைத்தார். இவ்வளவில் அவர்கள் ஶப்தாதி விஷயங்களைப்பற்றி அவற்றைப் பெருகைக்காக "பாரிலோர் பற்றையைப் பச்சைப் பசும்பொய்கள் பேசவே" என்கிறபடிப் பிறரைக் கவிபாடித்திரியாநிற்க, அவர்களைக் கண்டு வாளா காணத்தேளாறு மாயுமாப்போலே தம் இழவை மறந்து அவர்களுக்கு ஹிதம் அருளிச்செய்ய அவர்கள் அல்பம் கல்வி அறிவு பெற்ற அஹங்காரத்தால் அது கேளாதே பழையபடியே நிற்க, அவர்களை விட்டு அவர்களில் "வாய்கொண்டு மானிடம் பாடவந்தகவியேனல்லேன்" இத்யாதியால் தமக்கு உண்டான வியாவ்ருத்தியை "சொன்னால்விரோதந்தில்" வெளியிட்டு; அவன் கொடுத்த கரணங்களைக்கொண்டு அவனைப்பாடும்படியான எனக்கு "நாஞேர் துறைவிலனே" என்பதைச் "சேன்மம் பலபல" வென்கிற பதிகத்தில் அருளிச்செய்தனர்.

நான்காம் பத்து.

"ஒரு நாயகத்தில்" ஸம்ஸாரிகளைப்பார்த்து, "நீங்கள் இதர ஸ்தோத்திரம் பண்ணுகிறது, ஸப்ரயோஜனத்துக்காகவாயிருக்குமிறே" என்று ஐஸ்வர்ய கைவல்யங்களுக்குண்டான அஸ்த்திரத்வ அல்பத்வாதி தோஷங்களைக் காட்டி, பகவத் ஸமாஸ்யரணத்துக்கு உண்டான நன்மையை உபபாதித்து பரோபதேச ப்ரவ்ருத்தரானார். இவ்வாறாக கீழ் மூன்று திருவாய்மொழிகளில் ப்ரோபதேசம் பண்ணின இது ஸம்ஸாரிகள் திருந்துகைக்குடலன்றிக்கே தமக்கு பகவத் விஷயத்தில் ருசி பிறக்கைக்குடலாயிற்று, அத்தாலே விடாய் தலையெடுத்துத் தாமான தன்மையழிந்து பிராட்டி தசையை அடைந்து மோஹித்துக்கிடக்க, அவள் தசையை அநுசந்தித்த திருத்தாயார் "தேசகாலங்களால் விப்ரக்ருஷ்டமான அவன் படிகளையும், தத்தேச கால விசிஷ்டமாக்கி இப்போதே பெற்று அனுபவிக்கவேண்டுமென்று நின்றாள்" என்கிற பாசுரத்தாலே ஆழ்வார் தசையைப் "பாலனாயேழுலகில்" பேசிற்று. "கோவையாயில்" ஸர்வகால ஸர்வதேசத்திலுமுண்டான அவன்படிகளை யெல்லாம் இப்போதே அனுபவிக்கவேணுமென்ற விடாய்ப்பாரொருவரைப் பெருகையாலே அவருடைய ஸத்தையே தனக்கு பூசுஞ்சாந்து, திருப்பரிவட்டம், திருமாலை, திருவாபரணம் மற்றுமுண்டான போக்கிய ஜாதங்களெல்லாமாம்படி யிருக்கிற தன் ப்ரணயித்வ குணத்தைக்காட்டிக் கொடுக்கக்கண்டு ஹ்ருஷ்டராய், "இப்படிப்பட்ட உன் ப்ரணயித்வ குணத்தை என்னாலே பேசப்போமோ? உன்னால்தான் பேசப்போமோ? மற்றுமுண்டானவர்களாலேதான் சொல்லப்படுமோ? என்று, இங்ஙனே ஈடுபட்டு இவரும் எல்லாம் பெற்றாராய் நின்றார். இத்திருவாய்மொழியிலுண்டான நிரவதிகப்ரீதியானது, இவருடைய ஆஸ்ரயமும அழியுமென்னும்படியாயிற்று. இது நற்

கேடாக வொண்ணாது, இதை ஸாத்மிப்பிக்கைக்காக ஈஶ்வரன் அல்பம் நெகிழநிற்க, அவனோடு ஸத்ருஶபதார்த்தங்களையும், ஸம்பந்தி பதார்த்தங்களையும் அவனாகக்கொண்டு ப்ரமித்து பிராட்டிதசையை அடைந்து அவனன்றிக்கே யொழிந்தால் மீளவும் மாட்டாதே நோவுபடுகிற இவள் தசையை அநுசந்தித்த திருத்தாயார் வார்த்தையாலே, ஈவதசையை "மண்ணையிருந்து" வெளியிட்டது. "வீற்றிருந்தேழுலகில்" இவர் பரமித்த இழவெல்லாம் தீரும்படி தான உபயவிபூதிஐஶ்வர்யத்தைக் காட்டிக்கொடுக்க அவ்விருப்புக்கு மங்களாசாசனம் பண்ணினார். 'சூழ் காட்டிக்கொடுத்தது பாகச' நுபவமாத்ரமாய் பாஹ்யகரண யோக்யமல்லாமையாலே மோஹத்துக் குறுப்பாய்த் தலைக்கட்டிற்று. இவள் தசையைக்கண்டு பந்துவர்க்கமுங் கலங்கி இது தேவதாந்தரத்தாலே வந்ததோ வென்று தேவதாந்தர ஸ்பர்ஶமுடையாரைக் கொண்டு பரிஹாரம் பண்ணப்புக, இவள் ப்ரக்ருதியறிந்த தோழியானவள் "நீங்கள் பாரிக்கிறது இவள் நோவுக்குப் பரிஹாரமல்ல, விநாஶத்துக் குடலாமித்தனை, ஆனபின்பு பகவந்நாம ஸங்கீர்த்தநத்தாலும், பாகவத பாதரேணுவாலும் பரிஹரிக்கப் பாருங்கோள்' என்ற பாசுரத்தாலே "தீர்ப்பாரையாம்" முடிந்தது. இத்திருவாய்மொழியில "வண்டு வராபதி மன்னனை, ஏத்துமின" என்ற ம்ருத ஸஞ்ஜீவினியான திருநாம ப்ரஸங்கத்தாலே உணர்த்தியுண்டாய் தம் ஆற்றாமைக்கு தவக்காணமையாலே அவனிருப்பு நிலை குலைந்து வந்து முகம் காட்டும்படி, கடல் கையெடுத்துக் கூப்பிடுமாபோலே, கேட்டாரடைய நீராகும்படி "சீலமில்லாச் சிறியனில்" ஆழ்வார் நிலை சென்றது. இவ்வாறு கூப்பிடச்செய்தேயும் 'ஏறாளுமிறையோனில்' ஸர்வேஶ்வரன் நமக்கு முகந்தாராதிருந்தது நம்பக்கல் உபேக்ஷையாலேயாக அடுக்குமென்று பார்த்து, "அவனுக்கு வேண்டாத நானும்

என் உடைமையும் எனக்கு வேண்டா" என்று ஆத்மாத்மீ
யங்களில் தமக்கு நசை யற்ற படியை, பிராட்டி தசை
யடைந்த அந்யாபதேசத்தாலே அருளிச்செய்தார். "உடம்
புவேண்டா, உயிர் வேண்டா" என்று இவற்றை உபேக்ஷித்
துப்பார்த்தார். தாம் 'வேண்டா' என்ற வாறே அவை தவிர்
ந்தனவில்லை ஒரு புருஷார்த்தத்தைப் பெறுகைக்கு உன்
னுடைய ஸங்கல்பம் வேண்டினவளவே யன்றிக்கே முடி
கைக்கும் உன் தரவு வேணுமாகில் அதைத் தந்தருள வேணு
மென்று "நண்ணாதாரில்" முறையிட்டார். இத்திருவாய்
மொழியில ஸம்ஸாரிகளுடைய துக்கத்தைப்பார்த்து அவர்
களைத் திருத்துவோமென்று பார்த்தார். அவர்கள் பகவத்
விமுகராயிருக்க "ஸர்வஸ்மாத்பரனாய் ஸமஸ்த கல்யாண
குணனான ஸ்ரீமந் நாராயணன் பரத்வத்தைப் பலபடியாக உ
பாத்த அவனை ஆஶ்ரயித்து க்ருதார்த்தராய்ப்போருங்கோள்'
என்று "ஒன்றுந்தேவில்" அவன் பரத்வத்தை வெளியிட்ட
னர்.

ஐந்தாம் பத்து.

இரண்டு கிட்டம் தன்னிலே சோக்கிடக்க அதிலே
ஒன்று பொன்னாயிருக்குமாப்போலே, ஸம்ஸாரிகளிலே ஒரு
வராயிருக்கிற தாம் அவர்களையும் திருத்தும்படி தமக்குப்
பிறந்த நன்மைக்கு அடி எதனென்று பார்த்து, தன்னுடைய
நிர்ஹேதுகக்ருபையாலே செய்தானித்தனை என்பதை "கை
யார் சக்கரத்தில்" அருளிச்செய்து 'பொலிகபொலிக' என்
றதில் ஒன்றுந்தேவில் தம்மால் திருந்தின ஸ்ரீ வைஷ்ணவர்
கள் திருவடிகளிலே விழுந்தும், திருந்தாதாரை உபேக்ஷித்
தும, இப்படி பகவத் ஸம்ருத்திக்கு மங்களா சாசனம் பண்

ணினர். 'மாசறு சோதியில்' "மலியுஞ்சுடரொளி மூர்த்தி மாயப்பிரான் கண்ணன் தன்னை" என்று வடிவழகையும் குணங்களையும் அநுஸந்தித்து. இவனை பாஹ்யஸம்ஶ்லேஷாபேக்ஷை பிறந்து அணைக்கக்கோலி, அவன் அகப்படாதே கைகழிந்து நிற்க, அத்தாலேகலங்கி ஒரு நாயகி தசையைப் ராப்தராய் மடலெடுக்கையில் உபக்ரமித்தார்.

மடலூருகைக்கு அபிமத விஷயத்தைப்படத்திலே எழுதவேணுமே! அதுக்கு அவகாசமில்லாதபடி தைவயோகத்தாலே அஸ்தமிக்க, அது தானும் மத்யராத்ரமாய்ப் பழி சொல்லுவாரோடு ஹிதஞ்சொல்லுவாரோடு வாசியற உறங்கிக் கிடக்க, ஒரு உசாத்துணையின்றிக்கே, ப்ரளயாபத்துக்களிலே உதவும் ஸர்வரக்ஷகனான எம்பெருமானை அநுஸந்தித்து தரித்தாராய்ச் சென்றது "ஊரெல்லாந் துஞ்சியில்". இந்நிலையில் பந்துக்களுடைய 'நீ இப்படி இவ்விஷயத்திலே அதிமாத்ர ப்ரவணையாகிற இது, உனக்குக் குடிப்பழி, உன்னுடைய ஸ்த்ரீத்வத்துக்குப் போராது, அவன் தலைமைக்கும் போராது' என்று ஹிதஞ்சொல்லி மீட்கப்பார்க்க, நம்பியினுடைய வடிவழகு, ஒப்பனையழகு, ஆபரண அழகு முதலியவற்றில் உங்கள் ஹித வசனத்துக்கு மீளாதபடி அகப்பட்டேன் என்றார் "எங்ஙனேயோவில்". "கடல்ஞாலத்தில்" கீழ்ப்ரீத்யப்ரீதி இரண்டுமாய்ச் செல்ல, உரு வெளிப்பாட்டாலே அவனை ஸ்மரித்து அலாபத்தாலே துவண்டு ஒரு பிராட்டி தசையை அடைந்து, திருவாய்ப்பாடியில் பெண்களைப் போலவும், ஸ்ரீ ப்ரஹ்லாதாழ்வானைப்போலவும் அவனை அநுகரித்துத் தரித்துச் சென்றது. "நோற்ற நோன்பிலே" இத்தனை கலக்கம் பிறந்த விடத்தும் அவன் முகம்காட்டாமையால் இந்த ஆற்றாமை ஸ்வரூபமென்று அறியாதே உபாயமென்றிருந்தானாகவேணுமென்று பார்த்து,

தம் கையில் ஒன்றுமில்லாமையை அறிவித்து ஸ்ரீவரமங்கல நகரிலே வானமாமலைத் திருவடிகளிலே வேரற்ற மரம்போல் விழுந்து சரணம் புகுந்தார். சரணம் புகச்செய்தேயும் வந்து முகம் காட்டாமையால், இவ்வளவிலும் வேறொன்றாலே பேறென்றிருத்தல், மற்றொருவர் வாசலிலே சென்று கூப்பிடுதல் செய்யும் ப்ரமத்தைத் தவிர்த்தான் என்று கொண்டு தரித்த இது, திருக்குடந்தை யளவுங் கால்நடை தந்து, அங்கே இன்னும் எத்தனை திருவாசல் தட்டித் திரியக் கடவேன் என்னும் ஆர்த்தி "ஆராவமுதில்" உண்டாயிற்று. இங்கும் தம் அபேக்ஷிதம் பெறுமையால் திருவல்லவாழேறப் போக ஒருப்பட்டு, அங்கு கிட்டப் போகவும் கூடாசாயிற்று. இவ்வவஸாதத்தால் பிராட்டி நிலை அடைந்து தோழிமார்க்குச் சொல்லும் பாசுரத்தாலே "மானேய் நோக்கில்" சென்றது. "பிறந்தவாற்றில்" திருவல்லவாழிலேபோகக் கால் நடை தாராமல் நடுவழியிலே விழுந்து கிடந்து கூப்பிட்டு "இவ்வளவில் குணுநபவம் பண்ணியாகிலும் தரிப்போம்" என்று பார்க்க, அது தானும் பேற்றோபாதி அரிதாய்படி ஸௌஶீல்யத்தை விளைப்பிக்க, அத்தாலே நொந்து "ஸர்வாவஸ்தைகளிலும் உன்னைப் பிரிந்து நின்றாலும் தரித்து நின்று குணுநுபவம் பண்ணவல்லேனும் படி பண்ணியருளவேணும்" என்று அவன் திருவடிகளிலே ஶரணம் புகுந்தார்.

ஆறும் பத்து

இவ்வாறாக உகந்தருளின நிலங்கள் தோறும் ஶரணம் புகுந்தும் பலிக்காமையால் பரிமாறுகைக்கு உடலான அவதாரத்தே சேறப் போனார். அது காலாந்தரமாகையாலே கிட்டப் பெற்றிலர். நித்ய ஸந்நிதியும் பழக்கமும் குறைவற்ற அர்ச்சாவதாரமே அமையுமென்று மீண்டு திருவண்வண்டூரில் எழுந்தருளி யிருக்கிறவன், அவ்விடத்திலே ஆர்த்தர் பலர் உண்டாகையால், அவர்கள் ரக்ஷணத்திலே ஒருப்பட்டு இத்தலையை மறந்தானித்தனை, இனி நம் ஆர்த்தியை அறிவிக்கவரும் என்று "வைகல்பூங்கழிவாயில்" பக்ஷிகள் காலில் விழுந்து தூதுவிட்டனர். "மின்னிடை மடவாரில்" கீழ்விட்ட ஆள் சென்று அவனுக்கு அறிவிக்க அவனும் இழவாளனாய் ஆணைக்கு அருள் செய்ய வந்து தோற்றினாற்போலே பதறி நடந்து வாரா நிற்க, அவ்வளவு பற்றாமே கிடந்து துடித்து அலமந்து ப்ரணய ரோஷந் தலையெடுத்து "இனி அவன் வந்தாலும் ஸம்ஶ்லேஷிப்போமல்லோம்" என்று தோழிமாருந் தானுமாக ஸங்கல்பித்து, அவனறியாத தோரிடத்திலே போயிருக்கவேணுமென்று பார்த்து, காயாம் பொழிலாய் அதிலே விளையாடு சூழலாய் அதின் நடுவிலே அதி மநோஹரமாயிருப்பதொரு மண்டபமாய் அதிலே இவர்களெல்லாருங் கூடிக் கழகமாக இருந்து, அவன் வந்தாலும் அவனுக்கு இட்டீடு கொள்ளுகைக்குப் பற்றாசில்லாதபடி பூவை கிளி தொடக்கமான அசேதநமாயும் சேதநமாயுமுள்ள லீலோபகரணங்களையும் கைக்கொண்டு, அநாதரமாகிற கல்மதிளை யிட்டிருக்க, இவ்வளவிலே இவனுடைய ஜீவநாத்ருஷ்டத்தாலே இவர்கள் மறந்து போன பந்தும் கழலும் இவன் காலிலே தாக்க, இவற்றை எடுத்துக் கொண்டு, தலையிலே வைத்துக்கொள்வதாய் அவர்களிடத்திலே பண்

ணக்கடவவ்யாமோஹமடங்கலும் இவற்றிலே பண்ணித் தன் அழகாலும், செல்லாமையாலும், தாழ்ச்சிகளாலும் இத்தலையில் ஊட்டலைத்தீர்த்து ஸம்ஶ்லேஷித்தபடியைச்சொல்லிற்று.

ப்ரணயரோஷத்தாலே சேரோமென்று முடிந்து போகப் புக்க தம்மைத் தன்னுடைய சக்தி விசேஷத்தாலே அவன் பொருந்த விட்டுக் கொண்டபடியான விருத்த விபூதி கத்வத்தை 'நல்குரவில்' அநுஸந்தித்தார். இவ்வநுஸந்தானம் ப்ராஸங்கிகமாய், மாசறு சோதி தொடக்கமான வற்றிலுண்டான வ்யஸநங்களெல்லாந் தீரும்படி ஸ்ரீப்ருந்தாவநவ்ருத்தாந்தத்தைக் காட்டிக்கொடுக்கக்கண்டு, அத்புத காலமாய்த் தோற்றுகையன்றிக்கேஸமகாலம்போலே அநுபவித்தார் "தூவையாய்ச்சியரில்." அவ்வநுஸந்தானமே "குடிக்கிற தண்ணீர்விக்கி பாரவச்யத்தை விளைப்பிக்குமாப்போலே" ரஸாந்தரத்திலே மூட்ட, தாமான தன்மை அழிந்து ஒரு பிராட்டி தசையை அடைந்து, தனக்கு ஓடுகிற தசையைத் தோழி பாசுரத்தாலே தாய்மாருக்கு அறிவிக்கிறதாய், அந்யாபதேசத்தாலே "துவளில் மாமணி" சென்றது. இவள் தசை முற்றி வ்யஸநம் அதிகரிக்கையாலே மோகதசையாய்க் கிடக்க, அதுகண்டு ஆற்றாளாய் இவளுடைய தோழியும் மோஹிக்க, இத்தசையிலும் இவளை ஜீவிப்பிக்க விரகுகளை மநோரதிக்கையாலே தரித்திருக்கிற திருத்தாயார், இவளுடைய வலயாதிகள் காணக்காண சிதலமாகிறபடியைக்கண்டு, அவற்றைத் தனித்தனியே சொல்லிக் கூப்பிடுகிற பாசுரத்தாலே ஸ்வதசையை "மாலுக்கு" என்றதில் பேசினார். மோஹித்த மகளுடைய அவஸ்தத்தைக் கண்ட திருத்தாயார் "அது போயிற்று, இதுபோயிற்று" என்று அவன் திருநாமத்தைச் சொல்லிக் கூப்பிட்டு இவளும் மோஹிக்க, திருநாம ப்ரஸங்கத்தாலே பெண்பிள்ளை

உணர்ந்தெழுந்து புறப்பட்டுத் திருக்கோளூரேறப்போனாள். தாயார் வாஸனையாலே உணர்ந்து படுக்கையைப்பார்க்க, வெறும்படுக்கையாயிருக்க, என்வயிற்றிற் பிறப்பாலும், தன் ப்ரக்ருதியாலும் இவள் திருக்கோளூரேறப்போனாள் என்று அறிநியிட்டு இவள் தன்னையும் இழந்தோமென்று கூப்பிடுகிற பாசுரத்தாலே ஸ்வதசையை "உண்ணுஞ்சோற்றில்' காணத்தக்கது. இத்திருவாய்மொழியில் திருத்தாயார் "எங்ஙனே புகுங்கொல்" என்று நொந்ததுவே பலித்து 'தன் சாபலத்தாலே புறப்பட்டவள் முடியப்போகமாட்டாமை தன்னுடைய நகரோபவகத்திலே விழுந்துகிடந்து துடிக்க அவ்வளவிலும் அவன் வரக்காணாமையாலே, கண்டபக்ஷிகளை ஏக்ஷேதசவாஸித்வத்தாலே வந்த ஸம்பந்தங்கொண்டு, அவனுடைய ஐசுரஸம் பற்றாசாகப் "பொன்னுலகில்" தூதுவிட்டார். இவர் "எங்குச் சென்றாகிலுங்கண்டு" என்றும், "வானவர் கோனைக்கண்டு" என்றுந் தூது போகச்சொன்னார். அவை போகமாட்டாதபடி தம்முடைய ஆர்த்தத் த்வனியாலே அழித்தார். ஆகையால் தம்பரிஸரத்தில் கால்நடை தந்து போவாரில்லையே! "மரங்களுமிரங்கும்" என்று அசேதநங்களும் இரங்கா நின்றால் பரமசேதனனுக்குச் சொல்லவேணுமோவென்று பார்த்துத் தம்மிடற்றோசையிட்டு "நீராயென்றதில்" அழைத்துக்கொள்ளப் பார்த்தார். இத்தனை பெரிய ஆர்த்தியோடே பரமபதத்திலேகேட்கும்படி கூப்பிடச் செய்தேயும் அவன் முகம் காட்டவில்லை. ஸம்ஸாரிகளும் இழக்க வொண்ணாதபடி திருமலையிலே திருவேங்கட முடையான் திருவடிகளில் பெரியபிராட்டியார் முன்னிலை சரணம் புகுந்தார்" உலக முண்ட பெருவாயனில்,"

ஏழாம் பத்து.

இதில் "உன்னடிக் கீழமர்ந்து புகுந்தேன்" என்று தம்முடைய ஆகிஞ்சந்யம் தோற்ற விண்ணப்பம் செய்தும் அவனைப்புகர நிற்கக்கண்டிலர். இனி "விஷயங்களும் இந்த்ரியங்களும் நடையாடுகிற ஸம்ஸாரத்திலே வைத்த போதே இவற்றுக்கு நம்மை இரையாக்கிவைத்தானித்தனை" என்று 'சேட்டாரடங்கலும் நீராம்படி கிடந்து "உண்ணிலாவியில்" கூப்பிட்டார். இப்படி கூப்பிடச் செய்தேயும் அவன் முகம் காட்டாமையால் தாமான தன்மை குலைந்து ஒரு பிராட்டி தசையை அடைந்து மோஹித்துக்கிடக்க இவள் பந்துக்களடங்கலும் இத்தை அறிந்து மோஹித்துக் கிடக்க, திருத்தாயார் திருமணத்தூணுக்குள்ளே பெரிய பெருமாள் திருவடிகளிலே தன் மகளையிட்டுவைத்து "இவள் திறத்தில் நீர்என் செய்யக்கடவீர்" என்பதைக் "கங்குலும் பகலும்" கூறிற்று. தலைவிக்குப் பிறந்த மோஹம் தெளிந்து "அவனைக்கிட்டியல்லது நில்லேன்" என்னும் ஆற்றாமைபிறந்து அணித்தானத்தென்திருப்பேரைக்குப்போகவேணுமென்று ஒருப்பட, தோழி, தாய் முதலானவர்கள் இவளைச்சூழ்ந்து "உனக்கு இத்துணை அதிமாத்ர ப்ராவண்யமாகாது" என்ன, "நீங்கள் சொல்லுகிறவற்றால் பயனுண்டாகாது, என் மனம் அங்கே சென்றது, ஆனபின்பு நானே போகாமே நீங்களே கொடுபோய்ச் சேர்க்கப் பாருங்கோள்" என்று, தனக்குப் பிறந்த துணிவை "வெள்ளைச்சுரிசங்கு" பேசிற்று. இத்திருவாய்மொழியில் "பேரெயில் சூழ்கடற் றென்திலங்கை செற்றபிரான்" என்று இராமவதார விஜயம் ப்ரஸ்துதமாகையாலே, அவ்வழியாலே எல்லா அவதாரங்களிலுமுண்டான விஜய பரம்பரைகளைப் பத்தும் பத்தாகக் காட்டிக்கொடுக்கக்கண்டு "ஆழி

யெழ" என்றும் பதிகத்தில் அநுபவித்த ஹ்ருஷ்டரானார் அவதாரங்கள் ஆஶ்ரிதார்த்தமாயிருப்பது, இவைகள் பயன்படாமல் இவர்கள் பாஹ்ய விஷயங்களிலே அந்யபரராவதே" என்று "கற்பாரில்" ஆச்சர்யப்பட்டார். ஸம்ஸாரிகள் அபேக்ஷையில்லாமையாலே இழக்கிறார்கள், அபேக்ஷையுடைய நாம் இழப்போமல்லோம், அவனுடைய அவதாரங்களையும் வடிவழகையும அநுபவிப்போம்" என்று பார்த்தார். அவை கிட்டி அநுபவிக்கப் பெறாமல் மிகவும் அவஸந்நராய் ஸர்வேஶ்வரனுக்குப் பரமபதத்திலும் இருப்பரிதாம்படி கூப்பிடுகிற கூப்பீடுகேட்டு, அவ்விருப்புக் குலைந்து வந்து முகங்காட்டவேண்டும்படி கேட்டாரடைய நீராம்படி பெருமிடறுசெய்து "பாமரு மூவுலகில்" கூப்பிட்டார் அவன் வடிவழகு நெஞ்சிலே ஊற்றிருந்து, அது பாவநாப்ரகர்ஷத்தாலே ப்ரத்யக்ஷ ஸமாநாகாரமாய்ப் பின்னை "ப்ரத்யக்ஷம்" புத்திபண்ணி அணைக்கணிசித்துக் கையைநீட்ட அப்போதே அது பெறாமையாலே தமக்குப் பிறந்த ஆற்றாமையை, எம்பெருமானோடே கலந்து பிரிந்து உருவெளிப்பாட்டாலே நோவுபடுகிற பிராட்டி பாசுரத்தாலே "ஏழையராவில்" அருளிச்செய்தார். "மாயாவாமனனில்:— அவ்வுருப்பாட்டால் நோவுபட்ட இவர், ஸர்வேஶ்வரன், தான் நினைத்த கார்யஞ்செய்து தலைக்கட்டிக்கொள்ளவும நம்மை இங்கே வைக்கிறான்" ன்னுமிடம் அறிந்து "எனக்கு இதில் பொருந்தாமை உண்டாயிருக்கச் செய்தேயும் இஸ்ஸம்ஸாரத்திலே வைத்து என்னை நடத்திக்கொண்டுபோகிற இவ்வாஶ்சர்யத்தை எனக்கு அருளிச்செய்யவேணும்" என்ன, "இது ஒன்று கண்டோ நீர் ஆஶ்சர்யப்படுகிறது, இவ்வளவல்லாத நம்முடைய விசித்ர ஜகதாகாரதையைப்பார்" என்று காட்டிக்கொடுக்கக்கண்டு அநுஸந்தித்து விஸ்மிதரானார். இவ்வநுஸந்தானம் தலைக்கட்டினவாறே பழையபடியே முறையிட, அவனும்

ஸ்ரீ பீஷ்மரைக்கொண்டு நாட்டுக்கு வெளிச்சிறப்பைப் பண்ணிக்கொடுத்தாற்போலே நமக்கும் நம்முடையார்க்கும் போது போகச்சில ப்ரபந்தங்களைப்பண்ணுவிக்கப் பார்த்தோம், அது தலைக்கட்டுகைந்தனையும் உம்மை இவண் வைத்தது" என்று நேரான பரிஹாரந்தன்னை அருளிச்செய்ய, இவரும் அது பொறுக்கமாட்டாது "இதொரு நீர்மையிருக்கும்படியே' என்று அநுஸந்தித்து அவன் "உதவிக் கைம்மாறு என்னுயிர் என்னவுற்றெண்ணில், அதுவும் மற்றாங்கவன் தன்னது,' என்று ப்ரத்யுபகாரங்காணுமையை "என்றைக்குமென்னை" என்ற திருவாய்மொழி கூறிற்று. இங்ஙனே ப்ரத்யுபகாரம் காணுமல் தடுமாறின்வர், அவனுக்கு ஒன்று கொடுத்தோமாய் அவனும் ஒன்று பெற்றவனாய்ச் செய்யலாவதொன்று உண்டு; அதாவது :—நாம் பாடின திருவாய்மொழி கேட்கைக்காக ஸர்வேஶ்வரன் திருவாறன்விளையிலே திருவநந்தாழ்வான்மேலே நாய்ச்சிமாரோடே எழுந்தருளியிருந்தான், அங்கேபோய்த் திருவாய்மொழி கேட்பித்து அடிமை செய்வோமென்று பார்த்தார் "இன்பம் பயக்க" என்றதில்.

எட்டாம் பத்து.

இந்தப் ப்ராப்பெல்லாம் மநோரத மாத்ரமாய் நினைத்தபடி தலைக்கட்டப்பெற்றிலர். இவ்வளவிலே சமைவெறுத்து "நாணொருவனை தோற்றி இறைவனுக்குள்ள கல்யாணகுணங்கள் பொய்யாப்புகுகிறதோ" என்று அதிசங்கைபண்ண, "நீர் இங்ஙனே அதிசங்கை பண்ணவேண்டா" என்று தன்னுடைய விஸ்ரம்பணீயத்வ குணங்களைக்காட்டி இவருடைய அதிசங்கை தீர்த்து ஸமாதானம்

பண்ண ஸமாஹிதராய் அத்தை அநுஸந்தித்துத் "தேவி
மாராவரில்" இனியரானார். இத்திருவாய் மொழியில்
" யானும் நீதானே யாவதோ மெய்யே " என்று ப்ராஸங்
கிகமாக " அவனே உபாயம் என்று " நிஷ்கர்ஷித்தார் அது
பலியாமையாலே பிராட்டி நிலையடைந்து அவன் தானே
வரக்கண்டிருக்கை யன்றிக்கே அவனிருந்தவிடத்தேப்
போவதாக ஒருப்பட்டார். அதைக்கண்ட தோழிமார்
உனக்கு இது ஆகாது காண்" என்று மீட்கப்பார்க்க,
அவர்களிடங்களில் தமக்கு நசையில்லாமையை அவர்களுக்கு
" நங்கள் வரிவளையில் " வெளியிட்டனர். இத்திருவாய்
மொழியில் "ஓர் கோல நீல நன்னெடுங்குன்றம் வருவ
தொப்பான்" என்று அவன் வடிவழகை அநுசந்தித்தார்.
இத்தால் தாம் பட்ட க்லேசம் நீங்கிற்று. ஆகிலும் வடி
வோடே சத்ரு பூயிஷ்டமான ஸம்ஸாரத்திலே தனியேவந்து
அவதரித்து உலாவா நிற்கும்; அவ்விடத்தில் நானும் உத
வப்பேறுகிறிலேன் என்று அவன் தனிமைக்கு வெறுத்து
பீதராக; " நீர் நமக்குப் பயப்படவேண்டாம் " என்று
ஸர்வேச்வரன் தன் ஸர்வ சக்தித்வத்தைக்காட்டி ஸமாதா
னம் பண்ணினபடியை "அங்குமிங்கும்" என்கிறதில் அரு
ளிச்செய்தனர். இங்ஙனே ஸமாஹிதராய் நின்றவர்,
கடல்கடைந்தது தேவயோநியிலே யன்றோ ! என்று கல
ங்க, தன் சௌர்ய வீர்யாதி குணங்களையும் காட்டி, அது
க்குமேல் திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றில் நமக்
குப் பரிவராயிருப்பார் மூவாயிரம் ப்ராஹ்மணருண்டு என்று
காட்டிக்கொடுக்கக்கண்டு அநுபவித்தபடியை " வார்கடா
வருவியில் " அருளிச்செய்தனர். ' மாயக்கூத்தனில் "
அவனுக்குப் பரிவருண்டென்று பயமுந்தீர்ந்து, வடிவழகை
அநுபவித்து, பாஹ்யஸம்ஸ்பேஷாபேக்ஷை பிறந்து அது
பெறுமல் காட்டுத்தீ சுதவினரைப்போலே தப்தராய், நாம்

இந்த க்லேசத்தோடே முடிந்துபோமித்தனையாகாதே யென்று இழவோடே தலைக்கட்டினார், இவர் இழவுக்கு உதவப்பெற்றிலோம் என்ற மாத்ராலே ஈஶ்வரன் தப்தனாய் பிற்பாட்டுக்கு லஜ்ஜித்து "இனி நாம் கடுக முகம் காட்டில் ப்ரீதியாலே உடை குலையப்படுவர், ப்ரீதியை ஸாத்மிப்பித்து உளராக்கிப் பரிமாறவேணும்" என்று திருக்கடித்தானத்திலே எழுந்தருளியிருந்து தம்பக்கல் பண்ணுகிற வ்யாமோஹத்தை அநுஸந்தித்து இனியராய் பேசிற்று "எல்லியுங்காலை" "இருந்தும் வியந்தில்": மாயக்கூத்தனில் தமக்குப்பிறந்த விடாய் தீரும்படி ஸம்ஶ்லேஷித்த இதுதான், இவர்க்கு உபகரித்தானாயிருக்கை யன்றிக்கேதன் பேறாயிருக்கிறபடியை அநுஸந்தித்து விஸ்மிதராய் இது என்ன ஆஶ்ரிதபாரதந்த்ரியம் இதென்ன நீர்மை" என்று அவன்படிகளை அநுஸந்தித்து ஹ்ருஷ்டரானார். இவ்வாறாக இவர்விடாய் தீரும்படி ஸம்ஶ்லேஷித்துத் தன்விடாயுந்தீர்ந்து ப்ரீதனாய் நின்ற ஸர்வேஸ்வரன் " வடிவேழுலகிலாழ்வாராகையாலே தம் அயோக்யதையை அநுஸந்தித்து அகலப்பார்ப்பர்; ஆகையாலே, "ஏற்கவே பரிஹரிக்கவேணும்" என்று பார்த்து, "வாரீர். நம்முடைய வடிவழகியிருக்கிறபடி கண்டீரே, நம்மைக்காணுங் காட்சியிலே உம்மையுங் காணலாய்க்காணும் இருப்பது" என்று தனக்கு நூபுராதிகளோபாதி அத்யந்த போக்யமுமாயிருக்கிற ஆத்மஸ்வரூபத்தைக் காட்டிக்கொடுக்க, அத்தை "கண்கள் சிவந்து" என்றதில் அநுபவித்தார். இத்தனை ஆத்மஸ்வரூபத்தை அநுஸந்தித்த ப்ரீதிபாரவஶ்யத்தாலே தாமான தன்மை அழிந்து பிராட்டி தசையை அடைந்து திருப்புலியூரிலே எம்பெருமானோடே இயற்கையில்புணர்ந்து அவனாலே அபஹ்ருத சித்தையாயிருக்கிறபடியை, உயிர்த்தோழியானவள் கண்டு, "இவள் வடிவில் வேறுபாட்டா

லும், பேச்சிப் வேறுபாட்டாலும் திருப்புலியூர் நாயனுரோடே ஸம்ஶ்லேஷம் ப்ரவ்ருத்தமாயிற்றப்போலே யிருந்தது" என்று, தாய்மார் முதலானவர்களைப்பார்த்து " நீங்கள் ஸ்வயம் வரத்துக்கு ராஜபுத்ரர்கள் வருவதென்று மணமுரசறைவிக்கை இவள் செவிப்படுமாகில், இவளைக் கிடையாது; ஆகையால் திருப்புலியூர் நாயனுரோடே இவளைக்கொண்டு சேருங்கோள் "என்று ஸ்வதசையை அர்யாபதேசத்தாலே " **கருமாணிக்க மலையில்** " பேசினர். கீழ் இரண்டு திருவாய்மொழியிலுமாக ஆத்மாவினுடைய அநந்யார்ஹ ஶேஷத்வம் சொல்லிற்ருய், " அது பிறர்க்குமுரித்தல்ல, தனக்கு முரித்தல்ல" என்ருயிற்றுச்சொல்லிற்று. அந்த அநந்யார்ஹ ஶேஷத்வத்துக்கு எல்லை ததீய ஶேஷத்வமாகையாலே, "இப்படிப்பட்ட ததீய ததீ ஶேஷத்வமே காலதத்வமுள்ள தனையும் எனக்கும் என்னோடு ஸம்பந்தமுடையார்க்கும் வாய்க்கவேணுமென்று " நெடுமாற்கடிமையில் ப்ரார்த்தித்தனர்.

ஒன்பதாம் பத்து.

" கொண்டபெண்டிரில் " ; கீழ்பாகவத ஶேஷத்வமே புருஷார்த்தம் என்பதை அறிவித்த ஸர்வேஶ்வரனே நிருபாதிகபந்து அவனே ப்ராப்யம் ப்ராபயம் என்பதை சேதநரைக் குறித்து ' நீங்கள் ஸோபாதிக பந்துக்களான அல்லாதாரை விட்டு நிருபாதிக பந்துவான ஸர்வேஶ்வரனையே பற்றி உஜ்ஜீவிக்கப்பாருங்கோள் " என்று பரோபதேஶ ப்ரவர்த்தரானர் இப்படிப்பட்ட பரமபந்துவானவன், கண்வளர்ந்தருளுகிற திருப்புளிங்குடியிலே எல்லாப்பரிமாற்றத்தையும் ஆசைப்பட்டுக்கிட்டின விடத்தில்இவரை என்னெஞ்

ணுசல்? குளிர நோக்குதல், ஒருவார்த்தை சொல்லுதல் செய்யக்காணுமையாலே, மிகவும் அவஸந்நராய, "திருமேனி அசைவற்று ஏகரூபமாகக்கண்வளர்ந்தருளா நின்றான், என் வருகிறதோ" என்று பயப்பட்டு "என் ஆர்த்தியும் தன் ஆர்த்தியும் தீர்க்கிறிலன் என்று "பண்டை நாளில்" இன்னதாகிறார் இவ்வளவில் ஈஸ்வரன் "நீர் இங்ஙனே ஆர்த்திக்கவேணுமோ? நம்மோட்டைக் குடல் துடக்கை அறியீரோ? நாம் நாராயணனன்றோ? உம்முடைய ஸர்வாபேக்ஷிதங்களையுஞ் செய்யக்கடவோம் நீர் வெறுக்க வேண்டா" என்று ஸமாதானம்பண்ண ஸமாஹிதராய் "ஓராயிரத்தில்" அவன் ஶீலகுணத்திலே ஈடுபட்டார். இத்திருவாய்மொழியில் "தேவர்கட்கெல்லாங் கருவாகிய கண்ணனைக் கண்டுகொண்டேனே" என்னும்படி வைஶத்யம் பிறந்தபோதே பாஹ்ய ஸம்ஶ்லேஷத்திலே அபேக்ஷை பிறந்தது "இவர்க்கு இன்னும் விடாயைப் பிறப்பித்து முகம் காட்டவேணும்" என்று, ஈஶ்வரன் காரியஞ் செய்யாதிருக்க இவரும் தளர்ந்து "லௌகிகபதார்த்தாநுஸந்தாநத்தாலே நெஞ்சை அந்யபரமாக்கித் தரிப்போம்" என்று இதர பதார்த்தங்களில் கண்வைக்க, அவை ஆஶ்ரய ஹேதுவனறிக்கே ஸ்மாரகமாய் நலியப்புக, அவற்றால் நோவுபடுகிறபடியை, பிராட்டி தசையை அடைந்து அந்யாபதேஶமுகத்தாலே "இன்னுயிர்ச் சேவலில்" அருளிச்செய்தனர். இப்பதிகத்தில் "எழுநண்ணி நாமும் நம் வான நாடனோடொன்றினோம்" என்று தன் ஜீவனத்தில் நசையற்று வார்த்தை சொன்னார். இவ்வவஸ்தையிலே இவர் அபிநிவேசித்த கைங்கர்யத்தை முடியச்செய்து தலைக்கட்டுகைக்கீடான இவருடைய ஜீவநாத்ருஷ்டத்தாலேயாதல்; அன்றிக்கே இவர்சொல் கேட்கையிலேபாரித்துக் கொண்டிருக்கிற ஈஶ்வரனுடைய பாக்யத்தாலே யாதல்; அன்றிக்கே சொற்

கேட்டு பகவத் விஷயத்திலே ருசிபிறக்க யிருக்கிற சேதந ருடைய பாக்யத்தாலே யாதல், "இருந்தும் வியந்தில்" ஸம் ஶ்லேஷம் ஸ்ம்ருதி விஷயமாய், அவனுடைய சீல குணநு ஸந்தானத்தாலே "உநதுமாலில்' ஶிதலமானர். "எங் கானலில்" கீழ்பிறந்த தசையை, நாயகனோடே கலந்து பிரிந்தாளொரு பிராட்டி தன் உத்யானத்திலே வர்த்திக்கிற பக்ஷிகளைக்குறித்து திருமுழிக்களத்திலே தனக்கு நல் லாரை விடமாட்டாத பரமக்ருபாவானனவன் வந்து நின்ற ருளினன். நீங்கள் அங்கே சென்று "உம்மைப் பிரிந்தார் தரிப்பரோ வென்று அறிவிக்க வேணும்" என்று அவன் வடிவழகும் குணங்களும் பற்றுசாகத்தாது விட்டு அறிவித் தனர். இப்படி தம்முடைய ஆர்த்தியை அறிவிக்கச் செய் தேயும் வரக்காணுமையாலே, அவன் நம்மை வந்து விஷயீ கரித்து அமர்க்க நிலமான திருநாவாயிலே கொடு போகை, நிச்சிதமென்று அத்யவஸித்து, அவ்வளவு பொறுக்க மாட் டாமல் பதறி, அவன் வர்த்திக்கிற தேசத்தேறப்போவதாக "அறுக்கும் வினையில்" ஒருப்பட்டார். "மல்லிகை கமழ் தென்றலில்" திருநாவாயிலே புக்கு அனுபவிப்பதாக மநோ ரதித்த இவர், பாதக வர்க்கத்துக்கு அஞ்சி, திருவாய்ப்பா டியிலுள்ளார் க்ருஷ்ணனைப் பிரிந்து ஒரு ஸந்த்யையில் பட்ட நோவை இவரொருத்தருமே பட்டுக்கூப்பிட்டார். இப்படி துக்கப்படுகிற இவரைப்பார்த்து ஈஶ்வரன் "நீரோ இப்படி மநோரதிப்பீரும், அது கிடையாமல் க்லேசப்படுவாரும்,உம் மைப்பெறவேணுமென்று மநோரதிப்போம் நாமன்றோ? உம் மைக்கிடையாமல் இழவு பட்டோமும் நாமன்றோ? உமக்கு ஒரு குறை உண்டோ? நாம் பரமபதத்தை விட்டுத் திருக் கண்ணபுரத்திலே ஸந்நிதி பண்ணிற்றும் உமக்காக வன்றோ? சரீராவஸாநத்திலே உம்முடைய அபேக்ஷிதம் செய்யக்கட வோம்" என்று ஸமாதானம் பண்ண ஹ்ருஷ்டராய், ஸம்

ஸாரிகளைப்பார்த்துப் பரபக்தி பண்ணுங்கோள். அதுக்கிடான அத்த்யவஸாயமில்லாதார் உக்தி மாத்ரத்தையாகிலும் பண்ணுங்கோள் என்று "மாலை நண்ணியில்" பரோபதேசத்திலே ப்ரவ்ருத்தரானார். கீழ் திருவாய்மொழியில் "நாளேலறியேனெனக்குள்ளன" என்றார். "மரணமானால்" என்று அந்நாளை அறுதியிட்டுக் கொடுத்தான். ஈஶ்வரன், அவன் செய்கிறோமென்று தலை துலுக்கினால், அது பெற்றதாய் மேல் நடக்கலாம்படியாயிருக்கும். ஆகையால் அவித்யாகர்ம வாஸநா ருசி முதலிய விரோதிகளைப் போக்கிக்கொண்டு போய் வழி நடத்துவான் காளமேகம் என்று, அத்யவஸித்து, காளமேகத்தின் பக்கலிலே ஆத்ம நிக்ஷேபம் பண்ணி வழித்துணையாக அவனைப்பற்றினார்.

பத்தாம் பத்து.

"தாள தாமரையில்" அவ்வளவுதான் நமக்குப் போகவேணுமோ, இங்கே திருவனந்தபுரம் ப்ராப்யமாயிக்க என்று அத்த்யவஸித்து "நம்மோடு ஸம்பந்தமுடைய அநுகூல ஜநங்களடங்க அங்கேபோய்த் திரளுங்கோள்" என்று "கெடுமிடரில்" அருளிச்செய்தனர். இவர் பாரித்தபடியே அடிமைசெய்யப் பெறுமையால் தமக்குப்பிறந்த தசா விசேஷத்தை, ஒரு பிராட்டி பாசுரத்தாலே "வேய்மரு தோளிணையில்" அருளிச்செய்தார். கலந்து நெடுநாள் பிரிந்தாளொரு பிராட்டி, அவ்வாஸனையாலே, க்ருஷ்ணன் கூட இருக்கச்செய்தேயும், இவன் பண்டு பிரிந்த போந்த ப்ரபாத காலம் வந்து, அக்காலத்துக் கடைத்த காற்று மடிக்கையாலும், அக்காலத்தில் அவன் போகை தவிராதென்று அவன் பிரிவை நிச்சயித்து "நீ பசுமேய்க்கப் போகாதொழியவே

ணும், ஸப்ரமாதமான காட்டில் நீ போனால் அங்கு அஸுர ராக்ஷஸாதிகளாலே என்புகுருகிறதோ வென்று அஞ்சா நின்றேன்" என்று இப்படி நோவுபட, அவனும் இதை அநுஸந்தித்து "நான் போகிறேனல்லேன்" என்று தன் போகாமையை இவள் நெஞ்சிலே படுத்தித் தரிப்பிக்கத் தரித்ததாய் தலைக்கட்டிற்று. இப்படி தரித்தவர் "சார்வே தவநெறியில்" பேற்றுக்கு உபாயமான பக்தியோகமானது ஸ்வஸாத்யத்தோடே பொருந்தின படியைச்சொல்லி, தாம் தம்முடைய பேற்றுக்கு உபாயமாக முதல் திருவாய்மொழியில் சொன்ன ப்ரபத்தியோடேத்தலைகட்டினார். 'கண்ணன் கழலிணையில்" ஈஶ்வரன் தம்மைக் கொடுபோகையிலே த்வரிக்கிற படியைக் கண்டு, "நமக்குப் போக்குத் தவிராது என்று நிச்சயித்து, 'இனி இவர்களுக்கு பக்திமான்களுடைய பரிமாற்ற மிருக்கும்படியை உபதேசிப்போம்" என்று தாம் தொடங்கின பரோபதேசத்தைத் தலைக்கட்டினார். இப்படி உபதேசித்துக் கை யொழிந்து அனந்தரம் தன் பக்கலிலே இவர்க்கு விடாய் பெருகிறபடியைக்கண்டு, இவர்க்கு முன்பே விடாய்த்து, இவரைக் கொடுபோகையிலே த்வரை மிகுந்து அது செய்யுமிடத்தில் இவர் நியமித்தபடி செய்தோமாகவேணுமென்று, "திருவாட்டாற்றிலே தங்கு வேட்டையாகவந்து நிற்கிற எம்பெருமானுக்கு மேன்மை வந்தேறி, ஆஶ்ரித பாரதந்த்ர்யமே ஸ்வரூபம்" என்பதை "அருள் பெறுவாரில்" கூறினார். செஞ்சொற்கவிகாளில் கீழ் தம்மோடே கலந்து தம்மைக் குறித்துப் பாரதந்த்ரனாய் தம் திருமேனியை விடமாட்டாதே அவன் பண்ணுகிற அபிநிவேசத்தைக்கண்டு, "இவனுடைய அபிநிவேச மிருந்தபடியாலே இவ்வுடம்போடே தன்னைக் கொடுபோக நினைத்திருக்கிறான் போலே யிருந்தது. அப்படி செய்தபோது நமக்கு இந்த அழுக்குடம்பு நித்யமாய்விடும். ஆகையால் இதைக் கழித்துக்கொள்ளவேணும்" என்று பார்த்து "இதாகிறது ஹேய

மாயிருப்பதொன்று இத்தைப்போக்கித் தந்தருள வேணும், இதில் தேவரீர் பண்ணுகிற விருப்பத்தைத் தவிர வேணும்" என்று சரணம் புக, ஸர்வேஶ்வரன் தனக்கு இதிலே அபேக்ஷை யிருக்கச்செய்தேயும், நாம் இத்தைத்தவிர வேணுமென்னத் தவிருவதே? இதொரு சீல மிருக்கும்படியே இவ்விஷயத்தில் ஒருவரும் இழியாதே கொள்ளுங்கோள், இழிந்து நான் பட்டதுவே அமையும்" என்று ப்ரீதி ப்ரகர்ஷத்தாலே பிறருக்குச் சொல்லித் தலைக்கட்டினார். இறைவன் தம்மை அவ்வருகே கொடுபோகையிலே பதறுகிற படியை அநுஸந்தித்தார். இப்படி அவன் பதறுகைக்கு அடி என்னென்று பார்த்தார். தமக்கு அத்வேஷத்தைப் பிறப்பித்து விசேஷ கடாக்ஷத்தையும் பண்ணி இச்சையையும் பிறப்பித்தவன் அவனேயாகையாலே தம்பக்கல் ஒரு ஹேது கண்டிலர். இது தன்னை முன்பே நீ செய்யாது விட்டதென்னென்ன, இதுக்குச் சொல்லலாவது ஒன்றில்லாமையாலே நிருத்தரனாய் நிற்க, "இதொரு நிர்ஹேதுக விஷயீகாரமிருக்கும்படியே" என்று 'திருமாலிருஞ்சோலை மலையில்" ஹ்ருஷ்டராய் நின்றார். "சூழ்விசும்பணிமுகிலில்" முதல் திருவாய்மொழி தொடங்கிக் கீழ்த திருவாய்மொழி யளவும் பரபக்தி இவர்க்குப்பிறந்து இத்திருவாய்மொழியிலே பரஜ்ஞாநாவஸ்தை பிறந்து "பரமபதத்தேறப்போக வேணும், இங்கிருந்து அநுபவிக்குமதொன்றல்ல" என்னும் மநோரதத்தோ இவரைத் தம்பிற்காட்டில் சடக்கென கொண்டுபோகவேணுமென்று த்வரிக்கிற ஈஶ்வரன், போகஸ்தான புருஷார்த்தருடைய ஸத்காரங்களையும் புகக்கடவ பரமபதத்தையும், நித்யஸூரிகள் ஆதரிக்கும்படியும், பிராட்டியும் ஸ்ரீ வைகுண்டநாதனும், எதிரேறித்து ஆதரிக்கும்படியையும், பரமபாப்யரான நித்ய ஸூரிகள் நடுவே தாம் ஆனந்தநிர்பரராயிருக்கும்படியையும் காட்டியருளக்கண்டு ப்ரீதராய், அக்கரை அச்

யாபதேசத்தாலே பேசி அநுபவித்தார். "அந்தமில் பேரின்பத் தடியரோடிருந்தமை" என்று நிரதிசயாநந்த யுக்தராய், அத்திரளிலே யிருந்த இருப்பு, ஜ்ஞாநஸாக்ஷாத்காரமாய், பாஹ்ய ஸம்ஶ்லேஷத்துக்கு யோக்யமன்றிக்கேயிருக்க, மிகவும் அவஸந்நராய் காட்டுத்தீயிலே அகப்பட்டாரைப்போலே ஆர்த்தத்வநியோடே பெருமிடறு செய்து கூப்பிட்டுச் ஶரணம் புக பரமதயாளுவான ஸர்வேஶ்வரன், இவரை இப்படியே கோவுபட விட்டுவைத்தோமாகாதே" என்று இவரிலுங் காட்டில் தாம் நொந்து, பிராட்டியோடே கூடப் பெரியதிருவடி மேலே இவர் அபேக்ஷித்தபடி வந்து தோற்றி, இவருடைய ப்ரக்ருதி ஸம்பந்தத்ததையும் அறுத்து "அடியார்கள் குழாங்களை உடன் கூடுவதென்றுகொலோ" என்று இவர் ஆசைப்பட்டபடியே அத்திரளிலேம் புகப்பெற்ற, "என்ன வாவரச்சூழ்ந்தாயே" என்றும் "அவா வற்று வீடு பெற்ற" என்று இவர் தாமே சொல்லும்படி, இவர் விடாயுந் தீர்ந்து இவர்க்கு மவ்வருகான தன் விடாயும் தீரும்படி ஸம்ஶ்லேஷித்தபடி "முனியே நான்முகனில்" வெளியிட்டு குருகூர்ச் சடகோபன் தம் வரலாற்றைக் கூறிமுடித்தனர்.

அருளிச்செயல் அரும்பொருள் சுருக்கம்

முற்றிற்று.
